வெளியீடு 22-3-99

Issued 22-3-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மே 22, 1998 - தொகுதி 56 - எண் 1

Friday the 22nd May, 1998—Volume 56 - No. 1

...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ve Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

D.
Y211,31'N98.
N98.56.1
218462

22-5-1998

## உள்ளடக்கம்

பக்கங்கள்


| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii-vi |
| Personnel of the Government of Tamil Nadu | vii-xi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xiii-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv-xxv |
| *1.* **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| அரசு ஆசிரியர்கள் மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் வேண்டிப் போராட்டம் | 1-8 |
| *2.* **கவன ஈர்ப்பு--** | |
| (அ) தஞ்சாவூர் மாவட்டம், சிங்கிப்பட்டியில் காசநோய் மருத்துவமனையை அரசோ அல்லது மருத்துவக் கல்லூரியோ ஏற்று நடத்தல் | 9-13 |
| (ஆ) பஞ்சு பற்றாக்குறையாலும், நூல் தேக்கத்தாலும் சிறிய நூற்பாலைகள் பாதிப்பு | 14-19 |
| *3.* **அறிக்கைகள் அளித்தல்--** | |
| பொது நிறுவனங்கள் குழு | 19 |
| *4.* **மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி** | |
| (அ) கோரிக்கை எண் 2 - மாநில ஆயத் தீர்வைத் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 15 - காவல் துறை<br>(இ) கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள் | 20-106, 108-129 |

பக்கங்கள்

4. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 20,24, 30,36
டாக்டர் அ. செல்லக்குமார் 37-44
திரு. ஆர். காந்தி 44-47
திரு. குத்தாலம் பி. கல்யாணம் 48-53
திரு. பி. வெங்கடசாமி 54-59
*திரு. டி.சி. விஜயன் 59-61
*திரு. டி. மணி 61-68
திரு. எஸ். திருநாவுக்கரசு 68-79
*திரு. லா. சந்தானம் 79-84
திரு. ஐ. கணேசன் 84-91
திரு. சி. ஞானசேகரன் 91-97
திரு. இரா. தாமரைக்கனி 98-106
*திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் 108-116
*திரு. கே. சுப்பராயன் 116-124
டாக்டர் தே. குமாரதாஸ் 124-129

5. அறிவிப்பு--

வெடிகுண்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு தலைமறைவாக இருந்த முக்கியத் தீவிரவாதி ஏர்வாடி காசிம் கைது 107-108

[illegible] முன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- 129-130


218463

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :**
பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :**
தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :**
வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :**
நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. துரைமுருகன் :**
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :**
போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பகும்பொன் தா. கிருட்டிணன் :**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன் :**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கா. நா. நேரு :**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. க. சுந்தரம் :**
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :**
தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா :**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச் சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :**
கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :**
வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி :**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** : **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. ***Minister for Education*** : ***The Hon. Prof. K. Anbazhagan :***
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** : **The Hon. Thiru Arcot N. Veerasamy :**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** : **The Hon. Thiru Nanjil K. Manoharan :**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** : **The Hon. Thiru Ko. Si. Mani :**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. **Minister for Agriculture** : **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** : **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** : **The Hon. Dr. K. Ponmudi:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** : **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan :**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** : **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** : **The Hon. Thiru K. N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** : **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** : **The Hon. Thiru A. Rahman Khan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** : **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** : **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms, Textiles and Environmental Pollution Control.

16. **Minister for Backward Classes** : **The Hon. Thiru M.R.K. Panneer-selvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees.

17. **Minister for Forest and Printing** : **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona, Stationery and Printing and Government Press.

18. **Minister for Housing** : **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** : **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

20. **Minister for Information and Publicity** : **The Hon. Thiru V. Mullaivendan:**
Information and Publicity, Film Technology and Cinematography Act.

| | | |
|---|---|---|
| 21. | **Minister for Animal Husbandry** | : **The Hon. *Pulavar* P. M. Senguttuvan:** Animal Husbandry. |
| 22. | ***Minister for Social Welfare*** | : **The Hon. Tmt. S. P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| 23. | ***Minister for Adi-Dravidar and Tribal Welfare*** | : **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 24. | **Minister for Tourism** | : **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| 25. | **Minister for Khadi** | : **The *Hon. Thiru Andhiyur* P. *Selvarasu:*** Khadi Board, Bhoodan and Gramdan. |
| 26. | **Minister for Fisheries** | : **The Hon. Tmt. S. *Jenefer Chandran:*** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

*பேரவைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

*பேரவைத் துணைத் தலைவர்*

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

*செயலாளர்*

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வே. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

17. திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்
18. திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர்
19. திரு. இல. மாரியப்பன், பி.ஏ. .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
20. திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
21. திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
22. திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
23. திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
24. திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
25. திருமதி என். துளசிபாய், பி.ஏ. .. சார்புச் செயலாளர்
26. திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
27. திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. .. சார்புச் செயலாளர்
28. திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
29. திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
30. திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்
31. திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. .. தலைமை நிருபர்
32. திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. .. தலைமை நிருபர்
33. திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்
34. திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். .. சார்புச் செயலாளர்
35. திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்
36. திரு. நா. நடராஜன், பி.ஏ. .. தலைமை நிருபர்



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அந்தியூர் ப. செல்வராசு, திரு. .. அந்தியூர் (செ.வ.)
3. அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். .. மயிலாடுதுறை
4. அப்துல் நாசர், திரு. அ.வ. .. புவனகிரி
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அமரமூர்த்தி, திரு. டி. .. அரியலூர்
8. அய்யலுசாமி, திரு. லி. .. கோவில்பட்டி
9. அருண்குமார், திரு. பா. .. மேட்டுப்பாளையம்
10. அழகராஜா, திரு. என். ஆர். .. தேனி
11. அழகிரி, திரு. ச. .. சிதம்பரம்
12. அழகுவேலு, திரு. ச. .. கண்டமங்கலம் (செ.வ.)
13. அன்பழகன், திரு. வ. .. செய்யார்
14. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
15. அன்பில் பொய்யாமொழி, திரு. .. திருச்சிராப்பள்ளி-2
16. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி
17. ஆண்டமுத்து, திரு. வெ. அ. .. பவானிசாகர்
18. ஆண்டி அம்பலம், திரு. எம். .. நத்தம்
19. ஆருண் ரஷீத், திரு. ஜே. எம். .. வில்லிவாக்கம்
20. ஆலடி அருணா, திரு. .. ஆலங்குளம்

| | | | |
|---|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | .. | திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. தி. ப. | .. | திருச்செங்கோடு |
| 24. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 25. | ஆனந்தன், திரு. பால. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 26. | இரகுமான்கான், திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 27. | இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. | .. | மேலூர் |
| 28. | இராசமாணிக்கம், திரு. பி. | .. | ஒரத்தநாடு |
| 29. | இராசன், திரு. வி. பி. | .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 30. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. | ஆண்டிமடம் |
| 31. | இராமசாமி, டாக்டர் வை. | .. | பண்ருட்டி |
| 32. | இராமசாமி, திரு. கே. ஆர். | .. | திருவாடனை |
| 33. | இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | .. | கம்பம் |
| 34. | இராமச்சந்திரன், திரு. சி. இரா. | .. | தொண்டாமுத்தூர் |
| 35. | இராமச்சந்திரன், திரு. மா. | .. | திருவோணம் |
| 36. | இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. | இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 38. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. | பள்ளிப்பட்டு |
| 39. | இராமஜெயம், திரு. ந. பூ. | .. | மயிலாப்பூர் |
| 40. | இராஜரெட்டி, திரு. ச. | .. | தளி |
| 41. | இராஜேந்தர், திரு. டி. | .. | பூங்கா நகர் |
| 42. | இளங்கோ, திரு. கோ. | .. | அவினாசி (செ.வ.) |
| 43. | ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | | |
|---|---|---|---|
| 44. | உதயசூரியன், திரு. தா. | .. | சங்கராபுரம் |
| 45. | உபயதுல்லா, திரு. எஸ். என். எம். | .. | தஞ்சாவூர் |
| 46. | கணேசன், திரு. ஐ. | .. | எடப்பாடி |
| 47. | கணேசன், திரு. கே. சி. | .. | ஜெயங்கொண்டம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | .. | சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. | பாபநாசம் |
| 51. | கருப்புசாமி, திரு. டி. | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 52. | கன்னையன், திரு. க. | .. | தொட்டியம் |
| 53. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. | கிருஷ்ணகிரி |
| 54. | காந்தி, திரு. ஆர். | .. | இராணிப்பேட்டை |
| 55. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. | நாங்குநேரி |
| 57. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. | வேடசந்தூர் |
| 58. | குண்டன், திரு. டி. | .. | உதகமண்டலம் |
| 59. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. | குத்தாலம் |
| 60. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 61. | குழந்தை தமிழரசன், திரு. | .. | விருத்தாசலம் |
| 62. | கோதண்டம், திரு. ஏ. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ |
| 63. | கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |
| 64. | கோபு, திரு. சி. | .. | அணைக்கட்டு |
| 65. | கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் |
| 66. | கோவிந்தன், திரு. ப. | .. | தாரமங்கலம் |

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
75. சம்யநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
76. சம்பத், திரு. ஏ. ஜி. .. முசையூர்
77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
79. சாமிநாதன், திரு. மு. பெ. .. வெள்ளக்கோவில்
80. சிங்காரவேலு, திரு. வி. பி. .. வால்பாறை (செ.வ.)
81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
84. சிவலிங்கம், திரு. எஸ். ஆர். .. பனமரத்துப்பட்டி
85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
86. சிவாஜி, திரு. இ. ஏ. பி. .. திருத்தணி
87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
88. சீனிவாசன், திரு. ஏ. ஆர். ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ. ஜி. .. பர்கூர்
90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
94. சுந்தரம், திரு. பி. ஆர். .. ராசிபுரம்
95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
97. சுப்பிரமணி என்கிற சி. சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
98. சுப்பிரமணி, திரு. பி. என். .. ஆற்காடு
99. சுப்பிரமணியன், திரு. அ. லெ. .. திருநெல்வேலி
100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
102. செங்குட்டுவன், புலவர் பூ. ம. .. மருங்காபுரி
103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு .. கொளத்தூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
108. சேகரன், திரு. ஆர். ஆர். .. ஓமலூர்
109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு. ர. கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ. சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ. வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160 புரட்சிமணி, திரு. அ. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என். கே. கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா)
167. பொன்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ். எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ. செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி. கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ். எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
184. மாயவன், திரு. தி. ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா. மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ. மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | பேராவூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ. எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ். கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என். எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி. கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 212. வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே. எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி. சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே. கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி. எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. சு. சு. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி. வி. எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ. ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 225. வேணு, திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ். கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ. அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு. ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு. க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே. வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 8, வெகுதானிய - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 மே 22, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் பேரவை காலை 9-30 மணியளவில் கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்."

குடிமக்களைப் பாதுகாத்துத் துணை நிற்பதும், குற்றம் செய்தவர்கள் யாராயினும் தனக்கு இழுக்கு வரும் என்று கருதாமல் தண்டிப்பதும் அரசின் கடமையாகும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 1. சிறப்புக் கவன ஈர்ப்பு

**அரசு ஆசிரியர்கள் மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் வேண்டி போராட்டம்**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் வேண்டி, தமிழக அரசு ஆசிரியர்கள் போராடி. வருவது குறித்து, சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. ச. அழகிரி, திரு. டி. மணி, திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், திரு. ப. மோகன் கந்தசாமி, திரு. லா. சந்தானம் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் வீதம், சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. ச. அழகிரி.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம்

[திரு. ச. அழகிரி] [1998 மே 22

வேண்டுமென்று தமிழகத்திலே இருக்கின்ற ஆசிரியர்களும் கேட்டு வருகிறார்கள். தமிழகத்தினுடைய நிதிநிலைமை மோசமாக இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தாயுள்ளத்தோடு, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து அரசு ஊழியர்களுக்கும் மத்திய அரசுக்கு இணையான சம்பளம் வழங்கப்படும் என்று கூறினார்கள். ஆனால், தமிழகத்தினுடைய ஆசிரியர்களுக்கு மட்டும் 500 ரூபாய் குறைத்துக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்த நிலையை மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, ஹரியானாவில் 5,400 ரூபாய் கொடுக்கிறார்கள். பஞ்சாபில் 5,000 ரூபாய் கொடுக்கிறார்கள். பாண்டிச்சேரி, டெல்லி, பீஹார் போன்ற இடங்களில் 4,500 ரூபாய் கொடுக்கிறார்கள். எனவே, தமிழகத்திலும் அதுபோன்ற ஒரு சூழ்நிலையை நீங்கள் கொண்டுவர வேண்டும். குறிப்பாக, அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், மத்திய அரசு என்ன ஊதியம் வழங்கி வருகிறதோ, அதையே மாநில அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும் என்பதனை, Joint Consultative Machinery (J.C.M.) ஒத்துக்கொண்டிருக்கிறது. எனவே, அவர்களும் ஒத்துக்கொண்டு, மத்திய அரசாங்கத்தினுடைய மத்திய அமைச்சரவையும் ஒத்துக்கொண்டு, மத்திய அரசாங்கத்தின் சார்பாக, இதுகுறித்துப் பேசிய முன்னாள் மாண்புமிகு அமைச்சர் திரு. இந்திரஜித் குப்தா அவர்களும், திரு. ராம்விலாஸ் பஸ்வான் அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் எல்லா மாநில முதலமைச்சர்களும் அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தச் சூழ்நிலை இருக்கிறபோது, தமிழகத்திலே மட்டும் நாம் அதனைக் குறைத்துக் கொடுப்பது என்பது, ஏற்புடையதாக இருக்காது. குறிப்பாக, எல்லா காலங்களிலும் பார்க்கப் போனால், தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் ஒவ்வொரு காலகட்டத்திலும் மத்திய அரசாங்கத்திற்கு இணையான ஊதிய உயர்வை ஆசிரியர்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். 1-6-1988 ஆம் ஆண்டு, இதே முதலமைச்சர் அவர்கள்தான், தமிழகத்திலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்கியிருக்கிறார். பத்தாண்டுக் காலம் அவர்கள் அனுபவித்து வந்த ஒரு சலுகையை, இப்போது குறைத்துக் கொடுக்கிறோம் என்று சொன்னால், அது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. எனவே, ஆசிரியர்கள் போராட்டத்திலே குதிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையை மாற்ற வேண்டும்.

குறிப்பாக, அரசாங்கத்திலே ஒரு வாதம் வைக்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கு மாநில அளவில் மாறுதல் செய்கிறோம்; ஆசிரியர்களுக்கு பல சலுகைகளைக் கொடுத்து வருகிறோம்; ஆனால்,



1998 மே 22] [திரு. ச. அழகிரி]

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் அவர்களுக்கு வேண்டுமென்று சொன்னால், அதுபோன்ற மாறுதல்களும் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைப் போன்ற ஒரு வாதம் இருக்கிறது. உதாரணமாக, மாறுதலைப் பொறுத்தவரையில் ஒரு Unit தான். இப்போது, தாசில்தார் இருக்கிறார் என்றால், நாம் மாவட்ட அளவிலேதான் மாற்றுகிறோம். R.D.O. இருக்கிறார் என்றால், அவரை மாநில அளவிலே மாற்றுகிறோம். Junior Assistant இருக்கிறா என்றால், அவரை மாவட்ட அளவிலே மாற்றுகிறோம். அதுபோல ஆசிரியர்கள் என்றால் அவர்களை வட்டார அளவில்தான் மாற்ற முடியும். அவர்களுக்கான Unit அதுதான். Block ஆசிரியர்களை வட்டார அளவிலேதான் மாற்ற முடியும். அரசு ஊழியர்களுக்கு levelலேதான் அவர்களை மாற்ற முடியும். அரசு ஊழியர்களுக்கு பல்வேறுவிதமான சலுகைகள் இருக்கின்றன. அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் கொடுக்கிறோம் என்றால் அவர்களுக்கு Promotion கொடுக்கிறோம். வேறு சில வகையான சலுகைகள் எல்லாம் அவர்களுக்குக் கிடைக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) எனவே, அந்த நிலை இருக்கின்றபோது ஆசிரியர்களுக்கு மத்திய அரசு அறிவித்திருக்கின்ற அதே ஊதியத்தை நாமும் வழங்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-35

உதாரணத்திற்கு National Council for Teachers என்ற அமைப்பை எடுத்துக்கொண்டால் அதை அரசாங்கம்தான் அமைத்தது. அதனுடைய Chairman திரு. சட்டோபாத்யாயா. அவர் இடைநிலை ஆசிரியர்களுக்கு 6,500 ரூபாய் ஊதியம் வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். ஆனால் மாண்புமிகு திரு. ரத்தினவேல் பாண்டியன் தலைமையிலே அமைத்த ஐந்தாவது சம்பள கமிஷன் 4,500 ரூபாய் கொடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. எனவே, அதனை ஏற்று நாமும் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நமது ஆசிரியர்களுக்கும் மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான ஊதியத்தைத் தர வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். போராடுகின்ற ஆசிரியர்களுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தாமல், நாம் கொடுக்கின்ற தொகையை அவர்களுக்கு உடனடியாகக் கொடுத்து ஒரு சுமூக சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

[1998 மே 22

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற ஆசிரியர்கள் மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான சம்பளத்தை வழங்க வேண்டுமென்று சொல்லி பல்வேறு கட்டங்களிலே தங்களுடைய போராட்டங்களை நடத்திக்கொண்டு வருகிறார்கள். வினாத்தாள்களை திருத்த மறுத்து ஒரு போராட்டத்தை நடத்தி, அதற்குப் பின்னால் இப்போது தொடர்ச்சியாக ஒரு போராட்டத்தை நடத்துவோம் என்று அறிவித்திருக்கிறார்கள். நமது அரசு எல்லா ஊழியர்களுக்கும் மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தைக் கொடுத்திருக்கிறது என்ற காரணத்தினால் அவர்களும் தங்களுக்கு அந்தச் சம்பளத்தை வழங்க வேண்டும் என்று கூறுகிறார்கள். 10 ஆண்டுகளுக்கு முன்னால் அவர்களுக்கு இருந்த அடிப்படைச் சம்பளமும், வருவாய்த் துறை, காவல் துறை போன்ற துறைகளில் இருப்பவர்களுக்கு இருந்த அடிப்படைச் சம்பளமும் ஒன்றாக இருந்தது. இப்போது அதிலே எவ்வளவோ மாறுபாடுகள் இருக்கின்றன. அவர்களைக் காட்டிலும் மிகக் குறைந்த சம்பளத்தை நாங்கள் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லி அவர்கள் கோரிக்கையை முன் வைத்திருக்கிறார்கள். இப்போது நமது அரசுக்கு பல்வேறு நிலைகளில் நிதி நெருக்கடி இருந்தாலும்கூட, ஆசிரியர்கள் என்பவர்கள் நமக்கெல்லாம் ஆசான்கள் என்கின்ற முறையிலே அவர்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு கருணையுள்ளம் கொண்ட முதலமைச்சர் அவர்கள் ஓரளவிற்காவது நிறைவேற்றித் தருவதற்கு முன்வர வேண்டுமென்று கூறி விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஊழியர்கள், மத்திய அரசு ஆசிரியர்கள் ஆகியோரின் சம்பளத்திற்கு இணையான சம்பளத்தைத் தர வேண்டுமென்று கேட்டு பல்வேறு ஆசிரியர்கள் சங்கங்களின் சார்பிலே அரசு அளவிலே துறை அதிகாரிகளோடு, கல்வி அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தி, அதிலே தங்களுக்குத் திருப்தி ஏற்படாத காரணத்தினாலே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சார்ந்திருக்கின்ற பல்வேறு சங்கங்களின் சார்பில், கூட்டமைப்புகளின் சார்பிலே தமிழ்நாடு முழுவதும் இன்றிலிருந்து தொடங்கி மறியல் போன்ற போராட்டங்களில் ஈடுபடப்போவதாக அறிவிப்பு தந்துள்ளார்கள். இந்தப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டியது அரசினுடைய பொறுப்பாகும், கடமையாகும். எனவே, அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகிற விதத்தில்



1998 மே 22] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் சங்கங்களுடைய நிர்வாகிகளை அழைத்துப் பேசி அவர்களுடைய மனக் குறையைப் போக்கி, அவர்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றித் தர வேண்டும் என்று எம்ஜிஆர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆசிரியப் பெருமக்கள், மத்திய அரசு ஊழியர்களுக்கும், மத்திய அரசு ஆசிரியர்களுக்கும் வழங்குகின்ற அதே சம்பளத்தைத் தங்களுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தி, அதிலே ஒரு சீரான முடிவு ஏற்படாத காரணத்தினால் ஒரு போராட்டம் நடத்துகிற நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள். மாநில அரசினுடைய பொருளாதார நிலை சீராக இல்லை, அல்லது பற்றாக்குறையாக இருந்தாலும்கூட, பெருவாரியான ஆசிரியர்கள் மத்தியிலே ஒரு மனக் குறை அல்லது அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை என்ற ஒரு உணர்வு அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குறைபாடுகளைப் போக்குகின்ற வகையில், மாநில அரசுக்குப் பல சங்கடங்கள் இருந்தாலும், அந்த ஆசிரியர் பெருமக்களுடைய கோரிக்கைகளை ஏற்று, பல்வேறு வகையிலே இருக்கின்ற அந்த ஆசிரியர் அமைப்புகளை அழைத்துப் பேசி, நியாயம் வழங்கி ஒரு சுமுகமான முடிவைக் கொண்டு வரவேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டு, அரசினுடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு வருகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையாற்றிய திரு. அழகிரி, திரு. சந்தானம், திரு. திருநாவுக்கரசு, மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் பேசிய திரு. மணி ஆகியோர் இந்த அரசின்மீது ஒரு பெரிய பழியைச் சுமத்தினார்கள், ஏதோ ஆசிரியர்களை எல்லாம் அழைத்துப் பேசவில்லை என்று. முதலில் அதை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டால் அது

அரசுக்கும் நல்லது, அவர்களுடைய வாய்மைக்கும் நல்லது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் பல முறை இந்த ஆசிரியர்களுடைய சங்கங்களை அழைத்து நானும் பேசியிருக்கிறேன். கல்வி அமைச்சரும் பேசியிருக்கிறார்.

அப்படிப் பேசிய சூழ்நிலையில், அரசு அலுவலர்களைப் பல முறை சந்தித்துப் பேசினோம். தனியாகவே ஆசிரியர் பெருமக்களை, அவர்களுடைய சங்கங்களின் சார்பாக அழைத்துப் பேசினோம். இங்கே ஒருவர் பேசும்போது, ஆசிரியர்கள் விடைத்தாள்கள் திருத்த முடியாது என்று வேலை நிறுத்தம் செய்ததாகக் குறிப்பிட்டார். அந்தப் போராட்டம் வேறு, இந்தப் போராட்டம் வேறு. அதற்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அது வேறு, இது வேறு. இந்த ஆசிரியர் சங்கங்கள், கிட்டத்தட்ட 4, 5 சங்கங்கள் என்ற அளவிலே அவர்களை அழைத்து நான் பேசினேன். அதிலே, அந்த 5 சங்கங்களைச் சார்ந்தவர்கள் நான் சொன்னதை ஏற்றுக்கொண்டார்கள். இப்போது போராட்டம் அறிவித்திருக்கின்ற ஒரே சங்கம்தான் நான் சொன்னதை அன்றைக்கு ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளவில்லை என்பது மாத்திரம் அல்ல. அவர்களோடு வந்த மற்ற சங்கங்களுடைய தலைவர்கள் அல்லது செயலாளர்கள் எல்லாம் எனக்கு நேராகவே முதலமைச்சர்தான் சொல்லுகிறாரே அதை நம்பி நாம் கொஞ்ச நாள் பொறுத்திருப்போம் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். எனக்கு நேராக சம்மதிப்பதுபோலச் சொல்லிவிட்டுச் சென்றவர், மறுபடியும் போராட்ட அறிவிப்பை இன்றைக்குத் தந்துகொண்டிருக்கிறார். நான் இவற்றை எல்லாம் பெரிதுபடுத்தி, அதற்காக அவர்கள்மீது கோபம் கொள்பவன் அல்ல. போராட்ட உணர்வுகள் ஒவ்வொரு தொழிற்சங்கங்களிலும், இதுபோன்ற சங்கங்களிலும் இருக்க வேண்டும் என்பதை நான் என்றைக்கும் அலட்சியப்படுத்துகின்றவனும் அல்ல, புறக்கணிப்பவனும் அல்ல. அழைத்துப் பேசியபோது நான் அவர்களிடத்திலே சொன்னது—கடந்த முறை கொடுத்ததை ஏன் கொடுக்கக்கூடாது என்று இப்போது அழகிரி கேட்டாரே இதைத்தான்—அவர்களுக்கு ஞாபகப்படுத்தி 1989 ஆம் ஆண்டு இதுபோல ஊதியக் குழு பரிந்துரைகளை இந்தியாவிலேயே முதன்முதலாக, மத்திய அரசு ஊழியர்களுக்கு நிகராக மாநில அரசு ஊழியர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்குகின்ற அந்தக் கால கட்டத்தில், அப்போது

| | |
|---|---|
| Ministerial Staff | அமைச்சுப் பணியாளர்கள், |
| Junior Engineers | இளநிலைப் பொறியாளர்கள், |
| Superintendents | மேற்பார்வையாளர்கள், |



இவர்கள் சுமார் இரண்டு இலட்சம் பேர் இதே category-ல் வருகிறார்கள். எங்களுக்கு முரண்பாடு ஏற்பட்டுவிட்டது, anomoly வந்து விட்டது என்று அவர்கள் அப்போது கிளர்ச்சி செய்தார்கள். நல்ல வேளையாக அப்போது ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டதால் தப்பித்தோம். அப்போது ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. அதனால் அந்தக் கிளர்ச்சி என்ன ஆயிற்று என்ற வரலாற்றுக் குறிப்பு என்னிடத்திலே இல்லை.

முற்பகல் 9-45

இப்போது நான், என்னிடத்திலே வந்த, இன்றைக்குப் போராட்டத்தை அறிவித்து இருக்கிற நண்பர்களிடத்திலே எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். அவர்களுடைய கோரிக்கையை ஏற்க முடியாது என்ற அடிப்படையிலே அல்ல, ஏற்றுக் கொள்கிறோம் என்ற அடிப்படையிலே சொன்னேன். சொல்லிவிட்டு, இப்போது One Man Commission ஒன்று போட்டிருக்கிறோம், அது உங்களிலே வருகின்ற பிரச்சினைகளில் உள்ள முரண்பாட்டை அறிவதற்காக அல்ல. உங்களுக்கு அந்தப் பணி நிலை தந்தால் அமைச்சுப் பணியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள் இவர்கள் எல்லாம் உடனடியாகக் குரல் கொடுக்கக்கூடும், அவர்களையும் அழைத்துப் பேசி அவர்களிடத்திலே ஒரு சமரச உடன்பாடு காண கொஞ்சம் கால அவகாசம் கொடுங்கள் என்றுதான் கேட்டேன். மறுநாள் பத்திரிகையாளர்கள் என்னிடத்திலே பேசும்போது சொல்லியிருக்கிறேன், ஆசிரியர் பிரதிநிதிகள் இன்றைய தினத்திலே போராடுகின்றவர்கள் உட்பட வந்து சந்தித்தபோது அவர்களிடத்திலே நான் சொன்னது 'நல்லதே நடக்கும், என்னை நம்பலாம்' என்ற இந்த வார்த்தைகள்தான். கோரிக்கையைப் புறக்கணித்து விட்டு, அதற்காகப் போராட்டம் தேவை என்று இங்கே உரையாற்றியவர்கள் நம்புகிறீர்களா, எண்ணுகிறீர்களா என கேட்க விரும்புகிறேன். இடையிலே ஒரு சாங்கியமாக, ஒரு சடங்காக திரு. சிவசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். ஓய்வு பெற்றவர் அவர்களை, One Man Commission ஆகப் போட்டு, அவர் இந்த anomoly வருகின்ற நேரத்திலே கிளர்ச்சி செய்யக்கூடிய அமைச்சுப் பணியாளர்களையும், இளநிலைப் பொறியாளர்களையும் மேற்பார்வையாளர்களையும் அழைத்துப் பேசட்டும், பேசிய பிறகு ஒரு முடிவு எடுக்கலாம். எப்படியும் இதனால் மேலும் 100 அல்லது 150 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும், இதை இழப்பு என்று சொல்ல மாட்டேன், அரசு மேலும் இதற்காக செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். இதையெல்லாம் எடுத்துச் சொல்லி, அவர்களும் சமாதானம் அடைந்து போய் விட்டார்கள் என்று எண்ணியிருக்கும்போது,

இல்லை, போராட்டம்தான் என்று அவர்கள் கூறுவதும், அதற்காக நீங்கள் எல்லாம் பேசுவதும் எனக்கு விந்தையாக இருக்கிறது, வேதனையாக இருக்கிறது. என்னை நம்பலாம், நல்லதே நடக்கும் என்று சொல்லி இடையிலே அந்த One Man Commission இந்த மூன்று பிரிவினர்களிடத்திலும் - Categories- அமைச்சுப் பணியாளர், இளநிலைப் பொறியாளர், மேற்பார்வையாளர் — அந்தப் பிரதிநிதிகளிடத்திலே பேசிவிட்டு, இதுபற்றி நல்ல முடிவு எடுக்கிறோம் என்று சொன்ன பிறகும் போராட்டம் என்றால், காக்கை உட்கார பனம்பழம் விழுவது என்பது போன்ற ஒரு நிலையை உருவாக்குவதற்காக நடைபெறுகிறது என்றால் நான் ஆதரிக்கத் தயாராக இல்லை. இந்த அரசினுடைய நல்ல எண்ணத்தை இப்படி எந்த அளவிற்கு சோதிப்பது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதே நேரத்திலே ஆசிரியர்களுடைய பிரச்சினைக்கு மிக முக்கியமாக, அவர்கள் எல்லாம் ஒன்றியங்களிலேதான், ஒன்றியத்தினுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்ற நிலையைக் கூட மாற்றியது இந்த அரசு என்பதையும் யாரும் மறந்து விடக்கூடாது. மத்தியிலே கொடுக்கிறார்கள் என்றால் — இங்கே சில மாநிலங்களை எல்லாம் கூட நம்முடைய நண்பர் அழகிரி அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். ராஜஸ்தான், குஜராத் இந்த இரண்டு மாநிலங்களிலும் நாம் செய்திருப்பதைப் போல் scale to scale தான் அங்கே இருக்கிறது. மத்திய அரசு கொடுத்து இருப்பது போல அந்த இரண்டு மாநிலங்களிலும் கொடுக்கவில்லை. ஒரிசா அரசில் நம்மைவிடக் குறைவாகத்தான் கொடுத்து இருக்கிறார்கள். உத்தரப்பிரதேசத்தில் அரசு அலுவலர்களுக்கு மாத்திரம்தான் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு இன்னும் அறிவிக்கவில்லை. இவற்றையும் நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். நாங்கள் இவற்றையெல்லாம் காட்டி உங்களுக்கு எதுவும் கிடையாது என்று சொன்னால்தானே போராட்டம்? பிறகு ஏன் போராட்டம் என்று தெரியவில்லை. எனவே, உங்களுடைய அத்தனை பேருடைய உரையையும் ஏற்று மீண்டும் சொல்கின்றேன், என்னை நம்பலாம், நல்லதே நடக்கும் என்று சொன்ன அந்த வார்த்தை பொய்த்துப் போகாது என்பதை உங்களுக்கு நான் எடுத்துக் கூறி, ஆசிரியர்களும் அவர்களுடைய கடமையுணர்வோடு நாள்தோறும் பள்ளிகளுக்குச் சென்று மாணவர்களைப் பயிற்றுவிக்க வேண்டுமென்று, அந்தக் கடமையை செய்ய வேண்டுமென்று, ஆசிரியர்களுக்கும் நீங்கள் இந்த அறிவுரைகளை வழங்க வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டு இந்த அளவில் அமைகின்றேன்.



## 2. கவன ஈர்ப்பு

### (அ) தஞ்சாவூர் மாவட்டம், சிங்கிப்பட்டியில் காசநோய் மருத்துவமனையை அரசோ அல்லது மருத்துவக் கல்லூரியோ ஏற்று நடத்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. துரை. சந்திரசேகரன் ஆகியோர் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இருவரில் ஒருவரான திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், சிங்கிப்பட்டியில் செயல்படாமல் உள்ள காசநோய் மருத்துவமனையை அரசோ அல்லது தஞ்சை மருத்துவக் கல்லூரியோ ஏற்று நடத்தவேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விரை அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

### அறிக்கை

வீட்டு சிகிச்சை முறையே காசநோய் தடுப்புத் திட்டத்தின் பயனுள்ள செயல் முறையாக இருப்பதால், புதிய காசநோய் மருத்துவமனைகள் ஏற்படுத்துவதோ அல்லது அரசு ஏற்பதோ தேவையற்றது என அரசு கருதுகிறது.

மகாத்மா காந்தி காசநோய் மற்றும் மார்பு நோய் மருத்துவமனையின் தலைவர் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள்:

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 மே 22

பயன் அளிக்கக் கூடியதும் மற்றும் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான வீட்டு முறை சிகிச்சையினால், (வெளி நோயாளி சிகிச்சை முறையினால்) இம்மருத்துவமனையில் சேரும் உள்ளிருப்பு நோயாளிகளும் குறைந்து கொண்டே வருகின்றனர். இதனால், நிறுவனத்திற்கு அதன் அலுவலர்களின் மாதாந்திர ஊதியத்தைக் கூடக் கொடுக்க முடியாத அளவுக்கு மிகுந்த நிதி நெருக்கடி வந்துள்ளது. இந்நிறுவனத்திற்கு ஏறக்குறைய ரூபாய் 20 இலட்சத்திற்கு செலவினப் பொறுப்பு உள்ளது. இதனால், நிறுவனத்திற்குக் கிடைக்கும் நிதியிலிருந்து தொடர்ந்து நடத்த முடியவில்லை. இந்நிறுவனத்தின் நிர்வாகிகள் நிறுவனத்தை அரசே எடுத்து நடத்துமாறு பரிந்துரை செய்துள்ளதால், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர், நிறுவனத்தை அதன் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுடன் அரசே எடுத்து நடத்தவேண்டும் அல்லது இந்நிறுவனத்தினை தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைத்து முதல்தர காசநோய் மற்றும் மார்பு நோய் மருத்துவமனையாக ஆக்கி அதனை நிர்வகிக்கவும், முன்னேற்றவும் செய்யலாம் என்று குறிப்பிட்டுள்ளார். தேசிய காச நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் பெரும்பான்மையான காசநோய் நோயாளிகள் மிகவும் தரமான காச நோய் தடுப்பு மருந்துகள் மூலமாக மிகவும் சரியான முறையில் வீட்டில் இருந்துகொண்டே குணமடைந்து வருகிறார்கள். ஆகையால், இதுபோன்ற தனியார் காசநோய் மருத்துவ மனை—சானடோரியம் ஆகியவற்றை அரசு எடுத்து நடத்துவதற்கு அவசியம் இல்லாமல் போகிறது. மாவட்டத்தில் தற்போதுள்ள காசநோய் படுக்கைகளே அவசரம் மற்றும் உண்மையான காசநோய் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப் போதுமானவை. மேலும், சிங்கிப்பட்டியிலுள்ள மகாத்மா காந்தி காசநோய் மருத்துவமனையை அரசு எடுத்து நடத்துவதற்கு அரசுக்குத் தொடர் செலவினமாக ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 155.27 இலட்சம் செலவாகும். மேலும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் கூற்றுப்படி, அந்நிறுவனத்திற்கு ரூபாய் 19.30 இலட்சம் கடன் (செலவினப் பொறுப்பு) உள்ளது என்றும் தெரிய வருகிறது. எனினும், இத்தனியார் மருத்துவமனையை தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையுடன் இணைத்து இதனை முதல்தர காசநோய் மற்றும் மார்பு நோய் மருத்துவமனையாக ஆக்குவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்து, அரசுக்கு அறிக்கை அனுப்புமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவர் அறிக்கை கிடைக்கப் பெற்றதும் அதில் கண்டுள்ள பரிந்துரையினை அரசு ஆய்வு செய்து உரிய முடிவெடுக்கும்.



1998 மே 22] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனை ஏறக்குறைய 500 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 315 படுக்கைகள் கொண்ட 8 General Wards மற்றும் 44 Special Wards ஆகியவற்றோடு சுமார் 70 பேர் பணியாற்றக்கூடிய நிலையில், தஞ்சை மாவட்டத்திலே மகாத்மா காந்தி அவர்களுடைய பெயராலே, ஏறக்குறைய 1947-லிருந்து இயங்கி வருகிற ஒரு சிறப்பான மருத்துவமனையாகும். தஞ்சை மாவட்டம், திருவாரூர் மாவட்டம், நாகப்பட்டினம் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம் போன்ற இந்த நான்கு மாவட்டங்களுக்கும் இந்த மருத்துவமனையாலே நன்மை உண்டு. இப்போது இந்த மருத்துவமனை ஏறக்குறைய மூடுகின்ற நிலையிலே, அல்லது மூடிவிட்ட நிலையிலே உள்ளது. இந்த மருத்துவமனைக்கு அந்தக் காலத்திலே, தஞ்சாவூர் மாவட்டத்திலே இருக்கின்ற திருத்துறைப்பூண்டி, நீடாமங்கலம், சீர்காழி, வலங்கைமான், கும்பகோணம், திருவிடைமருதூர் பகுதிகளிலே இருந்த நிலக்கிழார்கள் 449 ஏக்கர் நிலத்தை எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படி எழுதி வைத்திருந்தும்கூட, இப்போது வருமானம் ஒன்றும் அதிலிருந்து வருவதில்லை. இந்த அமைப்புக்காக எழுதி வைக்கப்பட்ட நிலம், இப்போது யாருடைய பொறுப்பிலே இருக்கிறது, குத்தகை ஏதும் அந்த நிலத்திலிருந்து வருகிறதா என்பதை அரசாங்கம் கவனித்து, தேவைப்படின் அந்த நிலத்தையேகூட அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம்.

முற்பகல் 9-50

நான் சொன்னது மாதிரி 500 ஏக்கரிலே அமைந்திருக்கிற அந்த மருத்துவமனையை அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும் அல்லது தஞ்சாவூர் மருத்துவமனை, இதை ஒரு பகுதியாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த மருத்துவமனையாலே அரசுக்கு லாபம் இருக்கிறது, நன்மை இருக்கிறது என்ற நோக்கத்தோடு இந்த மருத்துவமனையை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்தி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. துரை. சந்திரசேகரன்.

**திரு. துரை. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகச் சிறப்பாக இயங்கி வந்த இந்த மருத்துவமனையில், காசநோய் சிகிச்சைக்கு என்று தனிப்பிரிவு தேவையில்லை என்று விவர அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். தென் மாவட்டங்களிலிருந்து ஏழை எளியவர்கள், புற்று நோய், இருதய நோய் சிகிச்சைக்கு சென்னை அல்லது பாண்டிச்சேரி மருத்துவமனைகளுக்குத் தான் செல்ல வேண்டியிருப்பதால், மிகச் சிறப்பான Infrastructure வசதிகளைக்

கொண்ட அந்த மருத்துவமனையை ஒரு Cancer Institute ஆகவோ அல்லது Open Heart Surgery நடத்துகின்ற மருத்துவமனையாகவோ அரசு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்களும் இங்கே தெரிவித்ததைப்போல, தனியாரிடமிருந்த அந்த மருத்துவ மனையிலே, ஒரு காலத்திலே T.B. நோய் என்றால் மிகவும் பயப்படக்கூடிய அல்லது அச்சப்படக்கூடிய சூழ்நிலை இருந்தபோது, நோயாளிகள் அங்கே சேர்க்கப்பட்டு, அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. ஆனால், இன்றைய விஞ்ஞான வளர்ச்சியினாலே, வீட்டிலே இருந்துகொண்டு T.B. நோய்க்கான மருத்துவ சிகிச்சையைச் செய்து கொள்ளலாம் என்ற நிலை உருவானதற்குப் பிறகு அங்கே உள்நோயாளிகள் குறைந்து கொண்டே வந்திருக்கிறார்கள். எனவே, அது குறித்து என்ன செய்யலாம் என்று அரசாங்கம் எண்ணி, நான் தஞ்சாவூருக்குச் சென்றிருந்தபோது, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் முதல்வர், மாவட்ட ஆட்சித் தலைவர், அங்கே இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி. மணி ஆகியோருடன் கலந்து பேசி, இந்த மருத்துவமனையை, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையோடு இணைத்துக் கொள்ளலாமா என்று ஆலோசித்து—மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல—அப்படி மருத்துவக் கல்லூரியோடு இணைக்கப்படும் நேரத்தில், தஞ்சை மாவட்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ளவர்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு சிகிச்சைகளுக்குப் புதிய வார்டுகளை உருவாக்கி, அறுவை சிகிச்சை மற்றும் Chest Diseases போன்ற நோய்களுக்கும் இங்கே சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யலாமா என்று நாங்கள் பரிசீலித்தோம். இது குறித்து Director of Medical Education அவர்கள் ஓர் அறிக்கையைத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவர்களிடமிருந்து இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அறிக்கை வந்துவிடும். அறிக்கை வந்தவுடன், அரசு அது குறித்துப் பரிசீலித்து உரிய முறையிலே நல்ல நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், அந்த மருத்துவமனைக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட நிலம் யாரிடத்திலே இருக்கிறது என்றும் கேட்டு, அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளலாம் என்ற வேண்டுகோளையும் வைத்தார்கள். அந்த நிலங்கள் குத்தகை பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் குத்தகை பாக்கி வைத்திருக்கிறார்கள். மேற்சொன்ன சட்டத்தின்படி அவர்களிடமிருந்து வரவேண்டிய பாக்கியை வசூலிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கலாமே தவிர, அவர்களிடமிருந்து நிலத்தைத் திரும்பப் பெறுவது என்பது சட்ட விரோதமானது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 449 ஏக்கர் நிலம் அந்தப் பகுதியிலே இருக்கிற நிலமற்ற விவசாயிகள் பொறுப்பிலே இருக்கலாம். இருக்கட்டும். அதை நான் அவர்களிடமிருந்து எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தவில்லை. அவர்களிடமிருந்து வரவேண்டிய குத்தகை பாக்கியை வசூலிக்கலாம். ஏனென்றால் அது Trustக்குச் சொந்தமானது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்தான் இன்று அந்த Trust இன் தலைவராக இருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன தகவலுக்கு நன்றி.

அந்த மருத்துவமனையில் 60, 70 பேர் சம்பளம் இல்லாமல் பணியாற்றி வருகிறார்கள், மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு இடையிலே உதவி செய்கின்ற வகையிலே, இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கேட்டு, வற்புறுத்தி அமைகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய ஆண்டுக்கு 20 இலட்ச ரூபாய் செலவாகும் என்று ஏற்கெனவே, அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். Director of Medical Education இதைப்பற்றி பரிசீலிக்கிறபோது, இந்தப் பிரச்சினைகள் உட்பட அனைத்தையும் பரிசீலிக்கும்படி கேட்டிருக்கிறோம். அறிக்கை வந்தவுடன் நல்ல முறையிலே இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1998 மே 22

**(ஆ) பஞ்சு பற்றாக்குறையாலும், நூல் தேக்கத்தாலும் சிறிய நூற்பாலைகள் பாதிப்பு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு, திரு. சி.டி. தண்டபாணி, திரு. டி. மணி, திரு. கே. சுப்பராயன், திரு. நா. பெரியசாமி, திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஜி. நிஜாமுதீன் ஆகியோரில் ஒருவர் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பஞ்சு பற்றாக்குறையினாலும், நூல் தேக்கத்தாலும் தமிழகத்தில் உள்ள சிறிய நூற்பாலைகள் எதிர்கொள்ளும் அபாயம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

## அறிக்கை

கோயம்புத்தூரில் உள்ள தென்னிந்திய சிறு நூற்பாலைகளின் உரிமையாளர்களின் சங்கத்தில் சுமார் 520 சிறிய நூற்பாலைகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த நூற்பாலைகளில் 30 இலட்சம் கதிர்களுக்கு மேல் உள்ளன. இது நாட்டிலுள்ள கதிர்த் திறனில் 30 விழுக்காட்டுக்கும் அதிகம்.

2. தென்னிந்திய சிறு நூற்பாலைகளின் உரிமையாளர்கள் சங்க உறுப்பினர்களின் பொதுக் கூட்டம் 28-4-1998 அன்று நடைபெற்றபொழுது சிறு நூற்பாலைகளின் பிரச்சினைகளை விளக்க 12-5-1998 அன்று அடையாள வேலை நிறுத்தம் நடத்துவது என்று முடிவெடுத்தது. இதன் பின்னர், 30-4-1998ஆம் தேதியிட்டு இந்நூற்பாலைகளின் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் விவரித்து மாண்புமிகு முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளது. இந்தக் கடிதத்தில், இச்சங்கம், கீழே குறிப்பிட்டுள்ள சில கோரிக்கைகளைப் பிரதானமாக முன் வைத்துள்ளது:-

(அ) இலாப, நட்டக் கணக்குகளைக் கருத்தில் கொள்ளாமல் அதிகப்படியாக நடைமுறை மூலதனம் வழங்க வேண்டும்.



1998 மே 22] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

(ஆ) தமிழ்நாடு மின் வாரியம் ஓர் ஆண்டுக்கு மின் கட்டணம் வசூலிப்பதை நிறுத்தி வைத்து அத்தொகையை ஓர் ஆண்டுக்குப் பின்னர் 36 மாதங்களில் பெற்றுக்கொள்ள அனுமதிக்க வேண்டும்;

(இ) அதே போல், விற்பனை வரியை ஓர் ஆண்டு வசூலிக்காமல், அத்தொகையை ஓர் ஆண்டுக்குப்பின் 36 மாதத் தவணைகளில் செலுத்த அனுமதிக்க வேண்டும்.

(ஈ) தமிழ்நாட்டில் பஞ்சு தேவை 65 இலட்சம் பேல்கள். ஆனால், இங்கு விளைவதோ 5 இலட்சம் பேல்களே. எஞ்சிய தேவைக்கு பிற மாநிலங்களிலிருந்து வாங்குவதால் போக்குவரத்துச் செலவுகள் அதிகமாகின்றன. இதைத் தவிர்க்க, இந்திய Cotton Corporation, பருத்தி விற்பனை இணையங்கள் கிளை அலுவலகங்களை கோயம்புத்தூரில் துவக்க வேண்டும். அவை 1997ஆம் ஆண்டு ஜனவரி விலையில் பருத்தி விற்பனை செய்ய மைய அரசு உத்தரவிடவேண்டும்.

(உ) பருத்தி ஏற்றுமதியை மைய அரசு தடை செய்ய வேண்டும்; பருத்தி பதுக்கலைத் தடுக்க அவசரச் சட்டம் இயற்ற வேண்டும்.

(ஊ) மைய அரசு நூல் ஏற்றுமதிக்கு வழிவகைகளைக் காண வேண்டும்.

(எ) நூற்பாலைகளுக்கு கலால் வரியிலிருந்து (ரூ. 30.00 இலட்சம்) விலக்களிக்க வேண்டும்.

3. தமிழ்நாட்டில் சிறிய மற்றும் பெரிய நூற்பாலைகளுக்குத் தேவையான பஞ்சின் அளவு ஆண்டொன்றுக்கு சுமார் 35 இலட்சம் பேல்கள். ஆனால் தமிழகத்தில் விளையும் பஞ்சின் அளவு 5 இலட்சம் பேல்களே ஆகும். எனவே நமது பஞ்சின் தேவைக்கு நூற்பாலைகள் வெளி மாநிலங்களையே நம்பி இருக்கின்றன.

பஞ்சு ஆலோசனை வாரியத்தின் அறிக்கைப்படி (Cotton Advisory Board) 1996-97ஆம் ஆண்டில் இந்தியாவில் பஞ்சு விளைச்சல் 175 இலட்சம் பேல்கள் ஆகும். ஆனால் 1997-98-ம் ஆண்டில் பஞ்சு விளைச்சல் சுமார் 145-150 இலட்சம் பேல்கள் ஆகும். கடந்த ஆண்டைவிட நடப்பு ஆண்டில் இந்தியாவில் பஞ்சு விளைச்சல் குறைந்துள்ளதால், பஞ்சின் விலை கடந்த ஆண்டைவிட நடப்பு ஆண்டில் அதிகரித்துள்ளது. இது நூற்பாலைகளுக்கு ஒரு சுமையாக அமைந்துள்ளது.

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [1998 மே 22

தமிழகத்தில் தேவைக்கும் அதிகமாக, சுமார் நான்கு மடங்கு நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. பெரிய நூற்பாலைகளின் ஒரு பகுதி கிழக்காசிய நாடுகளுக்கு தமது உற்பத்தியை ஏற்றுமதி செய்து வந்தன. தற்போது, கிழக்காசிய நாடுகளின் பொருளாதார நெருக்கடி காரணமாக, அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்த நூற்பாலைகள் தற்சமயம் ஏற்றுமதி செய்ய முடிவதில்லை. எனவே அந்நூற்பாலைகள் தமது உற்பத்தியை உள்நாட்டில் விற்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தேசிய அளவிலேயே துணித்தேக்கம் மிகவும் அதிகமாக உள்ள காரணத்தினால் துணியின் உற்பத்தி நடப்பு ஆண்டில் குறைவாக உள்ளது. இதன் காரணமாக நூல் கொள்முதல் அளவும் குறைந்துள்ளதால் நூல் இருப்புத்தேக்கம் நேரிட்டு நூற்பாலைகளுக்கு நிதி நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

ஆலை முதலாளிகள் வேண்டுகோளுக்கிணங்க ஏற்றுமதியை ஊக்குவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிய வருகிறது.

நூல் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் அதிகமாகும்போது, நூலின் தேவை அதிகரிக்கப்படும். மேலும் ஒரு பகுதி நூற்பு ஆலைகள் செயற்கையிழை (Polyester and Cotton) உற்பத்தி செய்வதால் நூற்பாலைகள் இலாபகாமாக இயங்க வாய்ப்புண்டு.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் பருத்தி நூலுக்குப் பெயர்போன ஒரு மாவட்டம். தமிழகத்தில் கிட்டத்தட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட சிறிய நூற்பாலைகள் இருக்கின்றன. ஒட்டுமொத்தமாக இந்தியாவில் உற்பத்தியாகக்கூடிய நூலில் *73* சதவிகிதம் நம்முடைய தமிழகத்தில் உள்ள பஞ்சாலைகளிலே உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படிப்பட்ட நூற்பாலைகள் கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு பெரிய சவாலை எதிர்நோக்குகின்ற அளவுக்கு பல்வேறு காரணங்களால் இப்போது அவை செயல் இழந்திருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, அந்த நூற்பாலைகளை மூடக்கூடிய நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இதுசம்பந்தமாக நான் கவன ஈர்ப்பு கொடுத்த உடனே நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குக் காரணம் நூற்பாலைகள் சம்பந்தப்பட்டவை பெரும்பாலும் மத்திய சர்க்காருடைய பிரச்சினைகள்தான்.



1998 மே 22] [திரு. சி.டி. தண்டபாணி]

மூன்றே மூன்று பிரச்சினைகள் - ஒன்று விற்பனை வரி, இன்னொன்று மின்சாரக் கட்டணம், மற்றொன்று சுற்றுச்சூழல் 'Pollution' என்கின்ற இந்த மூன்று பிரச்சினைகள்தான் மாநில அரசுக்கு சம்பந்தப்பட்டவை. ஆனாலும்கூட கோவை மாவட்டத்தை பொறுத்தவரையில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சொல்லி முடித்துவிடுகிறேன். தொழிலாளர்களுடைய பிரச்சினை என்கிற வகையிலும், நூற்பாலைகளுடைய பிரச்சினை என்கிற வகையிலும் கடந்த காலத்தில் நூற்பாலைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட பல்வேறு சங்கடங்களை நிவர்த்தி செய்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்சினை குறித்து மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்வதற்காகத்தான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

பருத்தி விலை இப்போது அதிகமாக இருக்கிறது. அதற்குக் காரணம் மத்திய சர்க்காரில், Cotton Advisory Board என்கிற ஒரு அமைப்பு இருக்கிறது. அதிலே பெரிய வியாபாரிகள், தரகர்கள் இருக்கின்ற காரணத்தால் பஞ்சைப் பதுக்கி வைத்து, இப்போது மில்களுக்கு அந்த பஞ்சுகள் கிடைக்காத அளவுக்கு செய்துகொண்டிருக்கிறார்கள். இதற்கு உடனடியாக ஒரு தீர்வு கண்டாக வேண்டும்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே கொடுக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் நம்முடைய மாநில அரசு இந்தச் சிறிய நூற்பாலைகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Sanctioned demand என்பது *500* ஆக இருந்து Consumer demand *325* ஆக இருந்தால் அதற்கு அதிகப்படியான தொகை இப்போது போடப்படுகிறது. அதைப்போல....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியாக மாற்றிக் கேளுங்கள். இல்லையென்றால், அமைச்சர் அவர்களை பதில் கூற அழைத்துவிடுவேன். சீக்கிரம் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களுக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அனுப்பக்கூடிய நூல்களின்மேல் போடக்கூடிய விற்பனை வரியை அரசு ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல இங்கே

[திரு. சி.டி. தண்டபாணி] [1998 மே 22

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில், நிறைய பஞ்சு பதுக்கிவைக்கப்பட்டிருக்கிறது.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவையிலே என்னென்ன சொல்ல வேண்டுமென்று இருந்தேனோ, அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.டி. தண்டபாணி அவர்களே விவரமாக மத்திய மாநில அரசினுடைய பிரச்சினைகளை தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். 1989 ஆம் ஆண்டில் நம்முடைய கலைஞர் அரசிலேதான் நிலைக் குழு போடப்பட்டது. தமிழக அரசைப் பொறுத்தவரையிலே நூற்பாலைகளுக்கு ஏற்படுகின்ற சங்கடங்களைத் தீர்ப்பதற்கு ஒரு நிலைக் குழு அமைக்கப் பட்டு, அதிலே சித்ராவினுடைய South Indian Textiles Research Association பிரதிநிதி ஒருவரும், Deputy Commissioner (Labour) அவர்களுடைய பிரதிநிதி ஒருவரும், Textiles expert என்ற அடிப்படையிலே ஒருவரும், Handlooms லிலே இருக்கின்ற Technical staff ஒருவரும் உறுப்பினர்களாக இருந்து, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் காண்பதற்கு தக்க ஏற்பாடுகளை, பரிந்துரைகளைச் செய்வதற்கு உள்ளார்கள். அந்தக் குழுவின் முன் தங்களுடைய கோரிக்கைகளை, தங்களுடைய ஆலோசனைகளை எடுத்து வைத்து, அதன் மூலம் முதலமைச்சருடைய நல்ல ஆலோசனையோடு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மிக முக்கியத் தொழிலாக இருக்கிற பஞ்சாலை, நூற்பாலைத் தொழிலுக்குத் தேவையான பருத்தி உற்பத்தி என்பது நம்முடைய மாநிலத்திலே நடைபெறவில்லை என்பது விவர அறிக்கையிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்தப் பருத்தியை தமிழ்நாட்டிலே அதிகமாக உற்பத்தி செய்வதற்கு வேளாண்மைத் துறையோடு கைத்தறித் துறையும் இணைந்து மாண்புமிகு முதலமைச்சரைக் கலந்து ஒரு திடீர் பாய்ச்சலில் பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டத்தை வகுக்க அரசு முன்வருமா? அதேபோல, பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி குறித்து சிறு



1998 மே 22] [திரு. நா. பெரியசாமி]

நூற்பாலைகளைப் போலவே 'SIMA'-வும் -- அது குறித்து நேற்றையதினம் இந்து பத்திரிகையில் செய்திகூட வெளியிட்டு இருக்கிறார்கள்— ஏறத்தாழ 10 இலட்சம் கதிர்கள் அளவிற்கு உற்பத்தியைக் குறைக்க வேண்டிய நெருக்கடி அவர்களுக்கு ஏற்பட்டு இருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் அழைத்து, இது குறித்து விவாதித்து தொழிலாளர்களுக்கும் பாதிப்பு வராத அளவுக்கு ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சில பிரச்சினைகளைப் பற்றிப் பேசினால் நீண்ட விளக்கம் அளிக்க வேண்டி இருக்கும். ஏனென்றால், 10 இலட்சம் spindle களைக் குறைக்க வேண்டும் என்ற ஒரு அடிப்படையிலே 'SIMA' பேசிக் கொண்டிருக்கிறது. நமக்கு இருக்கின்ற நிலை எல்லாம், நம்மிடம் 5 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்யக்கூடிய சக்திதான் இருக்கிறது. ஆனால், 50 இலட்சம் பேல்கள் நமக்கு வேண்டும். ஆனால், விவசாயிகள் இப்போது பருத்தி உற்பத்தி செய்வதற்கு மிக்க தயக்கம் காட்டுகிறார்கள். அந்தத் தயக்கத்தைக் குறைப்பதற்கும், அவர்கள் அச்சமின்றி விவசாயம் செய்யவும், நம்முடைய புதிய ஜவுளிக் கொள்கைத் திட்டங்கள், புதிய அணுகுமுறையில் வகுக்கப்பட்டு விவசாயத் துறையோடு அதையும் இணைத்து செயல்படுத்துவதற்குரிய முயற்சிகளைச் செய்ய இருக்கிறோம் என்பதை இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 51 முதல் 54 வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

# 4. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை**

**(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்**

## (அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வைத் துறை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *1998-99* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *2*—மாநில ஆயத் தீர்வைத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய *2* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. *17,01,87,000*-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் *1396*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மாநில ஆயத் தீர்வையை ஏய்க்கும் நிலையைத் தடுக்க சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய *2* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *17,01,87,000*-ல் ரூ. *100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *168*, திரு. கே. சுப்பராயன்.



**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய *2* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *17,01,87,000*-ல் ரூ. *100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1410*, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *1119*, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கைப் பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய *2* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *17,01,87,000*-ல் ரூ. *100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *1659*, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்த, காய்ச்சுபவர்கள் மீதும் விற்பவர்கள் மீதும் கடும் தண்டனை விதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய *2* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. *17,01,87,000*-ல் ரூ. *100* குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3574*, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3208, திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1787, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, 'To discuss the need to enforce total prohibition in Tamil Nadu' I move—

"That the allocation of Rs. 17,01,87,000 under Demand No.2—State Excise Department be reduced by Rs. 100"

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2438, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,01,87,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 949, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் மக்கள் வாழ்க்கையை பாதிக்கும் மதுபானக் கடைகளை ஒழித்து, பூரண மதுவிலக்கு அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,01,87,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண்



**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,01,87,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 609, திரு. எஸ். சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3496, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,01,87,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2180, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "களியக்காவிளை, குழித்துறை, மார்த்தாண்டம், அருமனை, நித்திரவிளை போன்ற காவல் நிலைய சரகப் பகுதிகளில் கள்ளச்சாராயம் விற்பனை செய்வதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆயத் தீர்வைத் துறை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 17,01,87,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 709,29,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2695, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வாணியம்பாடி தாலுகா, வெள்ளக்குட்டை கிராமத்தில் காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.709,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 147, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 709,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1528, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1251, திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 709,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1676, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை காவல் நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால் அரசுக்குச் சொந்தமான இடத்தில் அக்காவல் நிலையத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 709,29,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3557, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3236, திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1806, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, "To discuss the need to start a new Police Station at Udanapalli in Hosur Taluk" I move—

"That the allocation of Rs 709,29,37,000 under Demand No.15-Police be reduced by Rs.100/-".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2471, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் பவர்காடு பகுதியில்

புதியதாகக் காவல் நிலையம் ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 709,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 985, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியம், ஆப்பக்கூடலில் புதிய காவல் நிலையம் ஒன்று ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 709,29,37,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1758, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பல்லகவுண்டன்பாளையம் மற்றும் காஞ்சிக்கோவில் ஆகிய இடங்களில் காவல் நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.709,29,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3515, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.709,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2211, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கடையாலுமூட்டில் இருக்கும் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 709,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3634, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "காவல் நிலையங்களில் வழக்குகளில் சம்பந்தப்பட்டு நீண்டகாலமாக நிற்கின்ற வாகனங்களை உடனே ஏலத்தில் விடவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.709,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3336, திரு. கே. மணிவர்மா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3963, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நிலக்கோட்டை தொகுதியில் உள்ள விருவீடு, வினாம்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள காவல் நிலையங்களுக்குக் கூடுதல் கட்டடங்களும், அங்கு பணிபுரியும் சப்-இன்ஸ்பெக்டர், சர்க்கிள்

இன்ஸ்பெக்டர் மற்றும் காவலர்களுக்குக் குடியிருக்கக் குடியிருப்புகளும் கட்டித் தரவேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.709,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2618, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2403, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 610, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**DR. E.S.S. RAMAN:** Hon. Deputy Speaker Sir, 'To discuss the need to construct a building for the Police Station at Podhattoorpet' I move —

"That the allocation of Rs.709,29,37,000 under Demand No.15, Police be reduced by Rs.100/-"

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1369, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்தில் மகளிர் காவல் நிலையங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.709,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3766, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதி, சோழபுரம்





பேரூராட்சியில் ஒரு புறக்காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,09,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 273, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, இரும்புலிக்குறிச்சியில் புதிய புறக் காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 709,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2552, திரு. லி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "எட்டயபுரம் வட்டம், கடலையூர் கிராமத்திலும், சங்கரன்கோவில் தாலுகா, குருவிகுளம் கிராமத்திலும் புதிய காவல் நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.709,29,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2143, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம்,

சொந்தகையில் காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறன்:

"காவல் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.709,29,37,000-ல் ரூ.100/ குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 882, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1304, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 610, திரு. எஸ். சிவராஜ், இருக்கையில் இல்லை.

### (இ) கோரிக்கை எண் 16 – தீயணைப்புப் பணிகள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ.57,46,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2691, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வாணியம்பாடி தாலுகா, வெள்ளக்குட்டையிலும், வேலூர் தாலுகா பாலமதி கிராமத்திலும் தீயணைப்பு நிலையங்கள் அமைக்க



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/ - குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 142, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/ - குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1546, திரு. ஜி. கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1252, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி தீயணைப்பு நிலையத்திற்கு ஒரு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 57,46,64,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1679, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை தீயணைப்பு நிலையத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டப்பட வேண்டியதன் அவசியம்

குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 57,46,64,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3556, திரு. ஜி. நிஜாமுதீன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3243, திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை

வெட்டுத் தீர்மானம் எண் 1911, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2470, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "புதியதாக தீயணைப்பு நிலையம் அமைக்க ஒரு தீயணைப்பு நிலையத்திற்கும் மற்றொரு தீயணைப்பு நிலையத்திற்கும் 25 கி.மீ. இடைவெளி இருக்கவேண்டும் என்பதை மாற்றி 15 கி.மீ. இடைவெளியே போதும் என அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 987, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியம், கவுந்தப்பாடியிலும் ஆப்பக்கூடலிலும் தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1732, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பெருந்துறையில் அமைந்துள்ள தீயணைப்பு நிலையத்திற்கு அலுவலகம் அமைக்க நிலம் ஒதுக்கித் தரவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3500, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி"விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2214, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "பளுகல் பேரூராட்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3620, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோவை கலைக்கல்லூரி சாலையையும் ஸ்டேட் பேங்க் சாலையையும் தீயணைப்பு வளாகத்தின் வழியாக இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3354, திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2615, திரு. வை. சிவபுண்ணியம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2407, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 638, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

DR. E.S.S. Raman: Hon. Deputy Speaker Sir

"To discuss the need to construct separate building for the Fire Station at Pallipattu" I move—

"That the allocation of Rs. 57,46,64,000 under Demand No. 16 Fire Service be reduced by Rs.100/-

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3773, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



"தஞ்சை மாவட்டம் பாபநாசம் தொகுதி சுவாமிமலை பேரூராட்சியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2142, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சிவகெங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்புவனத்தில் புதிதாக தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 883, திரு.ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1305, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 611, திரு. எஸ். சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 262, திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஆண்டி மடம் ஒன்றியத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1322, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் ஓமலூர் நகரில் இருக்கும் தீயணைப்பு நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தீயணைப்புப் பணிகள் பற்றிய 16-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.57,46,64,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத் தீர்வைத் துறை, காவல் துறை மற்றும் தீயணைப்புப் பணிகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்றைய விவாதத்தில் பங்கேற்பதற்கு 16 உறுப்பினர்கள் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்கள். விவாதத்தைத் தொடங்கி வைப்பவருக்கு 15 நிமிடங்கள். மற்ற அனைவருக்கும் 10, 10 நிமிடங்கள். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் டாக்டர் அ. செல்லக்குமார்.

---

@ 131 முதல் 200 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் துறை எந்த அளவிற்கு ஒரு கடினமான ஒன்று என்பதும், சிரமமான ஒன்று என்பதும், ஆபத்தான ஒன்று என்பதும், unpopular ஆவதற்கு அதிக வாய்ப்பிருக்கின்ற ஒன்று என்பதும் நான் உணர்ந்துகொண்டவன். இந்தத் துறையைப் பொறுத்தவரை, தீயவர்களுக்கு அது ஒரு தீயாகவும், நல்லவர்களுக்கு அது தீபமாகவும் இருக்க வேண்டும். இந்தத் துறையைப் பொறுத்தவரை சொல்கின்றபொழுது, பொது மக்களுக்கும் இந்தத் துறைக்கும் இருக்கின்ற ஈடுபாடு என்பது, அதை ஆங்கிலத்திலே 3 'A', என்கின்ற முறையிலே என்னாலே சொல்ல முடியும். ஒன்று 'availability', இன்னொன்று, 'accessability' மூன்றாவது acceptiability. இந்த மூன்றிலும் பொதுமக்களுக்கும் காவல் துறைக்கும் இடையே இணக்கம் இருக்கின்றபோதுதான் இந்தத் துறை முழுமையாக, செவ்வனே சீராக்கப்பட முடியும் என்பதை நாம் உணர்ந்து வருகிறோம்.

அதேபோலத்தான், இந்தக் காவல் துறையிலே பணியாற்றுகின்ற காவலர்கள். அவர்கள் மத்தியிலே service என்கின்ற சேவை உணர்வு, sacrifice, என்கிற தியாக உணர்வு, self-discipline என்கின்ற தனி மனித ஒழுக்கம் இருக்க வேண்டும் என்று சொன்னால்தான் அவர்கள் செய்கின்ற பணியும் நேர்மையான முறையிலே பொதுமக்களால் ஏற்றுக்கொள்ள முடியும். அந்த அடிப்படையில் இன்றைக்கு காவல் துறை ஏறத்தாழ 86,000-க்கும் மேற்பட்ட பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனால், இந்திய சராசரியைப் பார்க்கின்றபோது, ஒரு இலட்சம் மக்கள் தொகை இருக்கின்றபோது அதற்கு 134 காவலர்கள் இருக்க வேண்டுமென்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழகத்திலே 127 தான் இன்றைக்கு நாம் எட்டியிருக்கிறோம். இன்றைக்கு எட்டியிருக்கிறோம் என்று சொல்லுகின்றபோது, இதை நான் குறைவு என்று சொல்ல விரும்பவில்லை. ஆனால், இந்தக் காவல் துறையில் பெரும்பாலானவர்கள் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். அதிகாரிகளுடைய இல்லங்களில் தோட்ட வேலை பார்ப்பதற்கும், அவர்களுடைய காலணிகளைச் சுத்தப்படுத்துவதற்கும் இப்போது காவலர்களைப் பயன்படுத்துகின்ற ஒரு நிலை அவர்கள் மீது திணிக்கப்பட்டிருக்கின்றது என்பதும், மாண்புமிகு அமைச்சர்கள், இந்த

நாட்டினுடைய பிரதமர், முதலமைச்சர்கள் போன்ற வி.ஐ.பி.க்கள் வருகின்றபோது அவர்கள் செல்கின்ற சாலையோரங்களில் எல்லாம் காவல் காப்பதற்கும் பெரும்பாலான காவலர்கள் இப்போது ஒதுக்கப்படுகிறார்கள்.

அதேபோல, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்காகவும், குற்றங்களைக் குறைப்பதற்காகவும் அவர்களைப் பணிகளிலே ஈடுபடுத்துவதற்குப் பதிலாக பெரும்பாலான நேரங்களிலே பல்வேறுபட்ட வேலைகளுக்கு அவர்களை அனுப்புவதன் காரணமாகத்தான் காவல் துறையினுடைய திறமைகள் இப்போது மழுங்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையிலே நீங்கள் தந்திருக்கின்ற விளக்கக் குறிப்பிலே பார்க்கிறேன். 1997 ஆம் ஆண்டு ஆதாயம் வேண்டி செய்யப்பட்ட கொலைகள் மட்டும் 99. அதிலே கண்டுபிடிக்கப்பட்டவை 48 என்று சொல்லப்பட்டிருக்கிறது. 50 விழுக்காடுகூட நடைபெற்றிருக்கின்ற கொலைகளைக் கண்டுபிடிக்கக்கூடிய அளவுக்கு நம்முடைய காவல்துறையில் அவர்கள் திறமையாகச் செயல்படுத்தப்படவில்லை என்பதைத்தான் இன்றைக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புவது.

முற்பகல் 10-15

அதுபோல நடைபெற்று இருக்கின்ற பெரிய திருட்டுக்கள். 1995 ஆம் ஆண்டை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, 1997-வது ஆண்டிலே மட்டும் ஏறத்தாழ ஆயிரக்கணக்கான பெரிய திருட்டுக்கள், கடந்த காலத்தைவிட அதிகமாக நடந்திருக்கின்றன. கடந்த காலத்திலே 17,349 என்று சொன்னால், இப்போது அது 18,511 என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதுபோலதான் கூட்டுக்கொள்ளைகள். கொள்ளைகள் எந்த அளவுக்கு அதிகமாகிக் கொண்டிருக்கின்றன என்பது இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதுபோல துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றிருக்கின்றன. கலவரங்கள், மதக் கலவரங்கள், இனக் கலவரங்கள்—காவல் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனவா என்கிற ஐயப்பாட்டை கடந்த காலத்திலே தமிழக மக்கள் மத்தியிலே உருவாக்கியிருக்கிறது என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஒன்றை மட்டும் நான் உறுதியாகச் சொல்வேன். அண்மையில் நடந்து முடிந்திருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு, காவல் துறை அதிகாரிகளால் ஆங்காங்கே வைக்கப்பட்டுள்ள



வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்க முடிகிறது என்று சொன்னால், எந்த ஐயப்பாட்டின் காரணமாக இந்தப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெரியவில்லை. ஆனால் இதற்கு முன்னர் இதே காவலர்கள்தான் பணியாற்றி இருக்கிறார்கள், இதே அதிகாரிகள்தான் பணியாற்றி இருக்கிறார்கள் இதே தமிழக முதலமைச்சர்தான் காவல் துறையினுடைய அமைச்சராக இருந்து இருக்கிறார்கள். ஆனால் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் அந்தப் பணியை ஏன் செய்து முடிக்க முடியவில்லை? ஏன் அதிலே மந்த நிலை ஏற்பட்டது என்பதற்கு முதலமைச்சர்தான் விளக்கம் தர முடியும். அதுபோலத்தான் இந்தக் காவல் துறை என்பது ஒரு நிரந்தரமான ஒன்று; ஆனால் ஆட்சியாளர்கள் நிரந்தரமற்றவர்கள். நிரந்தரமற்ற ஆட்சியாளர்கள் நிரந்தரமான காவல் துறையை தங்களது அரசியல் செல்வாக்கை நிரந்தரமாக்கிக் கொள்வதற்காக, பகடைக் காயாகப் பயன்படுத்துகிறார்கள் என்று நான் பகிரங்கமாக இங்கே குற்றம் சாட்ட முடியும்.

1997, ஆகஸ்டு திங்கள் 4 ஆம் தேதி, நீதிமன்றத்தினுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு, குற்றப் பத்திரிகை வாங்குவதற்காக, சேலம் நீதிமன்றத்திற்குச் சென்றபோது, அந்த நீதிமன்ற வளாகத்திற்குள் வைத்து நடைபெற்ற கொலைவெறித் தாக்குதல்கள் பத்திரிகையிலே செய்தியாக வந்ததை, எண்ணிப்பார்க்க வேண்டும். நீதிமன்றத்தினுடைய உத்தரவை ஏற்றுக்கொண்டுதான் அந்த நீதிமன்றத்திற்கு நான் சென்று இருக்கிறேன். குற்றப் பத்திரிகை வாங்குவதற்காக நீதிமன்ற வளாகத்திற்குச் செல்கின்றபோது, அந்த நீதிமன்ற வளாகத்திற்குள்ளே குண்டர்கள் கைத்தடி வைத்துக்கொண்டு, இன்னும் சொல்லப் போனால், பொறுப்புமிக்க மாண்புமிகு உறுப்பினர்கள்கூட அதிலே கலந்து கொள்கிற ஒரு வேடிக்கையான, வேதனையான ஒரு செயல் அங்கே நடந்து முடிந்தது என்பதை இந்த மன்றத்திலே என்னால் பகிரங்கமாகச் சொல்ல முடியும். என்ன நடைபெற்றது? கடந்த ஆட்சிக் காலத்தைப் பற்றி நாம் இன்றைக்குக் குறை சொல்கிறோம். இந்த வேதனைதான் கடந்த ஆட்சிக் காலத்திலே நடந்து முடிந்தது. நீதிமன்றத்திலே அன்றைக்கு சாட்சி சொல்லச் சென்றவர்கள், குற்றப் பத்திரிகை வாங்கச் சென்றவர்கள்மீது அன்றைய ஆட்சியாளர்கள் எத்தகைய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை கட்டவிழ்த்து விட்டார்களோ அதிலிருந்து ஒரு சிறு அளவுகூட மாறாமல், இந்த ஆட்சியாளர்களும் இப்போது நீதிமன்றத்தினுடைய வளாகத்திற்குள் வைத்து, கொலைவெறித் தாக்குதல் என்கிற அளவுக்கு அங்கே செயல்கள் நடைபெற்றன என்பதை இன்றைக்கு

நான் முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதில் எனக்குக் கிடைத்த தகவல் என்னவென்று சொன்னால், அங்கே ஒரு தவறு நடந்து விடக்கூடாது என்று மாவட்டக் கண்காணிப்பாளர் பார்ப்பதற்குப் பதிலாக, யார் அந்தக் கொலைவெறித் தாக்குதலை தலைமை தாங்கி நடத்தினார்களோ அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்து, அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்ததுதான் அன்றைக்கு நடந்து முடிந்த நிகழ்ச்சியாகும். அந்த அதிகாரி கடந்த ஆட்சிக் காலத்திலே திருச்சியிலே பணியாற்றியபோதுதான் முன்னாள் மாண்புமிகு மத்திய அமைச்சராக இருந்த திரு. சிதம்பரம் மீது தாக்குதல் செய்தபோது, அன்றைக்கு ஆட்சியாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்தவர், என்று இன்றைக்குத் தகவலைச் சொல்கிறார்கள், எண்ணிப் பார்க்க வேண்டும். ஆட்சி மாறி இருக்கிறது. அதைத்தான் கடந்த கூட்டத்திலே நான் சொன்னேன்; ஆட்சி மாறியது உண்மை, ஆனால் காட்சி மாறவில்லை என்று. எண்ணிப் பாருங்கள். அன்றைக்கு என்ன நடந்ததோ, கடந்த ஆட்சியில் நடந்து இருக்கின்ற வன்முறைச் சம்பவங்கள்தான், இந்த ஆட்சியிலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அதிகாரிகளும் அவர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் அந்த வன்முறையை ஏற்றுக்கொண்டு செயல்படுத்திய வன்முறைக்கூட்டம், அந்த காட்டுமிராண்டிக் கூட்டம்தான் இப்போது மாறி இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் நிகழ்ச்சிகள் மாறவில்லை என்பதை என்னால் சுட்டிக்காட்ட முடியும்.

அன்றைக்குக்கூட பத்திரிகையிலே முதலமைச்சர் சொன்னார். நீதிமன்றத்திற்குச் செல்லுகின்றபோது, தனியாகச் சென்று இருக்கலாமே என்று சொன்னார்கள். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு அமைச்சராக இருக்கின்ற சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள், 10 நாட்களுக்கு முன்னாலே நீதிமன்றத்திற்குச் சென்றார்கள், குற்றப் பத்திரிக்கை வாங்குவதற்காக. அப்போது அவர் தனியாகச் செல்லவில்லை என்பதையும், தன்னுடைய கட்சிக்காரர்களோடு அங்கே வந்தார்கள் என்பதையும் பத்திரிகையிலே செய்தியாகப் பார்த்தோம். புகைப்படத்தை எல்லாம் பார்த்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்ற காலத்திலேகூட அந்த நிகழ்ச்சிகள் தொடர்ந்து இருக்கின்றன. ஆனால் எந்தக் காலத்திலும் யாரும் இதுபோன்ற வன்முறைச் சம்பவங்களைக் கட்டவிழ்த்து விடுவதில்லை. வேண்டுமென்றே அரசியல் நோக்கத்தோடுதான், இது போன்ற நிகழ்வுகள் இப்போது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன என்று நான் பகிரங்கமாகவே சொல்லக் கிறேன்.





முற்பகல் 10-20

அதேபோல் இப்போது காவல் துறை எந்த அளவிற்கு ஆட்சியாளர்களுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிறது என்பதற்குப் பல்வேறு காரணங்களை என்னால் சுட்டிக்காட்ட முடியும். ஆதாரங்களைக் கேட்பீர்கள். 1958-லே இந்த மாமன்றத்திலே நடைபெற்ற விவாதத்திலேகூட பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதாக அவைக்குறிப்பிலே படித்தேன். 'ஆதாரங்களை ஆளுங்கட்சியினர் கேட்கிறார்கள், ஆதாரங்களை நிரூபிக்கின்ற இடத்திலே எதிர்க்கட்சியினர் ஒரு போதும் இருக்க முடியாது. ஆளுங்கட்சியினர்தான் அதைச் சொல்ல வேண்டுமே தவிர, எதிர்க்கட்சியினர் சொல்வது, அவர்கள் ஆதாரத்தைக் காட்டிச் சொல்ல முடியாது. குற்றச்சாட்டுக்களைத்தான் சொல்ல முடியும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நேற்றைக்குக்கூட நான் படித்துப் பார்த்தேன். இவை எல்லாம் இப்போது நடந்துகொண்டிருக்கின்றன.

சூளைமேடு காவல் நிலையத்திலே ஒரு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஒரு மதுபானக் கடையினுடைய அதிபர் மீதும், அவருடைய குடும்பத்தின் மீதும் குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அந்தக் குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்பட்டு, அவர்கள் மீது Non-Baiballe Case போடப்பட்டு, absconded என்று அங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நபர் தமிழகக் காவல் துறையினுடைய பாதுகாப்பிலே நடைபெற்ற மதுபானக் கடைகள் ஏலத்திலே கலந்து கொண்டு, பல கடைகளை அவர் பெயரிலே எடுத்த வரலாறும் இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது. இவற்றையும் நீங்கள் மேற்பார்வையிட்டுப் பார்க்க முடியும். இவற்றை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்காக, கால அவகாசம் 10, 15 மணித்துளிகள்தான் என்பதற்காக, அதிக நேரம் எடுத்துக்கொண்டு இதிலே சொல்ல முடியாது என்பதற்காக ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் கடந்த 2 ஆண்டுக்காலமாக இந்த மாமன்றத்திலே நான் காவல் துறை மானியக் கோரிக்கை வருகின்றபோதெல்லாம் சொல்லியிருக்கிறேன். தீயணைப்புத் துறையிலே கடந்த ஆட்சியிலே நடந்த தவறு, அதற்குத் தலைமை தாங்கி நடத்தியவர்கள் இரண்டு அதிகாரிகள். அவர்கள் இப்போது கைது செய்யப்பட்டு விசாரணைக்கு

உட்பட்டு இருக்கிறார்கள். ஆனால் அதிலே இருக்கிற 3வது நபர், இந்தத் துறையினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர், இன்றைக்கும் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கிறார். அவர் மீது எந்தவித நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை என்று நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சொன்னேன். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள், 'அவர் யாராக இருந்தாலும், எனக்கு எவ்வளவு வேண்டியவராக இருந்தாலும், அவர் மீது நான் நடவடிக்கை எடுப்பேன்' என்று சொன்னார்கள். கடந்த ஆண்டும் இதே கருத்தை நான் வலியுறுத்தினேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'தீயணைப்புத் துறையினுடைய தீ அணைக்கப்படும்' என்று சொன்னார்கள். இன்றைக்கு மீண்டும் மூன்றாவது முறையாகச் சொல்கிறேன். ஏற்கெனவே 1980-லே அந்த அதிகாரியின் மீது இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சராக இருப்பவர் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றபோது, பல ஊழல் குற்றச்சாட்டுக்களை அன்றைய முதலமைச்சர் மீது சுமத்துவதற்குக் காரணமாக இருந்த அதிகாரியாக அன்றைக்கு வர்ணிக்கப்பட்டார். அந்த அதிகாரியினுடைய காலகட்டத்திலேதான் தீயணைப்புத் துறையிலே floating pump வாங்குவதிலே முறைகேடுகள் நடந்தன என்று நான் பகிரங்கமாகச் சொன்னேன். இதே குற்றச்சாட்டு, உத்திரப்பிரதேச மாநிலத்திலே, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த மாயாவதியின் மீது சுமத்தப்பட்டபோது, இன்றைக்கு சி.பி.ஐ. விசாரணைக்குப்பிறகு அவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தீயணைப்புத் துறையிலே தலைமைப் பொறுப்பிலே இருப்பவர் மீதும் இந்த ஊழல் குற்றச்சாட்டு, அதாவது 35 ஆயிரம், 40 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கப்படவேண்டிய floating pumpகள், 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கப்பட்டது என்று நான் குற்றச்சாட்டைச் சொன்னேன். அந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட அந்த அதிகாரிதான் இன்றைக்கும் இந்தத் துறைக்கு தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறார்கள். என்ன அதிசயம் என்று எனக்கு புரியவில்லை. இதிலே என்ன சூட்சுமம் என்று எனக்குப் புரியவில்லை. அவர் இன்றைக்கு approver ஆக மாறியிருக்கலாம். ஒரு தவறைச் செய்தவர், அந்தத் துறைக்குத் தலைமை தாங்குகின்றபோது, ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக இருக்கின்றபோது, தன்னுடைய மேலதிகாரி சொன்னார் என்பதற்காக அந்தத் தவறை நான் செய்தேன் என்று சொல்லி, தான் தப்பித்துக்கொள்வதற்காக, குற்றத்திலேயிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக approver ஆக மாறுகிறார் என்பதற்காக, அவர் நிரபராதி என்று, எப்படி, எந்த முறையிலே எடுத்துக் கொள்வது என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் விளக்கம் தரவேண்டும். பல



குற்றச்சாட்டுக்களின் மீது, நீங்கள் அமைத்த D.V.A.C. பல ஆண்டுகள் விசாரணை செய்து, அவர் மீது குற்றப்பத்திரிக்கை இருக்கிறது; நீதிமன்றத்திலேகூட வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது; இருந்தும் குற்றவாளி என்று சுட்டிக்காட்டப்பட்ட நபர் அந்தத் துறையினுடைய தலைவராக இன்றைக்கும் தொடர்ந்து இருப்பார் என்று சொன்னால், அவர் மீது நடவடிக்கை எடுக்கின்ற கோப்புகள் எங்கேயோ ஒரு இடத்திலே மூலையிலே தேங்கியிருக்கும் என்று சொன்னால், எந்த முறையிலே தவறு செய்தவர்களை நீங்கள் தண்டிப்பீர்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை. *(மணியடிக்கப்பட்டது.)* 15 நிமிடங்கள் என்று சொன்னீர்களே !...

*முற்பகல் 10-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** அதுபோல் ஒரு மிகப் பெரிய தவறு காவல் துறையில் `Traffic Investigation Department'-ல் தொடர்ந்து இன்றைக்கும் நடந்துகொண்டிருக்கிறது. பல ஆட்சிகள் வருகின்றபோதும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. என்னவென்று சொன்னால், விபத்து நடக்காமலேயேகூட விபத்து நடந்ததாக ஒரு பொய்க் குற்றச்சாட்டு அங்கே எழுதப்படுகிறது. விபத்து நடந்துவிட்டதாக அவர்கள் சாட்சிக் கையெழுத்து எல்லாம் போட்டு, பல துறைகளினுடைய அதிகாரிகள் எல்லாம் சேர்ந்து செய்து, இறுதியில் Insurance Companyயிடமிருந்து அதற்கான பணத்தைப் பெற்றுக்கொள்கின்ற ஒரு மோசடி கடந்த காலத்திலேயிருந்து இன்றைக்கும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

14-3-1991 அன்று, அன்றைக்கு ஆளுநர் ஆட்சி தமிழகத்தில் இருந்தபோது, அதுபோன்ற ஒரு குற்றச்சாட்டு வந்து, கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டு, பத்திரிகைகளில் எல்லாம் தலைப்புச் செய்தியாகக்கூட, பல கோடி ஊழல் நடந்துகொண்டிருக்கிறது, என்று அன்றைக்குச் சொல்லப்பட்டு ஆளுநர் ஆட்சி என்ற காரணத்தினாலே அந்த அதிகாரிகள் மீது F.I.R. போடப்பட்டது. ஏறத்தாழ 7 ஆண்டுகள் முடிந்துவிட்டன. 7 ஆண்டுகளுக்கு முன் பதிவு செய்யப்பட்ட அந்த F.I.R. மீது இதுவரையில் காவல் துறையால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்று சொன்னால், ஏன் இதிலே இந்த மெத்தனம் என்று புரியவில்லை. அதிலே என்னவென்று சொன்னால், விசாரணையின்போது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு ஒதுக்கிய நேரமான 15 நிமிடங்கள் முடிந்துவிட்டன. மேலும் ஒரு நிமிடம் தருகிறேன். பேசி முடித்து விடுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** அதிலே என்ன பிரச்சினை என்று சொன்னால், விபத்து நடந்ததாகச் சில வாகனங்கள் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றன. அந்த வாகனங்கள் மூலம், தமிழகத்தினுடைய பால்வளத் துறையில் அன்றைக்குப் பால் விநியோகம் செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் இருக்கின்றன. ஆனால், அவர்கள் விபத்து நடந்திருக்கிறது என்று சொல்லி, விபத்து நடந்த இடத்தில் வாகனம் நிறுத்தப்பட்டிருக்கிறது. பல நாட்களாக அது ஓடவில்லை. workshop-ற்குச் சென்று அந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான Bill-கள் எல்லாம் அங்கே produce செய்யப்பட்டன. அதற்குப் பிறகு Insurance Companyயிலே சொல்லி, அதற்கான அந்தப் பணத்தையும் பெற்றுக்கொண்டார்கள். ஏறத்தாழ 18 அதிகாரிகள் மீது அன்றைக்குக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. அதிலே ஒரு சிலர், அவர்கள் ஓய்வுபெறுவதற்கு முந்தைய தினம் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள். ஆனால் எஞ்சி இருப்பவர்கள்—அன்றைக்கு Head Constableஆக இருந்தவர்கள் இன்றைக்கு S.I.ஆக இருக்கிறார்கள். S.I.ஆக இருந்தவர்கள் இன்றைக்கு Inspectorகளாக இருக்கிறார்கள். பல கோடி ரூபாய் ஊழல் செய்வதற்குக் காரணமாக இருந்த அதிகாரிகள் இன்றைக்கும் தொடர்ந்து பணியில் நீடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்றபோது, இந்தத் தவறுக்குப் பின்னணியிலே இருப்பவர்களின் காரணமாக இன்றைக்கும் அது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மேலும் ஒரு நிமிடம் கொடுத்தாகிவிட்டது. மொத்தம் 16 பேர்கள் பேசியாக வேண்டும். உங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கு மேலே கொடுத்திருக்கிறேன், உட்காருங்கள். திரு. ஆர். காந்தி.

**திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைத் தமிழகத்தில் முதன்முதலாக எனது தொகுதி பொன்னை ஊராட்சியில் தொடங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி, எனது உரையைத் தொடங்குகிறேன். காவல் துறை



மானியத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக என் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் இந்தத் துறை எப்படி இருந்தது என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் இல்லை. ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, காவல் துறை பொலிவோடு திறமையாகச் செயல்படுகின்றது. நெஞ்சை உலுக்கிய கோவை குண்டுவெடிப்புக்குப் பின்னாலே காவல் துறையின் தீவிர நடவடிக்கையினால் அது கட்டுப்படுத்தப்பட்டது. சென்னையிலே குண்டுவெடிப்புச் சம்பவம் நிகழக்கூடும் என்ற அச்சத்தை முறியடித்து, காவல் துறை தனது கடமையுணர்வை வெளிப்படுத்தியதை மறக்க முடியாது. அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள், எல்லா நிலைக் காவலர்களுக்கும் ரூ.1000 பரிசு அளித்து ஊக்குவித்தது பாராட்டுக்குரியது. அதே சமயம், காவலர் நிலைமை பற்றிச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே காவலர்களைப் பார்க்கும்போது காவலர் உடைதான் முக்கியம். ஆனால் இங்கு எங்கே பார்த்தாலும், ஒரு Securityயைப் பார்த்தாலும் காவலர்கள் மாதிரிதான் இருக்கிறார்கள். இந்த உடையை, காவலர் தவிர வேறு யாரும் அணியக்கூடாது என்ற ஒரு தடையை முதல்வர் அவர்கள் போட வேண்டும்.

*முற்பகல் 10-30*

அடுத்து, 1998-99 -லே 2,500 காவலர் குடியிருப்புகள் கட்டவிருக்கிறார்கள். சென்னை நகருக்கு மட்டும் ஆயிரமும், மற்ற மாவட்டங்களுக்கு 1500 ஆகவும் அது இருக்கிறது. ஆனால், மாவட்டங்களில் இருக்கிற காவலர் குடியிருப்புகள் போதுமானதாக இல்லை. எனவே, அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், காவலர்கள் 24 மணி நேரமும் பணியில் ஈடுபடக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். எனவே, அவர்களின் பயணப் படியும், Risk allowance-ம் உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Law and Order பிரிவு காவலர்களுக்கும், Crime பிரிவு காவலர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நீக்கி, சமமாக நடத்த வேண்டும். காரணம் என்னவென்றால், ஒரு Inspector ஆகட்டும், S.I. ஆகட்டும், மாறுதல் கேட்கும்போது, எனக்கு Law and Order பிரிவுதான் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. எனவே, நிச்சயமாக அதை நீக்கி சமமாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் செல்லக்குமார் சொன்னது மாதிரி

[திரு. ஆர். காந்தி] [1998 மே 22

அதிகாரிகள் வீட்டில் orderly system ஒழிக்கப்பட்டும், அது ஒழிந்தபாடாக இல்லை. அதிகாரிகள் decency maintain பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவலர்களிலிருந்து Inspector வரை shift system அறிமுகப்படுத்தி, அதிக நேரம் வேலை பார்ப்பதைத் தவிர்க்க அரசு முன்வர வேண்டும். மாநிலம் முழுவதிலும் இருந்து சென்னைக்கு தினமும் 200, 300 பேர் வழக்கு விசாரணைக்காக Court-க்கு வருகிறார்கள். ஆனால், அவர்களுக்குத் தங்குவதற்கு இடம் கிடையாது. ஒரு Inspector 5 Star Hotel-ல் தங்கலாம், இன்னொரு Inspector 3 Star Hotel-ல் தங்கலாம். எந்த வசதியும் இல்லாத Inspectorகளும் இருக்கிறார்கள். அதனால், அவர்களுக்கு dormitory type-ல் மலிவான விடுதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டும் இல்லாமல், மலிவு விலையில் அவர்களுக்குச் சாப்பாடும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஏற்பாட்டைச் செய்தால் நன்றாக இருக்கும்.

அதே நேரத்தில் Inspector முதல் D.S.P. வரைக்கும் 60-லிருந்து 90 லிட்டர் வரை டீசல் கொடுக்கிறார்கள். அது போதுமா என்றால் நிச்சயமாகப் போதாது. அதிகாரிகளுக்கு மட்டும் unlimitedஆக டீசல் கொடுக்கிறார்கள். ஆனால், இவர்கள்தான் நிறையச் சுற்ற வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு டீசல் சரியாகக் கொடுப்பதில்லை. அவர்களுக்கும் unlimited ஆக டீசல் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களுக்கு தரமானShoe கொடுப்பதில்லை. அவர்களுக்குக் கொடுக்கிற Shoe-வை அவர்கள் போடுவதில்லை. அந்த Shoe எந்த ஜெயிலில் தயாரிக்கப்பட்டதோ? அதை அவர்கள் வீட்டிலே கொண்டுபோய் வைத்து விடுகிறார்கள். அவர்கள் தனியாக வேறு Shoe வாங்கிப் போடுகிறார்கள். அதனால், அவர்களுக்குத் தரமான Shoe கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காவல் துறை கடுமையாக இருந்தால் எந்தத் தலையீடும் இருக்காது. அதனால் குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளை ஒடுக்கவும் முடியும் என்பதை யாராலும் மறுக்க முடியாது. எனவே, அதிகாரிகள் முயற்சி எடுத்தால் நிச்சயமாக அது நடக்கும். அரசும் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1994-95-ல் 1,100 உதவி ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சிக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடம்தான் இருக்கிறது. அதற்குள் பேசி முடித்து விடுங்கள்.



1998 மே 22]

**திரு. ஆர். காந்தி:** இந்த ஆட்சியில் நம்முடைய கலைஞர் அவர்கள் அந்த 1,100 பேரையும் பயிற்சிக்கு எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். காரணம், இவர் எதையும் எதிர்பார்க்கவில்லை. ஆனால், 1989-90-ல் மக்கள் நலப் பணியாளர்களை நம்முடைய தலைவர் போட்டார். முந்தைய ஆட்சியிலே அந்த மக்கள் நலப் பணியாளர்களை நீக்கிவிட்டனர். அதேபோல், 1995-96-ல் II Grade காவலர்கள்-10,000 ஆண், பெண் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள். இந்த வருடம் மட்டும் பெண் காவலர்கள் 5,000மும், ஆண் காவலர்கள் 4,000மும், S.I. ஆயிரமும் இருக்கிறார்கள். உடனடியாக அவர்களையும் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் இராணிப்பேட்டையில் மகளிர் காவல் நிலையம் ஒன்று அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், அந்த இடத்திலே ஏறத்தாழ 5,000, 6,000 பெண்கள் வேலை செய்கிறார்கள். காரணம், அங்கு ஒரு shoe factory இருக்கிறது. அதேபோல், இரத்தினகிரி கோயில், வள்ளிமலை கோயில் இருக்கிறது. அங்கு ஏறத்தாழ ஐந்தரை இலட்சம், 6 இலட்சம் பேர் வருகிறார்கள். இராணிப்பேட்டை தொகுதியில், இரத்தினகிரியில் ஒரு புறக்காவல் நிலையம் 10 வருடங்களாக இருக்கிறது. முழு போலீஸ் ஸ்டேஷன்-ஆக அதனை ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, cheap liquor. வசதி இருப்பவர்கள் தாஜ் ஹோட்டலில் சாப்பிடுகிறார்கள். சிலர் 3 Star Hotel லிலே சாப்பிடுகிறார்கள். கள்ளச்சாராயம் எதற்காக வந்தது என்று சிந்திக்க வேண்டும். வசதியுள்ளவர்கள் எல்லாம் Star Hotelலில் சாப்பிடும்போது, கள்ளச்சாராயத்தைத் தொழிலாளர்கள் சாப்பிடுகிறார்கள். அவன் வாங்குகிற கூலி 60 ரூபாய்தான்.

ஆனால் இங்கே quarter bottle வாங்க வேண்டும் என்றால், 45 ரூபாய்க்குக் கம்மி கிடையாது. 60 ரூபாயிலே அவனால் அதை வாங்கிச் சாப்பிட முடியாது. ஒரு quarter bottle minimum 20 ரூபாய்க்குள்ளாக இருந்தால், நிச்சயமாக இந்த கள்ளச்சாராயத்தை ஒழிக்க முடியும். கள்ளச்சாராயத்தை ஒழிக்க வேண்டும் என்று கடவுளே நினைத்தால்கூட நடக்காது. அதனால் நிச்சயமாக இந்த cheap liquor-ஐ ஒழிக்க வேண்டும் என்றால், கடைகளில் quarter bottle, 20 ரூபாய் என்ற அளவுக்கு விலை குறைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மாமன்றத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனைகளைப் படைத்துக்கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொறுப்பில் உள்ள காவல் துறை, மது விலக்கு ஆயத்தீர்வைத் துறை, தீயணைப்புத் துறை ஆகியவற்றின்மீது எனது கருத்துக்களை எடுத்து வைக்க வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்த அளவில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்படி இந்தக் கொள்கையிலே நடவடிக்கை எடுத்து வருகிறார் என்பதற்கு, கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டதை, இன்னும் சொல்ல வேண்டுமானால், அடிக்கடி நம்முடைய மாநில முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், தமிழகத்தைப் பொறுத்த அளவில் நெருப்பு வளையத்திற்கு நடுவே இருக்கிற கற்பூரத்தைக் காப்பாற்றுவதைப்போல இந்த மதுவிலக்குக் கொள்கையிலே நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம்' என்று அடிக்கடி சொல்வதை நான் இங்கே சுட்டிக்காட்ட 'விரும்புகிறேன். அதைப்போல, அரசினுடைய சீரிய நடவடிக்கையின் காரணமாக இந்த ஆண்டு 500 கோடி ரூபாய்க்கு மேலாக மதுபானக் கடைகளிலிருந்து வருமானத்தைப் பெற்றிருக்கிற இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆயத்தீர்வையைப் பொறுத்த அளவில், இந்த ஆண்டு 1330 கோடி ரூபாய் வருவாயைப் பெருக்கியிருக்கிற இந்தச் செயல் திட்டத்திற்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்தின் மூலமாக நான் எடுத்து வைக்க இருக்கிற கருத்து— தமிழ்நாடு மதுவிலக்கை அமல்படுத்துகிற காரணத்தினால் இழக்கிற வருவாய் முழுவதையும் மத்திய அரசு நிதியுதவியாகத் தர வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசுக்கு மாநில அரசு வைக்க வேண்டும் என்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இரண்டு ஆண்டுக்காலத்தில் 47 தீயணைப்பு நிலையங்களை அதிகமாக ஏற்படுத்தி உயிர்ச்சேதம் கணிசமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுள்ள அந்தக் கொள்கைக் குறிப்பு விளக்கத்தை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். இன்னும் தீயணைப்புப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்கிற அந்தச் செய்தியையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் பெரம்பூரில் ஒரு தீயணைப்பு நிலையமும், எரவாஞ்சேரி திருவீழிமிழலையில் ஒரு தீயணைப்பு நிலையமும் வேண்டும் என்று



மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே வேண்டுகோள் வைத்திருக்கிறேன். அதை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறபடி, நான் குறிப்பிடுகிற இடங்களுக்குப் பக்கத்தில் இருக்கிற தீயணைப்பு நிலையத்திலிருந்து தீயணைப்பு வண்டிகள் 10 நிமிடங்களில் வந்து சேரமுடியாத அளவிற்கு இருக்கிற பகுதிகள் அவை என்பதையும் நான் குறிப்பிடுவதோடு, திருவிடைமருதூர் தொகுதியில் திருப்பனந்தாளில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்றும் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் ஒரு அழகான வாசகம் சொல்லப்படுவது உண்டு. ஒரு மொழிக்கு எப்படி இலக்கணம் தேவையோ, அதைப்போல ஒரு நாட்டிற்கு, சமுதாயத்திற்குக் காவல் துறை என்கின்ற ஒரு வாசகம். 'What grammer is to a language, Police is to a society' என்கிற ஒரு வாசகம். இன்னும்கூட இந்தத் துறையைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது ஒரு thankless job, நன்றி பாராட்டப்படாத ஒரு துறை என்றும், இன்னும்கூட அழகான ஒரு சொற்றொடர் 'shock absorbers of the society' என்று வழங்கப்படுவதும் உண்டு. அதிர்ச்சிகளை, தான் தாங்கிக்கொண்டு அந்த அதிர்ச்சிகள் சமுதாயத்தைத் தாக்காமல் பாதுகாக்கிற ஒரு துறை.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய எண்ணத்தை நான் வெளிப்படுத்துவதற்கு முன்னால், இந்தத் தமிழகக் காவல் துறையைப் பொறுத்த அளவில், பிரசித்தி பெற்ற பெயர்களைப் பெற்ற காவல் துறை. ஸ்காட்லாண்டு யார்டுக்கு ஈடு கொடுக்கக்கூடிய ஒரு துறை என்றும் இன்னும் இந்தக் காவல் துறையிலே பணியாற்றிய மரியாதைக்குரிய ஐ.ஜி. அருள் போன்றவர்கள் Interpol என்று அழைக்கப்படுகிற உலகம் தழுவிய காவல் அமைப்புகளில் பணியாற்றினார்கள் என்றும் சிறப்புப் பெற்ற காவல் துறை.

முற்பகல் 10-40

இன்னும்கூட நான் குறிப்பிட விரும்புவது, இந்தக் கொள்கைக் குறிப்புப் புத்தகத்தில், டெல்லி திகார் சிறைச்சாலையைப் பாதுகாக்கிற மிகப் பெரிய பொறுப்பை இன்றைக்கும் ஏற்றுக் கொண்டிருப்பது நம்முடைய காவல் துறை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதே செய்தி, காவல் துறையில் பணியாற்றுகிற, 'பெண் புலி' என்று பெயர் பெற்ற கிரண் பேடியினுடைய வாழ்க்கை வரலாறாக எழுதப்பட்டுள்ள 'I Dare' என்ற புத்தகத்தில்கூடக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் நான் குறிப்பிட விரும்புவது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில்,

'Iron hand in a velvette glove' என்பார்கள்; அதேபோல், ஒரு கடுமையும், அதேநேரத்தில் மென்மையுமாக இந்த நிர்வாகத்தைச் செம்மைப் படுத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டு இதே காவல் துறையின் மானியத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 'ஒரு மனிதனுடைய முக்கால் பாக ஈரல் கெட்டு இருந்தாலும்கூட, கால் பாகத்தை வைத்துக்கொண்டு அந்த மனிதனைப் பிழைக்க வைத்துவிட முடியும் என்று விஞ்ஞானிகள், டாக்டர்கள் சொல்லியிருக்கிறார்கள்' என்று சொன்னதை நினைவுபடுத்தி நான் குறிப்பிட விரும்புவது, டாக்டர் பட்டம் பெற்ற விஞ்ஞானிகள், மருத்துவர்கள்கூடத் தங்கள் முயற்சியில் வெற்றி பெறுகிறார்களோ, இல்லையோ, நோயாளிகளைக் காப்பாற்றுகிறார்களோ, இல்லையோ, நம்முடைய சமுதாயத்தினுடைய விஞ்ஞானியாகிய மாண்புமிகு டாக்டர் முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய திறமையான நிர்வாகத்தின் மூலமாக முழுமையான வெற்றியை இந்தக் காவல் துறையில் பெற்றிருக்கிறார்கள் என்பதை நான் இந்த மன்றத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும்கூடச் சொல்லுவேன். இது ஒரு ஆட்சி மாற்றத்தின் காரணமாக விளைந்த ஒரு காட்சி மாற்றம் என்பதை இந்த மன்றத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சொல்லிக்கொள்ள விரும்புவது, குத்தாலம் காவலர் குடியிருப்பைக் கட்டித் தர வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. பாளையூரிலே காவல் குடியிருப்பு இருக்கிறது, கட்டடம் இல்லை. குடவாசலில் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் ஒன்று ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. இந்தக் கொள்கைக் குறிப்பிலே, அரசுப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால், கருணை அடிப்படையில் வேலை என்பதோடு இன்றைக்கு அறிவித்து இருக்கிற ஒரு நல்ல செய்தியானது 50 வயதுக்குள்ளாக மருத்துவ காரணங்களுக்காக ஓய்வு பெறுகிறவர்களுக்கும் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்பதை நான் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பணிக் காலத்தில் வீர மரணம் அடைகிற காவல் துறையினரின் குழந்தைகளுக்கு மருத்துவம், பொறியியல் மற்றும் வேளாண்மைப் பட்டப் படிப்புகளில் தலா 3 இடங்கள், சட்டப் படிப்பில் 2 இடங்கள் ஒதுக்கப்படும் என்கிற நல்ல செய்தியையும் நான் மனமார வரவேற்கிறேன்.

காவல் துறையில் பணியாற்றும் 80 ஆயிரம் காவல் துறைப் பணியாளர்களுக்குக் குடும்ப அட்டைகள் வழங்கி, மண்ணெண்ணெய் பெற வாய்ப்பு ஏற்படுத்தியுள்ள நிலையையும், காவலர் நல நிதிக்கு வழங்கப்படும் ஆண்டு மானியத் தொகையை ரூ.10 இலட்சத்திலிருந்து 20 இலட்சமாக உயர்த்தியுள்ளதையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நேரத்தின் அருமை கருதி, நான் அதிகமாகச் சொல்ல விரும்பாவிட்டாலும், ஒருசிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சிறப்புக்களை எல்லாம் பெற்ற காவல் துறை சென்ற ஆட்சியில் எப்படி எல்லாம் சீர்குலைக்கப்பட்டு இருந்தது என்பதற்கு ஒரு சில நிகழ்வுகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், மனசாட்சியோடு சொல்ல வேண்டுமானால், எந்தவிதமான நிர்பந்தத்திற்கும் ஆளாகாமல் நீதி நிர்வாகத்தைச் செயல்படுத்துகிற ஒரு அரசாக, இன்னும் சொல்ல வேண்டுமானால், தராசு முனையிலிருந்து இந்தக் காவல் துறையை இயக்குகிற அரசாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அரசு இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும்கூட ஒரு நிகழ்ச்சியை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நெஞ்சுக்கு நீதி என்ற புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிற ஒரு செய்தியில் மார்க்சிம் கார்க்கி பற்றி அவர்கள் சொல்லுகிறபோது ஒரு நிகழ்ச்சியைச் சொன்னார்கள், 'உலகம் என்னும் பல்கலைக்கழகத்தில் மனிதன் என்னும் முடிவற்ற இலக்கியத்தைப் படைத்த மாணவன் நான்' என்று கார்க்கி சொன்னதாக. ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தை மட்டும் அல்ல, ஒட்டுமொத்தமான மனித நேயம், சமுதாய நேயம் இருப்பவராக இந்த ஆட்சியைத் தமிழகத்தில் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சென்ற ஆட்சியில் காவல் துறையைக் கையில் வைத்திருந்தவர்கள், எப்படி எல்லாம் நீதிமன்றத்திலே விமர்சிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு வழக்கில், சென்ற ஆட்சியில் குற்றவாளிகள் எப்படி எல்லாம் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தினார்கள் என்று சொல்லுகிற

போது. நீதிமன்றத்திலே கொடுத்திருக்கிற ஒரு தீர்ப்பு—Status cannot be a shield to one's illegal acts—குற்றம் புரிவதற்கும், அந்தக் குற்றத்தை மறைப்பதற்கும் அந்தஸ்து ஒரு கேடயமாக இருக்கக்கூடாது. (மணியடிக்கப்பட்டது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு வேண்டுகோள். எங்களுக்குப் பேசுவதற்கு அடிக்கடி வாய்ப்பே கிடைப்பதில்லை. ஒரு நிமிஷம் கொடுக்க வேண்டும். இது சென்ற ஆட்சியிலே இருந்தவர்களுக்கு நீதிமன்றம் கொடுத்திருக்கிற ஒரு சான்று. இன்னும் சொல்லப் போனால் நீதிமன்றங்களில் உண்மையான குற்றவாளிகளைக் கொண்டு வந்து நிறுத்துவதற்குப் பதிலாக, போலிக் குற்றவாளிகளைக் கொண்டு போய் நிறுத்துவதற்கு உடந்தையாக இருந்த அரசு முந்தைய அரசு. இவையெல்லாம் நீதிமன்றத்திலே இருந்து வந்திருக்கிற செய்திகள்.

*முற்பகல் 10-45*

இன்னும்கூட மாண்புமிகு முதல்வரவர்களிடத்தில் நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது, 1976 ஆம் ஆண்டு நடந்த MISA கொடுமையைப் பற்றி விவரிக்கிற, சிட்டிபாபுவின் டயரியின் அடிப்படையிலும் மாண்புமிகு இஸ்மாயில் கமிஷன் அவர்களுடைய தீர்ப்பின்படியும் ஒரு நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், அந்தக் கொடுமையை அனுபவித்தவர்கள் பலர், குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு சென்னை மாநகர மேயர் உள்பட இந்த மன்றத்திலே அங்கம் பெற்றிருக்கிறார்கள். ஆனால், உங்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது, அரசு அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும். அதை மாற்றி, தெய்வம் மன்னித்தாலும்கூட, அந்தக் குற்றவாளிகளுக்கு இந்த அரசு ஏதாவது ஒரு தண்டனையைத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும்கூட தமிழகத்திலே ஒரு அரசியல் கட்சியின் சார்பில் ஒரு பிரச்சாரத்தைத் தொடங்கியிருப்பதாகச் செய்தியொன்றை நான் பார்த்தேன். ஜெயலலிதாவின் ஊழல்களைத் தமிழக மக்கள் மறக்கத் தொடங்கி விட்டது போலத் தோன்றுகிறது. எனவே, மக்கள் மறந்து விடாமல் இருக்கவே, இந்த ஊழல் ஒழிப்பு மாதம் அனுசரிக்கப்படுகிறது என்று ஓர் அரசியல் கட்சியின் சார்பிலே இப்போது ஒரு பணியைத் தொடங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் இன்னும் கூடச் சொல்கிறேன். நம்முடைய முன்னாள் முதல்வரவர்கள் எங்கு சென்றாலும் சொல்கிற வாசகம்: "நாங்கள் நிரபராதிகள், எங்கள் மீது அபாண்டமாகக் குற்றம் சாட்டுகிறார்கள்" என்று சொல்கிறார். நேரத்தின் அருமை கருதி,



எல்லோரும் சொல்வதைச் சொல்லவில்லை. இந்த நாட்டினுடைய பாரதப் பிரதமர் மாண்புமிகு வாஜ்பாய் அவர்கள் மும்பையிலே செய்தியாளர்கள் கூட்டத்திலே சொன்ன ஒரு கருத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்: "ஊழல் தொடர்பான Criminal வழக்குகளுக்கும் அரசியல் தொடர்பான Criminal வழக்குகளுக்கும் பலத்த வேறுபாடு உண்டு" என்று சொல்லிவிட்டு, அவர் சொல்கிறார். கேள்வி: What do you mean by politically inspired charge sheets on corruption? அவர் சொல்கிறார்: "அரசியல் தூண்டுதல் காரணமாகக் குற்றப்பத்திரிகைகளா? அப்படியென்றால் என்ன பொருள்? ஊழல் புகார் வேண்டுமானால் அரசியல் தூண்டுதலாகக் கூறப்படலாம். அந்தப் புகாரின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை முடிக்கப்பட்டு, குற்றப் பத்திரிகைகளும் தாக்கல் செய்யப்பட்ட பிறகுமா அரசியல் தூண்டுதல்! குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டாலே அதில் அரசியல் கலப்பு இல்லை, முற்றிலும் நீதி பரிபாலனம்தான்". சொல்லியிருப்பது. இந்திய நாட்டினுடைய மாண்புமிகு பிரதம அமைச்சரவர்கள்.

நான் இவற்றையெல்லாம் சொல்லிக்கொண்டு வருவதற்குக் காரணம், தங்களுடைய சுய இலாபத்திற்காக, காவல் துறையை, அவர்களுடைய தூய்மையை, அதன் மீது இருந்த ஒரு நல்ல எண்ணத்தை, தமிழ் நாட்டு மக்களிடத்திலிருந்து போக்கக்கூடிய அளவிற்கு இருந்த ஒரு ஆட்சி அது. அந்தக் காவல் துறையையும் அதிலேயிருந்து மீட்டு, இந்த நாட்டு மக்களுக்கும் பாதுகாப்புக் கொடுத்து, ஒரு சிறந்த நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சரவர்களால் வைக்கப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை மனமார வரவேற்று, வாழ்த்துகிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய குடவாசலுக்கு மாவட்டத் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் கேட்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்களே, குடவாசல் உங்களுக்கு மிகவும் நெருக்கமாக தெரிந்த பகுதி. இரண்டு தினங்களுக்கு முன்புகூட நீங்கள் இந்த அவையிலேயே சொல்லியிருக்கிறீர்கள். உங்களுடைய அரசியலினுடைய ஆரம்பக்காலத்தில் 'ஆரூர் சுற்றியாரே, ஊர் சுற்றிப் பாரும்' என்று பேசிய பேச்சை இன்றைக்கும் அங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்தத் தொடர்ச்சி இன்னும் நிற்கவில்லை. எனவே, அந்த அழுத்தத்திலிருந்து அந்தப் பகுதி மக்கள் விடுபட, ஒரு மாவட்டத் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தை அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு கேட்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker, Sir, on behalf of Janata Dal, I whole-heartedly support the Demands for Grants relating to Police, State Excise Department and Fire Services moved by our Hon. Chief Minister.

*முற்பகல் 10-50*

At the beginning of the Policy Note itself, our Hon. Chief Minister has clearly mentioned a 'Kural' and also beautifully quoted that, 'In the constantly changing political, social and economic environment, the Police Department renders great assistance in maintaining peace and tranquility in the country. It helps all the citizens to lead a peaceful life in accordance with the beliefs and convictions'. The Police also must adhere to this, for the welfare of the society and our people. Actually, I am happy that the Tamil Nadu Police Force has been considered to be one of the best Police forces in India and it is equated with the British Police. But after so many Governments came to power—as our friend was telling just now—the Police has been misled by the then rulers and the morale had been brought down. Our Hon. Chief Minister has also stated in his speech itself that the ability of Police has been deteriorating and he would try to improve it. I am very happy to see that the Policeforce has really improved. You can see that in some of the incidents which took place recently, the Police handled them very well. For example, the community clashes. It was planned to creat. problems to this Government. But our Hon. Chief Minister was able to call all the Political Leaders for talks and control the Community clashes.

As regards, the Coimbatore bomb blasts, Police could have been more vigilant. After the blasts, the entire Tamil Nadu was in a state of shock. Even people who walk in the streets were afraid of what would be their fate, if such boam blasts occurred again. Even the M.L.A., bomb வெடித்துவிட்டால் என்ன செய்வது என்று பயமாக இருக்கிறது என்று, வருவதற்கே பயப்படுகிறார்கள். அவையெல்லாம் போய், now the law and order situation in Tamil Nadu is alright (குறுக்கீடு) தமிழில் பேசினால் நன்றாக இருக்கும் என்று, தமிழில் பேசச் சொல்கிறார். தமிழிலேயே பேசுகிறேன்.



போலீஸ் நன்றாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்று சொன்னேன். அதே சமயத்தில், last time also I observed that there are some black sheeps in Police also.

Power வந்துவிட்டால் strict நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி வேண்டுமென்றே சம்பந்தப்பட்டவர்களைக் கூப்பிட்டு harass பண்ணுவது, to bring in a bad name to the Government என்கிற மாதிரி நடக்கிறது, Black sheeps இருக்கிறார்கள். Black sheep ஆக இருக்கிறவர்களைக் கண்டிப்பாக eradicate பண்ணினால்தான் நல்ல பெயர் வரும். இல்லையென்றால் அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வரும். கெட்ட பெயர் உண்டாக்குவதற்கு நிறையபேர் இருக்கிறார்கள். அந்த மாதிரி இருக்கின்றவர்களை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். At the same time, they are giving a lot of trouble to poor and innocent people. ஒரு letter இருக்கிறது. நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே அதைக் கொடுக்கிறேன்.

For example, in Hosur, an incident of highway robbery has happened. In that Highway robbery, கோபால் ரெட்டி, விஜயகுமார் ஆகிய இரண்டு பேர் இறந்திருக்கிறார்கள். கிருஷ்ணகிரி பக்கம்கூட highway robbery-ல் இரண்டு பேர் இறந்தார்கள். Highways Cell போட்டிருக்கிறார்கள். அந்த Highways Cell சரியாக இயங்குவது மாதிரி எனக்குத் தெரியவில்லை. அடிக்கடி இப்படி நடக்கிறது. On highways, robberies and murders are taking place often.

பக்கத்தில் இருக்கின்ற ஆந்திரா மற்றும் கர்நாடகாவிலிருந்து ஆட்கள் வந்து பண்ணுவது மாதிரித் தெரிகிறது. ஆகவே, தயவுசெய்து அதற்கு efficient staff போட வேண்டும். அங்கிருந்து வருகிறார்கள், பண்ணிவிட்டுப் போய்விடுகிறார்கள் சீக்கிரமாக. இப்போது நல்ல sophisticated weapons and vehicles வைத்திருக்கிறார்கள். You must give more powers to our police to detect all these things. Otherwise, it is highly impossible to tackle this menace.

பெங்களூரிலிருந்து வருகிறான், 25 நிமிடங்களில் வருகிறான், அடித்துவிட்டுப் போய்விடுகிறான். அதனால் தயவுசெய்து border area-வை நல்லபடியாகக் கவனிக்க வேண்டும்.

ஓசூரில் நடந்த incident-க்குப் பிறகு, மாலை 6 மணிக்கு மேல் யாரும் two wheeler-ல் போக மாட்டார்கள். அந்த அளவுக்கு இருக்கிறது. இதுகுறித்து நான் D.G.P.-யிடம் பேசினேன்; A.D.G.P.-யிடம் பேசினேன். அதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். How to eradicate it ? இதைத் தடுப்பதற்கு நீங்கள் Plan செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து இதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாதிரி எல்லா border area-க்களிலும் அதுபோன்ற கொள்ளைகளைத் தடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அதே மாதிரி, போலீஸ்காரர்களுக்கு நிறைய வசதிகள் தேவைப்படுகின்றன. Anti-Dacoity Cell என்று போட்டிருக்கிறீர்கள். எனவே, highway robbery-யைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி Head Constableகளாக Direct Recruitment மூலமாக 1971 ஆம் ஆண்டிலே 1,500 பேரைத் தேர்வு செய்தீர்கள். அதிலே 420 பேர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்பட வேண்டும். மற்ற எல்லோருக்கும் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுவிட்டது. அப்படிப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டு, அவர்கள் எல்லாம் Inspector-களாக, Sub-Inspector-களாக ஆகிவிட்டார்கள். ஆனால், இன்னமும் பாக்கியுள்ள 420 பேருக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் இன்னமும் Head Constable களாகவே இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் Circle Inspector சம்பளத்தை மட்டும் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். பதவி உயர்வு இல்லை. தயவுசெய்து அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி ration shop. போலீஸ்காரர்களுக்கு ரேஷனிலே பொருட்களைக் கொடுக்கிறீர்கள். அவர்கள அவற்றை ration shopலேயிருந்து எடுத்துக்கொண்டு வந்து போலீஸ் ஸ்டேஷனிலே சேர்ப்பதற்குள், வெளியே வாங்கினால் என்ன rate ஆகுமோ, அந்த rate ஆகிவிடுகிறது என்று சொல்லுகிறார்கள். அதனால் ration பொருட்களை அவர்கள் பணிபுரியும் இடத்திற்கு அருகே உள்ள ரேஷன் கடைகளிலேயே கொடுக்க வேண்டும் என்று அவர்களயே கேட்கிறார்கள். நீங்கள் Kerosene கொடுக்கிறீர்கள், அதே மாதிரி, இங்கேயே பாதி விலையிலே



அவர்களுக்குக் கொடுத்தால் என்ன? ஏனென்றால், அவர்கள் ration பொருட்களை ration shop-லேயிருந்து வாங்கிக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனிலே கொண்டுபோய்ச் சேர்ப்பதற்குள் வெளியில் வாங்கும் rate ஆகிவிடுகிறது என்று சொல்கிறார்கள். மேலும் 12 கிலோ அரிசிதான் கொடுக்கப்படுகிறது என்றும் சொல்கிறார்கள். அவர்களுக்கும் 20 கிலோ அரிசி கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

அடுத்து அவர்கள் Duty-யிலே வெளியே போகும்போது 20 ரூபாய் பேட்டா கொடுக்கிறார்கள். 20 ரூபாய் பேட்டா கொடுத்தால் இரண்டு வேளை சாப்பாட்டுக்கு அது போதுமானதாக இல்லை என்று சொல்லுகிறார்கள். இப்படி 20 ரூபாய் பேட்டா கொடுத்தால், மேற்கொண்டு ஆகும் சாப்பாட்டுச் செலவிற்கு அவர்கள் எங்கே போவார்கள்? போலீஸ் காரர்களை Court-க்கு Criminal-உடன் அனுப்புகிறீர்கள். அவர்களுக்கு 20 ரூபாய் கொடுத்தனுப்பினால் அவர்கள் Criminal சாப்பிடுகிற சாப்பாடுதான் சாப்பிட முடியும். எனவே, Criminalகளை அவர்களால் எப்படி ஒழுங்காக treat செய்ய முடியும்? ஒழுங்காக treat செய்ய முடியாது. அதனாலே you must give atleast Rs. 50. எனவே, 50 ரூபாய் கொடுக்க வேண்டும், அப்படி 50 ரூபாய் கொடுத்தால்தான் சாப்பிட முடியும். அதனாலே தயவுசெய்து நீங்கள் 50 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, ஓசூரிலே small thefts நிறைய நடக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், பெண் Sub-Collector ஒருவர் இருக்கிறார். அவருடைய 5 பவுன் செயினையே எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். இப்படி நிறைய chain snatchings நடக்கின்றன. The Department must see that they are prevented.

ஓசூரிலே நேற்றுக்கூட 60,000 ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டது. இது குறித்து நான் போலீஸ் ஸ்டேஷன் போய் வந்தேன். பணத்தைக் கொள்ளையடித்தவன் பணம் வைத்திருந்தவர் முதுகிலே ஏதோ ஒன்றைப் பூசினானாம்; முதுகிலே பூசியதை clean செய்வதற்காக அவர் தன்னுடைய பணப்பெட்டியைக் கீழே வைத்தபோது, அந்த ஆள் அதை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான். இது நடந்தது நேற்று. What is the root cause for that evil? You must see that it is eradicated. Otherwise there is no use. இப்படி 60,000 ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டது. இந்த மாதிரி நிறைய நடக்கின்றன. இப்படி நடப்பதற்குக் காரணம் என்ன என்பதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

நான் இதுபற்றி D.G.P.-யிடம் சொல்லும்போதுகூட, அதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்றும், அதற்குத் தகுந்த

நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டேன். அதற்கென cell அமைக்கிறேன் என்று சொன்னார்கள். தயவு செய்து அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓசூரிலே, உத்தனப்பள்ளியிலே Police Station அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2 நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். More posts, 3 Platoons of Armed Reserve Police, VHF sets—இந்த மாதிரி, போலீஸ்காரர்களுக்கு இன்னும் நிறைய வசதிகள் கொடுக்கும்போதுதான் அவர்களால் நன்றாக வேலை செய்ய முடியும். போலீஸ்காரர்களுக்கு அதிக அளவில் வீட்டுவசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வாரத்திற்கு முன்பு Police quarters-க்கு நான் சென்றிருந்தேன். அங்கே நுழையும்போது எனக்குத் தலையிலே அடி விழுந்தது. அங்கே வாசல்படியின் உயரம் 4 அடிதான் இருக்கிறது. அவையெல்லாம் வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்டவை. ஒரு roomலே இரண்டு பேர்தான் படுக்க முடியும்; மற்ற இரண்டு பேர் verandah விலேதான் படுக்க முடியும். அவர்கள் எல்லாவற்றுக்கும் அந்த இரண்டு அறைகளைத்தான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எனவே, தயவு செய்து houses should be constructed for Police personnel on a war-footing எனவே தயவுசெய்து, இரண்டு மூன்று வருடங்களிலே போலீஸ்காரர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் எல்லாம், போலீஸ்காரர்கள் சரியாக வேலை செய்வதில்லை என்று சொல்கிறோம். அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுத்தால்தான் அவர்களால் சரிவர வேலை செய்ய முடியும்.

அதேமாதிரி நான் ஏற்கெனவே சொன்னேன். I am also giving a Memorandum to the Hon. Chief Minister through the Hon. Deputy Speaker for consideration. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுப்பதற்காக அதை வைத்திருக்கிறேன். I am forwarding this matter to the Hon. Chief Minister.

அதாவது, ஒரு murder நடக்கிறது என்றால் 10 ,20 பேர்களைக் கூப்பிடுகிறார்கள். அவர்களை மிரட்டி 'பணம் எடுத்துக்கொண்டு வா, இல்லையென்றால் உங்களை விடுவதில்லை' என்று போலீஸ்காரர்கள் சொல்கிறார்கள். இந்த மாதிரியெல்லாம் நடக்கிறது. அந்தப் paper எல்லாம் என்னிடம் இருக்கின்றன. அவற்றை முதலமைச்சர் அவர்களிடம்



கொடுக்கிறேன். எனவே, போலீஸ்காரர்களுக்கு நிறைய வசதிகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி.சி. விஜயன்.

முற்பகல் 11-00

***திரு. டி.சி. விஜயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த இனமானக் காவலர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களின் தானைத் தலைவர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தளராத முயற்சியாலும், இடைவிடாத தொண்டாலும், தாழ்ந்து கிடந்த தமிழகக் காவல் துறையின் நிலையைச் சீர்செய்து, செம்மைப்படுத்தி, தரணியில் நிலை உயர வைத்த கழக அரசை நெஞ்சாரப் புகழாதவர்களே கிடையாது. சோதனைக் காலங்களில் வேதனைகளைச் சுமந்து கொண்டு பணியாற்றிய காவலர்களுக்கு வெகுமதி வழங்கி, புத்துணர்ச்சி ஊட்டிய மாண்புமிகு முதல்வரின் தாயுள்ளம் கண்டு வணங்குகிறோம்.

அனைத்திந்திய அளவில் தலைசிறந்த காவல் துறை எனப் பெயர் பெற்றிட, தற்காப்புச் சாதனங்கள், புதிய விஞ்ஞானக் கருவிகள், அதி நவீனக் கருவிகள் போன்றவற்றைப் பெற்று, புதிய தொழில்நுட்பத்துடன் செயலாற்றிட காவல் துறைக்கு மேன்மேலும் நிதி ஒதுக்கிட வேண்டுமென்று இம்மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திருவொற்றியூர் தொகுதியில், திருவொற்றியூர் நகரில் மக்கள் தொகை பன்மடங்கு பெருகிவிட்டதாலும், பல புதிய குடியிருப்புகள், புதிய நகர்கள் தோன்றிவிட்டதாலும் அங்கே அன்றாடப் பிரச்சினைகளைச் சமாளிக்க, தற்பொழுதுள்ள இரண்டு காவல் நிலையங்கள் போதாது, மேலும் ஒரு புதிய காவல் நிலையத்தை அமைத்திட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இம்மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திருவொற்றியூரில் பல ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட, சீர் குலைந்து, வாழ வகையில்லாத நிலையில் உள்ள காவலர் குடியிருப்புகளை மாற்றி, புதிய குடியிருப்புகளாகக் கட்டித் தரத் தேவையான நிதியை ஒதுக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி புதியக் கட்டடத்தை இவ்வாண்டிலேயே கட்டி முடித்திட அரசு முன்வர வேண்டுமென்று இம்மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திருவொற்றியூர் தொகுதியில் பல பெரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகள் நிரம்பியிருப்பதாலும், பல்லாயிரக்கணக்கான குடிசைகளைக் கொண்ட குப்பங்கள் பல இருப்பதாலும், தீயணைப்பு நிலையம் இன்றி, தனியார் தீயணைப்பு வண்டிகளையே எதிர்நோக்குகின்ற ஒரு அவல நிலையில் இன்னும் திருவொற்றியூர் நகரம் உள்ளதுதாலும், இந்நிலை அகற்றி, நகர மக்களின் நீண்ட காலக் கோரிக்கையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் புதிய தொழில்நுட்பக் கருவிகளுடன்கூடிய தீயணைப்பு நிலையம் ஒன்றை நிறுவிட அரசு ஆவன செய்ய வேண்டுமென நான் இம்மன்றத்தில் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருவொற்றியூர் நகரில் ஏற்படும் எல்லா விபத்துகள் குறித்த விசாரணைகளும் சென்னையில் உள்ள போக்குவரத்து அலுவலகத்தில் தான் நடத்தப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். திருவொற்றியூரிலேயே போக்குவரத்து உதவி ஆணையர் அளவிலான அலுவலகம் ஒன்றை அமைத்திட அரசு முன்வர வேண்டுமென இம்மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதியைச் சார்ந்த கொடுங்கையூரில் காவல் நிலையம் ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் காவல் நிலையத்திற்குக் கொடுங்கையூர் காவல் நிலையம் என்று பெயர் சூட்டாமல், கவியரசர் கண்ணதாசன் பெயரைச் சூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கொடுங்கையூரில் நடைபெறும் குற்றங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் யாவும் திருவொற்றியூருக்கு வந்துகொண்டிருக்கின்றன. இப்பொழுது அவற்றை எழும்பூர் 10 ஆவது நீதிமன்றத்திற்கு மாற்றியிருக்கிறார்கள். இதனால் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது— தாங்கள் இதிலே கருணைகூர்ந்து உடனடியாகத் தலையிட்டு, கொடுங்கையூர் காவல் நிலைய வழக்குகளை, எழும்பூர் நீதிமன்றத்திற்கு மாற்றுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நமது ஆட்சியில் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக அமைச்சர்கள் நல்ல முறையில் செயல்பட்டு, எண்ணற்ற பணிகளைச் செய்து வருகிறார்கள் என்பதை, தமிழகம் முழுவதும் இருப்பவர்கள் பாராட்டாமல் இல்லை. எல்லோரும் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். எனது திருவொற்றியூர் தொகுதியிலே 20 குப்பங்கள் இருக்கின்றன. அந்த 20 குப்பங்களும் கடல் அரிப்பால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. E.B. ஆல் சில பிரச்சினைகள். இப்போது harbour வேறு வந்து விட்டது. அதனாலும் சில பிரச்சினைகள். எனவே,



கருணையுள்ளம் கொண்ட, தாய்மனம் கொண்ட தமிழக முதல்வர் அவர்கள், அந்த மீனவர்களுக்குள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11-05*

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. மனோகரன் தலைமை)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர், திரு. டி. மணி அவர்கள்.

***திரு. டி. மணி** : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, நம்முடைய காவல் துறையில் போதுமான ஊழியர்கள் இல்லை என்ற ஒரு கருத்து உள்ளது. அதற்குக் காரணம், ஒரு காவல் நிலையத்தில் நாற்பது பேர் இருந்தாலும்கூட, அவர்களை வேறுபல வேலைகளுக்குப் பயன்படுத்துகின்றார்கள் என்ற ஒரு பொதுவான குற்றச்சாட்டு உள்ளது. ஆகவே, அதிகப்படியான காவலர்களை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, 1996 ஆம் ஆண்டில் பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டவர்களில் மீதமுள்ள 98 பேர்களையும் மீண்டும் இந்த service-லே எடுத்துக் கொண்டு, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக அரசு உதவ வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனைக் கருணையுள்ளத்தோடு பார்த்து, அந்த வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்னால், பயிற்சிக்கு அழைக்கப்பட்டவர்களில்கூட, 76 பேர் வராத சூழ்நிலை இருக்கிறது. அந்த இடத்திற்கு இவர்களை எடுத்துக் கொண்டாலும், இந்தப் பிரச்சினை தீர்வதற்கான சுமுகமான ஒரு நிலை உள்ளது என்பதையும் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுபோல, Vigilance துறை என்று ஒரு துறை செயல்படுகின்றது. அவர்களுக்கு ஒரு வழக்கு வந்தால், அவர்கள் 6 ஆண்டுக் காலம், 10 ஆண்டுக் காலம் என்று எடுத்துக் கொள்கின்றார்கள். அந்த வழக்குகளை ஆறு மாத காலத்திற்குள் முடிப்பது என்பது, அந்தத் துறைக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். குறிப்பாகச் சொல்லப்போனால், கடந்த ஆட்சிக் காலத்தில், இரண்டாண்டுக் காலத்திற்கு முன்னால், கொடுமுடியாறு

திட்டத்தில், அதற்கான கால்வாய்களை வெட்டியதாகச் சொல்லி, கால்வாய்களை வெட்டி அமைக்காமலேயே, 1½ கோடி ரூபாய்க்கான ஊழல் நடந்துள்ளது. அதனுடைய விவரங்கள் அனைத்தும் Vigilance துறையிலே இருக்கின்றது. ஆனால், வருடம் 3, 4 ஆகியும்கூட, அது முடிந்தபாடில்லை. வேலை ஆரம்பித்தபாடில்லை. எனவே, இதிலே சரியான விசாரணை செய்து, இதிலே யார் யாரெல்லாம் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கக்கூடிய அளவில் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 1-12-1997 அன்று திருமங்கலம் தாலுகா, கரிசல்பட்டியைச் சேர்ந்த மாரிமுத்து மகள் அழகுலட்சுமி கடத்தப்பட்டுள்ளார். அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதுபோன்று, 9-10-1997 அன்று காங்கேயம் தாலுகா, முத்துத் தொட்டிப் பாளையத்தைச் சேர்ந்த ஸ்ரீரங்கன் என்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர், ஜாதிக் கொடுமையின் காரணமாக, வழக்கு ஒன்றை அங்கே கொடுக்கச் சென்றபோது, அவர்கள் அதை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையெல்லாம் இந்த நாட்டிலே உருவாகியிருக்கின்றது என்பது இந்த அரசுக்குத் தெரியும். இதையும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குகொண்டு வருகின்றேன்.

அதேபோல, அனைத்து மதத்தைச் சேர்ந்த மக்களுக்கும் மதச் சார்பற்ற அரசு இது என்ற முறையில், காவல் துறை பாகுபாடற்ற முறையில் செயல்பட அத்துறைக்கு அரசு பயிற்சி அளிக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். அதேபோன்று, பெண்களுக்கு எதிரான அநீதி என்பது, சமீப காலங்களில் கொஞ்சம் கூடி வருகின்ற ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். இந்தக் கொடுமைகளைப் போக்குவதற்கு, தடுத்து நிறுத்துவதற்கு, உரிய பாதுகாப்பு வழங்க ஒரு Commission அமைத்து, அதற்கு முழுமையான அதிகாரம் வழங்கி, தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல, பாலியல் பலாத்காரம் என்பது இப்போது சர்வ சாதாரணமான நிகழ்ச்சியாக உள்ளதை நாம் பத்திரிகைச் செய்திகளிலே பார்க்கிறோம். இந்தக் கொடுமைகளை அகற்றுவதற்காக, அல்லது அவர்களைப் பாதுகாப்பதற்காக, அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, விசாரணைக்கு அழைத்துச் செல்லப்படுகின்ற நபர்களை எப்படி நடத்த வேண்டுமென்று



உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் வழிகாட்டப்பட்டுள்ளது. அது கறாராக அமலாக்கப்படாமல், சில மாவட்டங்களில் lock-up மரணங்கள் நடந்துள்ளன. உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு கறாராக அமலாக்கப் படுகின்றதா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

முற்பகல் 11-10

23-10-1996 அன்று, குமரி மாவட்டம், பரணி நாடார் என்பவருடைய கடையும், அதைச் சார்ந்த மூன்று கடைகளும் கொள்ளையடிக்கப்பட்டன. கடை முழுவதுமாக நிர்மூலமாக்கப்பட்டது. வெறும் F.I.R. தான் போடப்பட்டிருக்கிறது. அதன்மேல் எந்த நடவடிக்கையும் இல்லை. நான் 3 தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதியபின், ஒரு பதிலைத் தந்தார்கள். கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களைக் கண்டறிய முடியவில்லை என்ற ஒரு பதிலைத் தந்தார்கள். அங்கே, அந்தச் சமூக விரோதிகள், ரவுடிகள், அதாவது அரசாங்கத்தினுடைய பாஷையிலே சொல்ல வேண்டுமென்று சொன்னால் போக்கிரிகள் என்று சொல்லக்கூடிய அந்தக் கூட்டம், அந்த அளவிற்கு அநியாயம் செய்வதற்கு உடந்தையாக, அன்றைய தினம் களியக்காவிளையிலே இருந்த Circle Inspector செயல்பட்டிருக்கிறார். அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்பது என்னுடைய கருத்தாகும்.

அதேபோல், காவல் துறை ஊழியர்களுக்கு மத்தியில் ஒரு பயங்கரமான குமுறல் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அது என்னவென்று கேட்டால், அவர்களுக்கு Promotion தருவதில், சில இடர்ப்பாடுகள் இருக்கின்றன. அதேபோல், அவர்களுடைய சம்பளங்கள், Incrementகள் இவையெல்லாம் அடிமட்டத்திலே இருக்கக்கூடிய சாதாரண காவலர்கள் முதல் Sub-Inspectorகள் Inspectorகள், D.S.P. rank வரையிலே உள்ளவர்களுக்குச் சரியாக வழங்கப்படவில்லை என்ற ஒரு கருத்து இருக்கின்றது. இன்னும் குறிப்பாகச் சொன்னால், festival holidays என்று வருகிறபோதுகூட, அவர்களுக்குக் கொடுத்து வருகிற அந்த holidays-லே, கொஞ்சம் கூட ஒரு நல்ல நிலையை எடுத்து festival holidaysலேயும், அவர்களை இணைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதேபோன்று, கடியபட்டினத்திலே, மார்ச் 1 ஆம் தேதி, மேரி சீதா என்ற பெண் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டாள். எதிரிகளைக்

கைது செய்யுங்கள் என்று கேட்டும், முறையான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. அந்தக் கடலோரக் கிராமத்துப் பெண்கள், அந்தக் காவல் நிலையத்தின்முன் முற்றுகையிட்டார்கள், போராட்டங்களை பல நடத்தினார்கள். நான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தேன்; கவனஈர்ப்பாகத் தந்திருந்தேன். ஆனால், ஏற்றுக்கொள்ளவில்லை. கடைசியிலே, இதை, காவல் துறை மானியத்திலே சொல்லுங்கள் என்று சொன்னார்கள். ஆகவேதான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு, இப்படிப்பட்ட ஒரு கொடுமை, நம்முடைய நாட்டிலே நடக்கிறது என்று சொன்னால், இதன் காரணமாகத்தான் கிராமப் பகுதியிலே இருக்கின்ற இத்தகைய நிலையை, இந்த யதார்த்தமான நிலையை, நம்முடைய அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒன்று, காவல் துறை மூலமாக இந்தத் தகவல்கள் எல்லாம் வரும். இன்னொன்று, ஆளுகின்ற கட்சியின் அமைப்புகள் மூலமாக இந்தத் தகவல்கள் எல்லாம் வரும். ஆனால், இந்த இரண்டு முறைகளின் மூலமாகவும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், இந்த நிர்வாகத்தினுடைய கவனத்திற்கும், சரியான தகவல்களைத் தருகிறார்களா என்பதில் எனக்கு இப்போது ஒரு சந்தேகம். அந்த அடிப்படையிலே, நீங்கள் இதைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

அதேபோல், நவம்பர் மாதம் சரோஜினி என்ற பெண்ணினுடைய வீட்டை — குழித்துறையிலே நடந்த ஒரு நிகழ்ச்சி — முற்றிலுமாக உடைத்து, இப்போது அந்த வீடு இருந்த இடமே தெரியவில்லை. அதற்கு ஒரு F.I.R-கூடக் கிடையாது. களியக்காவிளை காவல் நிலையத்தின் அருகில் நடந்த நிகழ்ச்சி.

அடுத்து, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை அமலாக்க வேண்டிய பொறுப்பு, காவல் துறைக்கு இருந்தும், போதுமான கவனம் செலுத்தப்படாமல் உள்ள நிலை உள்ளது. இதைப் பரிசீலிக்க வேண்டும்.

மாவட்ட அளவிலே வரும் பிரச்சினைகள்மீது, மாதம் ஒருமுறை அதிகாரிகள் மட்டத்திலே, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைக் கலந்து, பரிசீலனை செய்ய வேண்டும். நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வாரத்திற்கு ஒரு நாளில் — மனுநீதிநாள் விசாரணை என்ற முறையிலே, கூட்டம் நடத்துகிறார்கள். அதேபோல், நான் காவல் துறையைக் கேட்டுக்கொள்வது, மாதம் ஒரு முறை, பெரிய அதிகாரிகளைக் கொண்டு, அந்தந்த மாவட்டத்தினுடைய மக்களின் குறைகளைக் கேட்கின்ற வகையிலே, ஒரு ஏற்பாட்டைச் செய்வது, மக்களுடைய பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாக அமையும்.



அதேபோல், கருங்கல் காவல் நிலையச் சரகத்தில், 8-1-1997லிலும், 9-1-1997லிலும் (மணியடிக்கப்பெற்றது) இன்னும் கொஞ்சம் நேரம் வேண்டும். சால்விளையில், தங்க நாடார் என்பவருடைய வீட்டைச் சுத்தமாக உடைத்து, பொருள்கள் பூராவையும் கொள்ளை அடித்துள்ளார்கள். 3 தடவை நான் காவல் நிலைய அதிகாரிகளுடன் பேசினேன். F.I.R.-தான் போடப்பட்டிருக்கிறது. அதற்குமேல் ஒன்றும் நடவடிக்கை கிடையாது.

அதேபோல், நட்டாலம் என்ற ஊரிலே ரெஜிலா என்ற பெண் கொலை செய்யப்பட்டாள். இதுவரை, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவில்லை. அதேபோல், 23-4-1997-ல், குழித்துறையில் சப்ஜெயிலில், விசாரணைக் கைதி, சந்திரதாஸ் மரணம் அடைந்தார். அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. குறைந்தபட்சம் அந்தக் குடும்பத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏதாவது உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, காவல் துறைமூலம் மாதம் இவ்வளவு வழக்குகள் போட வேண்டுமென்று, பழைய காலத்தில் இருந்த — வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த — நிலை இப்போதும் இருக்கிறது. இவ்வளவு வழக்குகள் போட வேண்டும் என்று இருக்கிறது. Petty case என்று அதற்குப் பெயர். யாரையாவது பிடித்து, அந்த petty case-லே போடக்கூடிய நிலை இருக்கிறது. அதை முதலிலே தவிர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 6-1-1998-லே, மார்த்தாண்டம் காவல் நிலையச் சரகத்திற்குள், ஒரு கடை முன்னால் இரண்டு கார்களை, ரவுடி கும்பல் சுத்தமாக அடித்து உடைத்துத் தொலைத்துவிட்டார்கள். எந்த நடவடிக்கையும் இல்லை. ஒரு F.I.R. தான் போடப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே எந்த விசாரணையும் கிடையாது. 6-2-1995-லே பாலவிளை ராணி கொலை செய்யப்பட்டாள். அதுவும் F.I.R. stage-ல் தான் இருக்கிறது. Charge Sheet frame பண்ணி அதற்கான விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. 6-12-1993-லே களியக்காவிளை காவல் நிலையச் சரகம், குழிவிளை கோமளம் என்ற பெண் கொலை செய்யப்பட்டாள். அதுவும் F.I.R. stage-ல்தான் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) அதற்கு மேலே எந்த நடவடிக்கையும் இல்லை.

*முற்பகல் 11-15*

அதுபோல, சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்திற்கு வந்திருந்த குப்புசாமி என்பவர் காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு சந்தேகமான முறையில் கொலை செய்யப் பட்டிருக்கிறார். என்ன என்று விசாரிக்க வேண்டும்.

அதுபோல, மதத் தீவிரவாதிகளைக் கைது செய்யச் செல்லும்போது சம்பந்தப்படாத மக்களை அச்சுறுத்துகின்ற நடவடிக்கை போக்கப் படவேண்டும். இதிலே ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். திருவட்டாறு தொகுதியிலே, திற்பரப்பு பகுதியிலே 1955 ஆம் ஆண்டிலே கட்டப்பட்ட ஒரு திருச்சபை இருக்கிறது. வாரத்திலே ஒரு நாள் அங்கே ஜெபக் கூட்டம் நடக்கும். பக்கத்திலே ஒரு இந்து தேவாலயம் இருக்கிறது. இப்போது மத்தியிலே ஆட்சி மாற்றம் வந்ததற்குப் பிறகு, என்ன சொல்கிறார்கள் என்றால், அங்கே ஜெபக் கூட்டம் நடத்தக்கூடாது என்று கட்டளை இட்டிருக்கிறார்கள். காவல் துறை இதிலே உரிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, 17-3-1998-ல் திருப்பூரில் C.I.T.U-வின் முக்கியமான ஊழியர் பன்னீர்செல்வம் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அதற்கு உரிய விசாரணை வேண்டும். உரிய நடவடிக்கை வேண்டும். ஏழையெளிய மக்கள் காவல் நிலையங்களுக்குப் புகார் கொடுக்கச் செல்லும்போது அந்தப் புகார்களைச் சரிவர விசாரணை செய்து அதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

வாலிபர் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள் போன்ற ஜனநாயக அமைப்புகள் சில போராட்டங்களை நடத்தும்போது அந்த உறுப்பினர்கள் மீது பல வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இன்னும் தாவாவில் இருக்கும் அந்த வழக்குகளை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் பெண்கள் இயக்கத்திற்கு அரசாங்கம் நிலத்தைக் கொடுத்திருக்கிறது. அந்த இடத்திலே தென்னங்கீற்றிலே கொட்டகை போட்டிருந்தார்கள். இப்போது சில ரவுடிகள் அதை ஆக்கிரமித்திருக்கிறார்கள். அது என்ன என்று பரிசீலனை செய்ய வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)*

காவல் துறையில் பதவி உயர்வுகள் அதிகமாக வழங்கப்படுவதில்லை என்று பொதுவான ஒரு கருத்து நிலவுகிறது. எனவே, அரசு அதைப்



பரிசீலனை செய்ய வேண்டும். காவலர்களுடைய வேலை நேரத்தைக் குறைக்க முயற்சி செய்ய வேண்டும். 12 மணி நேரத்திற்கு மேலே வேலை என்பதும் அவர்களுடைய குமுறலுக்கு ஒரு காரணமாக இருக்கலாம். இதன் காரணமாக, அவர்களுக்குள்ளே சங்கம் உண்டாக்க வேண்டும் என்ற எண்ணமும், அரசாங்கத்திற்கு எதிரான ஒரு உணர்வும் அவர்களுக் குள்ளே வளர்ந்து வருகிறது. எனவே, இந்த அரசு அதைப் பரிசீலனை செய்து அவர்களுடைய வேலை நேரத்தை சற்றுக் குறைப்பதற்கு எந்த வகையிலே வழிவகைகளைக் கண்டுபிடிக்க முடியுமோ அந்த வகையிலே, கண்டுபிடித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. டி.மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கு மேலேயே கொடுத்தாகிவிட்டது. சரி, விரைவில் பேசி முடியுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல இடங்களில் மோதல் ஏற்பட்டு கொலைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. அதற்குக் காரணம், சந்தேகமான பிரச்சாரங்கள்தான். எனவே, அதுபோன்று சந்தேகத்தைக் கிளப்பும் வகையில் பிரச்சாரங்கள் நடப்பதைக் கண்டவுடன் காவல் துறையினர் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். சென்னையில் கூட எய்ட்ஸ் நோயைப் பரப்புவதற்கு ஊசி போட வந்திருக்கிறார்கள் என்ற சந்தேகத்தைக் கிளப்பக்கூடிய வகையில் பிரச்சாரம் செய்யப்பட்டதால்தான் கொலையே நடந்தது. எனவே, இந்த அரசு அதில் கவனம் செலுத்த வேண்டும்.

காவல் துறையில் இருக்கக்கூடிய C.I.D.-க்களின் எண்ணிக்கை போதாது. மக்கள் பெருக்கம் அதிகமாகிவிட்ட சூழ்நிலையில் ஒரு ஸ்டேஷனுக்கு ஒருவர், என்று இருந்தால் எதை அவர்கள் கண்டறிவார்கள்? எனவே, போதுமான நபர்களை நாம் நியமிப்பதன் மூலமாகத்தான் அமைதியை ஏற்படுத்தவும், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், காரியங்களைச் செய்யவும் முடியும். எனவே, அதிகமான காவலர்களை நியமனம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, விரைவில் உரையை முடியுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996-லே ரவுடி கபிலனைச் சுட்டுக்கொன்றார்கள்.

அதிலே எல்லோருக்கும் அவார்டு கொடுத்தார்கள். கடைசியாக 10 பேர் தான் இருக்கிறார்கள். அவர்களுக்கும் அவார்டு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது சாராய சாம்ராஜ்யம். இப்போது ஸ்டேஷன்களிலேயே விலை பேசப்படுகிறது. சென்னையிலிருந்து கடைசி வரை இப்படித்தான். இப்போது லஞ்சம் லாவண்யம் பெருத்துப் போய்க் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் மீது இது ஒரு பெரிய குற்றச்சாட்டாக மக்கள் மத்தியிலே உருவாகி இருக்கிறது. எனவே, இதனை ஆய்வு செய்து லஞ்ச லாவண்யத்தை ஒழிப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை புகழும், சிறப்பும் வாய்ந்ததாகும். கிராமங்களிலே ஒரு பழமொழி சொல்வார்கள். உரலுக்கு ஒரு பக்கத்திலே இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கத்திலும் இடி என்று சொல்லுவார்கள். அந்த மாதிரி காவல் துறையைப் பொறுத்தவரையில், பொதுவாக, இரண்டு பக்கத்திலேயும் இடியும் சில நேரத்திலே அடியும் வாங்கிக் கொண்டுதான் காவலர்கள் பணியாற்றி வருகிறார்கள் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

அரசினுடைய கண்டனத்திற்கு மட்டுமல்லாமல் பொது மக்களுடைய கண்டனத்திற்கும் ஆளாக வேண்டிய ஒரு சூழ்நிலையில், நேரடியாக ஆளாகின்ற ஒரு துறையாக காவல் துறை இயங்க வேண்டியிருக்கிறது. காவல் துறையினுடைய பணிகள், அதனுடைய சிறப்பு அல்லது வேகம் என்று சொல்லுகிறபோது, முதலிலே அதிலே இருக்கின்ற குறைபாடுகளைக் களைய வேண்டியது அரசினுடைய கடமையாகும்.

முற்பகல் 11-20

பொதுவாக, அகில இந்திய அளவிலே ஒரு இலட்சம் பேர்களுக்கு 134 காவலர்கள் என்று இருக்கிறது. அது போதுமான அளவு அல்ல.



இருக்கின்ற அளவிலே சராசரி என்று பார்க்கிறபோது 134 காவலர்கள் ஒரு இலட்சம் மக்களுக்கு என்று இருக்கிறது. அந்த அளவையும்விடக் குறைவாக, ஒரு இலட்சம் பேருக்கு 127 காவலர்கள்தான் தமிழகத்திலே இருக்கிறார்கள். அந்த அளவிலேயே தங்களுடைய பணிகளை ஆற்றவேண்டிய நிலையில் காவலர்கள் இருக்கிறார்கள் என்பதை அரசு கவனத்தில் கொண்டு காவலர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் தொகை கூடிக்கொண்டே போகிறது. எனவே, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று இல்லாமல் சிஸ்டமேட்டிக்காக ஆண்டுதோறும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். அப்படிச் செய்தால், ஒரே நேரத்தில் 20 ஆயிரம் பேர்களை எடுக்க வேண்டிய சூழ்நிலை, 30 ஆயிரம் பேர்களை எடுக்க வேண்டிய சூழ்நிலை வராது. ஒவ்வொரு ஆண்டும் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கு ஏற்ப, உயர்வுக்கு ஏற்ப, காவலர்களின் எண்ணிக்கையையும் மற்றும் உள்ள அதிகாரிகளின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும். இதுகுறித்து, அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி, பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால்தான், சில நேரங்களில், போதுமான அளவுக்குக் குற்றங்களை கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. எனக்கு முன்னால் பேசிய சில உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல, பெரிய கொலைகள், ஆதாயத்திற்காகச் செய்யப்பட்ட கொலைகள் என்று எடுத்துக்கொண்டால், 1997-ல், அதாவது சென்ற ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 99 என்றால், அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 48 தான். பெரிய கூட்டுக் கொள்ளைகள் என்று எடுத்துக்கொண்டால், பதிவு செய்யப்பட்டவை 197 என்றால் அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 101 தான். அதேபோல, கொள்ளைகள் என்று எடுத்துக்கொண்டால், பதிவு செய்யப்பட்டவை 723 என்றால் அதிலே கண்டுபிடிக்கப்பட்டவை 433 தான். இப்படி வரிசைப்படுத்திக் கொண்டு போகிறபோது, சிறிய அளவிலே நடைபெற்ற திருட்டுகள், கால்நடை திருட்டுகள் போன்றவை எல்லாம் 100-க்கு 90 சதவிகிதம் அல்லது 95 சதவிகிதம் கண்டுபிடிக்கப்பட்டுவிடுகின்றன. மொத்தத்தில் ஆவரேஜாகப் பார்க்கிறபோது, குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்ட சதவிகிதத்தை எடுத்துக்கொண்டால், ஏறத்தாழ 74 சதவிகிதம், 75 சதவிகிதம் என்ற

அளவில் ஆண்டுதோறும் குறிப்புகள் தரப்படுகின்றன. பொதுவாக, ஒவ்வொரு ஆண்டும் காவல் துறையின் சார்பில் அரசு அதிகாரிகள் அறிக்கைகளைத் தயாரிக்கிறபோது, குறிப்பாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகிய நாங்கள் எல்லாம் அந்த அறிக்கைகளைப் படித்துவிட்டு, எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தால், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு கண்டு பிடித்தது குறைவு அல்லது அதிகம் என்ற புள்ளிவிவரங்களை எல்லாம் இங்கே சொல்லுவோம் என்ற காரணத்தால், அவர்களே சென்ற ஆண்டு கண்டுபிடித்தது 74.1 சதவிகிதம், இந்த ஆண்டு கண்டுபிடித்தது 74.2 சதவிகிதம் என்ற புள்ளிவிவரங்களை எல்லாம் தந்தாலும், இதிலே பெரிய குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்பதைக் கவனத்தில் கொண்டு காவல் துறையினர் வேகமாகச் செயல்பட வேண்டுமென்று, வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இதிலே, அதிகமான கவனத்தைச் செலுத்தி அரசு அதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறையை நவீனப்படுத்துவதைப் பொறுத்தவரையில், இப்போதெல்லாம் உள்நாட்டுச் சவால்கள் மட்டுமல்லாமல், சாதிக் கலவரங்கள், மதக் கலவரங்கள், வெளிநாட்டு ஊடுருவல்கள் என்று சொல்லக்கூடிய அளவில் ஐ.எஸ்.ஐ. ஊடுருவல், தீவிரவாதிகளின் ஊடுருவல் போன்ற நிலைகளை எல்லாம் பார்க்கிறபோது, மாநில அரசு, தனது நிதியிலிருந்து மட்டும் காவல் துறையை நவீனப்படுத்தும் வகையில், நவீன இயந்திரங்களை அவர்களுக்கு வாங்கிக் கொடுக்கச் செலவு செய்தாலும், சட்டம் ஒழுங்கு போன்றவைகள் எல்லாம் மாநில அரசு சம்பந்தப்பட்டது என்றாலும், காவல் துறையை நவீனப்படுத்தவும், புதிய ஆயுதங்களை அதிக அளவில் பெற்றுத் தரவும் மற்றும் அதற்கான உதவிகளைச் செய்யவும் மத்திய அரசு கணிசமான அளவிற்கு உதவிபுரிய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த விஷயத்தில், மாநில அரசின் சார்பிலே வைக்கப்பட்டிருக்கின்ற கோரிக்கைகளை மத்திய அரசு நிறைவேற்றிட வேண்டுமென்றும் இந்தநேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

பொதுவாக, காவல் துறையில் இருக்கின்ற காவலர்களுக்கு மிகுந்த மனக்குறை இருக்கின்றது. அதாவது, சங்கங்கள் வைக்க வேண்டுமென்று அப்போதைக்கப்போது சொல்லி பல பிரச்சினைகள் எழுந்து, பிறகு அமுங்கிப்போய் விடுகின்றன. எனவே, அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று



கேட்டுக் கொள்கிறேன். எப்படியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையில் நிச்சயமாகச் சில சலுகைகளை அறிவிப்பார்கள், இருந்தாலும் அந்தக் காவலர்களுடைய நீண்டகாலக் கோரிக்கைகளை இங்கே தெரிவிக்கவிரும்புகிறேன்.

வாராந்திர Extra-time remuneration-ஐ ரூ. 20-லிருந்து ரூ. 100 ஆக ஆக்க வேண்டும்; இடையூறுப்படி தற்போது ரூபாய் 20 தரப்படுகிறது, அதை ரூ. 500 ஆக ஆக்கவேண்டும்; உணவுப்படி இப்போது ரூ. 30 ஆக இருக்கிறது, அதை ரூ. 50 ஆக உயர்த்தித் தரவேண்டும்; சீருடைப்படி ரூ. 30 ஆக இருக்கிறது, அதை ரூ. 100 ஆக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற பல கோரிக்கைகள் காவலர்களின் சார்பிலே தரப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, தொடர்ந்து 15 ஆண்டுகளாகப் பணியாற்றுகின்ற காவலர்களைத் தலைமைக் காவலர்களாகவும், தலைமைக் காவலர்களாக இருப்பவர்களைக் காவல் துறை ஆய்வாளர்களாகவும் பதவி உயர்வு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சென்னை நகரத்திலே பணியாற்றுகின்ற காவலர்கள் வேறு மாவட்டங்களுக்குச் செல்ல விரும்பினால் அதற்குச் சம்பந்தப்பட்ட D.G.P. ஒப்புதல் அளித்தாலும்கூட, இங்கே பற்றாக்குறை இருக்கின்றது என்கின்ற காரணத்தைக் காட்டி அவர்களை விடுவிப்பதில்லை என்கின்ற ஒரு மனக்குறை மாநகரத்திலே பணியாற்றுகின்ற காவலர்களுக்கு உள்ளது. இதுகுறித்தும், அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, புதிதாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, புதிதாக S.P. அலுவலகம் ஆரம்பிக்கின்றபோது போதுமான அமைச்சுப் பணியாளர்களை எடுத்துக் கொள்வதில்லை என்கின்ற ஒரு மனக்குறை தமிழ்நாடு காவல் துறை அமைச்சுப் பணியாளர்களுக்கு இருக்கிறது. அவர்கள் ஏராளமான புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மதுரை, தேனி, திருச்சி, கரூர், பெரம்பலூர், திருவாரூர், நாமக்கல், திருவள்ளூர், விழுப்புரம் என பல மாவட்டங்கள் பிரிக்கப்பட்டபோது அங்கே உதவியாளர்கள் 63 பேர், இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் 72 பேர் என்று இப்படி இந்த மாவட்டங்களிலே அமைச்சுப் பணியாளர்களை நியமிக்க வேண்டியிருக்கின்றது. இவற்றையெல்லாம் காவல் துறை அதிகாரிகளும்

மற்றும் அரசும் கவனத்திலே எடுத்துக் கொள்வதில்லை என்கின்ற ஒரு குறைபாடு அவர்களுக்கு இருக்கின்றது. எனவே, இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று அரசைப் பணிவுடன் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் காவலர் முதல் ஆய்வாளர்கள் வரை அவர்களுக்கு ரேஷன் கடைகளிலே 50 சதவிகித விலையிலே பொருட்கள் வழங்கப்பட்டு வந்தன. இப்போது இருக்கின்ற விலையிலே மானியம் என்று வைத்து ரூ. 22, ரூ. 25 என்று வழங்கப்படுகிறது. இந்த விஷயத்தில், அவர்களுடைய கோரிக்கை என்னவென்றால், இப்போது என்ன விலையோ அதிலே 50% என்று ஏற்கெனவே உத்தரவு போடுகிறபோது என்ன நிலை இருந்ததோ அதே நிலையிலே இப்போதும் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை ரேஷன் பொருட்களை வாங்கிக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று அவர்களால் வலியுறுத்தப்படுகிறது. இதையும் அரசு கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஏற்கெனவே, பல கட்டங்களிலே தேர்வுகள் நடைபெற்று ஏட்டு, Police Constables தேர்வுகள் எல்லாம் நடைபெற்று முடிந்து waiting list-லே இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, உதவி ஆய்வாளர் தேர்விலே, தேர்ச்சி பெற்றவர்கள் 98 பேர் இன்னும் பயிற்சிக்கு அழைக்கப்படாத நிலையிலே, waiting list-இல் இருப்பவர்கள், 320 பேர் Constable பதவிக்குத் தேர்ச்சி பெற்றவர்கள் என்று பல கட்டங்களிலே அவர்கள் இருக்கிறார்கள். இதை, பலமுறை, பலரும் இங்கே வலியுறுத்தி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட சில நேரங்களில் பதில் சொல்லியபோது, இவற்றையெல்லாம் கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, இப்படி வயது வரம்பைக் கடந்து, வேலைக்குப்போக முடியாத நிலையிலே பல இளைஞர்கள் இருக்கிறார்கள். இன்டர்வியூ எல்லாம் முடிந்து, waiting list-லே, பல ஆண்டுகளாக 3 ஆண்டுகள், 8 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று பல பேர் காத்துக் கொண்டிருக்கிறார்கள். சில பேர் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். சில பேர் Tribunal-குச் சென்றிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழுமையாக விசாரித்து, தகுதியானவர்களுக்குப் பணியினைத் தருவதற்கு உத்தரவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 11-30

அதுபோல, காவலர்களில் பல பேர் பட்டதாரிகள் இருக்கிறார்கள். Post Graduate பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் Sub-Inspector களாக வர வேண்டியவர்கள் waiting list-லே இருக்கிறார்கள். அவர்களும், ஏற்கெனவே சொன்னதைப்போல தேர்வு செய்யப்பட்டு, waiting list-லே இருப்பதை அரசு கவனத்திலே எடுத்துக்கொண்டு, அவர்களுக்குப் பணி உயர்வினைத் தருவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, காவல் துறையைப் பொறுத்தவரையில், அது யாருடைய கையிலே இருக்கிறது; எப்படி இயக்கப்படுகிறது என்பதைப் பொறுத்துத் தான் பெரும்பாலும் இந்தத் துறை கடந்த காலத்திலே செயல்பட்டு வந்திருக்கிறது. சுயமாகச் செயல்பட வேண்டிய துறை என்றாலும்கூட, அப்படித்தான் செயல்பட்டு வந்திருக்கிறது. கடந்த ஐந்து ஆண்டு நிலை, இப்போது இருக்கிற நிலை, இவை இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தோம் என்று சொன்னால், நடுநிலைமையோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஆங்காங்கே அசம்பாவிதங்கள், வன்முறைகள் எல்லாம் நடந்திருக்கின்றன. ஆனால், மேல்மட்டத்திலே இருந்து - முதலமைச்சர் மட்டத்திலே இருந்து - காவலர்களையே அடியாட்களாகப் பயன்படுத்தியது போன்ற அந்த துர்பாக்கியமான நிலை இப்போது இல்லை என்பதை நாம் நிச்சயமாக எடுத்துச் சொல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று, கலவரங்கள் என்று வருகின்றபோது, காவல் துறையைச் சார்ந்தவர்கள், முதலிலேயே, அவை சிறு பொறியாக இருக்கிறபோதே, அதற்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய வகையில் வேகமாகச் செயல் பட்டால், அந்தப் பிரச்சினை பெரும் நெருப்பாக வளர்ந்து பாதிப்பு ஏற்படுத்தாமல் தடுத்துவிட முடியும். இதற்கு Intelligence பிரிவினர்கள்தான் தீவிரக் கவனம் செலுத்த வேண்டியவர்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, இப்போது அமைதி இருக்கிறது. தென் மாவட்டங்களில் நடைபெற்ற ஜாதிக் கலவரங்கள் இப்போது இல்லை. அதேபோல, கோவை போன்ற இடங்களிலே நடைபெற்ற மதக் கலவரங்கள் இப்போது இல்லை. கடந்த சில மாதங்களாக, குறிப்பாக, நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததற்குப் பிறகு, காவல் துறையினர் உண்மையிலேயே மிக வேகமாகத் தான் செயல்படுகிறார்கள். அதிகமான அளவிலே வெடிகுண்டுகளை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

நான்கூட முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்ன வென்றால், தேர்தலுக்குப் பின்னாலே, இதற்கென்று தனி I.G.-யே போட்டு, தனிப் பிரிவையே அமைத்து, காரிலே இருந்த வெடிகுண்டுகள், பல இடங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகள் இவற்றை எல்லாம் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம், ஒட்டு மொத்தமாக ரொக்கப் பரிசு ஒன்றை அறிவித்தீர்கள். ஆனால், கோவைப் பகுதியிலே வெடிகுண்டுகளை எல்லாம் கைப்பற்றிய உயர் அதிகாரி களிலிருந்து காவலர்கள் வரை, அவர்களுக்கெல்லாம் ஜனாதிபதியின் பதக்கமோ அல்லது உயிர் காப்பதற்காக உள் துறையினால் கொடுக்கப்படும் பதக்கத்தையோ, அவர்களை ஊக்குவிப்பதற்காகக் கொடுப்பதற்கு அரசாங்கம் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் ஜாதிக் கலவரங்களையொட்டி பல ஜாதிகளைச் சேர்ந்தவர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் பல இருக்கின்றன. பல்லாயிரக்கணக்கானோர்மீது—அவர்கள் ஆதிதிராவிடர்களாக இருந்தாலும் சரி, தேவராக இருந்தாலும் சரி, நாடாராக இருந்தாலும் சரி, வன்னியராக இருந்தாலும் சரி, எந்தப் பிரிவினராக இருந்தாலும் சரி, அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் பல இருக்கின்றன. சில நேரங்களில், சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமல்ல, 3 பேர், 4 பேர் என்றல்ல, ஊரோடு சேர்ந்து, 30 பேர், 40 பேர் என்று கிராமம் கிராமமாக மக்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலத்தில்கூட, எனக்கு ஞாபகம் இருக்கிறது. அன்பிற்குரிய பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர், டாக்டர் இராமதாஸ் அவர்களை நானே சென்று ஒருமுறை அவருடைய இல்லத்திலே சந்தித்துவிட்டு, அப்போது முதலமைச்சராக இருந்த, இன்றைய முதலமைச்சரைச் சந்தித்து, அவர்களிடத்திலே சொன்னேன். அதற்குப் பின்னாலே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில், வன்னியர் சங்கத்தின் சார்பில், இளையபெருமாள் போன்றவர்கள் அவர்களுடைய அமைப்பின் சார்பில், கேட்டுக்கொண்டதற்குப் பின்னாலே, வன்னியர்கள்மீது, ஆதிதிராவிடர்கள்மீது, ஜாதிச் சண்டை காரணமாக போடப்பட்ட அந்த வழக்குகளையெல்லாம் ஒட்டுமொத்தமாக, முதல்வர் அவர்கள் ரத்து செய்தார்கள் என்பதை இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



முற்பகல் 11-35

அதுபோல, இப்போதும் இனக் கலவரங்களால், ஜாதிக் கலவரங்களால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டிருக்கக்கூடிய பெரிய வழக்குகளை யெல்லாம் தயவு செய்து ரத்து செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கொலை, கொள்ளை போன்ற கேஸ்களை விசாரணை பண்ணுவது என்பது வேறு விஷயம். ஊர் முழுவதும் சேர்த்து F.I.R. போட்டிருப்பார்கள், 100, 200 பேரைச் சேர்த்து வழக்குப் போட்டிருப்பார்கள். இதில் சிறுசிறு வழக்குகள்கூட இருக்கின்றன. இவற்றையெல்லாம் நீங்கள் சீர்தூக்கிப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தேர்தல் நேரத்தில் பெரிய பிரச்சினையாக இருந்தது. அசம்பாவிதங்களால் பாதிக்கப் படும்போது, ஜாதிச் சண்டைகள் நடக்கின்றபோது, மதச் சண்டைகள் நடக்கின்றபோது பாதிப்பு வந்தால், சில ஜாதி என்றால் 1 இலட்சம் ரூபாய் தருகிறார்கள்; சில ஜாதி என்றால் 2 இலட்சம் ரூபாய் தருகிறார்கள் என்றெல்லாம் இருந்தது. இப்போதுகூட, கொள்கை விளக்கக் குறிப்பிலே 44-வது பக்கத்திலே - யாராக இருந்தாலும், எல்லோருடைய உயிருக்கும் ஒரே விலைதான் - 2 இலட்சம் ரூபாய் என்று அறிவித்ததோடு, 1-1-1997 முதல் ஏற்பட்ட நிகழ்வுகளுக்கு ஏற்கெனவே விடுபட்டுப்போய் இருந்தால் அவர்களுக்கும் எஞ்சிய நிவாரணத் தொகை உடனடியாகச் சேர்த்து வழங்கப்படும் என்று அறிவித்ததை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். ஏனென்றால், தேர்தல் நேரத்தில், சில இடங்களில் இதனால் பாதிப்பு ஏற்பட்டது. மனிதர்கள் எல்லோரும் ஒன்றுதான். ஒரு ஜாதிக்காரர் செத்தால் ஒரு இலட்சம் ரூபாய், இன்னொரு ஜாதிக்காரர் செத்தால் இரண்டு இலட்சம் ரூபாய் என்றெல்லாம் தரப்படுவதாக, பல ஜாதியினர் மத்தியிலே எண்ணம் இருந்தது. அதனாலேயேகூட அரசு மீது அதிருப்தி ஏற்பட்டது. எனவே, அவற்றைப் போக்குகிற விதத்திலே அரசு நடவடிக்கை எடுத்திருப்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன்.

அதுபோல, கோவை மட்டுமல்ல, எங்கு இருந்தாலும், தீவிரவாத அமைப்புகள், அது இஸ்லாமிய அமைப்பாக இருந்தாலும் சரி, இந்துக்கள் தீவிரவாத அமைப்பாக இருந்தாலும் சரி, தயவு தாட்சண்யம் பார்க்காமல் அரசாங்கம் தொடர்ந்து உரிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலே, எந்த ஜாதியாக, எந்த மதமாக இருந்தாலும், இந்த மதத்தின்மீது நடவடிக்கை எடுத்தால், அதனாலே பாதிப்பு வருமோ என்று நிச்சயமாக அரசு கவலைப்படத்

தேவையில்லை. ஏனென்றால், பொதுமக்கள், அது யாராக இருந்தாலும், எந்த மதமாக இருந்தாலும், எந்த ஜாதியாக இருந்தாலும், தீவிரவாதத்தை ஆதரிப்பதில்லை. தமிழ்நாட்டு மக்கள் அமைதியாக வாழ விரும்புகிறவர்கள். வன்முறையாளர்களை எப்போதும் மக்கள் அடையாளம் கண்டு வெறுக்கவே செய்வார்கள்.

பொதுவாக, இதுபோன்ற நிலைகள் உருவாகி, இன்னும் அதிகமான இடத்தில் குண்டுகள் வெடித்து, அதிகமான அளவில் பாதிப்புகள் ஏற்பட்டு, இவற்றையே காரணமாக வைத்துக் கொண்டு இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டுமென்று அல்லது தேர்தலைச் சந்திக்க வேண்டுமென்று எல்லாம் சில பேர் விரும்புகிறார்கள். அமைதியாக இருக்கிற சூழ்நிலையில்கூட தமிழ்நாட்டில் அமைதியில்லை, அமைதியில்லை என்று தாங்கள் அமைதியில்லாமல் இருப்பதைக் காட்டுகின்ற விதத்திலே அறிக்கை விட்டுக்கொண்டிருக்கின்ற சில பேர் தங்களுடைய அமைதியின்மையை தங்களுடைய urge-ஐ தமிழிலே சொல்ல வேண்டுமென்றால் - வேண்டாமென்று நினைக்கிறேன், (சிரிப்பு) ஆத்திரத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக, அதுமாதிரி நிலை வராது என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். இப்போதுகூட, மத்தியிலே இருக்கின்ற மத்திய அமைச்சர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். மத்திய அமைச்சர்கள் சில பேர், தங்களுடைய கட்சித் தலைவர்களாலே, அவர்கள் சொன்னதை இன்னும் வேகமாகச் செய்யவில்லை என்பதற்காக, கட்டாய ஓய்விற்காக, ஆஸ்பத்திரியில் படுக்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட துர்பாக்கியமான நிலையிலே, இந்திய நாட்டிலே ஒரு அரசாங்கம் இருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், தமிழக மக்களுக்குப் பாதுகாப்பையும், ஒரு அமைதியான சூழ்நிலையையும் உருவாக்கித் தர வேண்டியது அனைத்து அரசியல் கட்சிகளுடைய பொறுப்பு மட்டுமல்ல, இந்த முழுப் பொறுப்பும் காவல் துறையில் பொறுப்பேற்றிருக்கின்ற உயர் அதிகாரிகள், அவர்களின் கீழே இருக்கிற காவலர்கள், அத்தனை பேருக்கும் இருக்கிறது. ஆட்சியில் யார் இருந்தாலும், யார் போனாலும் நாட்டு மக்களுக்காக நிலையாக இருந்து வலுவாகச் செயல்படக்கூடிய ஒரு துறை என்கிற முறையிலேதான், நடுநிலையாக இருந்து, வேகமாகச் செயல்பட வேண்டிய பொறுப்பு, காவல் துறைக்கு இருக்கிறது. எனவே இந்தப் பொறுப்பை உணர்ந்து காவல் துறை செயல்பட வேண்டும். அவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் அரசாங்கம் செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).



முற்பகல் 11-40

இன்னொன்று, எக்ஸைஸைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எனக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனென்றால், அவர்தான் நிதி அமைச்சர். இங்கே நான் பேசிய அடிப்படையிலே, ஏற்கெனவே 220 கோடி ரூபாய் வந்தது, இப்போது 500 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. முன்பெல்லாம் பல பேர் கூட்டாகச் சேர்ந்து கொண்டு பிராந்திக் கடைகளை ஏலம் எடுப்பது என்ற முறை எல்லாம் இருந்தது; தற்போது ஓரளவிற்குக் குறைந்து — முற்றிலும் நூற்றுக்கு நூறு சதவீதம் குறைந்து இருக்கிறது என்று சொல்ல முடியாது — ஏதோ அரசு எடுத்த முயற்சியின் காரணத்தாலே இன்று 80 சதவீதம், 90 சதவீதம் அளவிற்குப் பல இடங்களிலே குறைந்து — 220 கோடி ரூபாய் வருமானம் என்று இருந்தது, இன்றைக்கு 500 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அதிக ஏலம் போய் இருக்கிறது. முதலமைச்சர் அவர்களிடம் நான் ஒன்றே ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் மற்ற மாநிலங்களில் உள்ள விலைகளோடு இந்த மாநிலத்தின் விலையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குடிமக்களுக்காக மட்டுமல்ல; குடிமக்கள் அதிகமாகப் பணம் கொடுத்துக் குடிக்கிறார்கள் என்பதற்காக மட்டுமல்ல, அவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தால் மட்டுமல்ல; மற்ற மாநிலங்களில் — பாண்டிச்சேரி, ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் இருக்கிற விலைகளோடு இங்குள்ள விலையை நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்து, விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அவ்வாறு இல்லாததால்தான், பல பேர் பாண்டிச்சேரியிலிருந்து கொண்டுவந்து இங்கே இரண்டாவது சரக்கு, மூன்றாவது சரக்கு என்று திருட்டுத்தனமாக விற்கிற சூழ்நிலை எல்லாம் இருக்கிறது. அதனாலே அரசுக்கு வரவேண்டிய வருமானம் வராமல் இருக்கிற சூழ்நிலையும் இருக்கிறது என்பதை நீங்கள் கவனத்திலே கொண்டு, மற்ற மாநிலங்க்ளிலே உள்ள ரகங்களுக்கு, ஒவ்வொரு பிரிவாக எடுத்துக்கொண்டு, அதனுடைய விலை என்ன என்பதை அறிந்து, அதற்கு ஏற்ப விலை: நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, அரசாங்கத்திற்கு வருமானம் வருவதற்கு இன்னொரு வழியையும் நான் சொல்கிறேன். மாநில ஆயத்தீர்வை கொள்கை விளக்கக் குறிப்பில் 10-வது பக்கத்திலே ஒரு கொள்கை முடிவாக ஒன்றை அறிவித்து இருக்கிறீர்கள். அதாவது, "இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் சில்லறை விற்பனைக் கடைகளுடன்

இணைந்து செயல்படும் 'பார்'களுக்கு உரிமங்கள் வழங்குவதில்லை' என்னும் அரசின் கொள்கை தொடரும்" என்று ஒரு அறிவிப்பு இருக்கிறது. அதுபற்றி நிச்சயமாக நான் சொல்வேன்; எல்லோருக்கும் தெரியும்; தமிழ்நாட்டிலே பொதுவாக 5 ஆயிரம் கடைகள் இருந்தால், அதில் 4500 கடைகளில் 'பார்' இருக்கிறது; மறைமுகமாக இருக்கிறது; இது உண்மை. அவர்கள் யாருக்குப் பணம் கொடுக்கிறார்கள் என்றால், அவர்கள் எல்லாம் போலீசுக்குத் தான் பணம் கொடுக்கிறார்கள். மாதாமாதம் 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாய் என்று ஒவ்வொரு கடையிலிருந்தும் கொடுத்துவிட்டுத்தான் அவர்கள் கடையை நடத்துகிறார்கள். ஒரு மாதத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் என்று கணக்குப் பார்த்தால் 60 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வருமானம் வரும். என்னைக் கேட்டால், 'பார்' நடத்துவது ஒன்றும் தவறு இல்லை. மொத்தமாக நீங்கள் மதுவிலக்கை அமல் நடத்துகிறபோது, அதை அமல்படுத்துங்கள்; அதை நானும் வரவேற்கிறேன்; அது இந்தியா முழுவதும் வரவேண்டும்; தமிழ்நாடு முழுவதும் அது அமல்படுத்த வேண்டும் என்பது வேறு விஷயம். ஆனால், பெர்மிட் கொடுத்துவிட்டு, கடையையும் கொடுத்துவிட்டு — இப்போது பார்த்தீர்கள் என்றால், அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு 25 இலட்சம், 30 இலட்சம், 40 இலட்சம் என்றெல்லாம் ஏலம் எடுத்து இருக்கிறார்கள்; திருப்பூரில் 56 இலட்சம் வரைக்கும் போய் இருப்பதாகச் சொன்னார்கள். இப்படியெல்லாம் ஏலம் எடுத்துவிட்டு, அந்தக் கடைகளை நடத்துகிறவர்கள் யாரைப் பார்த்தாலும், அவர்கள் ஒளிந்து ஒளிந்து ஓடிக் கொண்டிருக்கிறமாதிரி, அவர்கள் எல்லோரையும் துரத்த வேண்டிய சூழ்நிலையும், அவர்கள் எல்லோருக்கும் பயப்பட வேண்டிய சூழ்நிலையும், எல்லோருக்கும் மாமூல் கட்ட வேண்டிய சூழ்நிலையும் அந்தக் கடைகளை நடத்துபவர்களுக்கு எல்லாம் இருக்கிறது. ரோட்டிலே குடிப்பதை விட 'பார்'-லே குடிப்பது ஒன்றும் தப்பு கிடையாது. குடிக்கிறவர்கள்தான் அங்கு குடிக்கப் போகிறார்கள். அந்த வருமானம் போலீசுக்குப் போவதற்குப் பதிலாக அரசாங்கத்திற்கு வரும்; 60 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு வரும்; அதைப் பரிசீலனை செய்யலாம். 'பார்' என்ற பெயர் வேண்டியதில்லை. குடிக்கிறவன், கடையிலிருந்து வாங்கி — முன்னால் நின்று குடிக்கிறவன், பின்னால் இருந்து குடிக்கப் போகிறான்; இதில் என்ன 'பார்' இருக்கிறது? 'பார்' ஹோட்டல்களில் இருக்கிறது; எல்லா ஹோட்டல்களிலும் இருக்கிறது; 3 ஸ்டார், 4 ஸ்டார், 5 ஸ்டார் ஹோட்டல்களில் இருக்கிறது. 20 ரூம்கள் இருந்தால் அவர்களுக்கு எலிஜிபிளிட்டி இருக்கிறது; அங்கே குடிப்பதற்கு 'பார்' வைத்து இருக்கிறார்கள்; பிராக்டிக்கலாகச் சொல்கிறேன்; அதாவது, எங்கோ போகிற பணம், அரசாங்கத்திற்கு வந்தால், அது திரும்ப மக்களுக்குப் போகும். எனவே, இவற்றையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு, பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய இயக்கத்தின் சார்பிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியினைக் கூறி, இன்றைக்கு மக்களுடைய உயிரையும் உடைமைகளையும் காக்கின்ற ஒரு துறையாக இந்தக் காவல் துறை செயல்படுகிறது. வள்ளுவர் குறிப்பிடும்போது,

*"ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்*
*நீரினும் நன்றதன் காப்பு"*

என்று சொல்லி இருக்கிறார். ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தை உழுது தண்ணீர் பாய்ச்சி, பக்குவப்படுத்தி, உரமிட்டு, கருவாக ஆக்குகின்ற நிலை வருவதுதான், அவன் செய்த பலன்களை எல்லாம் அடைகின்ற நேரம். எனவே, இத்தனையையும் செய்தபின், அந்த காய்ப்பைக் காக்கின்ற நிலைதான் முக்கியமான நிலை என்று குறிப்பிடுவதுபோல, இன்றைக்கு மனிதர்கள் அத்தனை செல்வங்களையும் வளங்களையும் பெற்று இருந்தாலும்கூட, அவைகளை எல்லாம் முறையாகக் காக்கின்ற நிலை ஒன்று நாட்டில் இருந்தால்தான், அமைதியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்டு மக்கள் நிறைவாக, நிம்மதியாக வாழ்க்கை நடத்த முடியும் என்கின்ற காரணத்தினால், அந்த நிறைவை, நிம்மதியை, வாழ்க்கையை மக்களுக்கு ஏற்படுத்தித் தருகின்ற துறை, காவல் துறை என்பதால், அந்தக் காவல் துறை சிறப்பாகச் செயல்பட்டால்தான், ஒரு அரசுக்கு நல்ல பெயர் ஏற்படும்.

*முற்பகல் 11-45*

இன்றைக்கு, நமது காவல் துறையைப் பொறுத்தவரையிலே, சிறப்பான துறை என்று பெயர் இருந்தாலும்கூட, பல்வேறு நிலைகளிலே அவர்களுடைய நிலைப்பாடுகள் சரியாக இல்லை. இப்போது மதுபானம் ஏலம் விடுகிற நிலையிலே ரூ. 220 கோடியாக இருந்த வருமானத்தை அரசு ஒழுக்கமான நேர்மையான செயல்முறைகளைக் கடைப்பிடித்ததனால், 500 கோடி ரூபாய் வருமானம் ஈட்டியிருந்தாலும்கூட ஆங்காங்கு இருக்கின்ற கள்ளச்சாராய விற்பனை

முழுமையாக ஒழிக்கப்படவில்லை என்ற நிலைதான் இன்றைக்கும் இருக்கிறது. இன்றைக்குப் பார்த்திபனூர் பக்கத்திலே பாகநேரி என்ற கிராமத்திலே உள்ள பெண்கள் எல்லாம் சேர்ந்து, கள்ளச்சாராயக் கடை என்றே வைத்து, அரசுக்கு இணையாக, கடை நடத்தினார்கள். அதுபோல, நெல்லை மாவட்டத்திலே ஒரு D.S.P. குடித்தவர்களைக் கைது செய்கின்ற நேரத்திலே அங்கே இருக்கின்ற கிராம மக்கள் எல்லாம் சேர்ந்து, ஆயிரக்கணக்கான லிட்டர்கள் கணக்கில் கள்ளச்சாராயத்தை வடித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கள்ளச்சாராய வியாபாரிகளை எல்லாம் விட்டுவிட்டு, குடிக்கிறவர்களை மட்டும் பிடிப்பதற்கு வந்திருக்கிறீர்களே என்று சொல்லி, அந்த D.S.P-யை அந்தக் கிராம மக்கள் பிடித்து வைத்துக் கொண்டார்கள் என்ற நிலையெல்லாம் பத்திரிகையிலே செய்தியாக வந்திருக்கின்றன.

அதுபோல், நேற்றைய முன்தினம் கூட சாத்தூரிலே விஷச் சாராயம் அருந்தியதன் காரணமாக 3 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். மேலும் பத்து பேர் உடல்நிலை சரியில்லாத நிலையிலே மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்கின்ற செய்திகள் எல்லாம் வருகின்றன. இவைகளையெல்லாம் பார்க்கும்போது, மேலே இருக்கின்றவர்களும், மேல் மட்டத்திலே இருக்கின்ற காவல் துறையைச் சேர்ந்தவர்களும், அரசும் எவ்வளவோ ஊழலற்ற வகையில் இந்த மக்களுக்குக் கடமைகளை ஆற்ற வேண்டுமென்று நினைத்தாலும்கூட, அதற்கு ஒத்துழைப்பாக இல்லை என்பதை எடுத்துக் காட்டுகின்ற நிகழ்ச்சிகளாகத்தான் இவைகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. எனவே, மேலே காவல் துறையிலே, முக்கியப் பொறுப்புகளிலே இருக்கின்ற அதிகாரிகள் இவைகளைக் கட்டுப்படுத்துகிற நிலையில் இந்த அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அதோடு, இந்த அரசு முக்கியமாக கடந்த இரண்டாண்டுகளாக சிரமங்கள் எடுத்துக்கொண்டு, சமாளித்து, அந்த வகையிலே திறமையாகச் செயல்பட்டு மதக் கலவரங்களையும் இனக் கலவரங்களையும் அடக்கிய நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்தன. கோவையில் நடந்த குண்டு வெடிப்புக்குப் பின்னால், எந்தவிதமான சிறிய அசம்பாவிதமும் நடைபெறவில்லை. அதற்காக நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியெல்லாம் உள்ள திறமை மிக்கக் காவல் துறை கடந்த இரண்டாண்டுகளாக இதே முறையிலே தொடர்ந்து செயல்பட்டிருந்தால்,



இந்த நாட்டில் இனக் கலவரம் மூலம் ஏறக்குறைய 70 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற அவலமான நிலையை நாம் அடைந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

முற்பகல் 11-50

இன்றைக்கும் அந்த இனக் கலவரங்களின் மூலமாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல சிவகாசியிலே மக்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக அங்கிருக்கின்ற கோட்டாட்சித் தலைவரிடத்திலே மனுவைக் கொடுப்பதற்குக் கூட்டமாக வந்த இடத்திலே அந்தக் கூட்டத்தைக் கலைக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டு, காவல் துறையின் மூலமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு ஒரு துர்பாக்கிய நிலையை அன்றைக்கு ஏற்படுத்தியிருந்தாலும்கூட, அதற்குப் பின்னால் எந்தவிதமான அசம்பாவிதமான சூழ்நிலைகளும் ஏற்படவில்லை என்கின்ற நிலையிலே அந்த மக்களெல்லாம் அன்றைக்குக் கலைந்து சென்றுவிட்டார்கள். ஆனால், அந்த நிகழ்ச்சியையொட்டி, ஏறத்தாழ 5000 பேர்களின் மீது இன்றைக்கும் வழக்கு இருப்பதாக எனக்குச் செய்தி வந்திருக்கிறது. எனவே, அவர்களையெல்லாம் நீங்கள் அந்த வழக்கிலிருந்து விடுவிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அதேபோல், இந்த இனக் கலவரத்திற்கு முக்கிய காரணம், முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய சிலையும், அம்பேத்கர் அவர்களுடைய சிலையும் உடைக்கப்பட்டதுதான் என்று இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாங்கள் அம்பேத்கர் அவர்களை நிச்சயமாக தேசிய தலைவராக ஏற்றுக்கொள்கிறோம். அதேபோல, முத்துராமலிங்கத் தேவர் அவர்களும் ஒரு தேசியத் தலைவர் என்பதையும், அவர் இந்த நாட்டிற்காக 11 ஆண்டுக்காலம் சிறைவாசம் அடைந்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எவருக்கும் இல்லாத அளவிற்கு வடக்கே பாலகங்காதர திலகருக்கும் தென்னகத்திலே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கும்தான் வெள்ளைக்காரர்கள் வாய்ப்பூட்டுச் சட்டம் போட்டார்கள். அந்த அளவிற்குத் தங்களுடைய பேச்சாற்றலால் மக்களையெல்லாம் சுதந்திரப் போராட்டக் களத்திலே இறக்கியவர்கள் என்கின்ற காரணத்தினால் அன்றைக்கு வாய்ப்பூட்டுச் சட்டம் போடப்பட்டது. ஆனால் இன்றைக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று தன்னை அர்ப்பணித்துக்கொண்ட தலைவர் முத்துராமலிங்கத் தேவர்தான் என்பதை எல்லா அரசியல் கட்சிகளும் சொல்ல வேண்டும். காரணம், இன்றைக்கு ஒருவர்கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தன்னுடைய சொந்த சொத்தைக் கொடுத்திருக்க மாட்டார்கள்.

ஆனால் முத்துராமலிங்கத் தேவர் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட அவருடைய சொத்துக்களை என்றைக்கும் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களே எடுத்துக்கொள்ளட்டும் என்கின்ற அளவிலே அளிதார்கள் அவர்கள்தான் அதை அனுபவித்து வருகிறார்கள் என்கின்ற நிலையிலே இருக்கிறது. இன்றைக்கு நமது முதலமைச்சரைப் பொறுத்த அளவிலே இது மிக நன்றாகவே தெரியும். 1957-லே நடைபெற்ற கலவரம், அது ஒரு இனக் கலவரம் அல்ல. அரசியல் காழ்ப்புணர்ச்சியின் பெயரால், அரசியல் ரீதியாகத் தூண்டிவிடப்பட்ட கலவரம்தான் என்பதை இதே அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது. 1967-லே திராவிட முன்னேற்றக் கழக அரசு பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே பொறுப்பேற்ற பிறகு, நமது முத்துராமலிங்கத் தேவர் கைது செய்யப்பட்டிருந்து, அவரோடு கைது செய்யப்பட்டிருந்த முதுகுளத்தூர் கைதிகளையெல்லாம், 'இவர்களெல்லாம் அரசியல் கைதிகள்' என்கின்ற பெருமையோடு விடுவித்தது இந்த அரசு என்கின்ற காரணத்தினால் அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, அந்த மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களோடு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களோடு இணைந்து வாழவேண்டும் என்கின்ற எண்ணத்தைக் கொண்டவர்கள்தான். இன்றைக்கு (எங்களுடைய பகுதிகளில் எல்லாம் ஒவ்வொரு கோவிலிலும் நாங்களும் அவர்களும் ஒன்றாக இணைந்துதான் தெய்வ வழிபாடு செய்கின்ற நிலை இருக்கிறது. எங்களிலே ஒருவர் பூசாரி இருந்தால் அந்த தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களிலும் ஒரு பூசாரி இருப்பார். அந்த இரண்டு பேரும்தான் அந்தக் கோவிலிலே சேர்ந்து வழிபட வேண்டும் என்கின்ற நிலையெல்லாம் இருக்கின்றது. அப்படியிருந்தும்கூட, இன்றைக்கும் அரசியல் காரணங்களினால்தான் இந்த ஜாதிக் கலவரம் தூண்டி விடப்படுகிறது என்பதை நான் திட்டவட்டமாக முதலமைச்சர் அவர்களுக்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) காரணம், பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. 'எம்.எல்.ஏ. ஹாஸ்டலில் கைதான சுரேஷ் வாக்குமூலத்தில் திடுக்கிடும் தகவல்' என்பது அந்தச் செய்தி. 'இன்றைக்கு கம்யூனிஸ்ட் பேரியக்கத்தினுடைய செயலாளராக இருக்கின்ற அருமைச் சகோதரர் நல்லக்கண்ணு அவர்களுடைய மாமனார் அண்ணாசாமி அவர்களையும், ஒன்றும் அறியாத ஆசிரியர் முத்துக்கிருஷ்ணன் அவர்களையும் அரசியல் பின்னணியின் காரணமான தூண்டுதலினால்தான் கொலை செய்தேன்' என்கின்ற வாக்குமூலத்தை வாலிபர் சுரேஷ் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்கின்ற நிலையை எல்லாம் நாம் அறிவோம்.



முற்பகல் 11-55

இதையெல்லாம் முதல்வர் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். எப்படி கோவையிலே நடந்த குண்டுவெடிப்புக்கு ஒரு வெள்ளை அறிக்கையை அளித்து, முதல்வர் அவர்கள், மக்களுடைய மனதிலே இருந்த நிலைகளையெல்லாம், மனதிலே இருந்த பீதிகளையெல்லாம் அகற்றுவதற்கு, இந்த அரசு யாருக்கும் ஒரு சாராக செயல்படவில்லை, நாங்கள் நியாயமாக, நேர்மையாக,

*"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்*
*கோடாமை சான்றோர்க் கணி."*

என்பதுபோல, சமன் செய்து சீர்தூக்கும் கோலாக, இரண்டு மதத்தினருக்கும் பொதுவாக நாங்கள் நடந்திருக்கிறோம் என்பதைக் காட்டினாரே, அதுபோல இந்த இனக்கலவரத்திற்கும் ஒரு வெள்ளை அறிக்கையை நீங்கள் தந்து இதில் யார் யார் தவறு செய்திருக்கிறார்கள், எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள், எத்தனைபேர் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள், இதில் யார் யார் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், இதில் அதிகமான தவறு செய்தவர்கள் யார் என்பதையெல்லாம் நீங்கள் எடுத்துக்காட்ட வேண்டும். நான் அன்றைக்கே குறிப்பிட்டு இருக்கின்றேன், 'சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்', 'இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்' என்று, தான் பெற்றிருக்கின்ற ஆஸ்தியை பிறருக்குக் கொடுத்து பாரி வள்ளலைப் போல இந்த நாட்டிலே முல்லைக் கொடிக்கு தேரை ஈந்தவன்தான் உயர்ந்த ஜாதிக்காரன் என்று தான் மேலும் மேலும் சம்பாதித்துக் கொண்டு, கடந்த காலங்களில் ஆட்சி நடத்தியவர்கள் எல்லாம் சொன்னார்களே, 'இந்த ஊர் சொத்துக்கள் எல்லாம் எங்களுக்குத்தான்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அவர்கள்தான் இழிந்த ஜாதி என்கின்ற நிலையே இந்த ஃபார்வர்டு பிளாக் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் ஏற்றுக்கொண்ட நிலை இந்த இயக்கம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களால் தொடங்கப்பட்டது, அவர் தேவமார் அல்ல. வட இந்தியாவிலே, இந்த நாட்டிற்காக — பெருமையாகச் சொல்வார்கள் நம்முடைய தலைவர்கள்கூட— காந்தியைப் போன்றவர்கள் எல்லாம் 80 ஆண்டுகள் வாழ்ந்திருந்து சமுதாயச் சிந்தனை படைத்ததைக் காட்டிலும் 48 ஆண்டுகள் வாழ்ந்திருந்த நேதாஜி அவர்கள் இந்தச் சமுதாயத்திலே ஜாதி பேதமற்ற, மத மாச்சரியமற்ற சமுதாயம் இந்தச் சுதந்திரத்தின் வாயிலாகப் பெறவேண்டும் என்று எண்ணிய நேதாஜியினுடைய

வழியிலே வந்தவர்கள் நாங்கள் என்கின்ற காரணத்தால், நான் முதலமைச்சருக்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இனக் கலவரத்திற்கு ஒரு வெள்ளை அறிக்கையைக் கொடுங்கள். யார் தவறு செய்தாலும் தண்டியுங்கள். தவறு செய்தவர்களை தயவுசெய்து யாராக இருந்தாலும் அந்த நிலைமைகளை உணர்ந்து, நீங்கள் வெளியிடுவதற்கு உறுதி அளியுங்கள். இன்றைக்கு எத்தனையோ கல்லூரி மாணவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு) இல்லை, முடியாது. 14, 15 நிமிடங்கள் நீங்கள் பேசி இருக்கிறீர்கள். (குறுக்கீடு) முக்கியமானது என்றால் முதலில் பேசி இருக்க வேண்டும். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி-1 என்ற முறையில் என்னைப் பேச அழைத்த தங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதலில் சொல்லிக்கொண்டு, நம்முடைய முதல்வர் கொண்டு வந்த இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர், டாக்டர் இராமதாஸ் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, பலரை விடுதலை செய்ததாக இந்த மாமன்றத்திலே இப்போது பேசினார்கள்; அது உண்மை. அதேபோல இன்னும் பல வழக்குகள், மிகப் பெரிய வழக்குகள் அல்ல, சாதாரண வழக்குகளில்கூட இன்னும் அது வாபஸ் பெறப்படாமல் இருக்கிறது என்பதை மட்டும் முதலிலே முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

காவல் துறையிலே பணியாற்றும் காவலர்கள், 24 மணி நேரமும் இரவு பகலாகப் பாடுபடுகிறார்கள். அவர்களுடைய உள்ளத்திலே எத்தனையோ குறைபாடுகள் இருக்கின்றன. அவர்களுடைய மேலதிகாரிகளிடம் அந்தக் குறைபாடுகளை முழுமையாகச் சொல்ல முடிவதில்லை. ஏதாவது சொல்லி மீண்டும் அவர்கள் பல தண்டனைகளுக்கு ஆட்படுகிறார்களேயொழிய, அதிலிருந்து மீளக் காணோம் என்று போலீஸ்காரர்களுடைய உள்ளங்களில் எல்லாம் இன்று வேதனை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த வேதனையை மாற்ற, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை மாவட்டந்தோறும் அனுப்பி போலீஸ் அதிகாரிகளுடைய குறைபாடுகளை - சாதாரண ஒரு கான்ஸ்டபிளிலிருந்து எஸ்.பி. வரை உள்ளவர்கள்— தங்களுடைய மனக் குமுறல்களை அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடத்திலே சொல்வதற்கு இந்த அரசு முன்னுதாரணத்தோடு முனையவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



நண்பகல் 12-00

அதேபோல், போலீஸ்காரர்கள் 24 மணி நேரமும் பணியாற்றுவதால், தங்களுடைய குழந்தைகளை சரிவர படிக்க வைக்க முடியவில்லை. அவர்களைச் சரிவர முன்னுக்குக் கொண்டுவர முடியவில்லை. போலீஸ்காரர்களுடைய குழந்தைகள் எங்கேயாவது, சிறப்பான முறையிலே ஒரு பெரிய பதவிக்கு வருகிறார்களா என்றால், நிச்சயமாக இல்லை. ஆனால் ஒரு ஆசிரியரோ, மற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகளோ அல்லது மற்றவர்களுடைய குழந்தைகள் எல்லாம் மேல் படிப்பிற்குச் செல்கிறது. ஆனால் போலீஸ்காரர்களுடைய குழந்தைகளுக்கு மட்டும் அந்த வாய்ப்பு இல்லை. ஏன் என்றால், எந்த நேரத்திலும் அவர்களுக்குப் பணி காத்துக் கொண்டிருக்கிறது. ஆகையினாலே அரசே ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு சிறப்பான பள்ளியை ஏற்படுத்தி, அதில் உணவும் கொடுக்கக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்து — அவர்களிடத்திலேயிருந்து வேண்டுமானால் ஒரு குறிப்பிட்ட தொகையை வாங்கிக் கொண்டு, — அவர்களுடைய குழந்தைகளுக்குச் சிறப்பான ஒரு கல்வியை இந்த அரசு அளிக்கவேண்டும் என்று எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பாக நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், போலீஸ்காரர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற Quartersகள் எல்லாம் மிகமிகக் கேவலமான நிலையில் இருக்கின்றன. சேலம் மாவட்டத்திலே பல பகுதிகளை நான் போய்ப் பார்த்து இருக்கிறேன். இங்கே உறுப்பினர் வெங்கடாசலம் அவர்கள் கூறியதைப் போல, — அதுபற்றிச் சொல்லக்கூடாது, தவறாக இருந்தால் அவைக் குறிப்பிலே ஏற்றவேண்டாம்,—பன்றி குடிசைகளைவிடக் கேவலமாக இருக்கிறது. எனவே, இந்த அரசு உடனடியாக போலீஸ்காரர்களுக்குக் கொடுத்த வீடுகள் எத்தனை மோசமாக இருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்து, அந்த வீடுகளை எல்லாம் உடனடியாகப் பழுதுபார்க்க வேண்டும். வெள்ளைக்காரன் காலத்திலே கட்டப்பட்ட சத்திரங்களை எல்லாம் இன்று போலீஸ் இலாக்காவிலே பணியாற்றக்கூடிய அந்தக் குடும்பங்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், காவலர் தேர்வுக்கு எஸ்எஸ்எல்சி. வரை படித்திருக்க வேண்டும் என்பதை பிளஸ்-2-வாக மாற்ற வேண்டும். அவர்களுக்கு இடைநிலை ஆசிரியர்களுக்கு இணையான சம்பளத்தைவிட மிக அதிகமாக சம்பளம் வழங்கப்பட வேண்டும். தலைமைக் காவலர் பதவி உயர்வு கொடுக்கும்போது, குறைந்தபட்சக் கல்வித் தகுதி எஸ்எஸ்எல்சி.-க்குமேல்

உள்ளவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். தலைமைக் காவலர்களுக்கு அடுத்த பதவி உயர்வான ஏ.எஸ்.ஐ. பதவி உயர்வை ஏற்படுத்த வேண்டும். அதேபோல், காவலர்கள் பணி இன்னும் சிறப்பாக இருக்க வேண்டுமானால், நம்முடைய அண்டை மாநிலமான கேரளாவில் இருப்பதைப் போல ஷிப்டு முறையைக் கொண்டுவர இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று, காவலர்களுக்கு ஒரு நாள் பயணப்படி 20 ரூபாய் என்று இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதன்மீது தனிக்கவனம் செலுத்தி, தன்னுடைய மனதில் இதை எடுத்துக்கொண்டு, 3 நேரத்திற்கும் 20 ரூபாய் போலீஸ்காரர்களுக்கு போதுமா என்பதைப் பார்த்து, குறைந்தது 100 ரூபாயாவது அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

அதேபோன்று, சீருடை அட்வான்ஸ் 20 ரூபாய் மாதம் அளிக்கிறீர்கள். அதை உயர்த்தி 100 ரூபாய் அளவிற்காவது போலீஸ்காரர்களுக்கு அளிக்க வேண்டும். போலீஸ்காரர்களுடைய சீருடைகளை அரசே தைத்துக் கொடுக்கிறது. அதை அவர்கள் போடும்போது நமக்கே அருவருப்பாக இருக்கிறது. ஆகையினாலே, சீருடைக்கான துணியை போலீஸ்காரர்களிடத்திலே கொடுத்து, அதைத் தைப்பதற்குண்டான பணத்தை இந்த அரசு கொடுக்க வேண்டும்.

*பிற்பகல் 12-05*

அதேபோல், காவலர்களுக்கு இப்போது ரேஷன் பொருட்கள் சரியாகக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகையால் காவலர்களுக்கு ரேஷன் பொருட்களுக்குப் பதிலாக ரேஷன் அலவன்ஸ் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வெளியூர் செல்லும் கைதிகள் பஸ்ஸில் நீண்டதூரம் செல்வதால் பல குறைபாடுகள் ஏற்படுகின்றன. போதுமான அளவிற்கு போலீஸ் வாகனவசதி அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டும்.

அதேபோல், பெண் காவலர்களுடைய சீருடை மாற்றப்பட வேண்டுமென்று இந்த அவையிலே பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் முதல்வர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும்.

சாராயத்தை ஒழிக்க மாவட்டத்தில் எஸ்.பி. கட்டுப்பாட்டில் ஒவ்வொரு சப் டிவிஷனிலும் ஒரு ஸ்பெஷல் கமேண்டோ பிரிவு தொடங்கினால் கள்ளச்சாராயம் தமிழ்நாட்டில் ஓடுவதை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



பெண் காவலர்களைத் தேர்வு செய்யும்போது சட்டம்-ஒழுங்குப் பிரிவிற்கு எனத் தேர்வு செய்துவிட்டு, அவர்களை தமிழ்நாடு சிறப்புக் காவற்படையிலே சேர்த்து பணிபுரிய வைக்கிறார்கள். அவ்வாறு பணி செய்யும்போது ஆண்களும், பெண்களும் ஒரே இடத்தில் பணிபுரிகிறபோது அவர்கள் பாத்ரூம் வசதிகள்கூட இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே அவர்களை பழைய முறையிலே தேர்வு செய்து சட்டம்-ஒழுங்கினை நிறைவேற்ற வேண்டும்.

அரசு ஊழியர்களுக்கு வருடத்தில் பல நாட்கள் விடுமுறை வருகிறது. அந்த விடுமுறை நாட்களுக்கு அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படக் கூடிய அந்த அலவன்ஸ் தொகை, விடுமுறை எடுக்காத போலீஸ்காரர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். 10 வருடம் முடித்த அனைத்து போலீஸ்காரர்களுக்கும் பதவி உயர்வினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய எடப்பாடி தொகுதியிலே.... (மணியடிக்கப்பெற்றது) என்ன சார்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன சார் என்றால், நான் முதலிலே சொல்லிவிட்டேன் சார். தொடங்கி வைப்பவருக்கு 15 நிமிடம். மற்றவர்களுக்கு எல்லாம் 10 நிமிடம், 10 நிமிடம் என்று. அந்த 10 நிமிடம் என்பது எல்லோருக்கும்தான். நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அதைப்போல எடப்பாடி தொகுதியிலே கொங்கணாபுரம் என்பது பெரிய பகுதி. அந்த ஒன்றியத்திலே 3 போலீஸ் ஸ்டேஷன்கள் இருப்பதனாலே அந்தப் பகுதி மக்கள் ஒரு பெரிய திருட்டோ மற்ற குற்றங்களோ நடந்தால் எந்த ஸ்டேஷனிலே சென்று ரிப்போர்ட் செய்வது என்று தெரியாமல் இருக்கிறார்கள். ஆகையினால் கொங்கணாபுரத்திலே ஒரு காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதேபோல எடப்பாடி காவல் நிலையம் வெள்ளைக் காரர் காலத்தில் சத்திரமாக இருந்தது. மிகவும் பழுதடைந்துள்ளது. அதை உடனடியாகப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாப்பம்பாடியில் ஒரு காவல் நிலையம் வேண்டுமென்று எங்களுடைய உறுப்பினர் கோவிந்தன் அவர்கள் சொல்லி வருகிறார். அவருக்கும் ஒரு காவல் நிலையம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவருக்குக் காவல் நிலையம் வழங்க வேண்டுமென்றால், அவர் குடியிருப்பதற்காகவா?

[1998 மே 22

**திரு. ஐ. கணேசன்:** அவருடைய தொகுதிக்கு எடப்பாடி தொகுதியிலே, கே.கே. நகரிலே ஒரு பகுதி நேரக் காவல் நிலையமாவது ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, மிகமிக முக்கியமான ஒன்று. 98 சப்-இன்ஸ்பெக்டர்களைப் பற்றி இங்கே உறுப்பினர்கள் எல்லாம் பேசினார்கள். முதலமைச்சர் அவர்களிடத்திலே சென்ற ஆண்டு நான் அவர்களைப் பற்றிக் கேட்டபோது - 'கணேசா! இடி இடிக்காதே, நான் கருணை மழை பொழிகிறேன்' என்று சொல்லியிருக்கிறார். கிட்டத்தட்ட அது 9 மாதங்களுக்கு மேலே ஆகிறது. அந்தக் கருணை மழை (சிரிப்பு) (குறுக்கீடு) இன்னும் ஒரு மாதம் இருக்கிறதா? இப்போது சொல்லிவிடுகிறேன். அந்தக் கருணை மழை இப்போது இந்த நேரத்திலே நிச்சயமாகப் பொழியவேண்டும். பொழிவார். அவருடைய புன்னகையே இதைக் காட்டுகிறது என்று சொல்லிக்கொண்டு, கடைசியாக, சேலம் மாவட்டத்தில் பிராந்திக் கடை ஏலம் நடந்தது. அதன் மூலமாக இந்த அரசாங்கத்திற்கு ரூ. 220 கோடி வந்தது. ரூ. 500 கோடி வந்திருப்பதாக இங்கே அறிக்கை இருக்கிறது.

பிற்பகல் 12-10

ஆனால், எங்களுடைய மாவட்டத்தில் நடந்த ஏலத்திலே, ஒரு சிலரை ஏலம் எடுப்பதற்கே உள்ளே போகவிடாமல் அடித்து, துரத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, ஒரு பிரபலமான ஆள் இரண்டு, மூன்று வண்டி அனுப்பி ஒவ்வொரு ஏலத்திலேயும், உள் ஏலம் வைத்து பல லட்சம் ரூபாய் — 5 லட்சம் ரூபாய்க்கு—கொங்கணாபுரத்திலே உள் ஏலத்திலே ஏலம் போனது. அந்த வெளி ஏலம் 33 லட்சம் ரூபாய். அந்தப் பணம் எங்கே போனது? அதேபோல, சேலத்திலே 20 கடைகள். இரண்டு கடைகள் டெண்டர் மூலம் வந்திருக்கின்றன. மீதி 18 கடைகள் தன்னுடைய அதிகாரத்தினாலே டெண்டரே இல்லாமலே மிகக் குறைத்து 5 லட்சம், 6 லட்சத்திற்கு ஏலம் விட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கடையும் 20 லட்சம், 15 லட்சம் என்று போய் இருக்கிறது. இதையெல்லாம் சரி செய்தால் — இங்கே திருநாவுக்கரசு தன்னைப் பாராட்ட வேண்டுமென்று பேசினார்கள். நன்றி. ஆனால், இந்த 500 கோடிக்கு பதில் 750 கோடி ரூபாய் வந்திருக்கும். வேனிலே பணத்தை மூட்டைக்கட்டி ஏற்றியிருக்கிறார்கள். முதல்வர் அவர்களே, நெஞ்சு எல்லாம் கொதிக்கிறது, வேனிலே பணத்தை மூட்டைகட்டி ஏற்றியிருக்கிறார்கள். ஒரு உண்மையான நம்முடைய முதல்வர், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமானால்—என்னை மன்னிக்க வேண்டும், நெஞ்சுரம் இருக்கு மானால் அந்தக் கடைகளை ஏலம் விட்டவர்களை நீங்கள் தண்டிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல்,



1998 மே 22] [திரு. ஐ. கணேசன்]

அத்தனை கடைகளையும் கேன்சல் செய்து மறு ஏலம் வைப்பீர்களேயானால், கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய்க்கு மேலே செல்லும் என்பதனை மட்டும் நான் பணிவோடு சொல்லிக்கொண்டு, இதற்கு நான் உத்தரவாதமாக இருக்கிறேன், என்னுடைய பதவியை வேண்டுமானாலும் அடமானம் வைக்கத் தயாராக இருக்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாரிடம் அடமானம் வைப்பீர்கள்? (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** நிரூபிக்கப்பட்டால் வந்துவிடலாம் அல்லவா? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, தமிழ்நாடு முழுவதும் அரசாங்கம் ஒவ்வொரு கடைக்கும் எவ்வளவு என்று அடிப்படைக் கட்டணத்தை நிர்ணயித்து அதற்குமேலே குறைந்தது 10 சதவிகிதமாவது இருந்தால்தான் அந்த ஏலத்தை அரசும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இல்லையென்றால், மறு ஏலம் கொண்டு வந்திருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்தக் கடைகளில் 10 சதவிகிதத்திற்கும் கீழே இருக்குமானால், நிச்சயம் அரசாங்கம் அதுகுறித்தும் மறுபரிசீலனை செய்யும். (குறுக்கீடு)

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order. மாண்புமிகு அமைச்சர் கடந்த முறையைவிட 10 சதவிகிதம் அதிகமான விலை, அதாவது அரசு நிர்ணயித்ததைவிட 10 சதவிகிதம் அதிகம் இருந்தால்தான் கடைகள் விற்கப்பட்டன. அப்படி இல்லாதபோது மறு ஏலம் விடப்படும் என்று சொன்னார்கள். ஆனால், தமிழகத்திலே வந்த செய்திகள் அத்தனையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிந்திருக்க முடியும். மதுரையிலே, நேற்றுகூட ஒரு நபர் ஏலத்திற்குச் செல்கிறபோது, அங்கு வெளியிலே வைத்து பேரம் பேசப்பட்டது என்ற காரணத்தினால், அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதற்காக துப்பாக்கியாலே சுட்டதாகச் செய்திகள் பத்திரிகையிலே வந்து இருக்கின்றன. ஆத்தூரிலே நடந்த ஏலத்திலே உள்ளே சென்றவர்கள்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொன்னதிலே என்ன point of order என்பதைச் சொல்லுங்கள். நீங்கள் ஒரு நீண்ட சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தால் எப்படி?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** சொற்பொழிவு ஆற்றவில்லை. சொல்லி முடித்துவிடுகிறேன். ஆத்தூரிலே நடைபெற்ற ஏலத்தில் அங்கே

[டாக்டர் அ. செல்லக்குமார்] [1998 மே 22

சென்றவர்கள், அந்த நகராட்சியினுடைய தலைவர் உட்பட ஒரு வங்கியினுடைய தலைவர் உட்பட அத்தனை பேரையும் அடித்து, மண்டை உடைக்கப்பட்டது என்ற செய்தியும் அங்கே ஏலத்திலே (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செல்லக்குமார் அவர்கள், தான் சொல்ல வேண்டிய கருத்துக்களையெல்லாம் இங்கே சொல்லிவிட்டார்கள். நான் சொல்வது, மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய கணேசன் அவர்கள் கொண்டு வந்த பிரச்சினைக்கு அரசாங்கம் சில விதிமுறைகளை வைத்திருக்கிறது. அந்த விதிமுறைகளைப் பின்பற்றி அரசு நடக்கிறது. இப்போது ஒவ்வொரு கடைக்கும் எவ்வளவு என்று ஏரியா வாரியாக நிர்ணயம் செய்திருக்கிறோம். இதைவிடக் கூடுதலாக 10 சதவிகிதம் ஏலத்தில் கேட்டால்தான் அந்தக் கடை அவர்களுக்குக் கொடுக்கப்படும். இல்லையென்றால் மறு ஏலம் விடப்படுகிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எனவே, நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தினால் ........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், சீக்கிரமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய டாக்டர் ஐயா அவர்கள் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின்போது சிதம்பரம் பகுதியிலே தேர்தல் வேலை செய்து கொண்டு இருக்கும்போது, அவர்களுடைய ஆஸ்பத்திரி, மருத்துவமனை ஒரு சில சமூக விரோதிகளால் அடித்து நொறுக்கப்பட்டது.

அவருடைய வீடு கல்லால் அடித்து நொறுக்கப்பட்டது. போலீஸில் மனு கொடுத்தும் இதுவரை அது சம்பந்தமாக யாரையும் கைது செய்யவில்லை. ஒரு அரசியல் கட்சியினுடைய தலைவருடைய மருத்துவமனை மற்றும் வீட்டிலே போய் அடித்தவர்களைக்கூட 2, 3 மாதங்களாகக் கைது செய்யவில்லை என்றால் இந்தச் சமூக விரோதிகளுடைய செயல் நாட்டிலே பலவாறு பரவிவிடும். எடப்பாடியிலே கல்லுரளைகாடு என்ற இடத்திலே கள்ளச்சாராயம்

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமாகிறது. உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன்.



1998 மே 22]

**திரு. ஐ. கணேசன்:** துணைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று, சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கு மேலே குறுக்கீடுகள் எல்லாம் சேர்த்து அதிகமாகப் பேசி இருக்கிறீர்கள். அருள்கூர்ந்து உட்காருங்கள். திரு. ஞானசேகரன், நீங்கள் இப்போது பேசவில்லை என்றால் அடுத்த உறுப்பினரைப் பேச அழைப்பேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே பேசுகின்ற நல்ல வாய்ப்பினை அளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மதுக்கடை ஏலத்தைப்பற்றி பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு சொல்கின்றபோது எனக்கு நன்றியைச் சொல்ல வேண்டும் என்று ஆரம்பித்து 500 கோடி வரவேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் அது 750 கோடியாக வரும் என்று சொன்னார்கள். நான் கூறுகிறேன். நிச்சயமாக ஆயிரம் கோடி ரூபாய் இந்த அரசுக்கு வருவாய் வந்து இருக்க வேண்டும். இந்த மதுக்கடை ஏலத்திலே ஆங்காங்கே சிண்டிகேட்டை வைத்துக்கொண்டு சில அரசியல்வாதிகள் திடீரென்று கோடீஸ்வரர்களாக மாறியிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. ஆகவே அப்படிப்பட்ட ஒரு நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாகக் கண்டறிந்து இதுபோன்ற அரசியல்வாதிகள் திடீர் பணக்காரர்களாக மாறுவதற்கும் சிண்டிகேட் அமைப்பதற்கும் ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டும் - ஒரு முன்னாள் அமைச்சர்கூட 65 கடைகளை சிட்டியிலே எடுத்திருக்கிறார். ஏலம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இந்த ஏலங்கள் கொஞ்சம் சுதந்திரமாக நடைபெறாமல் சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஒரு ரவுடியிசத்தோடு நடந்திருக்கிறது என்பதுதான் உண்மை. ஆகவே எல்லாவற்றையும் கேன்சல் செய்து நீங்கள் மீண்டும் மறு ஏலத்தைக் கொண்டு வந்து ஆயிரம் கோடி ரூபாய் வருவாயைப் பெருக்கிக் கொள்ளுங்கள். ஆனால் தமிழ் மாநில காங்கிரஸுடைய கருத்து என்பது பூரண மதுவிலக்குதான் எங்களுடைய லட்சியம் ஆகும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் பிரச்சினைக்கே இடம் அளிக்காமல் பூரண மதுவிலக்கையே உடனடியாகத் தமிழகத்திலே கொண்டுவருவீர்கள் என்று சொன்னால் நிச்சயமாக நாங்கள் நன்றியுடையவர்களாக இருப்போம் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, கொடுங்கையூரிலே நம்முடைய காவலர்கள் வீரதீரச் செயலைச் செய்து கடந்த ஆண்டு ஒரு பெரிய வெடி விபத்தையே

[திரு. சி. ஞானசேகரன்] [1998 மே 22

தவிர்த்து நம்முடைய சென்னையையே காப்பாற்றினார்கள். அப்படி யாரெல்லாம் காப்பாற்றினார்களோ அந்தக் காவலர்களுக்கு எல்லாம் பதவி உயர்வு நிச்சயமாக அளிக்கப்படும், அவர்களுக்குப் பதக்கம் வழங்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். வண்ணாரப்பேட்டை ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி, முரளி, இன்னும் ஏ.சி. போன்றவர்கள் மற்றவர்கள் எல்லாம் மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு எந்தவிதமான பதவி உயர்வோ அல்லது பதக்கமோ கிடைக்கவில்லை என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதைப்போல, கோவையிலே ஒரு உதவி ஆய்வாளர், சந்திரசேகரன் என்பவர் மிக அருமையாகச் செயல்பட்டு தன்னுடைய உயிரையே பணயம் வைத்து பணியாற்றியவர் அப்படிப்பட்ட வீரமான காவல் துறை அதிகாரிகளுக்கு நீங்கள் உடனடியாகப் பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று நான் இங்கே கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கொடுங்கையூரிலே பாட்சா என்பவருடைய தம்பி சாகுல் ஹமீத் என்பவர் கடந்த ஓராண்டுக்கு முன்னாலே கைது செய்யப்பட்டார். காவல் துறை மிகவும் effective-ஆக இதிலே செயல்பட்டு இருக்குமானால் அதிலிருந்தே, இந்தத் தீவிரவாதம் எங்கிருந்து புறப்பட்டிருக்கிறது, அல்-உம்மா என்கிற இயக்கம் எங்கெல்லாம் பரவியிருக்கிறது என்பதைக் கண்டறிந்து அதை வேரறுத்து இருக்க முடியும். நான் ஒரு பெரிய குற்றச்சாட்டையே நிச்சயமாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய தமிழகத்திலே Intelligence என்பது utter failure-ஆக இருக்கிறது என்பதுதான் உண்மை. இவர்கள் உண்மையிலேயே மிகத் திறமையாகச் செயல்பட்டிருப்பார்களேயானால் —காரணம் இங்கு எஸ்.பி. (S.B) என்று வைத்திருக்கிறோம். ஐ.எஸ் (I.S.) என்று வைத்திருக்கிறோம் அதைப்போல இன்னும் நிறைய புலன் ஆய்வுகளை நாம் வைத்துக்கொண்டு இருந்தபோதும்கூட—அல்-உம்மா என்ற இயக்கத்தினர் இங்கே சென்னையைத் தலைமையிடமாக வைத்துக்கொண்டு இங்கே அவர்கள் மிக ஆணிவேராகப் பதிந்து, பிறகு மற்ற வேர்களாகத் தமிழகம் எங்கும் பரவியிருக்கிறார்கள் என்பதை எப்படி இவர்கள் கவனிக்காமல் விட்டார்கள், எப்படி உளவுத் துறைக்கு அது தெரியாமல் போனது? கோவையிலே அதை எப்படி வேரூன்ற விட்டார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டி, உளவுத் துறையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக சீரமைக்க வேண்டும். இல்லையென்று சொன்னால் - வீரப்பனை இன்னும் அவர்களாலே பிடிக்க முடியவில்லை.



1998 மே 22] [திரு. சி. ஞானசேகரன்]

பத்திரிகைத் துறையைச் சார்ந்த நிருபர்கள் போய் வீரப்பனைப் பார்க்கிறார்கள். சொல்லப்போனால் இங்கே பத்திரிகைத் துறையில் யாரெல்லாம் போய் வீரப்பனைப் பார்க்கிறார்களோ அவர்களை D.G.P.க்களாக, I.G.க்களாக போட்டுவிடலாம் போல் இருக்கிறது. அவர்கள் எல்லாம் போய் அங்கே வீரப்பனைக் காண முடிகிறது—கோடி கோடியாகச் செலவிட்டு நாம் இங்கே ஒரு பெரிய துறையை வைத்து இருக்கிறோம். இதற்கு Lengthy Hands இருக்கிறது. சட்டத்திலே இவர்களுக்கு நிறைய பாதுகாப்பு இருக்கிறது. அப்படி இருந்தும்கூட இவர்களால் பிடிக்க முடியவில்லை என்று சொன்னால் இது மிகவும் வேதனைக்குரிய, அவமானப்படக்கூடிய ஒரு செயல் என்பதை நான் நிச்சயமாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

இப்போது நம்முடைய மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதைப் போல கோவையிலே நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு இவர்கள் வெடிகுண்டைக் கண்டுபிடித்து சாதனை புரிய முடிந்தது என்று சொன்னால், ஸ்காட்லாந்து யார்டு போலீசுக்கு இணையான ஒரு போலீசாக விளங்கக்கூடிய தமிழகக் காவல் துறை கடந்த காலங்களிலே ஏன் வாளா இருந்தது? எங்கே சுணக்கம் ஏற்பட்டது? ஏன் இந்தத் துறை இந்த அளவுக்கு மெத்தனமாகப் போனது என்பதை நீங்கள் ஆய்ந்துப் பார்த்து இனியும்கூட இதுபோன்ற வெடிகுண்டு விபத்துகள், வெடிகுண்டு கலாச்சாரம் வராது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். எங்காவது ஒரு இடத்திலே வெடிக்கும் என்று சொன்னால் உடனே ஒரு எதிர்க்கட்சி தயாராக இருக்கிறது; இந்த ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலை தவிர்க்கப்படவேண்டும் என்று சொன்னால் ஏற்கெனவே நீங்கள் மேலவளவு வழக்கிலே சி.பி.ஐ. என்கொயரிக்கு உத்தரவிட்டிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் கேட்டீர்கள், ஆனால் மத்திய அரசு முடியாது என்று சொல்லிவிட்டது. இதிலேகூட இந்த அல்—உம்மா இயக்கம் கேரளாவிலிருந்து புறப்பட்டு வருகிறது. அதேபோல் கர்நாடகாவிலே இருந்து புறப்பட்டு வருகிறது. இப்படிக் கேரளாவிலே பயிற்சி கொடுக்கக்கூடிய மதானி அங்கே கைது செய்யப்பட்டிருக்கிறார். கர்நாடகத்திலே ஏற்கெனவே வெடி மருந்துப் பொருட்களை எல்லாம் சப்ளை செய்யக்கூடிய சாஜீதீன் கைது செய்யப்பட்டிருக்கிறார். இப்படி பல்வேறு மாநிலங்களை இணைக்கக்கூடிய ஒரு அமைப்பாக இந்த அல்—உம்மா என்பது வளர்ந்து வரக்கூடிய காரணத்தால் நீங்கள் சி.பி.ஐ.-க்கு வேண்டுகோள்

விட்டு, புலன் விசாரணையை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேளுங்கள். தவறு இல்லை. மத்திய அரசு முடியாது என்று சொல்லிவிட்டால் பிறகு நம்முடைய காவல் துறை தைரியமாக அதை எடுத்துக்கொண்டு மீண்டும் அதை நிச்சயமாக நசுக்க முடியும். ஆகவே, நாம் தைரியத்தோடு, முடியில் நமக்கு கனம் இல்லை என்ற காரணத்தால் சி.பி.ஐ-க்குகூட விட்டு நீங்கள் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணலாம் என்கிற என்னுடைய கருத்தை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ரவுடியிசம் என்பது தமிழகத்திலே பல இடங்களில் அதிகமாக வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. கடந்த கால ஆட்சியில்தான் இப்படிப்பட்ட அலங்கோலங்கள் எல்லாம் அரங்கேறின. பிறகு இன்றைக்கு மக்கள் ஓர் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்து இங்கே இருக்கக்கூடிய அந்த ரவுடியிசத்தை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்று நம்மை ஆட்சியில் அமர்த்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ரவுடிகள், பொதுவாக அரசியல்வாதிகளே ரவுடிகளாக மாறி, இந்தச் சமுதாயத்தினுடைய பிரதிநிதிகளாக வரவேண்டும் என்று கொக்கரித்துக் கொண்டு மக்கள் சேவை என்று வந்தவர்கள் எல்லாம் பிறகு அவர்கள் எல்லாம் ரவுடிகளுக்கு உறுதுணையாக, சப்போர்ட்டாக இருக்கிற காரணத்தால் மேல் மட்டத்திலே அவர்களை ஒன்றும் செய்ய முடியாமல் இருப்பதால் பாதிக்கப்படுவது அப்பாவி மக்கள் தான்.

ஈரோட்டிலே பட்டப்பகலிலே நேற்று ஒருவர் கொல்லப்பட்டு இருக்கிறார். 5 லட்சம் ரூபாய் கொள்ளை அடித்திருக்கிறார்கள். பிறகு காவல் துறையினர் விரைவாகப் பிடித்து இருக்கிறார்கள். அமைந்தகரையிலே ஏற்கெனவே ஒருவர் பட்டப்பகலிலே வெட்டப்பட்டார். இப்படி எங்கு பார்த்தாலும் பட்டப்பகலிலே கொலைகள் நடக்கும்போது காவல் துறையினர் கொஞ்சம் விறுவிறுப்பாகச் செயல்பட்டு நாட்டு மக்கள் நெஞ்சிலே ஒரு நம்பிக்கையை ஊட்டுவார்கள் என்று சொன்னால், இதுபோன்ற அராஜகப் பேர்வழிகள், ரவுடிகள் தங்களைத் தாங்களே திருத்திக்கொள்வதற்குக்கூட ஒரு வாய்ப்பாக இருக்கும். இவ்வளவு ரவுடியிசத்திற்கும் காரணம் மது. சாதாரணமாக இந்த மதுப் போட்டியிலே கொலைகள் ஏராளமாக நடக்கின்றன. இந்தப் போட்டியிலேயே இப்படி நடக்கிறது என்று சொன்னால் மதுவைக் குடித்து விட்டால் இன்னும் எவ்வளவு இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு கெட்டுப் போகுமோ நமக்குத் தெரியவில்லை. எல்லாவற்றிற்கும் மூல காரணம் மதுதான். இந்த மதுவை நாம் உள்ளே விட்டுவிட்டு, இப்போது அவர்கள்





எல்லாம் குடித்து விட்டுப் போடுகிற ஆட்டத்திற்குப் பிறகு நாம் இங்கே பதில் சொல்ல வேண்டியவர்களாக இருந்து கொண்டு இருக்கிறோம். அந்த மதுவைக் குடித்து விட்டு நிறைய பேர் இப்படி இருக்கக்கூடிய காரணத்தால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசியல்வாதிகள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை நீங்கள் ஒட்ட வாலை நறுக்கி அரசியல்வாதிகள் என்பவர்கள் ரவுடிகளாக மாறக்கூடாது, அப்படிப்பட்டவர்களுக்கு எந்த இயக்கமும் ஆதரவு அளிக்கக்கூடாது என்ற ஒரு நல்ல நிலையை உருவாக்கிக் கொடுத்தால்தான் இந்தக் கட்ட பஞ்சாயத்து போலீஸ் ஸ்டேஷனில் நடக்காமல்* இருக்கும். நிறைய கட்டப் பஞ்சாயத்துகள்தான் அங்கே அரங்கேறி இன்றைக்கு நாட்டு மக்களுக்கு F.I.R. கூடப் போட மறுக்கிறார்கள். சில நேரங்களில் அங்கே வலுவுள்ள ஒரு அரசியல்வாதி சொன்னால்தான் F.I.R. போடுகிறார்கள். இல்லையென்று சொன்னால் F.I.R. போடுவது இல்லை. இப்படிப்பட்ட நிலையை நீங்கள் தவிர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விஷச் சாராயம் எங்கு பார்த்தாலும் ஆறாக ஓடிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இப்போது சாத்தூரிலேகூடப் பார்த்தோம். 3 பேர் இறந்து இருக்கிறார்கள். சாராயம் மற்ற இடங்களிலும் ஓடிக் கொண்டிருக்கிறது. நம்முடைய அரசு ஒரு பக்கம் இங்கே மதுக் கடைகளை ஏலம் விடுகிறது. சில கிராமங்களில் கையில் சட்டத்தை எடுத்துக் கொண்டு அவர்களேகூட, இன்று கிராமத்துக்காரர்களேகூட கள்ளச் சாராய ஏலக் கடைகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே கரூர் மாவட்டத்திலேகூட பரமத்தி ஒன்றியத்திலே குப்பம் என்ற ஊராட்சியிலே போன வாரம் ஒரு சாராயக் கடை 14,130 ரூபாய்க்கு அவர்களே ஏலம் விட்டு இருக்கிறார்கள்.

அதேபோல், பேராவூரணி வட்டத்திலே, களத்தூர் என்ற ஊரிலே அங்கேயும் இப்படி விட்டு இருக்கிறார்கள். பாகனேரியிலே பெண்களே இன்றைக்கு நன்றாகப் போராட்டம் நடத்தி, கள்ளச்சாராயம் இங்கே கிடைக்கும் என்று அவர்கள் அங்கே கடைகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு போட்டி அரசாங்கத்தை நடத்தக்கூடிய அளவுக்கு இன்று உள்ளே கட்டப் பஞ்சாயத்துகாரர்கள் கள்ளச்சாராயக் கடைகளை ஏலம் விடுகிறார்கள் என்று சொன்னால் இந்த அரசாங்கத்தை நடத்துவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களா அல்லது ஆங்காங்கே இருக்கக்கூடிய ரவுடி கும்பலைச் சேர்ந்தவர்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆகவே, இதுபோன்ற சாராய அமைப்புகளை நடத்திக் கொண்டு இருப்பவர்களை அல்லது காவல் துறைக்கு மாமூல் கொடுத்து சாராயத்தை எப்படியும் நாம் விற்கலாம் என்ற நியதியோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்களை நீங்கள் வேரறுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-25

அதேபோல, கிரைம் டிடக்‌ஷன். நம்முடைய தமிழகத்திலே பொதுவாக இப்பொழுதெல்லாம் கிரைம் டிடக்‌ஷனே கொஞ்சம் குறைந்து போய்விட்டது. யாராவது கேஸ் கொடுத்தாலே F.I.R. போட மாட்டேன் என்கிறார்கள். பொருள் கிடைத்தால்தான், F.I.R. போடுவேன் என்கிறார்கள். ஆனால், இப்பொழுது பொருளை இழந்து விட்டவர்களெல்லாம் கொஞ்சமும் இன்டரஸ்ட் காட்டாத காரணத்தினாலே கிரைம் டிடக்‌ஷனே இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு முதல்வரவர்கள், கிரைம், அதேபோன்று இன்வெஸ்டிகேஷனிலே இருக்கக்கூடியவர்களை கொஞ்சம் முடுக்கிவிட்டு எல்லா வழக்குகளையும் அவர்கள் துரிதமாகக் கண்டுபிடித்து, ப்ராப்பர்ட்டிகளை ரெக்கவர் செய்து கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, கான்ஸ்டபிள்ஸ் போதவில்லை. 86,000 போலீசாரை வைத்துக் கொண்டு இந்த ஆறு கோடி மக்களை நீங்கள் மேய்ப்பது என்பது கொஞ்சம் கடுமையான ஒரு பணிதான். அதற்கு இந்தக் காவல் துறையினுடைய Strength-ஐயே இரட்டிப்பாக்கலாம். இன்று எத்தனையோ பேர் இங்கு படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிற காரணத்தாலே, சட்டம்-ஒழுங்கை நாம் நல்லமுறையிலே நிலைநாட்ட வேண்டுமென்று சொன்னால், நீங்கள் 86,000 என்பதை இரட்டிப்பாக ஆக்கி நிறைய காவலர்களை பணியிலே அமர்த்த வேண்டும். ஒரு ஸ்டேஷனுக்கு 4 சப்-இன்ஸ்பெக்டர்கள் இருப்பார்கள். இரண்டு பேர் Law and Order-க்கு இருப்பார்கள்; இரண்டு பேர் Crime-க்கு இருப்பார்கள். ஆனால் கான்ஸ்டபிளே இருக்க மாட்டார்கள். அவர்கள்தான் களப் பணியாளர்கள். ஆகவே, அந்தக் களப்பணியாளர்களை நீங்கள் அதிகமாக உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ரிஸ்க் அலவன்ஸ். காவல் துறைக்கு நீங்கள் அதிகமாகச் சம்பளம் கொடுத்தீர்கள் என்று சொன்னால், மற்றத் துறையைச் சார்ந்தவர்கள் போட்டிக்கு வந்து விடுவார்கள், காவலர்களுக்கு மட்டும் இவ்வளவு சம்பளமா என்று கேட்பார்கள். ஆனால், தங்களுடைய



வாழ்க்கையிலே மிகவும் ரிஸ்க் எடுத்துப் பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய காவலர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் நீங்கள் 20 ரூபாய், 30 ரூபாய் என்று கொடுப்பதை 500 ரூபாயாகக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்

Promotion 10 ஆண்டுகளானால் ஹெட் கான்ஸ்டபிள் சப்-இன்ஸ்பெக்டர் ஆக வேண்டும்; சப்-இன்ஸ்பெக்டர் இன்ஸ்பெக்டர் ஆக வேண்டும்; அதேபோல, இன்ஸ்பெக்டர்கள் டி.எஸ்.பி. க்கள் ஆக வேண்டும் என்கிற ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஆண்டுகள் பல கழிந்தாலும் புரமோஷன் இல்லாமலே இருக்கக்கூடிய 1974-ல் ரெக்ரூட்டான ஹெட் கான்ஸ்டபிள்களுக்கு சப்-இன்ஸ்பெக்டர் பதவி கிடைக்கவில்லை. அதேபோல, 12 ஆண்டுகள், 11 ஆண்டுகள் கடந்த பின்னாலும் இன்ஸ்பெக்டர்களுக்கு இன்னும் டி.எஸ்.பி. பதவி கிடைக்கவில்லை. ஆகவே, அவர்களுக்கு புரமோஷன் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நன்னிலத்திலே ஒரு தீயணைப்பு நிலையத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் உருவாக்கித்தர வேண்டும்.

அதேபோல, கண்ணமங்கலத்திலே ஒரு தீயணைப்பு நிலையத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் உருவாக்கித்தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் தொகுதிபற்றியெல்லாம் பேசி விட்டீர்களா? இப்பொழுது நன்னிலம் போகிறீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே நிமிஷம். அதேபோல, பாகாயம் அவுட் போஸ்டை நீங்கள் ரெகுலர் போலீஸ் ஸ்டேஷனாக வேலூருக்குப் பக்கத்திலே உருவாக்கிக் கொடுக்க வேண்டும். சத்துவச்சாரியிலும், காட்பாடியிலும் டிராஃபிக் அதிகமாகி விட்டது. ஆகவே, டிராஃபிக் போலீஸ் ஸ்டேஷன்களை நீங்கள் காட்பாடியில் ஒன்றும், அதேபோல, சத்துவாச்சாரியிலும் ஒரு போலீஸ் ஸ்டேஷன் உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

. அதேபோல, சுவாமிமலையிலே ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கருப்பண்ண உடையார் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு முதல்வரவர்கள் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் காவல் துறை, தீயணைப்புத் துறை, ஆயத்தீர்வைத் துறை போன்ற மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் காவல் துறை மானியக் கோரிக்கை வருகிறது என்று பேச வரும்பொழுது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் காவல் துறையிலுள்ள அந்த ஆய்வாளர்களானாலும் சரி, காவலர்களானாலும் சரி ஏகப்பட்ட, நூற்றுக்கும் மேற்பட்ட கோரிக்கை மனுக்களைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுடைய பிரச்சினை நீண்டநாள் பிரச்சினை.

இங்கே D.G.P. அவர்கள் அலுவலகத்திலே உள்ள D.G.P.-யோ, அதற்குக்கீழ் உள்ள அதிகாரிகளோ, எஸ்.பி. ஆனாலும் சரி. அவர்களுடைய பதவி உயர்வு, அவர்களுடைய சம்பள உயர்வு, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைத்தான், அவர்கள் கவனித்துக் கொள்கிறார்களே தவிர, சாதாரணக் காவலர்கள், ஏ.ஐ.ஆர். போலீஸ் காவலர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள், இவர்களுடைய நிலைகளைப் பற்றி அரசுக்குச் சொல்வதே கிடையாது. அவர்களெல்லாம் நன்றாகத்தான் இருக்கிறார்கள். அதனாலே எங்களை மட்டும் பாருங்கள் என்கிற அளவிலே அவர்களுடைய போதனை அரசுக்கு வருகிறது.

ஆகவே, காவல் துறையில் நீண்டநாளாக நிர்வாகப் பணி நியமனம், மாறுதல், பணி முடக்கம், பதவி உயர்வு, பழி வாங்கல் உட்பட எண்ணற்ற குறைகள், கோரிக்கைகள் உள்ளன. இவைகளை கீழ் மட்டம் முதல் மேல் மட்டம்வரை கண்டறிந்து போக்கிட ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையிலே ஒரு குழு அமைக்க வேண்டும். அந்தக் குழுவிலே மாவட்ட ஆட்சித் தலைவரையும் உறுப்பினராகப் போடலாம். அந்தப் பகுதியிலே உள்ள காவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயே வந்து தங்களுடைய கோரிக்கைகளுக்காக மனு கொடுக்கலாம். ஏனென்றால் இங்கே D.G.P. ஆபீசிலே போய்ச் சொன்னார்கள் என்றால் ஒரு காவலர் என்றுகூட பார்க்காமல், போடா வாடா, அங்கே போ, இங்கே போ, ஏன் வந்தே, இப்படியெல்லாம் காவலர்களை மிரட்டக் கூடிய சூழ்நிலையிலே D.G.P.-யும், S.P.-யும் இருந்தால் எப்படி அவர்களுடைய கோரிக்கைகளைச் சொல்லுவார்கள்? அதனால் ரெவின்யூ



அதிகாரிகளிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைத்து அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 12-30

அதேமாதிரி, இங்கே வீரப்பன் விவகாரத்தில் இந்த அரசு வெள்ளை அறிக்கை வைக்க வேண்டும். சந்தன மரக் கடத்தல் மன்னன் வீரப்பன் திடீரென்று சரண் அடைகிறேன் என்று சொல்கிறார். திடீரென்று கேசட் கொடுத்துவிடுகிறார், இந்தக் கேசட்டை நம்முடைய நக்கீரன் கோபால் மூலமாகக் கொடுத்துவிடுகிறார். பிறகு கேசட்டை முதலமைச்சர் போட்டுப் பார்க்கிறார், D.G.P. ஆபீசில் போட்டுப் பார்க்கிறார்கள், போலீஸ் கமிஷனர் போட்டுப் பார்க்கிறார். வீரப்பன் சரணடைவதாகச் சொல்கிறார், கடைசியில் 'உடம்பில் தெம்பு இருக்கிறது, இன்னும் 5 ஆயிரம் பேரைக் கொலை செய்வேன்' என்று சொல்கிறார். இன்னொருவர் நெற்றிக்கண் ஆசிரியர் ஏ.எஸ். மணி வந்திருக்கிறார், அவரிடம் ஏதேதோ கருத்துக்களைச் சொல்கிறார். அவரிடம் ஒரு கேசட் கொடுத்தார். இப்படி கேசட் கொடுக்க வைக்க, பார்க்க, டி.வி.யில் போட, பத்திரிகையிலே வர, இது என்ன கண்ணாமூச்சி விளையாட்டு விளையாடுவது மாதிரியிருக்கிறது. ஆகவே, வீரப்பன் விஷயத்தில் இந்த அரசின் உண்மையான நிலை என்ன என்பதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் ஒரு வெள்ளை அறிக்கை வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

D.G.P. அலுவலகத்திலே மாறுதல் பிரிவில் பல சங்கங்கள் போஸ்டர்கள் ஒட்டியிருக்கிறார்கள். சங்க அலுவலகப் போஸ்டர் எந்த அலுவலகத்திலேயும் இப்படி ஒட்டுவது கிடையாது. காவல் துறையில் discipline இருக்க வேண்டும். அப்படி இல்லாத அளவில் போஸ்டர்கள் எல்லாம் ஒட்டியிருக்கிறார்கள். மாறுதலுக்கு இத்தனை இலட்சம், இத்தனை ஆயிரம் என்று கிடையாது. அந்த அளவில், வெளியில் சொல்கிற அளவில், பத்திரிகையில் எழுதுகிற அளவில், மிகவும் மோசமாக இருக்கிறது. வேண்டுமென்றால், மாறுவேடத்தில்கூட முதல்வர் அவர்கள் போய்ப் பார்க்கலாம். இன்று இரவே போய்விடுங்கள். இல்லையென்றால் அந்தப் போஸ்டர்களையெல்லாம் கிழித்துவிடுவார்கள். இப்போதே ஆளை அனுப்புங்கள். அந்தமாதிரி ஒரு மோசமான நிலையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவையிலே ஒளிந்திருந்த அல்-உம்மா அமைப்பைச் சேர்ந்த 6 பேரை ஒழிக்கப் போராடிய சப்-இன்ஸ்பெக்டர் சந்திரசேகரன், இரண்டு

காவலர்களுக்கு இன்னும் பதவி உயர்வும் கொடுக்கவில்லை, அதுமட்டுமல்லாமல் பதக்கமும் கொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும். ஏன் காலதாமதம் செய்கிறீர்கள் என்று தெரியவில்லை. வீரதீரச்செயல்களையெல்லாம் பாராட்ட வேண்டும். போன அரசியல்தான் அந்தமாதிரியெல்லாம் பாராட்டினார்கள். எல்லாம் செய்தார்கள். நீங்கள், காவல் துறை அதிகாரிகளை, காவல் துறையையே விரோதிமாதிரி நினைக்கிறீர்கள். ஏற்கெனவே, எஸ்.பி. கோபாலகிருஷ்ணன் வீரப்பனை பிடிக்கப் போகும்போது அவருக்குக் காயம் ஏற்பட்டது. அவருடன் சென்ற காவலர்களுக்கெல்லாம் உடனே பரிசெல்லாம் கொடுத்தார். பதவி உயர்வு எல்லாம் தந்திருக்கிறார்கள். வீரப்பனை பிடிக்கப்போகும்போது இறந்த காவலர்கள் நினைவு இல்லத்திற்கெல்லாம் போனார்கள். நினைவு மண்டபம் எல்லாம் கட்டினார்கள். முன்னாள் முதலமைச்சர் போனார்கள். முதலமைச்சர், போலீஸ் அமைச்சர், காவலர்களை ஏன் விரோதிமாதிரி பார்க்க வேண்டும்? எப்படி உங்களுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பார்கள்? இதை நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை, உண்மையிலேயே காவலர்கள் அப்படி நினைக்கிறார்கள். இந்த நிலையைப் போக்க வேண்டும். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, எதிர்க்கட்சியினுடைய தலைவராக இந்தச் சட்டமன்றத்திலே இருந்து செயல்படுகிறார். அவர் பேசுகின்றபோது, இவருடைய கட்சியினுடைய கொள்கையினுடைய அடிப்படையிலே பேசுகிறாரா? இல்லை, அவருடைய அம்மா, புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களுடைய கொள்கைபடி, பேசுகிறாரா என்பதை அவர் விளக்க வேண்டும். ஏனென்று சொன்னால், அவர் தமிழ்நாட்டின் காவல் துறை மீது முற்றிலுமே நம்பிக்கையில்லையென்று பேசி வருகிறார். ஆனால், இவரைப் பொறுத்தவரை காவல் துறை மிக உயர்ந்த காவல் துறை என்று பேசுகிறார். இந்த இரண்டிலும் உள்ள முரண்பாட்டை நான் தெரிந்துகொள்வதற்காக தங்கள் மூலமாக விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவில்களைப் பொறுத்தவரை தமிழ்நாட்டிலுள்ள கோவில்களை.... *(குறுக்கீடுகள்)* இல்லை, இவர் சொல்கின்ற வார்த்தையில்



D N24,31'N98 N98.5

நான் ஈடுபட்டால் பிறகு என்னுடைய பிரச்சினையை நான் பேச முடியாது. இதற்கெல்லாம் நான் yield ஆக முடியாது. *(சிரிப்பு)* ஆகவே, கோவில்களைத் தகர்க்க வேண்டுமென்று தீவிரவாதிகள் திட்டம் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள 10 கோவில்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில், அதேமாதிரி மீனாட்சி அம்மன் கோவில்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்பொழுது எப்படி நீங்கள் இதற்கெல்லாம் yield ஆக முடியாது என்று சொன்னீர்களோ, அந்த வார்த்தையை நீங்களும் காப்பாற்ற வேண்டும், மற்றவர்கள் பேசும்போது.

**திரு. இரா. தாமரைக்கனி:** நீங்கள் partiality இல்லாமல் நடந்துகொள்ளுங்கள், நானும் நடந்துகொள்கிறேன்.

உளவுத் துறை ஐ.ஜி. ராஜகோபாலன் அனைத்து மாவட்ட எஸ்.பி.களுக்கும் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள், இந்தமாதிரி பெரிய புண்ணியஸ்தலம், கோவில்களில் எல்லாம் அல்-உம்மா தீவிரவாதிகள் குண்டு வைக்கப் போகிறார்கள், போலீஸ் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, இன்று உங்களுடைய ஆட்சியில் பக்தர்கள் கோவிலுக்குப் போவதற்கு பயப்படுகின்ற நிலைமை வந்துவிட்டது. அதனால், இதையெல்லாம் போக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்களுடைய மாவட்டம், சாத்தூரில் விஷச் சாராயத்தால், இதற்கு முன்னாலே 6 மாதங்களுக்கு முன்னால் 6 பேர் இறந்திருக்கிறார்கள். இன்னும் அங்கே சாராயம் குடிசைத் தொழில் மாதிரி நடந்துகொண்டிருக்கிறது. இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனே சப்-இன்ஸ்பெக்டரை சஸ்பெண்டு பண்ணினார்கள். உடனே பழையபடி, அவருக்கு கொஞ்சம் நாள் கழித்து எங்கேயாவது போஸ்டிங் போட்டுவிடுகிறீர்கள். இப்போது காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. கள்ளச் சாராயத் தொழில் எல்லா இடங்களிலேயும் இப்போதும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. எல்லோருக்கும் அதுபற்றித் தெரியும்; எல்லா உறுப்பினர்களுக்கும் அது பற்றித் தெரியும். போலீஸ்காரர்கள் என்ன சொல்லுகிறார்கள்? 4 நாட்களுக்கு வியாபாரத்தை நிறுத்தி வையுங்கள். அதற்குப் பிறகு வியாபாரம் பண்ணுங்கள் என்று சொல்லு[illegible] இந்த மாதிரி Advice பண்ணுகிற அளவிலே நிலைமை [illegible] அரசுக்குக் கெட்டபெயர்தானே வரும்? அதிகாரி[illegible] நன்றாக [illegible]விட்டு

24463

வேலை பார்க்கச் சொல்ல வேண்டியதுதானே? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே, சட்டமன்றக் கூட்டம் ஆரம்பிக்கும்போது என்ன சொன்னார்கள்? "சாராயப் பானை மீது துப்பாக்கிக் குண்டு பாயும்" என்று சொன்னார்கள். ஆனால், இப்போது உங்களுடைய உறுதிமொழியை மீறுகிற அளவிலே, உங்களுடைய இலாகாவிலே உள்ள போலீஸ்காரர்களே கள்ளச் சாராய வியாபாரத்தை ஊக்கப்படுத்துகிற அளவிலே இருக்கிறார்களே?

*பிற்பகல் 12-35*

சாத்தூரிலே பார்த்தீர்கள் என்றால் - ஆவின் பாலைத்தான் பாக்கெட்டிலே போட்டுக்கொடுப்பார்கள் - எங்கள் ஊர் பக்கத்திலே, காமராஜர் மாவட்டத்திலே, கிராமப்புறங்களிலே கள்ளச் சாராயத்தை குடிசைத்தொழில் மாதிரி செய்கிறார்கள். பாவம் அவர்களுக்கு வேறு தொழில் இல்லை. நீங்கள் ஏதாவது தொழிற்சாலையையாவது அங்கே ஆரம்பியுங்கள். அங்கே, 200 மில்லி அளவு சாராயம் 10 ரூபாய்; 400 மில்லி அளவு சாராயம் 20 ரூபாய். சாத்தூர் எம்.எல்.ஏ., திரு. விஜயகுமாருக்குக்கூட வியாபாரம் நடப்பது பற்றித் தெரியும். எங்கள் மாவட்ட எம்.எல்.ஏ.-க்கள் எல்லோருக்கும் அது தெரியும். இந்த மாதிரி நடக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும். இது ஏன் விற்கப்படுகிறது? எந்த இடத்திலே விற்கப்படுகிறது? ஏழைத் தொழிலாளி வாழ்கின்ற பகுதிகளிலே, லோடு மேன், தீப்பெட்டித் தொழிற்சாலையின் தொழிலாளர்கள், பட்டாசுத் தொழிற்சாலையின் தொழிலாளர்கள் ஆகியோர் இருக்கும் பகுதிகளிலே விற்கப்படுகிறது. இந்தப் பகுதிகளிலே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, கூவிக் கூவி கள்ளச் சாராயத்தை விற்றுக்கொண்டிருக்கிறார்கள், இது போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரியாமலா நடக்கிறது? ஆகவே, இதையெல்லாம் தடுக்க வேண்டும்.

கிராமப்புறங்களிலே, ஊருக்கு வெளியே ஓடைப்புறம், கண்மாய் போன்ற இடங்களிலே கள்ளச் சாராய வியாபாரம் செய்கிறார்கள். இதிலே D.S.P., S.P., Sub-Inspectors, Constables ஆகிய இவர்களுக்கு எல்லாம் மொத்தமாக மாதம் 3,000 ரூபாய் கொடுத்துவிடுகிறார்கள். மாதம் ஒரு கேஸ் போலீசுக்குக் கொடுத்து விடவேண்டும். விஷச் சாராயத்திற்கு என்றால் சாதாரண கேஸ் போட்டுவிடுவார்கள். இந்த மாதிரியெல்லாம் முறைகேடுகள் நடக்கின்றன. சாதாரண சாராயம் விற்றால் ஒரு கேஸ்; விஷச் சாராயம் விற்றால் அதற்கு ஒரு கேஸ். இந்த மாதிரி முறைகேடுகள் எல்லாம் நடக்கின்றன. இதைத் தவிர்ப்பதற்கு



அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்ன மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் இன்னும் 2 நிமிடங்களில் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூபாய் 50 கோடி மதிப்புள்ள போலி ஆவணங்கள் தயார் பண்ணினார்கள். 4-7-1995 அன்று ராஜபாளையம், சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த சுமார் 50 கோடி ரூபாய் மதிப்புள்ள போலி ஆவணங்கள் குறித்த புகாரை சி.பி.சி.ஐ.டி., விசாரணை மேற்கொண்டது. சி.பி.சி.ஐ.டி.த்தரப்பில் ராஜபாளையம்-வடக்குக் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு ஆனது. எஃப்.ஐ.ஆர். 1/96, ராஜபாளையம். பிறகு விசாரணையில் ஆவணங்கள் அனைத்தும் போலி என்பதை கைரேகை, கையெழுத்து ஆகியவை மூலமாக காவல்துறையினர் தெளிவாகக் கண்டுபிடித்துள்ளனர். ஆனால், சம்பந்தப்பட்டவர்களை இன்னும் கைது செய்யவில்லை. தி.மு.க.-வின் முக்கிய அமைச்சர் ஒருவர், தி.மு.க.-வின் மாவட்டச் செயலாளர் ஒருவர், தி.மு.க.-வின் சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் ஒருவர் ஆகியோர் இந்தப் போலி ஆவணக் கும்பலுக்குப் பாதுகாப்பாக உள்ளனர். உடனே சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய வேண்டும். பிறகு, நான் பேசிமுடித்தவுடனே இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். இந்த மாதிரி நிலைமை இருக்கிறது.

அடுத்து, வெடிமருந்து விநியோகத்தைக் கண்காணிக்க வேண்டும். தமிழ்நாட்டிலே, காட்பாடியிலே TIDCO-வின் கட்டுப்பாட்டிலே அரசு வெடிமருந்து உற்பத்தித் தொழிற்சாலை உள்ளது. வெடிமருந்து, விநியோக உரிமம் பெற்றவர்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. ஆனால், என்ன நோக்கத்திற்காக வழங்குகிறார்களோ, அதற்காகத்தான் அவர்கள் அதை உபயோகப்படுத்துகிறார்களா என்று தெரிய வேண்டும். தீவிரவாதிகளுக்கு உதவுகிறார்களா? தயாரிக்கும் இடத்திலே, விநியோகத்தில் ஏதாவது தவறு நடக்கிறதா என்பதைக் கண்காணிக்க காட்பாடி வெடிமருந்து உற்பத்தித் தொழிற்சாலையை அரசே நேரிடையாக ஏற்று நடத்த வேண்டும். ஒரு ஐ.பி.எஸ். அதிகாரியைப் பொறுப்பு அதிகாரியாக நியமிக்க வேண்டும். மேலும், மாநிலம் முழுவதும் இந்த வெடிமருந்து விநியோகத்தைக் கண்காணிக்கும் பொறுப்பை அந்த அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இந்த இரண்டு

வருடத்திலே எவ்வளவு தூரம் வெடிமருந்துப் பொருள்களை ஒழுங்கான முறையில் விநியோகித்தார்கள் என்பதை அரசு ஆராய வேண்டும், ஒரு நீதி விசாரணை செய்ய வேண்டும்.

தீவிரவாதி ஆயிஷா இங்கே இருக்கிறாள், அங்கே இருக்கிறாள், கர்நாடகாவிலே இருக்கிறாள், ஆந்திராவிலே இருக்கிறாள், மெட்ராஸுக்கு வந்துவிட்டாள், சரண்டர் அடையப் போகிறாள் என்று இப்படியெல்லாம் சொல்கிறார்கள். அவளைப் பிடிப்பதற்கு என தனிப்படை எல்லாம் அமைத்திருக்கிறீர்கள். பிடித்தால் பரிசு வழங்குவதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், உண்மையிலேயே ஆயிஷா மாதிரி இன்னும் 6 வெடிகுண்டு மனிதர்கள் எல்லாம் இருக்கிறார்கள்; விடுதலைப் புலிகளின் நடமாட்டம் எல்லாம் நிறைய இருக்கிறது என்று சொல்லித்தான் இங்கே ராஜீவ் காந்தி நினைவு நாளன்று அம்மா சோனியா காந்தி அவர்கள், காங்கிரஸ் கட்சித் தலைவர் வருவதாக இருந்தது. பயந்துபோய், உயிருக்கு ஆபத்து இருக்குமோ என்று பயந்து வரவில்லை. ஆகவே, இந்த மாதிரி வடமாநில தலைவர்கள்கூட தமிழ்நாட்டுக்கு வருவதற்கு பயப்படுகிற அளவிலே ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையைப் போக்க வேண்டும்.

மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு, மாவட்டத்திற்கு ரூ.2,000 நீங்கள் கொடுப்பதாக மாநில ஆயத்தீர்வை கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். மாவட்டத்திற்கு மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு 2,000 ரூபாய் என்பது எப்படிப் போதும்? ஆகவே, தாலுகாவிற்கு 20,000 ரூபாயாவது நீங்கள் மதுவிலக்குப் பிரச்சாரத்திற்காக ஒதுக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

பிற்பகல் 12-40

ஸ்ரீவில்லிபுத்தூர் நகரில் தியணைப்பு நிலையக் கட்டடம் கட்டுவதற்கு இடமெல்லாம் தேர்வு செய்தாகிவிட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்புப் பகுதிகளில் நிலம் ஆர்ஜிதம் செய்திருக்கிறார்கள். எனவே, அங்கே நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டே இரண்டுதான் இருங்கள். எங்கள் கட்சி சார்பாக நான் ஒரே ஒரு ஆள்தான் பேசுகிறேன்.

சிவகாசி துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் இறந்திருக்கிறார்கள். 100-க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கிறார்கள். காயமடைந்தவர்களுக்கு எந்தப் பண உதவியும் செய்யவில்லை. நீஞ்சாநடுவெப்பட்டியில் 5 ஆயிரம் பேர்மீது வழக்கு போட்டிருக்கிறார்கள். காயமடைந்தவர்களுக்கு அரசு மருத்துவமனையிலும், தனியார்



மருத்துவமனையிலும் சிகிச்சை செய்தார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தின் மூலமாக உதவிகள் செய்யவில்லை. அந்த 5 ஆயிரம் பேர்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற வேண்டும்.

மகளிர் காவலர்களுக்கென்று தனி சீருடை இருக்க வேண்டும். யார் ஆண் போலீஸ், யார் பெண் போலீஸ் என்று கூர்மையாகக் கவனித்தால்தான் தெரிகிறது. (சிரிப்பு) எனவே, அவர்களுக்கெல்லாம் தனியாக சீருடை கொடுக்க வேண்டும். ஆண் போலீஸினுடைய சீருடையை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். காவலர்களுக்கு டார்ச் லைட் கொடுக்க வேண்டும். இரவு நேரங்களில் ரோந்து போகிறார்கள். அவர்களுக்கு Powerful Torch Light கொடுத்து, பராமரிப்புச் செலவையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அடுத்து, சென்னை ஹைகோர்ட் பரிந்துரை செய்வதை இங்குள்ள நம்முடைய தமிழ்நாடு உள்துறை இலாகா ஏற்றுக்கொள்வதே கிடையாது. ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ள கோர்ட்டுக்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று சொல்லி, சென்னை உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்தது. ஆனால் தமிழ்நாடு சர்க்கார் நிதி கொடுக்கவில்லை. இருந்தாலும், மத்திய சர்க்கார் வருடா வருடம் நிதி ஒதுக்குகிறது. அங்கே கட்டடம் கட்டுவதற்காக 12 ஏக்கர் நிலத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறது. அங்கே 9 நீதிபதிகள் வாடகைக் கட்டடத்தில் இருக்கிறார்கள். அதற்கு நிரந்தரக் கட்டடம் கட்ட இடமெல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் நிதிக்கு உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கிறது. Roc.4084/90, P2, நாள் 3-11-1997-ல் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, உயர்நீதிமன்றம் பரிந்துரையை இங்குள்ள உள்துறை மதித்து, மத்திய சர்க்காருக்கு அனுப்பினால்தான் உங்கள் ஆட்சியை நேர்மையான ஆட்சி என்று சொல்ல முடியும்.

மகளிர் காவலர்களுக்கென்று தனி I.G., S.P ஆகியோரை நியமிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இருங்கள். இன்னும் இரண்டே இரண்டு தாள்கள்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியென்றால், கடைசித் தாளை மட்டும் படியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இருங்கள். இதிலே என்ன Partiality? எல்லாம் காவலர்களுடைய பிரச்சினைதான். எங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் மல்லி என்ற இடத்தில் புதிய காவல் நிலையம் அமைக்க வேண்டுமென்று சொல்லி, அங்குள்ள எஸ்.பி.கூட பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறார். ஏனென்றால், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை நிறைய வருகிறது.

அடுத்து, காவலர்களுக்கென்று தனி மீட்டர் பொருத்த வேண்டும். இப்பொழுதுள்ள ஜாயிண்ட் மீட்டர் முறையை நீக்க வேண்டும். அதேபோன்று, குதிரைப்படை, நாய்ப்படை பிரிவுகளை நல்ல முறையில் பராமரிக்கவேண்டும். விருதுநகரில் நாய்ப்படை, குதிரைப்படை ஆகியவற்றை அமைக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தாள் எல்லாம் முடிந்துவிட்டது, . நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** கொஞ்சம் இருங்கள் ஐயா. மாண்புமிகு முதலமைச்சரே பேசாமல் இருக்கும்பொழுது நீங்கள் ஏன் சும்மா இருக்கமாட்டேன் என்கிறீர்கள். சங்கரன்கோவில் எம்.எல்.ஏ., இராசிபுரம் எம்.எல்.ஏ எல்லாம் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் சொன்னதைப் பற்றியெல்லாம் பேசவேண்டும். இல்லையென்றால் வெளியே போனால், என்னிடம் அவர்கள் சண்டைக்கு வருவார்கள்.

சங்கரன்கோவில் காவல்நிலையத்தை இரண்டாகப் பிரித்து, கிழக்குப் பகுதியில் குருவிக்குளத்தில் ஒரு காவல் நிலையம் வேண்டுமென்பது கோரிக்கை, சங்கரன்கோவிலில் காவலர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்தில் காவலர் குடியிருப்பு கட்டவேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை. சங்கரன்கோவிலில் தீயணைப்பு நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. அதற்கு நிரந்தரக் கட்டடம் வேண்டுமென்பது இன்னொரு கோரிக்கை. தீயணைப்புத் துறையில் ஒவ்வொரு நிலையத்திலும் போதுமான பணியாளர்கள் இல்லை. எனவே, பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

அடுத்து, இராசிபுரம் எம்.எல்.ஏ. சொன்னது. கடந்த ஆண்டே இராசிபுரம் தீயணைப்பு நிலையத்திற்கு ரூபாய் ஒதுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்னும் ஒதுக்கப்படவில்லை. அது ஒதுக்கப்படவேண்டும். இராசிபுரத்தில் டிராஃபிக் போலீஸ் பிரிவு ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அந்தப் பிரிவையும் ஏற்படுத்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.



## 5. அறிவிப்பு

### வெடிகுண்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு தலைமறைவாக இருந்த முக்கிய தீவிரவாதி ஏர்வாடி காசிம் கைது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் சார்பாக, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிவிப்பை வெளியிடுவார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுக்காலமாக வெடிகுண்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு, தலைமறைவாக இருந்த ஏர்வாடி காசிம் என்ற மிக முக்கியமான தீவிரவாதி இன்று நண்பகல் கைது செய்யப்பட்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கியமான மதத் தீவிரவாதிகளுள் ஒருவரும், பல ஆண்டுகாலமாக தலைமறைவாக இருந்து, வெடிகுண்டுச் சம்பவங்களில் மிக முக்கியப் பங்கைப் பெற்றவருமான ஏர்வாடி காசிம் என்ற மதத் தீவிரவாதி இன்று நண்பகல் 12-15 மணியளவில், சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் நேரடிப் பார்வையிலே கைது செய்யப்பட்டிருக்கிறார். இவர் 8-8-1997 அன்று நடந்த கே.கே.நகர், சிவலிங்கபுரத்திலுள்ள மசூதியின் இமாம் கமருஸ்மான் கொலை வழக்கின் முக்கியமான எதிரி ஆவார். 6-12-1997 அன்று திருச்சியில் பாண்டியன் எக்ஸ்பிரஸ், ஈரோடு அருகில் சேரன் எக்ஸ்பிரஸ் மற்றும் கேரளாவில் ஆலப்புழை ஆகிய இடங்களில் நடந்த இரயில் வெடிகுண்டுச் சம்பவங்களுக்கும் இவர் முக்கிய காரணம்.*

*பிற்பகல் 12-45*

*இந்த மூன்று வெடிகுண்டு வெடிப்புகளில் இறந்தோர் 9 பேர். காயமுற்றோர் 52 பேர். 10-1-1998 அன்று சென்னை அண்ணா சாலை, அண்ணா மேம்பாலத்தின் கீழே நடந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் இவர் முக்கிய எதிரியாவார். 1-12-1997 அன்று ஜி.1. வேப்பேரி காவல் நிலையத்தைத் தகர்க்கக் குண்டு வீசிய சம்பவத்திலும் முக்கியக் குற்றவாளி ஆவார். 28-3-1998 அன்று, புளியந்தோப்பு வ.உ.சி. நகர், 5-வது தெரு, எண் 13 என்ற வீட்டில் பிளாஸ்டிக் மற்றும் பைப் வெடிகுண்டுகள் 28, டெட்டனேட்டர்கள் 508, ஜெலட்டின் குச்சிகள் 159 மற்றும் ரிவால்வர்*

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1998 மே 22

ஆகியன கைப்பற்றப்பட்ட சம்பவத்திலும் இவர் முக்கியக் குற்றவாளி ஆவார். 1996-97 ஆம் ஆண்டுகளில் சென்னை பிராட்வே, 'லைட் ஆஃப் ஏசியா, 'லக்கி' ஆகிய உணவகங்களிலும், எழும்பூர் இம்பீரியல் உணவகத் திலும் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் இவரின் முக்கிய பங்கு சந்தேகிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட மேற்படி ஏர்வாடி காசிம், இஸ்லாமிய பாதுகாப்புப் படை - ஐ.டி.எஃப். - என்ற அமைப்பை உருவாக்கியவர்; அதற்கு இவர் தலைவர் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை என் 2 — மாநில ஆயத் தீர்வைத் துறை**

**(ஆ) கோரிக்கை என் 15 — காவல் துறை**

**(இ) கோரிக்கை என் 16 — தீயணைப்புப் பணிகள்**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மானியக் கோரிக்கைகள்மீது விவாதம் தொடர்ச்சி. திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.

***திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில ஆயத் தீர்வைத் துறை, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது, பாட்டாளி மக்கள் கட்சி-2-இன் உடைய சார்பிலே என்னுடைய கருத்துகளை முன் வைக்க விரும்புகிறேன். காவல் துறையானது கடந்த ஆட்சிக் காலத்திலே ஆளுங்கட்சியினுடைய ஏவல் துறையாகச் செயல்பட்டு வந்த நிலைமைகளை மாற்றி, இராமனுடைய கால்பட்ட அகலிகை எப்படி சாபவிமோசனம் பெற்றாளோ, அதேபோல, ஆளுங்கட்சியினுடைய ஏவல் துறையாகச் செயல்பட்டு வந்த காவல் துறையானது, இன்றைக்கு புதிய விடியலைக் காட்டுகின்ற சேவல் துறையாகச் செயல்பட்டு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய கைவண்ணத்தினாலே சிறந்து விளங்குவதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்கஸ்ஸிலே கயிற்றின்மீது மிகப் பெரிய கம்பை எடுத்துக்கொண்டு நடப்பதைப்போல, ஒரு கடினமான துறையாக, பணிகளை ஆற்றுவதிலே ஒரு கடினமானதொரு துறையாக இன்றைக்குக் காவல் துறை இருந்து கொண்டிருக்கிறது. இந்தக் காவல் துறையானது, தன்னுடைய பணிகளை இன்றைக்குச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டு வருகின்ற



1998 மே 22] [திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்]

சூழ்நிலையிலே, சிலர், பேருந்துகளிலே மக்கள் போகமுடியவில்லை என்றும், கோவில்களுக்குள்ளே மக்கள் செல்லப் பயப்படுகிறார்கள் என்றெல்லாம் இட்டுக்கட்டி, தங்களுடைய மன அரிப்புகளை அறிக்கை களாக, வார்த்தைகளாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சாத்தான்கள் வேதம் ஓதுவதைப்போல, சிலபேர்கள் சட்டம்—ஒழுங்கு கெட்டுவிட்டதாகக் கூடச் சொல்கிறார்கள். ஒன்றை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். கடந்த ஆட்சிக் காலத்திலே, திண்டிவனத்திலே மிகப் பெரிய பதவியிலே இருந்த ஆளுநர் அவர்கள்மீது அழுகிய முட்டைகளை யெல்லாம் வீசி, சட்டம்—ஒழுங்கைச் சீர்குலைத்தவர்களெல்லாம் உண்டு. அன்றைக்கு அதே ஆளுநரை அழைத்து, திண்டிவனத்திலே, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருடைய நூற்றாண்டு விழாவிலே, 'இது ஒரு மிகப் பெரிய வரலாற்றுக் களங்கம்; அதுவும் எங்கள் ஊரிலே நடைபெற்றதற்காக மனம் வருந்துகிறோம்' என்று சொன்னவர்களெல்லாம்கூட, இப்போது களங்கத்தோடு ஐக்கியமாகிவிட்ட அவலங்களை நாம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, மிகப் பெரிய பதவியிலே இருந்த தலைமைத் தேர்தல் அதிகாரி சேஷன் அவர்களைப் போன்றவர் களெல்லாம்கூட, அன்றைக்கு தாஜ் கோரமண்டல் ஹோட்டலிலே தாக்கப் பட்டார்கள். ஆட்சி மாறியது; காட்சி மாறியதா என்றெல்லாம் கேட்கிறார் கள். தராசு பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்டு, இறந்துபோன இரண்டு ஊழியர்களைப் பற்றி இன்றைய வரையிலே என்ன ஆனது? என்றே தெரியவில்லை. அந்த ஆட்சிக் காலத்திலே ஒரு நடவடிக்கையும் இல்லை. இன்றைக்கு சி.பி.ஐ. விசாரணைகளெல்லாம்கூட அதற்காக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. ஆனாலும், இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது, தேர்தல் நேரத்திலே, மதுரையிலே தினமலர் பத்திரிகை அலுவலகம் தாக்கப்பட்ட நேரத்திலே, ஆளுங்கட்சிக்காரர்கள் என்றும் பாராமல், அவர்கள்மீது காவல் துறை நடவடிக்கை எடுத்திருப்பது, ஆட்சியும் மாறியிருக்கிறது; காட்சியும் மாறியிருக்கிறது என்பதை நாம் கொஞ்சம் கவனத்திலே கொண்டு பார்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அன்றைக்கு தனிப்பட்டதொரு முதலமைச்சரே, கும்பகோணம் மகாமகம் விழாவிலே கலந்து கொண்டு, சட்டம்—ஒழுங்கைக் கெடுத்து, நூற்றுக்கணக்கானோர் சாவதற்கும், பல ஆயிரக்கணக்கானோர் காயப் படுவதற்கும் காரணமாக இருந்தார்கள். ஆனால், இன்றைக்கு அப்படிப் பட்டதொரு அவல நிலைகளெல்லாம் இல்லாமல் இருப்பதை நாம்

[திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்] [1998 மே 22

மனந்திறந்து பாராட்டக் கடமைப்பட வேண்டும். அதேபோல, இன்றைக்கு காவல் துறை வேகமாகச் செயல்படவில்லை என்கிறார்கள். ஒரேயொரு உதாரணத்தைச் சொல்கிறேன்.

*பிற்பகல் 12-50*

வேலூர், திப்புமஹாலில், அங்கே காவலில் வைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழர்கள், சுரங்கப் பாதை அமைத்து வெளியேறிச் சென்றார்கள். ஏறத்தாழ இரண்டு அறைகளிலே தோண்டிய மண்ணைக் குவித்து வைத்திருந்தார்கள். ஒருமாத காலம் நடந்துவிட்ட வேலை அது. அன்றைக்குத் தப்பித்துப் போனார்கள். ஆனால், அதைப்பற்றியெல்லாம் யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த நேரத்திலே நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே, காவல் துறையானது தன்னுடைய பணியினை ஆற்றுகிற நேரத்திலே, 'ஒரு தொம்பைக்கூண்டு நெல்லிலே, ஓர் அந்துப் பூச்சி புகுந்து அழிப்பதைப் போல' சில நேரங்களிலே, சில இடங்களிலே தவறுகள் நடக்கத்தான் செய்கின்றன. அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள், 1969-லே, காவல் துறையைப் பற்றிச் சொல்கிறபோது, "போலீஸ்காரர்களை அனைவரும் குறை கூறுகிறார்கள். நானும் குறை கூறியிருக்கிறேன். அவர்கள் வானத்திலிருந்து குதித்து வந்துவிடவில்லை. சில போலீஸ்காரர்கள் தவறு செய்யும்போது, அதற்குக் காரணம், நமது சமுதாய அமைப்புதான் என்றே கருத வேண்டும். சமுதாயம் எப்போது முழுவதுமாக திருந்துகிறதோ, அப்போதுதான் போலீஸ்காரர்கள் அனைவரும் நல்லவர்களாக இருப்பார்கள்" என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆகவே, ஒட்டுமொத்த காவல் துறையையும் நாம் அப்படிப் பார்க்காமல், ஒருசில தவறு செய்கிறவர்கள் இருக்கிற காரணத்தினாலே, சில நேரங்களில் குறைபாடுகள் வந்து விடுகின்றன என்பதற்காக, நான் சிலவற்றை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மதுக் கடைகளை ஏலம் விட்டதன் மூலமாக, அரசாங்கத்திற்கு 500 கோடி ரூபாய்க்கு மேலே வருவாய் ஈட்டப்பட்டிருக்கிறது. இது மேலும், மேலும் கூட வளரலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால், அதேநேரத்தில், அந்த மதுக் கடைகள் மூலமாக வினியோகிக்கப்படுகின்ற சாராயம், அரசு அங்கீகரிக்கப்பட்டதாக இல்லாமல், கள்ளச் சாராயமாகத்தான் வினியோகிக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையைக் கடந்த காலத்திலே பார்த்திருக்கிறோம். அதைக் கண்காணித்து, தயவுசெய்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.



1998 மே 22] [திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்]

இன்றைக்கு, காவல் துறையிலே சிலபேர்கள், அரசியல்வாதிகளிலே சிலபேர்கள், இன்னும் இருக்கக்கூடிய சமூகவிரோதிகள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு, கள்ளச் சாராய வியாபாரத்தை மிக அருமையாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். யாராவது தப்பித் தவறி, ஒருசில ஊர்களிலே இருக்கக்கூடிய இளைஞர்கள், அதைப்பற்றிப் புகார் செய்யப்போனால், புகார் கொடுக்கின்ற இளைஞர்களின் மீதே வழக்குத் தொடுத்து விடுகிறார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், கள்ளச் சாராயத்தை ஒழிக்க வேண்டுமென்றால், அப்படிப் புகார் கொடுக்கின்ற, தகவல் கொடுக்கின்ற விஷயங்களை இரகசியமாக வைத்துகொள்ளப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். சுங்கத் துறையிலே ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஊக்கத் தொகையாகக் கூட தருகிறார்கள். அதைப்போல, கள்ளச்சாராயம் விற்கப்படுகின்ற இடங்களைப் பற்றி அறிவிப்பவர்களுக்கு ஊக்கத் தொகையாக அரசு அறிவிக்கலாம். அப்படிப் புகார் கொடுப்பவர்களே, பொய் வழக்குக்கு ஆளாக்கப்படுகிறபோது, அவற்றை தாசில்தாரரோ அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரோ வருவாய்த் துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள், புகார் கொடுக்கிற இளைஞர்களுக்கு ஒரு பாதுகாப்பு வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம், கள்ளச் சாராயம் விற்கிற மிகப் பெரிய புள்ளிகள் அகப்படுவதில்லை. ஆனால், சிறிய, சிறிய 'கேன்'களிலே, மொத்த வியாபாரிகளிடமிருந்து பெற்று சில்லறையாக விற்கின்றவர்கள்தான் மாட்டிக்கொள்கிறார்கள். அப்படி மாட்டிக்கொள்கிற நேரத்திலே, அவர்களுடைய மனைவிமார்கள் சென்று சொல்கிறபோது, 'உன்னுடைய வீட்டுக்காரன் குண்டர் தடுப்புச் சட்டத்திலேயிருந்து வெளியே வருகிற வரையில், ஓராண்டிற்கு நீ தைரியமாக மாமூல் தராமல் காய்ச்சிக் கொள்' என்று அனுமதிக்கிறார்கள். இப்படி, குண்டர் தடுப்புச் சட்டத்திலே கள்ளச் சாராயங்கள் மூலமாக கைது செய்யப்பட்டவர்களின் பட்டியல் இருந்து கொண்டிருக்கிறதே தவிர, அதன் மூல ஊற்றாக இருக்கக்கூடிய மொத்த வியாபாரிகள் மீது — கள்ளச் சாராய மொத்த வியாபாரிகள்— எந்தவிதமான நடவடிக்கையும் இல்லாமல் இருப்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல, குண்டர்கள் தடுப்புச் சட்டம், தேசிய பாதுகாப்புச் சட்டங்கள் எல்லாம், களை எடுப்பதற்குப் பதிலாக, சில நேரங்களில், பயிர்களைக்கூட பாதித்து விடுகின்றன. நான் மரியாதைக்குரிய உள்துறைச்

செயலாளர் அவர்களைப் பார்க்கச் செல்கிறபோதெல்லாம், 'என்ன, குண்டர் தடுப்புச் சட்டத்திலே இருந்து விடுதலையா?' என்று உள்ளே நுழைகிறபோதே கேட்பார். நான் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்திலே போடப்பட்ட அத்தனைப் பேர்களுக்கும் வக்காலத்து வாங்கவில்லை. ஆனால், என்னுடைய தொகுதியிலே, பார்வையே தெரியாதவர், கிட்டத்தட்ட பத்தாண்டுக் காலமாக பார்வையே தெரியாத பரணம் முருகையன் என்று சொல்லக்கூடிய ஒருவர்; அவரைக் கைது செய்து, குண்டர் தடுப்புக் காவல் சட்டத்திலே உள்ளே போடுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு குருடர், பார்வையே தெரியாதவர், அவர் எப்படி பஸ்மீது வெடிகுண்டு வீசுவார்? பொய் வழக்குப் போட்டால், எப்படி நம்முடைய காவல் துறையின்மீது ஒரு நல்ல நம்பிக்கை வரும் என்பதை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல; அண்மையிலே, திருநெல்வேலியில், எஸ். குமார் என்று சொல்லக்கூடிய ஒரு பையனை — அவன் 10-5-1982-லே பிறந்தவன், அவனுக்கு 16 வயதுகூட நிரம்பவில்லை; 19 வயது நிரம்பியதாகச் சொல்லி — அவன் பஸ்ஸைக் கொளுத்தி விட்டான் என்பதற்காக—அவன் அதற்குக் காரணம் அல்ல; அவன் பள்ளிக்கூடத்துப் பையன்; அதுதான் உண்மையான நிலவரம்; கொளுத்தியவன், புத்திசாலித்தனமாக, உஷாராகத் தப்பித்து விடுகிறான் — காவல் துறையைச் சார்ந்தவர்கள், மாட்டுகிற அப்பாவியை வைத்து, அவனை அங்கே கணக்குக் காட்டி, வழக்குக்கு ஆளாக்கி விடுகிறார்கள். சேகர் என்று சொல்லக்கூடியவன் B.E படித்துவிட்டு Electrical கடை வைத்திருக்கிறான். அவர் மீது குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தைப் போடுகிறார்கள். எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால் தவறு செய்தவர்கள்மீது பாய வேண்டிய குண்டர் தடுப்புச் சட்டம் இயந்திரகதியாக செயல்படக்கூடாது என்பதுதான். பெரம்பலூர் மாவட்டத்தில் இதற்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவரிடம் இதுபற்றிக் கேட்டபோது, S.P. சிபாரிசு செய்கிறார், நான் என்ன செய்வது என்று சொல்கிறார். S.P. செய்கின்ற பரிந்துரையை அது சரியா, தவறா என்று பார்க்கின்ற பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கிறது. அவர்கள் என்ன செய்கிறார்கள், S.P. பரிந்துரை செய்தால் அவர்கள் கண்ணை மூடிக்கொண்டு இயந்திரகதியாக கையெழுத்து போட்டுவிடுகிறார்கள். அதனால் அப்பாவிகள் எல்லாம்



பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-55*

அதேநேரத்திலே, என்னுடைய ஆண்டிமடம் தொகுதியிலே, ஆண்டிமடம் காவல் நிலையத்திலே ஆயுதங்கள் பறிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டன. அதை இவ்வளவு சீக்கிரமாக, தீவிரமாக கண்காணித்து, கண்டுபிடித்து மிகத் திறமையாக அந்தக் காவல் துறையினர் செயல்பட்டிருப்பதையும் நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். காவல் நிலையங்களிலே சில நேரங்களில் அப்பாவிகள் புகார் கொடுக்கச் சென்றால் அதை அவர்கள் எடுத்துக்கொள்வதில்லை. உதாரணத்திற்கு கடந்த மாதம் நானும், செஞ்சி சட்டப் பேரவை உறுப்பினரும் ஒரு பிரச்சினையிலே தலையிட்டோம். விழுப்புரம் மாவட்டத்திலே, வளத்தி காவல் நிலையத்திற்குட்பட்ட மேல்மலையனூரிலே ஓர் உரக்கடைக்காரருக்கும், ஒரு விவசாயிக்கும் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை இருந்திருக்கிறது. அதனால் அவர்களுக்குள் அடிதடி ஆகியிருக்கிறது. அந்த அடிதடியிலே என்ன நடந்தது என்றால் உரக்கடைக்காரரிடம் பணத்தை வாங்கிக் கொண்டு அந்த அப்பாவி விவசாயியின் புகாரை காவல் துறையினர் எடுத்துக்கொள்ளவில்லை. நாங்கள் பரிந்துரை செய்கிறோம். முதலில் அவர் வழக்கறிஞர் செல்கிறார். புகார் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இதுபற்றி செஞ்சி D.S.P.யிடம் புகார் செய்தால் M.L.A.-விடம் சொல்லிவிட்டால் நாங்கள் என்ன பயந்துவிடுவோமோ என்றெல்லாம் சொல்கிறார். கடைசியாக செஞ்சி சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் தலையிட்டு அவருடைய புகாரைப் பதிவு செய்கிறபோது இந்தப் புகாரையும் பதிவு செய் என்று சொல்லி அவர் வற்புறுத்தியதற்கு ப் பின்னாலேதான் வேண்டா வெறுப்பாகப் புகாரை பதிவு செய்கிறார்கள்.

நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய M.L.A.-க்கள் தவறான காரியங்களுக்குப் பரிந்துரை செய்தால் அதை . ஏற்க வேண்டியதில்லை. ஆனால், ஒரு விவசாயி பாதிக்கப்படுகின்ற நேரத்திலேகூட அதைப்பற்றி புகார் செய்தால் நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றார்கள். இன்னொன்றையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். மனித உரிமை ஆணையத்திலே அறிவிக்கப்படுகின்ற இந்தக் குற்றவாளிகளுடைய குற்றப்பதிவு, குற்ற விசாரணை, கைது செய்தல் போன்ற நடவடிக்கைகளிலே சில விதிமுறைகளைக் கடைபிடித்தாக வேண்டும் என்று ஆணையம்

அறிவித்திருந்தும் இன்னும் பல காவல் நிலையங்களில் அதைக் கடைப்பிடிப்பதில்லை.

குறிப்பாக, காவல் நிலையங்களில் பெண் கைதிகளை விசாரிக்கின்ற போது அவர்கள் இதைக் கடைபிடிப்பதில்லை. எனவே, காவல் நிலையங்களிலே உள்ள காவலர்களுக்கு குறிப்பிட்ட கால இடைவெளியிலே சில பயிற்சிகளைத் தர வேண்டும். இன்னும்கூட பல வழக்குகளில் அவர்கள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த பிறகும் பல குற்றவாளிகள் தப்பித்துக் கொள்கிறார்கள். எனவே, அவர்களுக்கு சட்ட ஞானம் இல்லாமல் இருக்கிறது. அவர்களுக்கு அந்தச் சட்ட ஞானத்தை வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறை சுருக்கெழுத்துப் பிரிவிலே உள்ளவர்கள் சாதி, மதக் கலவரங்களைத் தூண்டக்கூடிய பேச்சாளர்களின் கூட்டங்களைக் கண்காணித்துத் தருகின்ற அறிக்கையினை வைத்து அந்தப் பேச்சாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆண்டிமடம் ஒன்றியத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே, பொருட்கள் அடுக்கப்பட்டிருக்கின்ற பெரிய பெரிய குடோன்களில் பெரிய பெரிய துணிக் கடைகளில் தீயணைப்புக் கருவிகளை வைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையில் 15 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவேண்டும். ஆனால், 15 ஆண்டுகள் பணி முடித்த தலைமைக் காவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படாமல் இருப்பதை கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசுக் காவலர் குடியிருப்பில் இருக்கக்கூடிய காவலர்களின் மாத ஊதியத்திலே இருந்து 700 ரூபாயை மின் கட்டண பில்லுக்கு என்று பிடித்தம் செய்கிறார்கள். எனவே, அந்தக் குடியிருப்புகளுக்கு உடனடியாக மீட்டர் பொருத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது வார விடுமுறையில் வேலை செய்யும் காவலர்களுக்கு ரூபாய் 20 மட்டுமே தரப்படுகிறது. அதை ஒரு நாள் ஊதியமாகக் கணக்கிட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, காவல் துறையில் 1986-லே தலைமைக் காவலர்களாக இருந்து பதவி உயர்வு பெற்றவர்கள் இன்னும் temporary S.I.-ஆக உள்ளனர். ஆனால், மூன்றாண்டுகள் பணி செய்தாலே பணி நிரந்தரம்



செய்யப்பட வேண்டும் என்று நீதிமன்ற ஆணையிலும் இருக்கிறது. அரசாணையிலும் இருக்கிறது. எனவே, அந்த 50 பேர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்திலே பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரத்திற்கு மேலேயே நான் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) சரி, விரைவில் உரையை முடியுங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒரே ஒரு செய்தியை மட்டும் நான் சொல்லி முடித்துக்கொள்கிறேன். எத்தனையோ சுதந்திர போராட்டத் தியாகிகளுக்கு, மொழிப்போர் தியாகிகளுக்கு, சமூக நீதி போராட்டத் தியாகிகளுக்கெல்லாம் நிறைய பென்ஷனும், நிதியுதவியும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வரவிரும்புகிறேன். இரண்டாவது சுதந்திரப் போர் என்று அழைக்கப்பட்ட 1975-76 ஆம் ஆண்டிலே ஜனநாயகம் காக்கப்பட வேண்டும் என்பதற்காக ஆயிரக்கணக்கான தி.மு.கழகத் தொண்டர்கள் மிசா கொடுமைக்கு ஆளானார்கள்.

*பிற்பகல் 1-00*

எனவே, நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், அன்றைக்குக் காவல் துறை எந்த அளவுக்கு வெறித்தனமாக, வேகமாக நடந்து கொண்டது என்பதை எல்லாம் நான் இங்கே விவரிக்க விரும்பவில்லை. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிசா கொடுமையை அனுபவித்த திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கும் பென்ஷன் வழங்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் என்னுடைய வேண்டுகோளாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ உங்கள் கட்சிக்காரர்கள் என்பதற்காக நான் வாதிடவில்லை. இதைச் செய்தால் பின்னர் பிரச்சினை ஏதும் வந்துவிடும் என்று நீங்கள் நினைக்கத் தேவையில்லை. எல்லோருக்கும் வழங்கியிருக்கின்ற நீங்கள், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும் இந்த வகையில் நீதி வழங்க வேண்டுமென்று வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தக் காவல் துறையானது மிகச் சிறப்பாக செயல்படுகிறது. முன்பெல்லாம் நத்தை வேகத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்தது. இப்போது கிளி என்று சொல்லுவார்களே, அந்த தத்தை வேகத்திலே மிக வேகமாகச் செயல்பட்டு சட்டம்-ஒழுங்கைப் பாதுகாப்பதிலே முன்னணியிலே இருந்துக்கொண்டிருக்கிறது. சில பேர்கள் "அவலை நினைத்து உரலை" இடிப்பது போல, 356-ஐ பயன்படுத்துவார்களா பயன்படுத்த மாட்டார்களா என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டுச் சொன்னதுபோல, 'இலவு காத்த கிளி போல' அவர்கள் ஏமாறுவார்களே தவிர, அவர்களுடைய எண்ணம் ஒரு போதும் ஈடேறாது. அந்த அளவுக்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்திற்கு நல்வழிகாட்டி, சட்டம்-ஒழுங்கைப் பாதுகாத்து வழி நடத்திச் செல்லுவார்கள், செல்ல வேண்டும், இந்த ஆட்சி நீடித்து நிலைக்கும் என்பதை உறுதிபடத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக வாழ்வில் அமைதியும், சட்டம்-ஒழுங்கும் நிலைநாட்டப்பட வேண்டிய சட்ட ரீதியான பொறுப்பு காவல் துறையைச் சேர்ந்ததாகும். எந்த ஒரு சமுதாயத்திலும் அமைதியும்., சட்டம்-ஒழுங்கும் நிலைநிறுத்தப்படவில்லை என்றால் அந்தச் சமுதாயம் முன்னேற முடியாது என்புதுதான் ஒப்புக்கொள்ளப்படுகிற உண்மை ஆகும். ஆனாலும் அமைதியும், சட்டம்-ஒழுங்கையும் நிலைநாட்டுவது என்பது அவ்வளவு எளிய ஒன்று அல்ல என்பதைத்தான் உலகளாவிய அனுபவங்கள் நமக்கு எடுத்துச் சொல்லுகின்றன. தமிழகத்தில் மட்டுமல்ல. இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே சட்டம்-ஒழுங்கைக் கட்டுக்குள் கொண்டு வருவது அவ்வளவு எளிய ஒன்று அல்ல என்பதை பல்வேறு அனுபவங்கள் நமக்குத் திரும்பத் திரும்ப உணர்த்தி வருவதையும் கவனத்தில் கொண்டுதான் இந்த விஷயத்தைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. இது, ஏதோ ஆளுகின்ற ஓர் அரசியல் கட்சி மட்டுமே பொறுப்பேற்றுக் கொள்ளுகின்ற ஒரு விஷயமாக சுருக்கிப் பார்த்தோமேயானால் ஒரு பொறுப்புள்ள அரசியல்வாதியின் பார்வையாக அது அமையாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



சமூக வாழ்வில் சட்டம்-ஒழுங்கு ஏன் நிலைகுலைகிறது. அவற்றை நிலைகுலைக்கின்ற சக்தி எது என்பதையும் கண்டறிவதோடு, அப்படி நிலைகுலைக்கிற நடவடிக்கைக்கு எதிரான, பொருத்தமான நடவடிக்கை எது என்பதையும் நாம் நிதானமாக தீர்மானிக்க வேண்டும்.

சமூக வாழ்வில் சட்டம்-ஒழுங்கை நிலைகுலைய வைப்பது இன்றைய அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்பின் தீய விளைவுகள்தான். அங்கிருந்து தோன்றுகின்ற பல்வேறு நிர்ப்பந்தங்கள்தான் சமூக வாழ்வை நிலைகுலைக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இன்றைய சமூகம் தனி மனிதனின் அமைதியை, தனி மனிதனின் ஒழுங்கை நிலைகுலைக்கின்றன. தனி மனிதன் சமூகத்தின் அமைதியை, அதன் ஒழுங்கை நிலைகுலைக்க கலகம் செய்கிறான் என்பதைத்தான் நாம் பார்க்கிறோம். எந்த ஒரு சமூகமும் தனி மனிதனின் தேவையை நிறைவேற்றவில்லை என்றால், அந்தத் தனி மனிதர்கள் சமூகத்தின்மீது கொள்கின்ற ஆத்திரங்களை, பல்வேறு வடிவங்களில் வடிக்கிறார்கள். அவை சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகளாக தோன்றுகின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதைப்பற்றி எல்லாம் விரிவாக பேசுவதற்கு நேரம் இல்லை. ஆனாலும் ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டும். சமூகச் சூழ்நிலைதான் மனிதனை உருவாக்குகிறது. மனிதன் நல்ல மனிதனாக உருவாவதற்கு உரிய சமூகச் சூழ்நிலை தோன்றுகின்றவரை மனிதர்கள் கெடுவார்கள், கெட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சமூக விஞ்ஞானம் ஆகும். எனவே, அத்தகைய கண்ணோட்டத்தோடு பிரச்சினையை அணுகினால்தான் அவற்றைப் புரிந்துகொள்ள முடியும், தீர்வுக்கு வழி காண முடியும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையை தோற்றுவிப்பதற்குரிய களம் எது? சட்டம்-ஒழுங்கை நிலைகுலைப்பதற்கு உரிய வாய்ப்பை எது தருகிறது என்று நாம் பார்ப்போமேயானால், இன்றைக்கு சமூக வாழ்வில் பல்வேறு பிரச்சினைகள் நமக்குத் தெரியும். சாதி, மத வேற்றுமைகள், அடிப்படை வசதிகள்கூட இன்றைக்கு வரையிலும் நிறைவேற்றப்படாமல் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கின்ற மக்கள், கல்வியின்மை, வேலை இன்மை, சமவாய்ப்பு சமூகத்தில் மறுக்கப்பட்ட நிலை, சாதியின் பெயரால் இழைக்கப்படும் கொடுமை, ஆழமான வறுமை இவைதான், இதுபோன்ற, வறுமை போன்ற நோய்கள்தான் சமூக வாழ்வை நிலைகுலைக்கின்ற கருவைத் தோற்றுவிக்கின்ற கருவறைகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. எனவே, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது என்பது

போலீஸ் என்ற Physical Force மட்டுமே என்று பார்க்க முடியாது. இந்த அரசியல், பொருளாதார, சமூக வாழ்வில் இதற்கு ஒத்திசைவான கொள்கை நிலைகளையும் அமல்படுத்தினால்தான் சட்டம்—ஒழுங்கு நிலைநாட்டப்படும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை இங்கே நான் குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

காவல் துறையைப் பற்றிப் பரிசீலித்தால் இரண்டு விஷயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது. ஒன்று, காவல் துறையின்பால் அரசின் கடமைகள், இன்னொன்று, சமூகத்தின்பால் காவல் துறையின் கடமைகள் என்று இரட்டை அம்சத்தோடு இந்தப் பிரச்சினையை நாம் பார்க்க வேண்டி இருக்கின்றது.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் போலீஸ் துறையின்மீது அரசின் கடமைகள் என்று பார்த்தால் முதலில் கவனிக்கப்பட வேண்டியவர்கள் காவலர்கள்தான். 86000 காவலர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள் என்று சொன்னால் இந்தக் காவலர்களுக்கு, அநேகமாக ஆண்டவனைப் பற்றி சொன்னார்களே, ஆதியும் அந்தமும் இல்லாதவன் ஆண்டவன் என்று, அதுபோல் இந்தக் காவலர்களுக்கு எப்போது வேலை தொடங்குகின்றது. எப்போது வேலை முடியும் என்பதேயில்லை. அதுவும் போலீஸைப் பொறுத்தவரையிலும் அவர்களின் நெஞ்சுக்குள் எழுகின்ற குறைகளை வடிக்கின்ற வாய்க்காலோ வடிகாலோ இல்லை. எனவே, அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், அது வெடித்து சிதறி விடுகிறது. விபரீதத்தைத் தோற்றுவிக்க விரும்புகிற சில தீய சக்திகளுக்கு இரையாகின்ற வாய்ப்பினையும் அது ஏற்படுத்தி வருகிறது.

இந்தக் காவலர்களைப் பொறுத்தவரையில் நான் குறிப்பிட விரும்புவது இவர்களுக்கு ஒரு வரையறுக்கப்பட்ட டூட்டி இல்லை. நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், காவலர்களுக்கு எட்டு மணி நேர டூட்டி என்பதை வரையறுப்பது நல்லது. அதுதான் அவர்களுக்கு ஆரோக்கியம், சமூகத்திற்கும் ஆரோக்கியம், அரசுக்கும் நல்லது. சிறைகளிலேகூட, நாம் எட்டு மணி நேரம் என்று கொண்டு வந்திருக்கிறோம். காவலர்களுக்கு எட்டு மணி நேர டூட்டி என்பதை உத்தரவாதப்படுத்துவது என்பது மிகவும் அவசியமான ஒன்று. நான் இதை ஏன் குறிப்பிட விரும்புகிறேன் என்றால், காவலர்களை நீங்கள் பார்த்தால், நான் ஒன்றும் கேலிக்குரிய ஒரு விஷயமாக சொல்லவில்லை, எஸ்.ஐ. லெவலுக்கு மேல் இருக்கின்ற அதிகாரிகள் காவலர்களை ஓர் உயிருள்ள மனிதனாக மதிப்பதேயில்லை. இது நடைமுறை அனுபவம். காவலர்கள் கொத்தடிமைகள் போல் நடத்தப்படுகிறார்கள். எஸ்.ஐ.யிலிருந்து மேலே வரையிலே இருக்கின்ற



அதிகாரிகள் சிற்றரசர்கள் போல சாம்ராஜ்யம் நடத்துகிறார்கள். ஆனால் இந்தக் காவலர்கள் முழுக்க முழுக்க கொத்தடிமைகள் போல நடத்தப் படுகிறார்கள். ஆக, காவல் துறையில் காவலர்கள் கொத்தடிமைகளாகவும், அதிகாரிகள் சிற்றரசர்களாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலைமையை இந்த மாநில அரசு மாற்றவில்லையென்றால் உண்மையிலேயே ஒரு கடுமையான அபாயத்தை எதிர்காலத்திலே தோற்றுவிக்கும் என்பதை நான் உறுதிபட தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அதுபோல், இன்றைக்கு நீங்கள் பார்க்கலாம். இந்தக் காவலர்களில் பலருக்கு புரமோஷனே இல்லை. திருப்பூரிலே, கோவை மாவட்டத்திலேகூட மற்றும் வேறு பகுதிகளிலேகூட ஹெட் கான்ஸ்டபிள்ஸ் ஆக இருக்கின்றவர்களுக்கு எஸ்.ஐ. புரமோஷன் இல்லை. 15 வருடம், 20 வருடம் என்று பணிபுரிந்தவர்களுக்குக்கூட இன்று வரையில்லை. இப்படி பொறுமுகிற நிலைக்கு மாநில அரசு முடிவு கட்ட வேண்டும். எனவே, நீங்கள் காவல் துறையைச் சீர்திருத்த வேண்டும். காவல் துறைக்கு நல்லது செய்ய வேண்டுமென்றால், நீங்கள் முதலில் அட்சரம் போட வேண்டிய இடம் காவலர்கள். டி.ஜி.பி-இல் இருந்து தொடங்காதீர்கள். காவலர்களிலே தொடங்குங்கள். காவலர்களில் தொடங்கினால் பிரச்சினைக்கு நல்ல முடிவு வரும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பல மாற்றங்கள், பல நெருக்கடிகள், இந்தக் காவலர்கள், இன்றைக்கு வரையிலும் பாதிக்கப்படுவதற்குக் காரணம் ஒரு Colonial set up தொடர்வதுதான். பழைய பிரிட்டிஷ் முறைதான். அப்போது எஸ்.ஐ.க்கு மேல் இருந்தவர்கள் பூராவும் வெள்ளையர்கள். அவர்களை துரை என்றுதான் காவலர்கள் அழைப்பார்கள். காவலர்கள் துரைமார்கள் என்று அழைத்து, பழகி அதிலேயே பழக்கப்பட்டுவிட்ட இவர்கள் இன்று வரையிலும் எஸ்.ஐ.க்-களை அந்த துரை மாதிரி அதற்கு மேற்பட்ட அதிகாரிகளை துரைகளைப் போல கவனிக்கின்ற அந்த Colonial கட்டமைப்பு மாற்றப்படவில்லை. அந்தப் பிரிட்டிஷ் கட்டமைப்பை மாற்றுவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அந்த முழக் குச்சியில் கட்டுண்டுக் கிடக்கின்ற கொத்தடிமைகளான காவலர்களை கொஞ்சம் விடுவித்து விடுங்கள். விடுவித்து காப்பாற்றுங்கள், காப்பாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ளுங்கள் என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கு இன்னொரு விஷயத்தைப் பார்த்தால், இந்தக் காவல் துறையை நாம் எப்படி அமைப்பது, நம்முடைய ஜனநாயக அமைப்பு என்பது, அதாவது நம்முடைய அரசியலமைப்பு ஒரு ஜனநாயகபூர்வமான அமைப்பு. இந்த ஜனநாயகபூர்வமான அரசியலமைப்பு, இந்திய

அரசியலமைப்பு எதன் அஸ்திவாரத்தில் எழுப்பப்பட்டிருக்கிறது என்றால் சமத்துவம், சமயச் சார்பின்மை, சமூக நீதி என்ற மூன்று அடிப்படைகளில் உள்ளடக்கி நிற்கின்றது. சமத்துவம்., சமயச் சார்பின்மை, சமூக நீதி என்ற மூன்று அடிப்படைகளின்மீது நிறுத்தப்பட்டிருக்கிற இன்றைய இந்த அரசியல் கட்டமைப்பின் கருவிகளான காவல் துறை, இந்த மூன்று அடிப்படைக்கும் பொறுப்பான துறையில் நடக்கவில்லை என்றால், நாட்டு மக்கள் அதிருப்தியடைவார்கள். பிரச்சினைகள் பல வடிவங்களில் தோன்றும்.

*பிற்பகல் 1-10*

நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இந்த விஷயங்களில் உண்மையிலேயே பலவீனம் இருக்கிறது. காவல் துறையின் உடலும் உயிரும் இந்த மூன்று அடிப்படைகளின்மீது நிறுத்தப்படவில்லை என்றால், சமூக வாழ்வில், பொதுமக்கள் மத்தியில், காவல் துறை தன்னுடைய மதிப்பை இழந்து விடும். எனவே, இதன்மீது தக்க கவனம் செலுத்த வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால், காவல் துறையில், காவலர்கள், காவல் துறையைச் சார்ந்தவர்கள் மனிதர்களாக, மனித உருவோடு இருக்கிறார்கள். ஆனால், இன்னமும் மனித உள்ளம் பெறவில்லை. காவல் துறைக்கு மனித உள்ளம் கொடுக்காத வரை சமூக வாழ்வில், காவல் துறையானது தன்னுடைய மதிப்பை இழந்துவிடும் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், காவல் துறை, அரசியல், சட்டரீதியில், அதற்கு வழங்கப்பட்டிருக்கிற பொறுப்பை நிறைவேற்றாமல், அவற்றை நிலை குலைய வைக்கிற மிகப் பெரிய தீங்கு, லஞ்ச ஊழல்தான். உலகளாவிய சமூக அறிஞர்கள் பல்வேறு கருத்தரங்கங்களில் வெளிப்படுத்தியிருக்கிற விஷயமே, இந்த காவல் துறையை நிலைகுலைய வைப்பது லஞ்ச ஊழல்தான் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த லஞ்ச ஊழலை, காவல் துறையிலிருந்து பிரித்தெடுக்காத வரை, காவல் துறை தன்னுடைய கடமையை நிறைவேற்ற முடியாது, இது ஒரு Serious Threat என்று உலக அளவில் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாநில அரசுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இன்றைய காவல் துறையை, உள்ளும் புறமும் நவீனப்படுத்த வேண்டும். இந்தத் துறையில் 86,000 பேர் இருக்கிறார்கள்.



அவர்களால், ஆறு கோடி மக்களின் சமூக வாழ்வில் ஒழுங்கை நிலைநாட்ட முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை.

காவல் துறையின் வெற்றியில் பிரதான நிபந்தனை, பொதுமக்களின் நம்பிக்கை, ஆதரவைப் பெறுவதில்தான் இருக்கிறது. காவல் துறையானது அவற்றைப் பெற்றால்தான் அது தன்னுடைய கடமையில் முதல் படியிலே நிற்க முடியும். காவல் துறை தனது கடமையை நிறைவேற்ற முதல் அடியை எடுத்து வைக்க வேண்டுமானால் பொதுமக்களின் அங்கீகாரம் வேண்டும். அந்த அடிப்படையில், காவல் துறையின் கண்ணும், காதுமாக பொதுமக்கள் மாற்றப்பட வேண்டும். அப்படி மாற்றப்பட்டால்தான், உண்மையிலேயே இன்றைய சமூகப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதாக அமையும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல, சமீப காலமாக, காவல் துறையைப் பற்றி, தமிழ்நாட்டிலே ஒரு கருத்து ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே ஏற்பட்டிருக்கிறது. காவல் துறை மீது வகுப்பு வாத சாயல் விழுந்துவிட்டது என்ற விமர்சனம் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. ஆனால், அது முழு உண்மை என்ற முடிவுக்கும் வர முடியாது என்றாலும், அப்படிக் கருத அடிப்படையே இல்லை என்றும் அதை நிராகரித்து விட முடியாது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படிக் கருதுவதற்குரிய அடிப்படை, கோவையில் நவம்பர் 29 ஆம் தேதி தோன்றிவிட்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நவம்பர் 29 ஆம் தேதி, காவல் துறையின் செயல்பாடு, தமிழ்நாட்டின் மனசாட்சியில் ஆறாத ரணமாக விழுந்துவிட்ட ஒன்று என்பதை நான் உறுதிபட வலியுறுத்தி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையினரே மறியலில் ஈடுபட்டு, தங்கள் கடமைப் பொறுப்பிலே இருந்து விடுவித்துக்கொண்டு செயல்பட்டது என்பது நிகழ்ந்திருக்கக் கூடாத ஒரு விபத்து. அப்படி நிகழ்ந்து விட்டதை, நடவடிக்கைக்காக அல்ல, மனசாட்சி உள்ள அந்தக் காவலர்களே தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காக இதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இத்தகைய நிலைமைகள் மாறாமல் இருப்பதற்குக் காரணம், பாபர் மசூதி இடிக்கப்பட்ட அந்த நடவடிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் இன்றைக்கு மத்தியில் நாடாளுகிற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்திற்கு பல பலன்கள் உண்டு.

பலவீனம் என்னவென்றால், குற்றவாளிகளே நாடாள வந்துவிடுவார்கள். தமிழ்நாட்டிலே இருந்துகூட ஒருவர் சொல்லியிருக்கிறார், பாபர் மசூதி இடித்தது என்பது ஒரு அரசியல் நடவடிக்கை என்று. அப்படி என்றால், அவர் எந்த அளவுக்கு இறுகிப் போயிருக்கிறார், அழுகிப் போயிருக்கிறார் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், அது அரசியல் நடவடிக்கை அல்ல. ஒரு குற்ற நடவடிக்கை. அந்தக் குற்ற நடவடிக்கை புரிந்தவர்கள் இன்றைக்கு நாடாள வந்திருப்பது ஜனநாயகத்தின் விபத்து என்று மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, ஐ.எஸ்.ஐ. ஊடுருவல் என்று சொல்கிறார்கள். டெல்லியிலே இருந்து இங்கு வரை ஐ.எஸ்.ஐ. ஊடுருவுகிறது என்றால், அதற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் யார் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இறுதியாக, இரண்டொரு ஜனப் பிரச்சினைகளைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதை மட்டும் நான் சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன். ஒன்று அழகுபடுத்துவது. (குறுக்கீடு) ஜனம் என்றால் மக்கள், ஜனப் பிரச்சினை.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வெகு ஜனப் பிரச்சினை.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெகு ஜனப் பிரச்சினை. மக்கள் பாஷையில் பேசுவது பொருத்தமாக இருக்குமென்று இதைச் சொல்கிறேன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால் நகரத்தை அழகுபடுத்துவது பற்றிப் பேசுகிறோம். அழகுபடுத்த வேண்டுமென்பதற்காக மனிதர்களை அப்புறப்படுத்தக் கூடாது. அழகு எது தெரியுமா? மனிதர்கள்தான், மனிதர்கள்தான் உலகத்திலேயே அழகு. அந்த மனிதனை அப்புறப்படுத்திவிட்டு, தெருவை அழகுப்படுத்தி என்ன பயன்? பயனில்லை. நம்முடைய சிந்தனையில் ஏதோ அழுக்கு படிந்திருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் அல்ல. நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், நடைபாதையில் வியாபாரம் செய்கிறவர்கள் இன்றைக்கு நசுக்கப்படுகிறார்கள். இது சிலருக்கு சிரிப்பாக இருக்கிறது. ஆனால், உண்மை என்ன தெரியுமா? நடைபாதை வியாபாரம் என்பது சாலையோர வியாபாரம். இது உலகளாவிய அம்சம். நேரம் இல்லை அதைப்பற்றியெல்லாம் விவரிக்க. நடைபாதையில், கோயம்பத்தூரிலே



எட்டு இடங்களில் நடைபாதை வியாபாரம் செய்கிற உரிமையுண்டு என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. அந்தத் தீர்ப்பின்படி கோவை மாநகராட்சியும் சரி, அதுபோல காவல் துறையும் அனுமதிக்க மறுக்கிறது. என்ன செய்யலாம் என்று சொல்லுங்கள்? சென்னை ஹைகோர்ட் தீர்ப்பளித்துவிட்டது, வியாபாரம் செய்ய அவர்களுக்கு இடம் ஒதுக்க வேண்டுமென்று. வியாபாரம் செய்ய இடம் ஒதுக்க முடியாது என்று கோவை மாநகரக் காவல் துறை சொல்கிறது. கோவை மாநகரக் கமிஷனரும் சொல்கிறார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் தெளிவாகச் சொல்கிறேன். அதில் ஆயிரம் பேர் முஸ்லீம்கள் இருக்கிறார்கள். முஸ்லீம்கள் என்றால் இந்த இஸ்லாமிய தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடிய முஸ்லீம்கள் தெருவிலே கடை வைத்துப் பிழைத்தவர்கள். கடை வைக்கின்ற உரிமையை மறுத்து, அவர்களையும் தீவிரவாத முகாமிலே தள்ளுவதா? ஒருபுறம் அவர்களைத் தீவரவாதிகள் வேட்டையாடுகிறார்கள்; இன்னொருபுறம் அரசாங்கம் அவர்களுக்கு உரிமை வழங்கவில்லை. இது நல்லதல்ல. எனவே, உரிமை வழங்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நிறைவாக ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகிறேன். தொழிலாளர்களின் போராட்டங்களில் போலீஸ் தலையீடு அதிகம். 506/2 என்பது தொழிலாளர்களுக்கு எதிராகப் போடப்படுகிற செக்ஷன். நான் நிறைய பட்டியல் வைத்திருக்கிறேன். அவ்வளவு பட்டியல் இருக்கிறது. இதில் வயலன்ஸ் இருந்தால் நான் ரெப்ரசன்ட் பண்ணத் தயாராக இல்லை. வயலன்ஸ் இருந்த இடத்தில் நடவடிக்கை எடுப்பது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அவ்வாறு இல்லாமல் - இது குறித்து சொல்ல வேண்டுமென்றால் அதற்கு ஒரு பத்து நிமிடம் ஆகும். அவ்வளவு விவரங்கள் இருக்கின்றன. தொழிலாளர்களுக்கு எதிராக போலீஸ் தலையீடு கூடாது. தனியார் போக்குவரத்து கம்பெனி விவகாரம் குறித்துகூட நம்முடைய உள் துறைச் செயலாளர் எனக்குக் கடிதம் எழுதிவிட்டார், அதை வாபஸ் பெற முடியாது என்று. நான் உண்மையிலேயே ரொம்ப மனவேதனை யோடு தெரிவிக்க விரும்புகிறேன். எந்த வகையிலும் பிழைக்க வழி இல்லாமல் குறையைச் சொன்ன நிலையிலே 7,8 இடங்களில் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அந்த வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட வேண்டுமென்று நான் குறிப்பாகக் கேட்டுக்கொண்டு, தொழில் தகராறில் போலீஸ் தலையீடு என்பது நிறுத்தப்படவில்லை என்றால் சிக்கல்கள் அதிகமாகும். அவற்றைத் தடுக்க வேண்டுமென்று சொல்லி ஒரே ஒரு சம்பவத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திசையன்விளையிலே காசிப்பாண்டியன் என்ற ஒரு Head Constable இருந்தார். அவருடைய மனு என்னிடம் இருக்கிறது. அந்த Head Constable பணியில் இருந்த காலத்தில், சாலையின் குறுக்கே ஓடிய ஒரு இளம் குழந்தையை ஓடிப் போய்க் காப்பாற்றி, குழந்தை அடிபடாமல், தான் அடிபட்டு, இடுப்பு உடைபட்ட நிலையில் மருத்துவ மனையில் வெகு சீரியசாக அனுமதிக்கப்பட்டவர். அப்படி அனுமதிக்கப் பட்டு, பிறகு வெளியிலே வந்து, Head Constable பதவியிலிருந்து S.I.க்கு உரிய தகுதிகளைப் பெற்று, பயிற்சிகளைப் பெற்று, Written Test தேர்வு பெற்று, அதுபோல Physicial Test தேர்வு பெற்று வருகிற நிலையில், எல்லாத் தகுதிகளும் இருந்து, அவர் இப்போது நிராகரிக்கப்பட்டுவிட்டார். அதற்குக் காரணம், அன்றைய D.G.P. அன்றைய D.G.P. தேவாரம் இவரை ரெக்கமண்ட் செய்திருக்கிறார் என்பதுதான். இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு மிக மோசமான அதிகாரி, ஒரு நல்ல விஷயத்திற்கு ரெக்கமண்ட செய்ததால் அவருடைய மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது. உண்மையிலே பணிக் காலத்தில் ஒரு குழந்தையை தன் உயிரை திரணமென மதித்து காப்பாற்றிய ஒரு Head Constable, S.I. யாக வருவாரேயானால் நன்றாக இருக்கும். அவருடைய முழு விவரம் இதிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன்மீது உரிய நடவடிக்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டு, பிரச்சினைகள் நிறைய இருந்தாலும், நேரம் இல்லை என்பதால் இத்தோடு முடிக்கிறேன். வணக்கம்.

*(அது குறித்த தாள்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளித்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

*பிற்பகல் 1-20*

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 2-ஆயத் தீர்வைத் துறைக்கு ரூ.17 கோடியும், மானியக் கோரிக்கை எண் 16-காவல் துறைக்கு 709 கோடியும், மானியக் கோரிக்கை எண் 16-தீயணைப்புத் துறைக்கு 57 கோடியும்— இந்த விதத்திலே இன்றைக்கு மொத்தம் சுமார் 783 கோடி ரூபாய்க்கு நடைபெறுகிற இந்த விவாதத்திலே சில கருத்துக்களை நான் கூறுகின்ற



வாய்ப்பினைத் தந்த தங்களுக்கும் எங்கள் பேரியக்கத்திற்கும் நன்றியினைச் சொல்லி, சில கருத்துக்களை உங்கள் முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

18 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் வருகின்ற தமிழகத்தில் கிட்டத்தட்ட 783 கோடி ரூபாய் என்று பார்க்கின்றபோது, மொத்த வருமானத்தில் அது 4.3 சதவீதம்தான் வருகிறது. ஆக, இந்தத் தமிழகத்தைப் பாதுகாப்பதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிற தொகை 4.3 சதவீதம் என்று சொன்னால், அது ஏற்புடையது அல்ல. அது போதுமானதாக இருக்கும்; ஒருவேளை, சட்டம் ஒழுங்கு சரியாக இருந்து இருக்கும் என்று சொன்னால், இந்தத் தொகை போதுமானதாக இருந்து இருக்கும், ஆனால், காவல் துறைக்கு இன்று ஒதுக்கப்பட்டு இருக்கின்ற தொகையை நிச்சயமாக ஒரு மடங்கு அதிகரிக்க வேண்டும். பொருளாதார ரீதியில் சிரமமாக இருக்கும் என்று சொன்னால், 6 சதவீதமாவது ஒதுக்கீடு செய்வீர்கள் என்று சொன்னால், நாட்டிலே சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்படும் என்று நான் நம்புகிறேன். கிட்டத்தட்ட 84 ஆயிரம் காவலர்களை வைத்து 6 கோடி மக்களைப் பராமரிப்பது, பாதுகாப்பது என்பது இயலாத காரியம் என்கிற காரணத்தினால் அதிகமான காவலர்களை நியமித்து சட்டம் ஒழுங்கை நீங்கள் பாதுகாத்திட வேண்டும்.

நமது காவலர்களைப் பொறுத்தவரைக்கும் அவர்கள் தகுதியும் திறமையும் கொண்டவர்களாக இருந்தாலும், அவர்கள் பணியிலே சுணக்கம் காட்டுகின்ற காரணத்தினாலேதான், இப்படிப்பட்ட தொய்வுகள் வந்து விடுகிறதோ என்கிற எண்ணம் ஏற்படுகிறது. கோவை வெடிகுண்டு சம்பவத்தை நண்பர்கள் சொன்னார்கள். ஆனால், அதற்குப் பின்பு, பல்வேறு இடங்களிலே வெடிகுண்டுகளை, ஆயுதங்களை கைப்பற்றி இருக்கிறார்கள். எனக்கு அதிலே இன்னும் ஒரு சந்தேகம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் வெடிகுண்டுகளும் நமது ஆட்சியிலே புதைக்கப்பட்டனவா; பழைய ஆட்சியிலே புதைக்கப்பட்டனவா என்று எனக்குச் சந்தேகம் எழுவதுண்டு. காரணம், இங்கிங்கு ஆயுதங்கள் இருக்கின்றன; தோணடி எடுக்கப்படுகின்றன; அங்கு இருக்கிறது; இங்கு இருக்கிறது; இன்னும் வெடிகுண்டுகள் வெடிக்கும் என்று சொல்லி காலாவதியான முதலமைச்சர் அடிக்கடி சொல்லிக் கொண்டு இருப்பார். அதனாலேயேதான் எனக்கு அந்தச் சந்தேகம் இருக்கிறது. அந்தக் காவலர்களை நீங்கள் இன்னும் முடுக்கி விடுகின்றபோது, இப்படிப்பட்ட வெடிகுண்டுகள் இன்னும் கண்டுபிடிக்கப்படும், மக்கள் பாதுகாக்கப்படுவார்கள். எனவே, நீங்கள்

அதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, தமிழகத்தில் மட்டும் 2894 பெண் காவலர்கள்தான் இருக்கிறார்கள். கிட்டத்தட்ட 6 கோடி மக்களிலே சரிசமமாகப் பார்ப்பது என்று சொன்னால், 3 கோடி பெண்கள் இருப்பார்கள்; அவர்களுக்கு வெறும் 2894 காவலர்கள் என்பது போதாது. எனவே, பெண் காவலர்களை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் தந்து இருக்கிற புள்ளிவிவரத்தின்படி 1997ஆம் ஆண்டில் 3 லட்சத்து 5 ஆயிரத்து 54 மதுவிலக்கு வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. 3 லட்சத்து 5ஆயிரத்து 54 மதுவிலக்கு வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன என்று சொன்னால், தமிழகத்திலே கள்ளச்சாராய ஆறு எப்படி ஓடிக்கொண்டு இருக்கிறது என்று நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே, அதைத் தடுப்பதற்கு —அந்த வழக்குகளில் கைது செய்யப்பட்டவர்கள் இருக்கிறார்கள்; கைது செய்யாமல் இருப்பவர்கள் மிகச் சரிபாதியாக இருக்கும் என்று நம்புகிறேன். அப்படியென்றால், அவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முனைப்புடன் செயல்பட வேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே மதவாதக் கலவரங்கள் 1997 ஜூன் முதல் 1998 ஏப்ரல் வரைக்கும் 70 படுகொலைகள் நடந்து இருக்கின்றன. ஆனால், நமது காவல் துறை, உளவுத் துறை சரியாக இருந்து இருக்கும் என்று சொன்னால்—வன்முறைக்கு அடிப்படையே, ஏதாவது பழிவாங்குதல்கள் நடைபெற்று இருக்கும் என்று சொன்னால், பழிக்குப் பழி என்ற விதத்திலேதான் நடந்து கொண்டிருக்கிறது; அப்படிப்பட்ட அசம்பா விதங்கள் நடைபெறுகின்றபோது காவல் துறை ஒழுங்காகக் கண்காணித்து இருப்பார்கள் என்று சொன்னால், இப்படிப்பட்ட படுகொலைகள் நடந்து இருக்காது; எனவே அதை மீண்டும் குறைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 1997ஆம் ஆண்டு 63 முறை துப்பாக்கிச்சூடு நடைபெற்று இருக்கிறது. 28 பேர் இறந்து இருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு என்பது நமது அரசிலே அன்றைக்கு அண்ணா அவர்கள் 1967-லே ஒரு சுவரொட்டி போட்டது எனது நினைவிற்கு வருகிறது; கூலி உயர்வு கேட்டான் அத்தான்; குண்டடிப்பட்டு செத்தான் அத்தான் என்று ஒரு சுவரொட்டி போட்டார். ஆனால், இன்றைக்கு 1997-லே துப்பாக்கிச் சூட்டிலே 28



பேர் அநியாயமாக கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்று சொன்னால்—1967-லே சொன்ன அண்ணா அவர்களைத் தலைவராகக் கொண்டிருக்கிற இந்த இயக்கம் இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்று நான் கேட்கிறேன். எனவே, துப்பாக்கிப் பிரயோகத்தை முழுவதுமாக தடை செய்வதற்கு நீங்கள் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, காவல் துறையிலே 1996-லே 13 கைதிகள் இறந்து இருக்கிறார்கள். 1997-லே 16 பேர் இறந்து இருக்கிறார்கள். ஆக 29 பேர் கைதிகளாக இருந்தவர்கள் சித்தரவதை செய்யப்பட்டு காவல் நிலையத்திலே இறந்து இருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக இப்படிப்பட்ட காவல் கைதிகள் மரணம் தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-25

கொலை, கொள்ளைகளில் கண்டுபிடிக்கப்பட்ட விகிதாச்சாரத்தை நீங்கள் இதிலே சொல்லியிருக்கிறீர்கள். இந்த ஆண்டில் 74.3 சதவீதம் கண்டுபிடிக்கப்பட்டது என்றும், அதற்கு முன்பு 72.8 சதவீதம் என்றும் புள்ளிவிரவங்கள் தந்திருக்கிறீர்கள். 1.5 சதவீதம் அதிகரித்து இருந்தாலும், அந்த 75 சதவீதத்திற்குள்ளேயே இருக்கிறது. இன்னும் அந்த 25 சதவீதம் ஏன் கண்டுபிடிக்கப்படவில்லை? அது காவல் துறையின் கையாலாகாத தனத்தினாலா அல்லது அரசியல் தலையீடுகள் காரணமாகவா அல்லது அவர்களை ஏன் பிடிப்பானே என்ற ஏளனப் போக்கின் காரணமாகவா, ஏன் அவர்கள் கைது செய்யப்படவில்லை என்று நீங்கள் தெரிவிக்க வேண்டும். எப்போதும் 75 சதவீதத்திற்கு மேலே செல்லாமல் இருக்கிற சூழ்நிலை மாறி, குற்றவாளிகளைக் கைது செய்கின்ற ஒரு முனைப்பான தன்மை வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கழிந்த அரசிலே தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் பற்றி எல்லாம் தெரிவித்தார்கள். அதிலே இன்னும் 98 பேர் பணியில் சேர்க்கப்படாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 10-3-1998 அன்று நான் பேசியபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் எனக்குச் சொன்ன உத்தரவாதமும் பதிலும் என்னவென்று சொன்னால், அந்த 98 பேரும் பணியில் சேர்க்கப்பட்டு பயிற்சிக்கு அனுப்பப்பட்டுவிட்டார்கள் என்பதுதான். ஒருவேளை அவர்களுக்குத் தவறான தகவல்கள் தந்திருக்கலாம். ஆனால், அவர்கள் சொன்னது அவைக் குறிப்பிலே இருக்கிறது. அந்த 98 பேரும் பயிற்சிக்கு அனுப்பப்படவில்லை. பரிதாபத்திற்குரிய அந்த நபர்களைப் பயிற்சிக்கு

அனுப்பி அவர்களைப் பணியில் அமர்த்துவதற்கான ஆணையை தாங்கள் கருணையோடு பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாக S.P.-க்கு ஒரு வீட்டை அரசாங்கம் கட்டிக் கொடுத்திருக்கிறது. 72 ஏக்கர் பகுதியிலே மத்தியில் அந்த வீடு அமைந்துள்ளது. அந்த இடத்திற்கு மேல் பகுதியில் சுமார் 20,000 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்கேயிருந்து மெயின் ரோட்டுக்குச் செல்லவேண்டுமானால் 20 அடி அகலத்தில் 100 அடி தூரத்திற்குப் பாதை தேவை. அதைப்பற்றி நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நமது நாஞ்சிலார் அவர்களும் அங்கே உள்ள கலெக்டர்,' ஆர்.டி.ஓ. எல்லாம் பரிந்துரை செய்து அந்த இடத்தைக் காவல் துறை பொதுமக்களுக்காக விட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால், காவல் துறை விட்டுக் கொடுப்பதாக இல்லை. எனவே, 20 அடி அகலமும் 100 அடி தூரமும் அங்கே இடம் கிடைக்கும் என்றால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அது பயன்படும். எனவே, அதைக் கருத்தில் கொண்டு அதைத் தயவுசெய்து வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு கோரிக்கை. எங்களுடைய சக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குப் பேச வாய்ப்பு இல்லாததால் என் மூலம் கேட்டிருக்கிறார்கள். பேராவூரணி தொகுதியில் திருச்சிற்றம்பலம் பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டுமென்ற கோரிக்கையைக் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அதை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போலவே, புதுக்கோட்டைப் பகுதி பற்றியும் என்னிடம் கேட்கச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, புதுக்கோட்டை மாவட்டத்தில், கே. புதுப்பட்டி காவல் நிலையத்தில் 199/97 என்ற குற்ற எண்ணில் ஒரு தவறான வழக்குப் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அதன்மீது மறு விசாரணை செய்ய வேண்டுமென்றும் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையினர் எல்லோருக்கும் 1000 ரூபாய் ஊக்கத் தொகை அளித்ததைப்போல, தீயணைப்புத் துறையில் உள்ள அனைவருக்கும் ரூ.1000 வீதம் ஊக்கத் தொகை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தீ விபத்து நடைபெற்றவுடனேயே அங்கே முதலாவதாகச் சென்று கட்டடங்களின் இடிபாடுகளின் உள்ளே புகுந்து அங்கே உள்ளே மாட்டிக் கொண்டவர்களை உயிரோடு மீட்டு வெளியில் கொண்டு வருவதற்கான பெருமுயற்சியை எடுப்பது தீயணைப்புத் துறையைச் சேர்ந்தவர்கள்தான். எனவே, அவர்களுக்கும் காவல் துறையினருக்குக் கொடுத்ததைப்போல ரூ.1000 ஊக்கத் தொகை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதோடு அவர்களுடைய பரிதாப நிலையைப் பற்றிச் சொல்கிறபோது, வருஷத்தில் 365 நாளும் அவர்கள் வேலை செய்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு 52 சனிக்கிழமைகளும் 52 ஞாயிற்றுக்கிழமைகளும் 24 அரசு விடுமுறைகளும் ஆக 128 நாட்கள் லீவ் போய் விடுகிறது. ஆனால் தீ அணைப்புத் துறையில் பணியாற்றுகிறவர்களுக்கு 365 நாட்களும் அதுவும் முழு நேரப் பணியாக பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு 8 மணி நேரப் பணியும், விடுமுறை நாட்களும் அளிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரயில்வே, விமானப் படை, துறைமுகம் ஆகியவற்றில் இருக்கிற தீயணைப்பு ஊழியர்களுக்கு 8 மணி நேரப்பணியும் விடுமுறையும் வழங்கப்படுகிறது. எனவே, அதைப்போல இவர்களுக்கும் வழங்க உத்தரவிட வேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 5 தினங்களுக்கு முன்பு மலையடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் என்கிற சங்கத்திலே திருட்டு நடந்திருக்கிறது. அந்தச் சங்கத்தினுடைய பூட்டு உடைக்கப்பட்டிருந்தது. அந்தச் சங்கத்தினுடைய தலைவர் களியக்காவிளை காவல் நிலையத்திலே மனு கொடுத்திருக்கிறார். அங்கே காஸ் வெல்டிங் வைத்து அந்தப் பணப் பாதுகாப்புப் பெட்டகத்தை அப்புறப்படுத்த முயற்சித்திருக்கிறார்கள். அதிலேயிருந்து பணம் எடுக்கப்பட்டதா?.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் முடித்துக் கொண்டதாகக் கருதப்படுகிறது. இன்றைய மானியக் கோரிக்கைகளின் மீது விவாதம் மேலும் தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (25-5-1998) காலை 9-30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

153. 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டம் 10-11-1997 முதல் செயல்முறைக்கு கொண்டு வருவது குறித்து எரிசக்தி துறையின் 3-11-1997ஆம் நாளிட்ட 172 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1997) 23 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

154. 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் இயங்கேணிகள் விதிகளை வகுப்பது குறித்து எரிசக்தி துறையின் 3-11-1997ஆம் நாளிட்ட 173 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1997) 23 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

155. மின் ஆய்வாளர் மற்றும் அரசு முதன்மை மின் ஆய்வாளர் ஆகியோரை மின் இயங்கேணிகள் ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டது குறித்து எரிசக்தி துறையின் 3-11-1997ஆம் நாளிட்ட 174 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயங்கேணிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1997 23(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

156. திருச்செங்கோடு, திருவாளர்கள் புல்லிகார் மில்ஸ் நிறுவனத்தினர் செலுத்த வேண்டிய விற்பனை வரியினை 16-12-1996 முதல் மூன்றாண்டு காலத்திற்கு தள்ளிவைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 3-6-1997ஆம் நாளிட்ட 209 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.**

221. மானியக் கோரிக்கை எண் 2-மாநில ஆயத்தீர்வை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

222. தமிழ்நாடு காவல் துறையின் 1997-98ஆம் ஆண்டுக்கான செயல்பாட்டின் மதிப்பாய்வு மற்றும் 1998-99ஆம் ஆண்டுக்கான திட்டங்கள் பற்றிய கொள்கைக் குறிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

223. மானியக் கோரிக்கை எண் 16-தமிழ்நாடு தீயணைப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்)

224. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை, 1997-98.

225. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை, 1997-98.

226. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி மூன்றாவது அறிக்கை, 1997-98.

227. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி நான்காவது அறிக்கை, 1997-98.



**இணைப்பு-I**

*(...36 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் 2**

# மாநில ஆயத் தீர்வை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99

## முன்னுரை

1.1 மதுவிலக்கு கொள்கையைப் பொறுத்தவரை, இந்தியா முழுவதிலும் ஒரே கொள்கையாக உருவாக்கப்பட்டு, தீவிரமாகச் செயல்படுத்தப் படுமானால்; அதனை முழுமனதுடன் விரும்பி வரவேற்பதற்குத் தமிழக அரசு எப்பொழுதும் தயாராயுள்ளது.

1.2 ஆயினும், இந்தியாவில் மற்ற மாநிலங்கள் எல்லாம் பல ஆண்டுகளுக்கு முன்பே மதுவிலக்குத் திட்டத்தைத் தளர்த்தியுள்ள வேளையில், தமிழகத்தில் மட்டும் அதனை முழுமையாகக் கடைபிடிப்பது என்பது நடைமுறையில் உகந்ததாக அமையவில்லை. அதன் காரணமாக, மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மதுவிலக்குக் கொள்கையிலும் அவ்வப்போது சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

1.3 தற்போதுள்ள சூழ்நிலையில் மக்களின் உடல் நலத்திற்குக் கேடு விளைவிப்பதும் அவர்களது பொருளாதார சீரழிவிற்கு வழிவகுப்பதுமான கள்-சாராய விற்பனை தமிழ்நாட்டில் நிறுத்தப்பட்டுள்ளது. அதே நேரத்தில் அரசின் நிதி வருவாய்த் தேவையைக் கருத்தில் கொண்டு உள்நாட்டில் தயாராகும் அயல்நாட்டு மதுவகைகள் பொது ஏலம் முலம் அமைக்கப்படும் சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்கப்படுகின்றன.

## 2. குடிப்பழக்கத்தின் தீமைகள் குறித்துப் பிரச்சாரம்

2.1 ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஆண்டும் அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாளிலிருந்து ஒரு வாரத்திற்கு, அதாவது அக்டோபர் 2 முதல் அக்டோபர் 8 வரை மதுவிலக்குப் பிரச்சார வாரத்தைக் கொண்டாட 1997 ஆகஸ்ட் திங்களில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்காணும் நோக்கத்திற்காக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2,000 ரூபாய் அனுமதிக்கப்படுகிறது.

[1998 மே 22

## 3. உத்தமர் காந்தி காவல் துறைப் பதக்கம்

3.1 கள்ளச்சாராயத்தைத் தடுப்பதில் பாராட்டத்தக்க வகையில் பணி புரிந்த காவல் துறை பணியாளர்களுக்கு குடியரசு நாள் அன்று உத்தமர் காந்தி பெயரிலான காவலர் பதக்கங்கள் 1996 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன. 1997ஆம் ஆண்டுக்கு காவல் துறை ஆய்வாளர்கள் மூவருக்கும், காவல் துறை உதவி ஆய்வாளர் இருவருக்கும் உத்தமர் காந்தி காவல் துறைப் பதக்கங்களும் ரூ.10,000/- ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

## 4. சோதனைச் சாவடிகள்

4.1 அண்டை மாநிலங்களிலிருந்து மதுவகைகள் கடத்தப்பட்டுவரும் செயல்களைத் தடுக்கும் நோக்கத்துடன் கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், தர்மபுரி, கோயம்புத்தூர், சேலம், நீலகிரி ஆகிய மாவட்டங் களில் காவல் துறைப் பணியாளர்களால் மட்டுமே கண்காணிக்கப்படும் 21 சோதனைச் சாவடிகளை ஏற்படுத்திட அரசு ஒப்புதல் அளித்து. அதன்படி 21 சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றி வருகின்றன.

## 5. வருவாயைப் பெருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்.

5.1 1996இல் இவ்வரசு பொறுப்பேற்றதும் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பீர் ஆகியவற்றிற்கு விதிக்கப்படும் விற்பனைக் கட்டணத்தை உயர்த்துவதன் மூலம், அதிக வருவாயை ஈட்டிட இந்த அரசு முடிவு செய்து, அதன்படி இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளுக்கான விற்பனைக் கட்டணத்தை (Vend Fee) பெட்டிக்கு ரூ.45/-லிருந்து ரூ.95/- ஆக உயர்த்தி அரசு ஆணையிட்டது. பீரைப் பொறுத்தவரையில் பெட்டி ஒன்றுக்கு ரூ.4.50 ஆக இருந்ததை ரூ.10/- உயர்த்தி அரசு ஆணையிட்டது.

5.2 கடந்த 6-3-1997 முதல் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மீதான ஆயத்தீர்வை புரூப் லிட்டர் ஒன்றுக்க ரூ.15/-விதம் உயர்த்தப்பட்டது. இதன் மூலம் 1997-98-ல் அரசுக்கு கூடுதலாக ரூ.126.75 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

5.3 வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படும் கருப்பஞ்சாற்றுக் கசண்டுக்கு நிர்வாகப் பணிக் கட்டண வகையில் மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.200/- விதிக்க வகை செய்து அரசு தமிழ்நாடு 1958 ஆம்



1998 மே 22]

ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு முறைப்படுத்துதல் விதிகளை 1996 ஆம் ஆண்டு சூலைத் திங்களில் திருத்தியுள்ளது.

5.4 அரசு 1997 மார்ச் திங்களில் தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் (தயாரிப்பு) விதிகளைத் திருத்தி 6-3-1997ஆம் நாளிலிருந்து இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் மீதான தயாரிப்பாளர்களால் செலுத்தப்படும் விற்பனைக் கட்டணத்தை (Vend Fee) 9 பல்க் லிட்டர் கொண்ட பெட்டி ஒன்றுக்கு ரூ.95/- என்பதை 9 பல்க் லிட்டர் கொண்ட பெட்டி ஒன்றுக்கு ரூ.165/- என உயர்த்தியது.

மேலும், தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை (மொத்த விற்பனை மூலம் வழங்கல்) விதிகளில் அரசு திருத்தம் செய்து, மொத்த விற்பனை உரிமதாரர் செலுத்தவேண்டிய விற்பனைக் கட்டணத்தை இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளுக்கு 9 பல்க் லிட்டர் கொண்ட பெட்டி ஒன்றுக்கு ரூ.68/-லிருந்து ரூ.138/-ஆகவும், 9 பல்க் லிட்டர் கொண்ட திராட்சை ரச மது (Wine) பெட்டி ஒன்றுக்கு ரூ.129/- ஆகவும் உயர்த்தியது. இந்த உயர்த்தப்பட்ட விற்பனைக் கட்டணம் 6-3-1997ஆம் நாள் முதல் வசூலிக்கப்படுகிறது. இக்கூடுதல் கட்டணத்தின் பயனாக 1997-98 ஆம் ஆண்டில் ரூ.91.28 கோடி கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது.

5.5 1997 நவம்பரில், தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு மதுவகைகள் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகள் திருத்தப்பட்டு, தனியுரிமை இல்லாத கிளப் ஒன்றை நடத்துவதற்குரிய படிவம் FL-2 உரிமத்தைப் புதுப்பித்து வழங்குவதற்கான ஆண்டு உரிமைக் கட்டணம் ரூ.50,000/- லிருந்து ரூ.2,00,000/ ஆக அதிகரிக்கப்பட்டது. தனியுரிமை இல்லாத கிளப்பில் மது அருந்த விரும்பும் உறுப்பினர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கையை 5-லிருந்து 50 ஆகவும் அரசு அதிகரித்தது. மூன்று ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டுவரும் தனியுரிமை இல்லாத கிளப்புகள் மட்டும் FL-2 உரிமம் வழங்கப்படுவதற்கான தகுதி பெறும் வகையில் அரசு விதிகளில் திருத்தம் செய்யப்பட்டது. இதன்மூலம் 1997-98 இல் அரசுக்குக் கூடுதலாக 70.50 இலட்ச ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

5.6 வெளிமாநிலத்தைச் சேர்ந்த தயாரிப்பாளர்களிடமிருந்து இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை இறக்குமதி செய்வதற்கான உரிமக் கட்டண வீதத்தை அரசு, 1997 சூலையில் பின்வருமாறு அதிகரித்துள்ளது;

[1998 மே 22

| இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு மதுவகைகள் | இறக்குமதி உரிமக் கட்டணங்களின் திருத்த வீதம் |
|---|---|
| 1. சாதாரண ரகங்கள் | பெட்டி ஒன்றுக்கு ரூ.110/- |
| 2. நடுத்தர ரகங்கள் | பெட்டி ஒன்றுக்கு ரூ.130/- |
| 3. முதன்மை ரகங்கள் | பெட்டி ஒன்றுக்கு ரூ.187/- |

இவ்வாறு அதிகரிக்கப்பட்டதால், 11-7-1997 முதல் 31-3-1998 வரையிலான கால அளவில் கூடுதலாக ரூ.12.12 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

5.7 டிராட் பீர் (Draught Beer) குறித்த ஆயத்தீர்வை வீதம் 1997 நவம்பரில் பல்க் லிட்டர் ஒன்றுக்கு ரூ.2.50 ஆக இருந்தது ரூ. 8.10 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகரிக்கப்பட்டதால், 11-11-1997 முதல் 31-3-1998 வரையிலான கால அளவில் கூடுதலாக ரூ.5.74 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. டிராட் பீர் விற்பனை கூடும்போது வருவாயும் அதிகரிக்கும்.

5.8 ஸ்காட்ச் விஸ்கியின் ஆயத்தீர்வை வீதம் 1997 டிசம்பரில் புரூப் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 85/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 6. மதுவிலக்கு ஆயத்தீர்வை பற்றிய அரசின் கொள்கை

6.1 கள்ளச் சாராயம் காய்ச்சுவது, கொண்டு செல்வது, வைத்திருப்பது, விற்பனை செய்வது, பிற மாநிலங்களிலிருந்து கடத்தி வருவது ஆகியவற்றை ஒட்டுமொத்தமாக ஒழிக்கவேண்டும் என்னும் அரசின் கொள்கை தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

6.2 இம்மாநிலத்தில், பொதுத் துறையில் மது தயாரிக்கப்படமாட்டாது என்னும் அரசின் கொள்கை தொடரும்.

6.3 கள்ளச்சாராயம் காய்ச்சுவதையும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைளைப் போலியாகத் தயாரிப்பதற்குத் தெளிந்த சாராவி தவறாகப் பயன்படுத்துவதையும் தடுக்கும் நோக்கத்துடன், இரசாயனத் தொழிற்சாலைகளில், எங்கெங்கெல்லாம் சாத்தியமோ, அங்கெல்லாம் தெளிந்த சாராவிக்குப் பதிலாக இயல்பு மாற்றப்பட்ட சாராவியைப் பயன்படுத்த அனுமதிப்பது என்னும் அரசின் கொள்கை தொடரும். கண்டிப்பான விதிமுறைகளின்கீழ் மட்டுமே பல்வேறு பயன்பாடுகளுக்குத் தெளிந்த சாராவியைப் பயன்படுத்த அனுமதிக்கப்படும்.



1998 மே 22]

6.4 இம்மாநிலத்தில் கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன், இம்மாநிலத்தில் சாராவியை அடிப் படையாகக் கொண்டு புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படுவதற்குத் தொடர்ந்து ஊக்கமளிக்கப்படும்.

6.5 கருப்பஞ்சாற்றுக் கசண்டு அதிகமாகக் கிடைப்பதைக் கருத்திற் கொண்டு, தெளிந்த சாராவி தயாரிப்பதற்காக வடிசாலைகளை அமைக்கக் கூட்டுறவுத் துறையிலும் பொதுத் துறையிலும் இயங்கும் சர்க்கரை ஆலைகளுக்கு உரிமங்கள் வழங்குவது பற்றி அரசு பரிசீலிக்கும். இந்தப் புதிய வடிசாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தெளிந்த சாராவியைப் பயன்படுத்தி, இரசாயனப் பொருள்கள் தயாரிப்பதற்காக துணைத் தொழிற்சாலைகளையும் இந்தச் சர்க்கரை ஆலைகள் தொடங்கலாம்.

6.6 இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் சில்லறை விற்பனைக் கடைகளுடன் இணைந்து செயல்படும் 'பார்'களுக்கு உரிமங்கள் வழங்குவதில்லை என்னும் அரசின் கொள்கை தொடரும்.

6.7 மதுவிலக்குக் குற்ற வழக்குகளை இணக்க முறைத் தீர்வு மூலமாக முடிவுக்குக் கொண்டுவர, தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்ட விதிமுறைகளைப் பயன்படுத்தும் நடைமுறை தொடரும்.

6.8 சில சமூக விரோத சக்திகள், வழக்கமாகக் குற்றம் செய்பவர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தித் தடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், போதைப் பொருள் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1982) விதிமுறைகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

## 7. டிராட் பீர் மற்றும் ஸ்காட்ச் விஸ்கி

### அ. டிராட் பீர்

7.1 இம்மாநிலத்தில் உள்ள 5 நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் சென்னை மாநகரில் உள்ள 4 நட்சத்திர, 3 நட்சத்திர ஓட்டல்கள், மனமகிழ் மன்றங்கள் ஆகியவற்றில் உரிமம் பெற்ற வளாகங்களில் தற்போதுள்ள சிறப்புரிமைக் கட்டணத்தில் 10% ஐ கூடுதல் சிறப்புரிமைக் கட்டணமாகச் செலுத்துவதன் பேரில் (குறைந்தளவுத் தொகை ரூ. 10,000 என்பதற்கு உட்பட்டு) டிராட் பீர் விற்பனை செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது.

[1998 மே 22

## ஆ. ஸ்காட்ச் விஸ்கி

7.2 இம்மாநிலத்தில் ஸ்காட்ச் விஸ்கியை விற்பனை செய்ய அரசு அனுமதி அளித்துள்ளது. ஸ்காட்ச் விஸ்கி விற்பனை 1998 மார்ச்சில் தொடங்கியது. ஸ்காட்ச் விஸ்கி விற்பனையை அறிமுகப்படுத்தியதால், 1998 மார்ச்சில் ஆயத்தீர்வை, விற்பனைக் கட்டணம் மற்றும் இறக்குமதி அனுமதி உரிமக் கட்டணம் ஆகிய வகையில் ரூ. 21.12 இலட்சம் கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது.

## இ. 100 மி.லி. அளவுள்ள புட்டிகளில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளை அடைத்து விற்க அனுமதி மற்றும் மது புட்டிகளில் உயரளவு சில்லறை விற்பனை விலையைக் குறிப்பிடுதல்

7.3 அரசு நிர்ணயித்த சில்லறை விற்பனை விலையைக் காட்டிலும் அதிக விலையில் மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக மதுபானம் நுகர்வோரிடமிருந்து புகார்கள் வந்தன. நுகர்வோரின் நலனைக் காப்பதற்காக, இம்மாநிலத்தில் விற்கப்படும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது/பீர் புட்டிகளில் ஒட்டி வைக்கப்படும் வணிக வில்லைகளில் உயரளவு சில்லறை விற்பனை விலை அச்சிடப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்குறிப்பிட்ட ஆணைக்கு 1-12-97 முதல் செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாணையை, கண்டிப்புடன் செயல்படுத்துமாறு, மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

7.4 இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை 100 மி.லி. புட்டிகளில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டால், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகையின் தரமும் விலையும் சாதாரணக் குடிமகன் வாங்குவதற்கு ஏற்ற நிலையில் இருக்கும். அவர்கள் விரும்பி போலி/கள்ளச்சாராயம் வாங்குவது பெரிதும் குறையும் என்று அரசு கருதியது. அதன்படி, சாதாரண வணிகப் பெயரிலான இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகையைத் தயாரித்து 100 மி.லி. புட்டிகளில் அடைத்து விற்பனை செய்ய, அரசு, உள்ளூரில் உள்ள அயல்நாட்டு மதுவகை தயாரிப்பாளர்களுக்கு அனுமதி அளித்துள்ளது. அவை, இம்மாநிலம் முழுவதிலும் உள்ள சில்லறை விற்பனைக் கடைகளில் கிடைக்கின்றன.



1998 மே 22]

## 8 மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறை

8.1 மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறை சிறப்பு ஆணையாளர் இத்துறையின் தலைவராவார். அவருடைய நிர்வாகக் கட்டுப்பாட்டில் இத்துறை இயங்கி வருகிறது. மதுவிலக்குக் குறித்த கொள்கைகளை உருவாக்குவதில் இவர் அரசுக்கு உதவுகிறார். இம்மாநிலத்தில் ஆயத்தீர்வை நிர்வாகத்தை கவனித்து மேற்பார்வையிடுகிறார். 1937 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் பல்வேறு விதித்துறைகள், அவற்றின்கீழ் இயற்றப்படுகின்ற விதிகள் ஆகியவற்றைச் செயல்படுத்தும் பொறுப்பு இவரைச் சார்ந்ததாகும். இந்திய ஆட்சிப் பணி பதவித் தரத்தில் கூடுதல் ஆணையாளர் ஒருவரும், மாவட்ட வருவாய் அதிகாரி பதவித் தரத்தில் இணை ஆணையாளர் ஒருவரும் தேவையான துணைப் பணியாளர்களுடன் நான்கு உதவி ஆணையாளர்களும் தலைமையிடத்தில் ஆணையாளருக்கு உதவுகின்றனர். அரசு இணைச் செயலர் (நிதித் துறை) பதவித் தரத்தில், நிதிக்கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவரும், நிதி விவகாரம் குறித்து ஆணையாளருக்கு உதவுகிறார். மாவட்ட அளவில், ஓர் உதவி ஆணையாளரும் அவருடைய துணைப் பணியாளர்களும் மதுவிலக்கு ஆயத்தீர்வை தொடர்பான விவரங்களுக்குப் பொறுப்பு வகிக்கின்றனர். அவர்கள், மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரிகின்றனர். சாராவியை அடிப்படையாகக் கொண்ட பொருள்களைத் தயாரிக்கின்ற தொழில் பிரிவுகளில், சாராவி முறையாகப் பயன்படுத்தப்படுவதை மேற்பார்வையிடவும், 1937 ஆம் ஆண்டைய தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம், அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றின்படி ஆயத்தீர்வை விதிக்கத்தக்க இனங்கள் மீது ஆயத்தீர்வை விதிக்கவும், வருவாய்த் துறை அலுவலர்கள், வடிசாலைகளில்/சுங்கத்தீர்வைக்கு உட்பட்ட பொருள்களைச் சேமிக்கும் சேமிப்புக் கிடங்குகளில் வடிசாலை அதிகாரிகளாகவும்/சுங்கத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகளாகவும்/சுங்கத்தீர்வைக்கு உட்பட்ட பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளின் மேற்பார்வை அதிகாரிகளாகவும் நியமிக்கப்படுகின்றனர்.

## புதிய திட்டங்கள் (New Schemes)

8.2 மாவட்டங்களில் ஆயத்தீர்வை உதவி ஆணையாளர்கள் செயல்பாட்டினை மேம்படுத்தும் பொருட்டு ரூபாய் 37.93 இலட்சம் செலவில் பின்வரும் மாவட்டங்களில் உள்ள ஆயத்துறை உதவி ஆணையாளர்களுக்கு பத்து புதிய ஜீப்புகள் மற்றும் எங்கெங்கு ஓட்டுநர்கள்

[1998 மே 22

பணியிடங்கள் இல்லையோ அந்த அலுவலகங்களுக்கு ஐந்து ஊர்தி ஓட்டுநர்கள் பணியிடங்கள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது:

1. திருவள்ளூர்
2. விழுப்புரம்
3. திருவாரூர்
4. தேனி
5. நாமக்கல்
6. விருதுநகர்
7. இராமநாதபுரம்
8. தஞ்சாவூர்
9. புதுக்கோட்டை
10. காஞ்சிபுரம்

8.3 மேலும், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையாளர் அலுவலகத்திற்கு ரூபாய் 1.35 இலட்சம் செலவில் நகல் எடுக்கும் இயந்திரம் (Photo Copier Machine) ஒன்று வாங்குவது எனவும் அரசு முடிவு செய்துள்ளது.

## 9. தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் வருகின்ற தயாரிப்புப் பொருள்கள்

### அ. கருப்பஞ்சாற்றுக் கசண்டு

9.1 கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இம்மாநிலத்தில் அமைந்துள்ள 34 சர்க்கரை ஆலைகளிலிருந்து (இணைப்பு-1) சர்க்கரை உற்பத்தியின்போது கிடைக்கப்பெறும் ஒரு துணைப் பொருளாகும். கருப்பஞ்சாற்றுக் கசண்டு, வடிசாலைகளில் சாராவியைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படை மூலப்பொருளாகும். இம்மாநிலத்தில் உரிமம் பெற்ற சுமார் 350 சிறு உரிமதாரர்கள், கருப்பஞ்சாற்றுக் கசண்டினைக் கால்நடைத் தீவனம், கோழித் தீவனம் முதலியவற்றின் தயாரிப்பிலும், வார்ப்படச் சாலையில் பிணைக்கும் பொருளாகவும் பயன்படுத்துகின்றனர்.

9.2 கருப்பஞ்சாற்றுக் கசண்டை வைத்திருத்தல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல், கொண்டு செல்லுதல், இறக்குமதி-ஏற்றுமதி செய்தல் ஆகியவற்றிற்குத் தகுதி வாய்ந்த அதிகாரிகள் உரிமம் வழங்குவது, தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு முறைப்படுத்துதல் விதிகளால் முறைப்படுத்தப்படுகிறது.



1998 மே 22]

9.3 மத்திய அரசு, 1961 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாட்டு ஆணையை 10-6-1993 அன்று ரத்து செய்தது. அதற்கிணங்க, சர்க்கரை ஆலைகள், கருப்பஞ்சாற்றுக் கசண்டை, அதைப் பயன்படுத்திட உரிமம் பெற்றுள்ள எவருக்கும் அந்த உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளுக்கேற்ப விற்கலாம். மேலும், விலைக்கட்டுப்பாடு எதுவும் இல்லை. மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்ட கட்டுப்பாடு நீக்க ஆணைகளின் விளைவாக, உரிமதாரர்கள் கருப்பஞ்சாற்றுக் கசண்டை விற்பனை செய்தல், கொண்டு செல்லுதல், வைத்திருத்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல் ஆகியவை தொடர்பாக மாநில அரசு 1993 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் விரிவான வழிகாட்டிக் குறிப்புகளை வெளியிட்டுள்ளது. இந்த வழிகாட்டிக் குறிப்புகள், தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு கருப்பஞ்சாற்றுக் கசண்டு கட்டுப்பாடு-முறைப்படுத்துதல் விதிகளில் கூறப்பட்டுள்ள விதித்துறைகளுக்கு உட்பட்டவை ஆகும்.

9.4 1996-97 ஆம் கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டில் (1996 அக்டோபர் முதல் 1997 செப்டம்பர் வரை) இம்மாநிலத்தில் 2.27 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு மிகையாக இருந்தது. கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றில், கருப்பஞ்சாற்றுக் கசண்டை சேமித்து வைக்கும் பிரச்சினையை சமாளிக்கும் வகையில் தற்போதைய அரசு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் 81,288 மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை பிற மாநிலங்களுக்கு/பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதித்தது. தனியார் துறை சர்க்கரை ஆலைகளும் 11,500 மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை பிற மாநிலங்களுக்கு/பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டன. 1997-98 கருப்பஞ்சாற்றுக் கசண்டு ஆண்டில் வடிசாலைகள் மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டைப் பயன்படுத்தும் ஏனைய நிறுவனங்கள் ஆகியவை பயன்படுத்தியது போக, தோராயமாக 2 இலட்சம் மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டு மிகையாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இவ்வரசு, இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவு, பொதுத் துறை மற்றும் தனியார் துறை சர்க்கரை ஆலைகள் 50,000 மெட்ரிக் டன் கருப்பஞ்சாற்றுக் கசண்டை ஏற்றுமதி செய்ய அனுமதித்துள்ளது.

### ஆ. ஆல்கஹால்

9.5 தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளின்கீழ், கருப்பஞ்சாற்றுக் கசண்டை மூலப் பொருளாகப் பயன்படுத்தி, ஆல்கஹால் தயாரிக்க 16 வடிசாலைகளுக்கு (தனியார் துறையில் 14, கூட்டுறவுத்

[1998 மே 22

துறையில் 2) உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் விவரங்கள் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

9.6 இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், ஏனைய இரசாயனப் பொருட்கள், வார்னீஷ் ஆகியவை தயாரிக்கப்படுவதற்கான மூலப் பொருளாக ஆல்கஹால் பயன்படுத்தப்படுகிறது. மேலும், கல்வி நிறுவனங்கள், ஆய்வுக்கூடங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் முதலியவற்றிலும் சிறிய அளவில் பயன்படுத்தப்படுகிறது.

9.7 மத்திய அரசு, அதன், 10-6-1993 ஆம் நாளிட்ட ஆணையில், 1971 ஆம் ஆண்டு எத்தில் ஆல்கஹால் (விலைக்கட்டுப்பாடு) ஆணையை இரத்து செய்தது. இதன் விளைவாக எத்தில் ஆல்கஹாலுக்கு விலைக் கட்டுப்பாடு எதுவும் இல்லை. அதன் பின்னர், இந்த அரசு, மாநிலத்திலுள்ள உரிமம் பெற்ற தொழில் பிரிவுகள் ஆல்கஹாலை விற்பனை செய்தல், எடுத்துச் செல்லுதல், வைத்திருத்தல், பயன்படுத்துதல் ஆகியவை தொடர்பான வழிகாட்டிக் குறிப்புகளை வெளியிட்டது. தற்போது, நடைமுறையில் உள்ள மாநில விதிகளான, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு தெளிந்த சாராவி விதிகள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இயல்பு மாற்றப்பட்ட சாராவி மற்றும் வார்னீஷ் (பிரெஞ்ச் பாலீஷ்) விதிகள் ஆகியவை, ஆல்கஹாலை விற்பனை செய்தல், வைத்திருத்தல், பயன்படுத்துதல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், எடுத்துச் செல்லுதல் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக ஆல்கஹாலை பயன்படுத்துவதை முறைப்படுத்துகின்றன.

### இ. இரசாயனத் தொழில் பிரிவுகள்

9.8 ஆர்.எல்/டி.எல். (R.L./D.L.) உரிமங்களைக் கொண்டு செயல்படுகின்ற இரசாயனத் தொழில் பிரிவுகளை, உயர் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

### ஈ. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள்

9.9 இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளைப் பின்வரும் ஐந்து நிறுவனங்கள் தயாரிக்கின்றன:

1. திருவாளர்கள் பாலாஜி டிஸ்டிலரீஸ் லிமிடெட்
2. திருவாளர்கள் எம் பீ டிஸ்டிலரீஸ் லிமிடெட்
3. திருவாளர்கள் மோகன் புரூவரீஸ் அண்டு டிஸ்டிலரீஸ் லிமிடெட்
4. திருவாளர்கள் சிவா டிஸ்டிலரீஸ் லிமிடெட்
5. திருவாளர்கள் சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்



1998 மே 22]

9.10. 1997 ஏப்ரல் முதல் 1998 மார்ச் வரை இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் மொத்த உற்பத்தி 1089.75 இலட்சம் பல்க் லிட்டர்களாகும்.

### உ. பீர் வடிப்பாலைகள்

9.11 தற்போது தனியார் துறையில் இரண்டு பீர் வடிப்பாலைகள், அதாவது திருவாளர்கள் மோகன் புரூவரீஸ் அண்டு டிஸ்டிலரீஸ் லிமிடெட், திருவாளர்கள் எம் பீ டிஸ்டிலரீஸ் லிமிடெட் என்ற இரண்டு நிறுவனங்கள் இம்மாநிலத்தில் உள்ளன. 1997 ஏப்ரல் முதல் 1998 மார்ச் வரை பீர் மொத்த உற்பத்தி 524.93 இலட்சம் பல்க் லிட்டர்களாகும்.

## 10. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்)

10.1 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், தமிழக அரசுக்கு முற்றிலும் சொந்தமான, தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம், 1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின்கீழ் 23-5-1983 அன்று பதிவு செய்யப்பட்டது. இக்கழகத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. அது, மாநிலம் முழுவதிலும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், பீர் தயாரிப்புகள் ஆகியவற்றின் மொத்த விற்பனை மூலம் கொள்முதல், விநியோகம் ஆகியவற்றைக் கண்காணிக்கிறது. இதன் இயக்குநர்கள் குழு, அலுவல் முறையில் இயங்கும் தலைவர், மேலாண்மை இயக்குநர் மற்றும் அலுவல் முறையில் இயங்கும் நான்கு இயக்குநர்களைக் கொண்டுள்ளது. இந்த இயக்குநர்கள் குழு, கழகத்தின் நடவடிக்கைகளை நெறிப்படுத்தி கட்டுப்படுத்துகின்றது.

10.2 டாஸ்மாக் பல்வேறு சில்லறை உரிமதாரர்களுக்கும் மதுவை வழங்கும் பணியைச் செய்து வருகிறது. இக்கழகத்திடம், ஒரு மொத்த விற்பனை நிலைய உரிமமும், 38 கிளை விற்பனை நிலைய உரிமங்களும் உள்ளன. டாஸ்மாக் நிறுவனம் வழங்கும் மதுவைத் தவிர வேறு எந்த மதுவையும் தமிழ்நாட்டில் உள்ள சில்லறை விற்பனைக் கடைகள் மூலம் விற்கக் கூடாது. வேறு வகையில் சொன்னால், மாநிலத்தில், டாஸ்மாக் நிறுவனம் மட்டுமே ஏகபோக மொத்த விற்பனையாளராக இருந்து வருகிறது. ஆனால், டாஸ்மாக் சில்லறை விற்பனைக் கடை எதையும் நடத்தவில்லை.

10.3 1997-98 வரை மொத்த வியாபாரத் தொகை, வரிகள், தீர்வைகள் ஆகியவற்றின் மூலம், டாஸ்மாக், அரசுக்குச் செலுத்திய வருவாய்

[1998 மே 22

ஆகியவற்றைக் காட்டுகின்ற விவர அறிக்கை இணைப்பு-4 இல் அளிக்கப்பட்டுள்ளது.

## நிதி அமைப்பு

10.4 தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், ஒவ்வொன்றும் 1000 ரூபாய் மதிப்புள்ள 50,000 சம வீதப் பங்குத் தொகை கொண்ட 5 கோடி ரூபாய்க்கான அனுமதிக்கப்பட்ட மூலதனத்தைப் பெற்றுள்ளது. மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக இருப்பதால் அதற்கு முக்கிய மூலதன ஆதாரம் மாநில அரசிடமிருந்து கிடைத்துள்ளது. மாநில அரசு இதுவரை மொத்தம் 3.40 கோடி ரூபாய்க்கு, ஒவ்வொன்றும் 1000 ரூபாய் மதிப்புள்ள 34,000 சமவீதப் பங்குத் தொகை அளித்துள்ளது. 3.40 கோடி ரூபாயில் டாஸ்மாக் நிறுவனம், 1989-90 ஆம் ஆண்டில், டாஸ்கோவின் பங்கு மூலதனத்தில் 2.40 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

## கணினிமயமாக்கும் திட்டம்

10.5 கடந்த ஆண்டுகளில் டாஸ்மாக் செய்து வந்த வணிக நடவடிக்கை பன்மடங்காக அதிகரித்துள்ளது. பொருள் விவரப் பட்டியை முறையாக நிருவகிக்கவும், தேவைப்படும் கிடங்குகளில் தேவையான அளவுக்கு கொள்முதல் தேவைக் குறிப்பாணைகளை அளிக்கவும் டாஸ்மாக்கின் அனைத்துக் கிடங்குகளிலும், வட்டார அலுவலகங்களிலும், நிறுவன அலுவலகத்திலும் அனைத்து செயல்பாடுகளையும் கணினிமயமாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. கணினிமயமாக்குவதற்கான உத்தேசச் செலவு 1.25 கோடி ரூபாயாக இருக்கும். இது தொடர்பாக, டாஸ்மாக் நிறுவன அமைப்பு விதிகளைச் சேர்ந்த 25(1)(d) பிரிவின்கீழ் 1998 மார்ச் திங்களில் அரசினால் முன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆயத்தீர்வை ஆண்டு தொடங்குவதற்கு முன்னர் இத்திட்டத்தை முழுவதுமாகச் செயல்படுத்தும் பணி முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## விற்பனை வாய்ப்பு குறித்து ஆய்வு

10.6 இம்மாநிலத்தில், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகளின் விற்பனை வாய்ப்புகளை ஆராய்வதற்காக, டாஸ்மாக் நிறுவனம் 4 இலட்சம் ரூபாய் செலவில் அப்பணியை திருவாளர்கள் மோடு ரிசர்ச் நிறுவனத்திடம் (Mode Research Limited) ஒப்படைத்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட மதுவகைகள், உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மது வகைகள் ஆகியவற்றுக்கான விற்பனை வாய்ப்பை அறிந்து கொள்வது



1998 மே 22]

ஆகியவை இந்த ஆய்வின் நோக்கமாகும். ஆய்வு அறிக்கை 30-6-1998 ஆம் நாளுக்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்குச் சொந்தமாகச் சேமிப்புக் கிடங்கு

10.7 தற்போது, தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்குச் சொந்தமாகச் சேமிப்புக் கிடங்குகள் எவையும் இல்லை. மொத்தமுள்ள 37 சேமிப்புக் கிடங்குகளும் வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. அறிவியல் முறையில், சேமிப்புக் கிடங்குகளில் இயக்கப் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு, சொந்தமான சேமிப்புக் கிடங்குகளை வைத்திருப்பதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. ஆகவே, மாவட்டத் தலைமையிடங்களில் படிப்படியாகச் சேமிப்புக் கிடங்குகளைக் கட்டவும், பொருத்தமான இடங்களில், அவற்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும் டாஸ்மாக் நிறுவனம் முடிவு செய்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருமழிசையிலும், அம்பத்தூரிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள துவாக்குடியிலும், ஈரோடு மாவட்டத்திலுள்ள சூரியாம்பாளையத்திலும், கடலூர் மாவட்டத்திலுள்ள கடலூரிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மேலப்பாளையத்திலும், திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள முள்ளிப்பாடியிலும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருபுவனத்திலும் உள்ள தமிழ்நாடு சாராவிக் கழகத்திற்குச் சொந்தமான மது தயாரிப்புத் தொழில் பிரிவுகள் ஆகியவற்றில் நிலம், கட்டடங்கள் மற்றுமுள்ள ஏனையச் சொத்துக்கள் உடைமையுரிமையை ஆவின் நிறுவனத்திடமிருந்து எடுத்துக்கொள்ளவும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபானச் சேமிப்புக் கிடங்குகளை ஏற்படுத்துவதற்கு இச்சொத்துக்களைப் பயன்படுத்தவும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இச்சொத்துக்களின் மதிப்பை முடிவு செய்து அரசு ஒப்புதலைப் பெறுதலை எதிர்நோக்கி, மேலே குறிப்பிடப்பட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

## 11. தமிழ்நாடு சாராவிக் கழகம் (டாஸ்கோ)

11.1 தமிழ்நாடு சாராவிக் கழகம், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் ஒரு துணை நிறுவனமாகும். இந்நிறுவனம், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகைகள், பீர் வகைகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் நோக்கத்துடன் 1989 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டில் நாட்டு மது தயாரிக்கும் பொறுப்பு, இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

[1998 மே 22

11.2 தமிழ்நாடு சாராவிக் கழகம், நாட்டு மது தயாரிப்பதை 16-7-1991 முதல் நிறுத்திவிட்டது. 12 நாட்டு மது ஆலைகளின் சொத்துக்கள் அனைத்தும் 1992 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் பல்வேறு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களிடம் (Aavin) ஒப்படைக்கப்பட்டன.

## 12. சில்லறை விற்பனைக் கடைகள்

12.1 தமிழ்நாடு அரசு 1989 ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலமுறையை கடைபிடித்து வந்துள்ளது. சிறப்பாகச் செயல்பட்டு வந்துள்ள அந்த முறையில் ஏலம் கேட்பதில் உள்ள போட்டியைத் தடுப்பதற்காகச் சிலர் சேர்ந்து குழுக்களாகச் செயல்படுவதன் மூலம், உண்மையாக ஏலம் கேட்பவர்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுவதாகவும், அதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதாகவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. இந்தக் குறைபாடுகளைக் களைவதற்காக கடந்த ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகை, கிடைத்த உரிமைத் தொகை ஆகியவைகளை விரிவாக ஆய்வு செய்தும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களோடு விரிவாக விவாதித்த பின்னரும், நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறைக் கொள்கையில் அரசு திருத்தங்களைச் செய்துள்ளது. சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் ஏலதாரர்களுக் கிடையே போட்டிச் சூழலை உருவாக்கி ஏலத்தை நடத்துவதற்கு ஏற்பவும், அதன்மூலம் அரசுக்கு நியாயமான வருவாய் கிடைப்பதற்குத் துணைபுரியும் வகையிலும் இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:-

12.2 முந்தைய மூன்றாண்டுத் தொகுதியில் 4,500 மதுபானக் கடைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. தற்போது 1998-2001 மூன்றாண்டுத் தொகுதியில், மாவட்ட ஆட்சியர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் மொத்தம் 4700 மதுபானக் கடைகள் அமைத்திட அரசு முடிவு செய்தது.

12.3 கடந்த மூன்றாணடுகளில் கிடைத்த உரிமைத் தொகைகளின் சராசரியின் அடிப்படையில் 1998-99 ஆம் ஆண்டுக்கான குறுமத் தொகை நிர்ணயிக்கப்பட்டது. இந்தக் குறுமத் தொகை மதுபான சில்லறை விற்பனைக் கடைகளின் உண்மையான விற்பனை வாய்ப்பினைப் பிரதிபலிக்கும் வகையில் அமைக்கப்பட்டது. இப்படிக் குறுமத் தொகைகள் நிர்ணயிக்கப்படுவதன் மூலம், ஏலம் கேட்பவர் சேர்ந்துகொண்டு குறைந்த ஏலம் கேட்பது தடுக்கப்பட்டது. உண்மையான ஏலதாரர்கள் மட்டுமே



1998 மே 22]

ஏலத்தில் கலந்துகொள்ளுகின்ற வகையில், பிணை வைப்புத் தொகை குறிப்பிடத்தக்க அளவில் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

12.4 கடந்த மூன்றாண்டுத் தொகுதியில், பிணை வைப்புத் தொகை நகராட்சி/மாநகராட்சிப் பகுதிகளுக்கு ரூ. 10,000 எனவும் மற்ற பகுதிகளுக்கு ரூ. 7,500 எனவும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. தற்போது பிணைவைப்புத் தொகை பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | ஊரக ஊராட்சி மற்றும் பேரூராட்சிகள் | ரூ. 1.00 இலட்சம் |
| 2. | நகரப் பேரூராட்சிகள்/இரண்டாம் நிலை/மூன்றாம் நிலை நகராட்சிகள்/நகரியங்கள் | ரூ. 1.50 இலட்சம் |
| 3. | சிறப்பு நிலை/தேர்வுநிலை மற்றும் முதல் நிலை நகராட்சிகள் | ரூ. 2.00 இலட்சம் |
| 4. | மாநகராட்சிகள் | ரூ. 3.00 இலட்சம் |
| 5. | சென்னை மாநகரம் | ரூ. 4.00 இலட்சம் |

12.5 எந்த ஒரு மதுபான சில்லறை விற்பனைக் கடையின் உரிமமும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு நியமன முறையில் வழங்கப்படமாட்டாது என அரசு ஆணையிட்டுள்ளது.

12.6 விற்கப்படாத மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மீண்டும் விற்பனைக்குக் கொண்டுவரப்படும்.

12.7 மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்குரிய ஏலத்தின்போது, முன்பு, ஐநூறு, ஐநூறு ரூபாயாக உயர்த்தி ஏலம் கேட்கும் முறை இருந்ததை மாற்றி, ஆயிரம், ஆயிரம் ரூபாயாக உயர்த்தி ஏலம் கேட்க அனுமதிக்கப்பட்டது.

12.8 ஏலம் கேட்கும்போது, ஒரு ஏலம் கோரும் தொகைக்கும், அடுத்த ஏலம் கோரும் தொகைக்கும் தற்போது உள்ள வித்தியாசம் 5000 ரூபாய்க்கு அதிகமாக இருக்கக்கூடாது என்பதை 10,000 ரூபாய்க்கு அதிகமாக இருக்கக்கூடாது என உயர்த்தி அரசு ஆணையிட்டது.

12.9 விதிகளை உறுதியுடன் கடைப்பிடிப்பதற்கு வசூலிக்கப்படும் காப்புத் தொகை மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு உட்பட்ட

பகுதிகளில் அமையும் மதுபான சில்லறை விற்பனைக் கடைகளுக்கு ரூ.7,500 எனவும் மற்ற பகுதிகளில் அமையும் கடைகளுக்கு ரூ. 5,000 எனவும் வசூலிக்கப்பட்டது. அது, அனைத்து பகுதிகளுக்கும் ஒரே சீராக இருக்கும் வகையில் ரூ. 25,000 என வசூலிக்கப்படுகிறது.

12.10 ஏற்கெனவே நடைமுறையில் இருந்த ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தத் திருத்தங்கள், சுதந்திரமாகவும், நியாயமாகவும் ஏலத்தை நடத்துவதற்கு உத்தரவாதம் தரும் எனவும், ஏலம் கேட்போர் எவ்விதமான அச்சமோ, ஒருதலைப்பட்ச பாதிப்போ இல்லாமல் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் கலந்துகொள்ள வாய்ப்புகள் ஏற்படும் எனவும் அரசு கருதியது.

12.11 மேற்கூறிய சீரிய நடவடிக்கைகளின் விளைவாக, அரசு இவ்வாண்டு ஏலம் கேட்பதில் கூட்டுசேருவதைத் (Cartelisation) தடுப்பதில் வெற்றிகண்டுள்ளது. கடந்த ஆண்டு ரூ. 220 கோடி வருவாய் கிடைத்தது. இந்த ஆண்டில் அரசு மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, ரூ. 500 கோடிக்கு மேல் வருவாய் கிடைத்துள்ளது. இது ஒரு வரலாற்றுச் சாதனையாகும். சீரிய கொள்கை முடிவின் காரணமாகவும், ஏல நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணித்ததாலும், இந்த வெற்றியை அரசு பெற முடிந்தது.

## 13. ஆயத்தீர்வை வருவாய்

13.1 1996-97 ஆம் நிதியாண்டில் ஆயத்தீர்வை வருவாய் ரூ. 1,063.07 கோடியாக இருந்தது. 1997-98 ஆம் நிதியாண்டில் ஆயத்தீர்வை வருவாய் ரூ. 1,310.12 கோடியாக (துறைக் கணக்குகள்) கிடைத்துள்ளது. ஆயத்தீர்வைத் துறையின் வரலாற்றில் இது எப்போதும் இல்லாத வசூலாகும். 1992-93-லிருந்து 1997-98 வரையில் ஈட்டிய ஆயத்தீர்வை வருவாய் குறித்த விவரங்கள் இணைப்பு 5 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 14. மதுவிலக்கு அமலாக்கம்

14.1 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு 1996 ஆகஸ்டில் கலைக்கப்பட்டு, 1-9-1996 முதல் மாவட்டக் காவல் துறையுடன் இணைக்கப்பட்டது. மதுவிலக்குச் சட்டத்தைச் செயல்படுத்தும் பணி தற்போது மாவட்டக் காவல் துறை அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகையால், இம்மாநிலத்திலுள்ள முறையான காவல் படை, மேலும் பொருளுள்ள முறையில் மதுவிலக்குச் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்கத் தொடர்ந்து ஊக்குவிக்கப்படுகிறது. இதற்காக,





காவல்துறைத் தலைவர் (அமலாக்கம்) என்ற ஒரு பதவி தனியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

14.2 பின்வரும் பகுதியில் விவரித்துக் கூறப்பட்டுள்ளவாறு இரண்டாம் நிலை அதிகாரிகள், காவல்துறை ஆணையாளர்கள்/காவல்துறைக் கண்காணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் அவர்களின் உத்தரவுகளின்படி மாநகரங்களிலும், மாவட்டங்களிலும் மதுவிலக்குச் செயலாக்கப் பணிக்குப் பொறுப்பாவார்கள் என்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து, சென்னை காவல் துறைத் தலைவருக்குத் (அமலாக்கம்) தெரிவிக்க வேண்டுமென்றும் கூறி, அரசு 1997 டிசம்பரில் ஆணை பிறப்பித்துள்ளது:

(அ) காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்) மாவட்டங்களில் இத்தகைய பதவிகள் உள்ள இடங்களில்;

(ஆ) மாவட்டங்களில் உள்ள காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள்/மாவட்டக் குற்றப்பதிவேட்டு அமைப்பு காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் (காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்) பதவி இல்லாத இடங்களில் அப்பதவியை ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டு நிரப்பப்படுகின்ற காலம் வரை);

(இ) சென்னை மாநகரில், தெற்கு, மத்திய, வடக்கு சென்னை மாநகருக்காக காவல்துறைக் கூடுதல் துணை ஆணையாளர்கள் (மூவர்);

(ஈ) மதுரை, கோயம்புத்தூர் மாநகரங்களில் மதுவிலக்கு (பொதுவான குற்றங்கள்) காவல்துறை உதவி ஆணையாளர்கள்.

(உ) திருச்சி, சேலம், திருநெல்வேலி மாநகரங்களில் காவல்துறை துணை ஆணையாளர்களில் எவரேனும் ஒருவர்.

14.3 கள்ளத்தனமான, போலியான, தரம் குறைவான, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், கடைகளில் விற்கப் படுவதையும், கள்ளச்சாராயம் புழக்கத்தில் இருப்பதையும் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள் விற்கப்படும் கடைகளில் திடீர் சோதனைகள் நடத்த, மாவட்டங்களில்/ஆணையரகங்களில் தற்போதுள்ள பணியாளர்களிலிருந்து பெறப்பட்ட ஓர் ஆய்வாளர், ஓர் உதவி ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர்கள், நான்கு காவல் துறைக் காவலர்கள், ஓட்டுநர்-காவல் துறை

[1998 மே 22

காவலர் ஆகியோர் அடங்கிய ஒரு பறக்கும் படையை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள இரண்டாம் நிலை அதிகாரிகளின் கீழே இந்தக் குழு செயல்படும். சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில், இந்தப் படை தெற்கு, மத்திய, வடக்கு மாவட்டங்களுக்கென மூன்று படைகள் இருக்கும். இவை, காவல் துறை ஆணையாளர்/மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ், அவர்களின் உத்தரவுகளின்படி செயல்படும். எடுக்கப்படும் நடவடிக்கைக் குறித்து, சென்னை, காவல்துறைத் தலைவருக்கு (அமலாக்கம்) தெரிவிக்க வேண்டும். மதுவிலக்குச் சட்டம் செயல்படுத்தப்படுவது குறித்த ஒட்டுமொத்த மேற்பார்வைக்கான பொறுப்பை காவல் துறைத் தலைவர் (அமலாக்கம்) பெற்றிருக்கிறார்.

## 15. போதை மருந்துப் பொருள்களைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல்

15.1 போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவை தொடர்பான செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவற்றின் மூலம் அல்லது அவற்றைக் கள்ளத்தனமாகக் கொண்டுசென்று வழங்குவதன் மூலம் பெறப்பட்டச் சொத்துக்களை பறிமுதல் செய்ய வகை செய்யவும், போதை மருந்துகள், மனமயக்கம் தரும் பொருள்கள் குறித்த பன்னாட்டு ஒப்பந்தங்களின் விதித்துறைகளையும், இவை தொடர்பான ஏனையவற்றையும் செயல்படுத்தவும், மத்திய அரசு 1985 ஆம் ஆண்டு போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்கள் சட்டத்தை (மத்திய சட்டம் 61/1985) இயற்றியது. இச்சட்டமும், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளும் 14-11-1985-லிருந்து செயலுக்கு வந்துள்ளன. குற்றவாளியென ஏற்கெனவே தண்டிக்கப்பட்டு, குற்றங்கள் சிலவற்றை மீண்டும் புரிபவர்களுக்கு அபராதம், கடும் சிறைத் தண்டனை விதிப்பதற்கும், கூடுதல் தண்டனை வழங்கவும் ஏற்கெனவே தண்டிக்கப்பட்டவர்கள் செய்யும் சிலவகையான குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கவும் இச்சட்டம் வகை செய்கிறது.

15.2 இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தண்டனை எதனையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அல்லது குறைக்க அல்லது மாற்ற முடியாது. இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றங்கள் ஒவ்வொன்றும் பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றங்களாகும். இவை ஜாமீன் பேரில் விடுதலை செய்ய முடியாதவையும் ஆகும். மத்திய அரசு,



1998 மே 22]

அதாவது 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்கள் கள்ள வியாபாரத் தடுப்புச் சட்டம் (மத்திய சட்டம் 46/1988) என்ற மற்றொரு சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் 1-7-1988 முதற்கொண்டு செயலுக்கு வந்துள்ளது. இதன்படி, போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்களைக் கள்ளத்தனமாக வியாபாரம் செய்யும் நபர்களை காவலில் வைக்கப்படும் நாளிலிருந்து குறைந்தது ஓர் ஆண்டு காலமும், அதிகமாக இரண்டாண்டு காலமும் காவலில் வைக்க, மாநில, மத்திய அரசுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

15.3 இம்மாநிலத்தில், மாநில அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மாவட்டக் காவல் துறை, இரயில்வே காவல் துறை, குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு ஆகியவையும், மத்திய அரசின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு, சுங்கத்துறை கலெக்டர், வருவாய் உளவுத் தகவல் சேகரிப்பு இயக்ககம் ஆகியவையும், போதைப்பொருள் தடுப்புச் சட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

15.4 1988 ஆம் ஆண்டு போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்கள் ஆகியவற்றை கள்ளத்தனமாக விற்பனை செய்வதைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் தனியாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அரசு செயலாளர் ஆணையிட்டபடியான தடுப்புக்காவல் ஆணைகளை மறு ஆய்வு செய்ய ஓர் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

15.5 குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் மாநிலப் புலானாய்வு பிரிவிற்கு காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைவராக உள்ளார். அவருக்கு உதவியாக, காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் ஒருவர், காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் ஒருவர், 13 ஆய்வாளர்கள், 14 உதவி ஆய்வாளர்கள் ஏனைய பதவித் தரங்களில் 91 பேர் ஆகியோர் உள்ளனர். இம்மாநிலத்தில், குற்றப்புலனாய்வுத் துறையின் போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவுகள் 12 உள்ளன. அவை, சென்னை, மதுரை, திருச்சி, சேலம், விழுப்புரம், திண்டுக்கல், தேனி, தூத்துக்குடி, வேலூர், கோயம்புத்தூர், இராமநாதபுரம், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ளன. இவை, காவல் நிலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

15.6 மத்திய அரசின் உத்தரவுகளின்படி இந்த அரசு போதை மருந்துகள்-மனமயக்கம் தரும் பொருட்களை ஒருவகை செய்யும் குழு (Disposal

[1998 மே 22

Committee) ஒன்றை அமைத்துள்ளது. மதுவிலக்கு ஆயத்துறை ஆணையாளர் இதன் தலைவராவார். காவல் துறைத் துணைத் தலைவர் (குற்றங்கள்), தடய அறிவியல் துறையின் உதவி இயக்குநர் ஆகிய இருவரும் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு கைப்பற்றப்பட்ட போதை மருந்துகளை பயனற்றதாக்கி ஒருவகை செய்யும்; இந்தக்குழுவின் கூட்டங்கள் நடைபெற்றன. சென்னை, காவல் துறைக் கண்காணிப்பாளர் (போதைப்பொருள் புலனாய்வுப் பிரிவு) ஒப்படைத்த பறிமுதல் செய்யப்பட்ட போதை மருந்துகளை அழித்து விடுவதென முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப, பறிமுதல் செய்யப்பட்ட போதை மருந்துகள், சென்னை-19 விம்கோ தொழிற்சாலையில் கீழே விவரித்துள்ளபடி உரிய நேரத்தில் அழிக்கப்பட்டன:-

| | | |
|---|---|---|
| 1. | கஞ்சா | 9635.604 கிலோ கிராம் |
| 2. | ஹெராயின் | 7.328 கிலோ கிராம் |
| 3. | அபின் | 27.476 கிலோ கிராம் |
| 4. | மெத்தா கொய்லன் மாத்திரைகள் | [43 x 10 x 100 (43 பெட்டிகள்)] |

(போதை மருந்துப் பொருள் கட்டுப்பாட்டுத்துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டவை)

15.7 1998 மார்ச் வரை கைப்பற்றப்பட்ட பின்வரும் போதைப் பொருட்கள் அழிக்கப்படுவதற்காக உள்ளன என்று சென்னை காவல் துறைக் கூடுதல் தலைவர் தெரிவித்துள்ளார்:

| | | |
|---|---|---|
| 1. | கஞ்சா | 7631.081 கி.கி. |
| 2. | ஹெராயின் | 40.765 கி.கி. |
| 3. | அபின் | 26.710 கி.கி. |
| 4. | கொக்கெயின் | 15.410 கி.கி. |
| 5. | ஹஷிஷ் எண்ணெய் | ஒரு சொட்டு (1 drop) |
| 6. | கசகசா கேப்ஸ்யூல்ஸ் | 50.000 கி.கி. |
| 7. | போசிகா தூள் | 61.600 கிராம் |
| 8. | டிசஸ்பம் | 131.050 கி.கி. |
| 9. | டியெஜெசிக்கோசி மருந்து | 50 குப்பிகள் (vials) |



1998 மே 22]

## போதைப் பொருள்கள் தவறாகப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கான மாநிலப் பெருந்திட்டம்

15.8 மத்திய அரசின் போதைப் பொருள் கட்டுப்பாட்டு அமைப்பு, ஐக்கிய நாட்டு, பன்னாட்டு போதைப் பொருளின் தவறான பயன்பாட்டு கட்டுப்பாட்டு திட்ட உடனுழைப்புடன், போதைப் பொருளை தவறாகப் பயன்படுத்துவதைக் கட்டுபடுத்துவதற்கான தேசியப் பெருந்திட்டம் (1994-2000) ஒன்றைப் பரிந்துரைத்துள்ளது. இத்திட்டத்தை, மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைந்து விரிவானதொரு அணுகுமுறையைப் பின்பற்றுவதன் மூலம் இந்தியாவில் போதைப் பொருள் தவறாகப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த முடியும். அதன்படி, மாநில அளவிலான பெருந்திட்டத்தைத் தயாரிப்பதற்காக தமிழ்நாடு அரசு உள்துறைச் செயலாளரைத் தலைவராகவும், அரசின் பல்வேறு செயலாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு மாநில நிலைப்பணிக் குழுவை அமைத்துள்ளது. இத்திட்டம் தற்போது பரிசிலனையில் உள்ளது. மது மற்றும் போதைப் பொருளுக்கு அடிமையாவதைத் தடுப்பது தொடர்பாக எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் குறிக்கோள்களும், நோக்கங்களும் வருமாறு:

i) இளம் வயதுடைய தொழிலாளர்கள் மற்றும் எளிதில் பாதிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்புள்ள தொகுதியினர்களிடையே குடிப் பழக்கத்தின் தீமைகள் குறித்து பிரச்சாரம் செய்து, அவற்றினின்று அவர்களைத் தடுத்தல்.

ii) குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள் அதிலிருந்து மீளுவதற் குரிய சிகிச்சை குறித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல்.

iii) புது வாழ்வும், பிற்காப்புப் பணிகளும்.

iv) சட்ட நடவடிக்கைகள்.

v) நிருவாகத்தை வலுப்படுத்துதலும், சீரமைத்தலும்.

vi) தமிழ்நாட்டில் அமலாக்க முகவரமைப்பை வலுப்படுத்துதல்.

vii) சிறப்புப் புலனாய்வு மற்றும் ஆய்வுப் பிரிவுகளை ஏற்படுத்துதல்.

viii) தடய அறிவியல் சோதனைக் கூடங்களை விரிவுபடுத்துதல்.

ix) பயிற்சி வசதிகளை ஏற்படுத்துதலும் விரிவுபடுத்துதலும்.

x) மதுவிலக்குப் பிரச்சாரக் குழு.

xi) படித்த தொண்டர்கள் பணித் திட்டம்.

[1998 மே 22

xii) போதைப் பொருட்களையும், மதுவகைகளையும் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் குறித்து பிரச்சாரம் செய்தல்.

xiii) ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தலும், நிறுவனங்களைக் கண்டறிதலும்.

xiv) தொண்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

xv) *1985* ஆம் ஆண்டு போதைப் பொருள்—மனமயக்கப்பொருள்கள் சட்டத்தின் (NDPS Act)கீழ்வரும் வழக்குகளை விசாரிப்பதற்குத் தனி நீதிமன்றங்கள் ஏற்படுத்துதல்.

xvi) மருத்துவம் மற்றும் அறிவியல் நோக்கங்களுக்காக வழங்கப்படும் மருந்துப் பொருட்களை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவதைத் தடுத்தல்.

xvii) போதைப்பொருள் கட்டுப்பாடு.

## 16. தடுப்புக் காவல்

*16.1* பொது ஒழுங்கைப் பராமரிப்பது மாநில அரசின் முக்கிய பணியாகும். கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், போதைப் பொருள் குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் போன்ற சமூக விரோத சக்திகளின் நடவடிக்கைகள் பொது வாழ்க்கைக்கு அபாயம் விளைவிப்பதோடு, பொது ஒழுங்கமைதியையும் மோசமாகப் பாதிக்கும். இதுபோன்ற அபாயகரமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக, அதாவது, கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், போதைப் பொருட்கள் குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளை தடுப்பதற்காக தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் போன்று, தனிச் சட்டம் ஒன்று, அதாவது தமிழ்நாடு சட்டம் *14/1982* இயற்றப்பட்டது. இச்சட்டம், *5-1-1982* ஆம் நாள் முதற்கொண்டு செயல்படத் தொடங்கியது. இச்சட்டம் சமூக விரோதச் சக்திகளைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கு அரசுக்கு அதிகாரம் அளித்துள்ளபோதும், இவ்வதிகாரங்களைத் திறம்பட பயன்படுத்துவதற்கு ஏதுவாக, சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட மாஜிஸ்டிரேட்டுகளுக்கும் ஆறு மாநகரங்களில் உள்ள காவல் துறை ஆணையாளர்களுக்கும் இவ்வதிகாரங்கள் பிரித்தளிக்கப் பட்டுள்ளன. இச்சட்டத்தின்கீழ் *30-4-1998* ஆம் நாள் வரை கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் *7,483* பேர், போதைப் பொருள் குற்றவாளிகள் *14* பேர்,



1998 மே 22]

வனக் குற்றவாளிகள் *655* பேர், குண்டர்கள் *6,987* பேர், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள் *47* பேர், குடிசை நில ஆக்கிரமிப்பாளர் *4* பேர் ஆகியோர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## 17. ஆயத் தீர்வைக் குறிப்புச் சீட்டுகளை அச்சிடுதலும் நவீன மயமாக்குதலும்

*17.1* ஆயத் தீர்வை செலுத்தாமல் ஏய்ப்பதைத் தடுப்பதற்கும், மாநிலத்திலுள்ள உரிமம் பெற்றுள்ள கடைகளில் போலியான மதுவகைகள், கள்ளச்சாராயம் போன்றவை விற்கப்படுவதைத் தடுப்பதற்கும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகை அடங்கியுள்ள புட்டிகளில் ஒட்டப்படவேண்டிய ஆயத்தீர்வைக் குறிப்புச் சீட்டுகளை அச்சிட்டு, வழங்கும் அதிகாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை ஆணையாளருக்கு அளிக்கப்பட்டுள்ளது. மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை ஆணையாளர் அலுவலகத்தில் மாநில ஆயதீர்வைக் குறிப்புச் சீட்டுகள் அச்சிடும் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. தற்போது, மூன்று முறை மாற்றுப் பணிகளில், நாளொன்றுக்கு *25.2* இலட்சம் என்ற வீதத்தில், ஒரு திங்களில் *25* பணி நாட்களில், *630* இலட்சம் ஆயத்தீர்வைக் குறிப்புச் சீட்டுக்கள் அச்சிடும் திறன் கொண்ட *3* அச்சிடும் இயந்திரங்கள் ஜப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. இவ்வாறு அச்சிடப்படும் ஆயத்தீர்வைக் குறிப்புச் சீட்டுக்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது/பீர் புட்டிகளில் ஒட்டுவதற்காக இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது வகையைத் தயாரிக்கும் ஐந்து பிரிவுகளுக்கும், பீர் தயாரிக்கும் இரு பிரிவுகளுக்கும் வழங்கப்படுகின்றன. ஏனைய மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது/பீர் புட்டிகளில் ஒட்டுவதற்காகவும், அனைத்து டாஸ்மாக் கிடங்குகளுக்கும் (டிப்போக்களுக்கும்) இந்த ஆயத்தீர்வைக் குறிப்புச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

*17.2 1997* ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரையில், இந்த ஆயத்தீர்வைக் குறிப்புச் சீட்டுகள் வண்ணத்தாள்களில், கருப்பு நிறத்தில், மட்டுமே அச்சிடப்பட்டன. போலியான குறிப்புச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு, புழக்கத்திற்கு வருவதைத் தடுக்கும்பொருட்டு, இக்குறிப்புச் சீட்டுகளை நவீனமயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு *1998* ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து கணினியால் வடிவமைக்கப்பட்டு மூன்று நிறங்களில் தற்போது அச்சிடப்பட்டும் வருகின்றன. இச்சீட்டுக்களைப் போலியாகத் தயாரிக்க முடியாத வகையில், இக்குறிப்புச் சீட்டுகளின் சேர்மான நிறங்கள் குறித்த காலத்திற்கொருமுறை மாற்றப்படுகின்றன.

[1998 மே 22

17.3 ஆயத்தீர்வைக் குறிப்புச் சீட்டு தயாரிப்பதற்கு, குறிப்புச் சீட்டு ஒன்றுக்கு தற்போது பத்து காசு செலவாகிறது. இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது/பீர் புட்டிகளில் ஒட்டுவதற்கு ஆயத்தீர்வை குறிப்புச் சீட்டுகள் வழங்கப்படும் முன்னர், இத்தொகை இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது/பீர் தயாரிக்கும் தொழில் பிரிவு உரிமதாரர்களிடமிருந்தும் டாஸ்மாக் நிறுவனத்திடமிருந்தும் சம்பந்தப்பட்ட ஆயத்தீர்வை மேற்பார்வை அதிகாரிகள் மூலம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

## 18. முடிவுரை:

18.1 கள்ளச்சாராயப் புழக்கம், வரி செலுத்தாமல் வெளி மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்படும், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், போலியான மதுவகைகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு, அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குடியின் தீமைகளிலிருந்து மக்களை மீட்பதற்கு மதுவிலக்குப் பிரச்சாரத்தையும் தொய்வின்றி செய்து வருகிறது. வடிசாலைகளையும், இரசாயனத் தொழில் பிரிவுகளையும் அடிக்கடி பார்வையிடுவதன் மூலம், தொழில் வகை சாராவி, கள்ளச்சாராயம் தயாரிக்கத் தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருக்க கூர்ந்து கண்காணிக்கப்படுகிறது. மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை, காவல் துறை ஆகிய இவ்விரு துறைகள் மூலமும் இம்மாநிலத்தில் மதுவிலக்குக் கொள்கை கண்டிப்புடன் செயல்படுத்தப்படும்.



1998 மே 22]

## இணைப்பு - 1

### இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள் மற்றும் அவற்றில் கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத்திறன் பற்றிய விவரங்கள்

| தொ. எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| 1 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 11,000 |
| 2 | மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 3 | திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 4 | தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 5 | சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 6 | நேஷனல் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 17,000 |
| 7 | மதுரா சுகர்ஸ் | 6,000 |
| 8 | இராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 12,000 |
| 9 | ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 7,000 |
| 10 | திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 10,000 |
| 11 | வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 21,000 |
| 12 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 18,000 |
| 13 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் அலகு-2 | 12,000 |
| 14 | பன்னாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 12,000 |
| 15 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம், திருநெல்வேலி மாவட்டம் | 12,600 |
| 16 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் அலகு-2, திருவண்ணாமலை மாவட்டம் (புதிதாக நிறுவப்பட்ட சர்க்கரை ஆலை) | 10,000 |
| 17 | செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 16,000 |

[1998 மே 22

| தொடர் எண் | சர்க்கரை ஆலையின் பெயர் | கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிப்புத் திறன் (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| 18 | கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 15,000 |
| 19 | எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 20 | அருணா சுகர்ஸ் அண்டு எண்டர்பிரைசஸ் நிறுவனம் | 25,000 |
| 21 | ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம் | 18,000 |
| 22 | சௌத் இந்தியா சுகர்ஸ் நிறுவனம் | 16,500 |
| 23 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 19,000 |
| 24 | பொன்னி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 8,400 |
| 25 | என்.பி.கே.ஆர். இராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 18,000 |
| 26 | அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை நிறுவனம் | 14,000 |
| 27 | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் அலகு-1 | 14,500 |
| 28 | திரு. ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் அலகு-2 | 12,000 |
| 29 | பெரம்பலூர் சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 30 | காவேரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 7,000 |
| 31 | கோத்தாரி சுகர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் நிறுவனம் | 13,300 |
| 32 | செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 12,000 |
| 33 | எஸ்.வி.சுகர்ஸ் நிறுவனம் | 9,200 |
| 34 | டெக்கான் சுகர்ஸ் (ஈ.ஐ.டி. புகலூர்) | 14,700 |
| | மொத்தம் | **4,61,800** |



1998 மே 22]

## இணைப்பு - 2

### வடிசாலைகள்-சாராவி உற்பத்தி

| தொடர் எண் | வடிசாலையின் பெயர் | கருப்பஞ்சாற்றுக் கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்ட அளவு | கருப்பஞ்சாற்றுக் கசண்டு சேமிக்கும் திறனளவு | 1996-97 ஆம் ஆண்டில் சாராவி உற்பத்தி அளவு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (மெட்ரிக் டன்களில்) | (மெட்ரிக் டன்களில்) | (இலட்சம் லிட்டர்களில்) |
| | **தனியார் துறையிலுள்ள வடிசாலைகள்:** | | | |
| | **திருவாளர்கள்:** | | | |
| 1 | ஆரூரான் சுகர்ஸ் நிறுவனம் | 50,000 | 15,400 | 127.50 |
| 2 | அருணா சுகர்ஸ் மற்றும் எண்டர்பிரைசஸ் நிறுவனம் | 50,000 | 12,840 | .. |
| 3 | பன்னாரி அம்மன் சுகர்ஸ் நிறுவனம் | 71,350 | 22,800 | 124.57 |
| 4 | கெம்பிளாஸ்ட் சன்மார் நிறுவனம், மரிகம்பள்ளி, அலகு-1 | 65,000 | 15,000 | 52.88 |
| 5 | கெம்பிளாஸ்ட் சன்மார் நிறுவனம், காடாம்புலியூர், அலகு-2 | 1,10,000 | 26,468 | 171.40 |
| 6 | தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 36,000 | 12,600 | 45.56 |
| 7 | ஈ.ஐ.டி. பாரி (இந்தியா) நிறுவனம் | 45,000 | 14,077 | 107.47 |
| 8 | கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 10,000 | 76.38 |

| தொடர் எண் | வடிசாலையின் பெயர் | கருப்பஞ் சாற்றுக் கசண்டு வைத்துக் கொள்ள அனுமதிக்கப் பட்ட அளவு | கருப்பஞ் சாற்றுக் கசண்டு சேமிக்கும் திறனளவு | 1996-97 ஆம் சாராவி ஆண்டில் சாராவி உற்பத்தி அளவு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (மெட்ரிக் டன்களில்) | (மெட்ரிக் டன்களில்) | (இலட்சம் லிட்டர்களில்) |
| 9 | ராஜ்ஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 40,000 | 12,000 | 61.47 |
| 10 | சதர்ன் அக்ரிபுரேன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம் | 12,500 | 2,250 | 16.99 |
| 11 | சக்தி சுகர்ஸ் நிறுவனம் | 78,260 | 23,950 | 201.58 |
| 12 | திருச்சி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | 1,10,000 | 26,200 | 71.24 |
| 13 | மோகன் புருவரீஸ் மற்றும் டிஸ்டிலரீஸ் நிறுவனம் | 45,000 | 11,788 | 78.43 |
| 14 | பவானி டிஸ்டிலரீஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனம் | உற்பத்தி தொடங்க உள்ளது. | | |
| | கூட்டுறவுத் துறையிலுள்ள வடிசாலைகள் | | | |
| 15 | சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 12,000 | 23.22 |
| 16 | அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவனம் | 55,000 | 11,000 | 17.07 |



## இணைப்பு - 3

### இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மது மற்றும் பீர் உற்பத்தி பற்றிய விவரங்கள்

#### இந்தியாவில் தயாரிக்கப்படும் மதுவகை உற்பத்தி

| ஆண்டு | அளவு (இலட்சம் பல்க் லிட்டர்களில்) |
|---|---|
| 1993-94 | 702.88 |
| 1994-95 | 810.21 |
| 1995-96 | 812.82 |
| 1996-97 | 1278.50 |
| 1997-98 | 1089.75 |

#### பீர் உற்பத்தி

| ஆண்டு | அளவு (இலட்சம் பல்க் லிட்டர்களில்) |
|---|---|
| 1993-94 | 385.52 |
| 1994-95 | 417.77 |
| 1995-96 | 578.87 |
| 1996-97 | 533.42 |
| 1997-98 | 524.93 |

## இணைப்பு - 4

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் (டாஸ்மாக்) பல்வேறு தலைப்புகளின் கீழ் செய்த விற்பனை அளவு விற்றுமுதல் மற்றும் அரசுக்குச் செலுத்திய வருவாய் ஆகியவற்றைக் காட்டும் விவர அறிக்கை

| ஆண்டு | இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல் நாட்டு மது வகை | விற்பனை பீர் | விற்றுமுதல் (இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு மது வகை மற்றும் பீர்) | ஆயத் தீர்வை | விற்பனைக் கட்டணம் | கூடுதல் விற்பனைக் கட்டணம் | விற்பனை வரி | இறக்குமதி உரிமக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| | (பெட்டிகளின் எண்ணிக்கை) (இலட்சங்களில்) | | | (ரூபாய் கோடியில்) | | | | |
| 1992-93 | 85.82 | 65.27 | 905.23 | 55.10 | 18.44 | 92.73 | 129.38 | 5.00 |
| 1993-94 | 90.41 | 59.68 | 995.66 | 38.94 | 18.87 | 91.90 | 128.18 | 4.64 |
| 1994-95 | 93.61 | 68.55 | 1173.49 | 35.83 | 20.53 | 109.13 | 148.33 | 5.36 |
| 1995-96 | 115.34 | 94.71 | 1518.61 | 42.76 | 25.33 | 144.96 | 193.13 | 6.79 |
| 1996-97 | 139.57 | 100.43 | 1824.07 | 63.52 | 38.79 | 166.55 | 245.83 | 10.57 |
| 1997-98 | 130.40 | 101.79 | *1985.39 | 64.76 | 45.52 | 185.04 | 279.73 | 23.60 |

*தணிக்கைக்கு உட்பட்டு



## இணைப்பு - 5

### ஆயத் தீர்வை வருவாய்

| வருவாய்த் தலைப்பு. | 1992-93 | 1993-94 | 1994-95 | 1995-96 | 1996-97 | 1997-98 |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | | | (ரூபாய் கோடியில்) | | | |
| 1. நாட்டுச் சாராவி (சாராயம்) | 0.42 | 0.54 | 0.88 | 0.01 | 3.98 | 0.98 |
| 2. புளிக்க வைக்கப்பட்ட நாட்டு மது (கள்) | 0.15 | 0.17 | 0.20 | 0.14 | 0.39 | 0.36 |
| 3. மால்ட் வகை (பீர்) | 26.98 | 27.03 | 40.09 | 70.88 | 72.59 | 74.92 |
| 4. அயல்நாட்டு மது, சாராவி மற்றும் இயல்பு மாற்றப்பட்ட சாராவி | 520.44 | 510.80 | 490.06 | 807.51 | 938.10 | 1209.11 |
| 5. வணிக ரீதியாக இயல்பு மாற்றப்பட்ட சாராவி | (-)1.00 | 0.07 | 0.11 | 2.36 | 0.26 | 0.34 |
| 6. மருந்து மற்றும் ஒப்பனைப் பொருட்கள் தயாரிப்பு | 3.21 | 3.99 | 4.60 | 5.81 | 5.30 | 5.96 |
| 7. அபின், ஹெம்ப், ஏனைய மருந்துப் பொருட்கள் | 0.10 | 0.01 | 0.01 | 0.01 | 0.02 | 0.02 |
| 8. அபராதங்களும், பறிமுதல்களும் | 3.58 | 15.22 | 13.57 | 13.27 | 8.59 | 3.82 |
| 9. பணியும், பணிக்கட்டணங்களும் | 5.25 | 4.07 | 3.75 | 5.86 | 8.56 | 6.83 |
| 10. ஏனைய வரவினங்கள் | 5.73 | 6.92 | 61.37 | 27.81 | 25.28 | 7.78 |
| மொத்தம் | **564.86** | **568.82** | **614.64** | **934.66** | **1063.07** | **1310.12** |

**இணைப்பு-II**

*(...36 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் 15**

## காவல்துறை

## குறித்த கொள்கைக் குறிப்பு 1998-99

### 1. முன்னுரை

வீரம், மான உணர்வு, முன்னோர் சென்றவழி நடத்தல், தலைவரின் நம்பிக்கையைப் பெறுதல் ஆகிய நான்கும் படையைப் பாதுகாக்கும் பண்புகளாகும்.

*"மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்*
*எனநான்கே ஏமம் படைக்கு"*

- குறள் - அதிகாரம் 77-6

1.2 அவ்வப்போது மாறிவரும் அரசியல், சமுதாய, பொருளாதார சூழலில், நாட்டில் பொது அமைதியை நிலைக்கச் செய்யவும் அனைவரும் சுதந்திரமாகவும், தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ள கொள்கை கோட்பாடுகளுக்கு இடையூறின்றியும் வாழ்க்கை நடத்திடவும் காவல்துறை பேருதவி புரிகிறது.

இதனை உணர்ந்துதான் இந்த அரசு காவல்துறையை நவீனப்படுத்தியும், காவலர்களுக்கு வேண்டிய சலுகைகளையும், வசதிகளையும் கூடுதலாக வழங்கியும் பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளைக் கடந்த இரண்டாண்டுகளில் மேற்கொண்டதன் மூலம் எந்தச் சூழ்நிலையையும் சமாளிக்கும் அளவுக்குத் துறையைத் தயார்படுத்தியுள்ளது.

### சட்டம் மற்றும் ஒழுங்கு

1.3 சட்டம்-ஒழுங்கைப் பொறுத்தவரையில், சமூக விரோத சக்திகளின் சவால்கள் இருப்பினும், தீவிர கண்காணிப்பின் பயனாக மாநிலத்தில் கடந்த ஆண்டில் பொதுவாக அமைதி நிலவியது. பிரச்சினைகள் எழும்போதெல்லாம், அவற்றை முளையிலேயே கிள்ளியெறிய காவல்துறை உடன் நடவடிக்கை எடுத்து வந்துள்ளது.

[1998 மே 22

குண்டர்கள் சட்டம், கள்ளச் சாராயக் குற்றவாளிகள் சட்டம் மற்றும் தேசியப் பாதுகாப்புச் சட்டம் போன்ற கடுமையான சட்டங்களைப் பயன்படுத்தி தமிழ்நாடு காவல்துறையினர் சமூக விரோத சக்திகளை ஒடுக்கினர். பிப்ரவரி 1998-க்குப் பிறகு தமிழகத்தில் முழுமையாக அமைதி நிலவுகிறது.

### சமுதாய நீதி

1.4 தமிழ்நாடு காவல்துறை, வரதட்சணை ஒழிப்புச் சட்டம், மதுவிலக்குச் சட்டம், விபச்சாரத் தடுப்புச் சட்டம், குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் ஆகிய சட்டங்களைத் திறம்பட நிறைவேற்றி, சமுதாய நீதியையும் சமத்துவத்தையும் நிலைநாட்டுவதில் முன்னணியில் நிற்கிறது.

### 1998-99 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு

1.5 காவல்துறையின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த, 1998-99-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி ரூ.709.30 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 2. காவல் துறையின் நிருவாக அமைப்பு

### உயர்நிலை நிருவாகம்:

2.1 காவல்துறைத் தலைமை இயக்குநர் தலைமையின்கீழ் தமிழ்நாடு காவல்துறை செயல்படுகிறது. காவல்துறையின் ஒட்டுமொத்த நிருவாகப் பொறுப்பு இவரிடம் உள்ளது.

2.2 காவல்துறைத் தலைமை இயக்குநருக்கு உதவியாக, காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), காவல்துறைத் தலைவர் (சட்டம் மற்றும் ஒழுங்கு), காவல்துறைத் தலைவர் (நிருவாகம்) ஆகியோர் காவல்துறைத் தலைமை இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றி வருகின்றனர்.

2.3 மாநிலத்தில் சட்டம்—ஒழுங்குப் பராமரிப்புக் குறித்த அனைத்துப் பணிகளிலும் காவல்துறைத் தலைமை இயக்குநருக்குக் கூடுதல் தலைமை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) மற்றும் காவல்துறைத் தலைவர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) இருவரும் உதவி வருகின்றனர்.

2.4 காவல்துறையினரின் செயல்பாடுகளுக்குத் தேவையான பணியாளர்கள் குறித்து திட்டமிடல், காவல் பணியாளர்களின் பணிகள்,



1998 மே 22]

அவர்களது நலன்கள் ஆகியவற்றைக் காவல்துறைத் தலைவர் (நிருவாகம்) கவனித்து வருகிறார்.

2.5 கணிப்பொறிப் பிரிவு உட்பட காவல்துறையினை நவீனமயமாக்கும் திட்டம் மற்றும் தொழில்நுட்பப் பணிகளுக்குக் காவல்துறைத் தலைவர் (பணியாளரமைப்பு) பொறுப்பு வகிக்கிறார்.

2.6 காவலர் பயிற்சி மையத்திற்குத் தலைவராக ஒரு காவல்துறைத் தலைமை இயக்குநர் உள்ளார். அவர், தமிழ்நாடு காவல்துறைக் கல்விக் கழகத்தின் திட்ட அதிகாரியாகவும் உள்ளார்.

2.7 காவலர் குடியிருப்புகள் மற்றும் வீட்டைச் சொந்தமாக்கிக் கொள்ளும் திட்டத்தின்கீழ் குடியிருப்புகள்/கூடங்கள் ஆகியவற்றைக் கட்டிக்கொடுக்கும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம், ஒரு காவல்துறைத் தலைமை இயக்குநரின் தலைமையில் இயங்கி வருகிறது.

2.8 காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (குற்றப் பிரிவு) தலைமையில் மாநில குற்றப் புலனாய்வுப் பிரிவு இயங்கி வருகிறது. மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் கிளைவிட்டுப் பரவியிருக்கும் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியினைக் கண்காணிக்கும் பொறுப்பினை இவர் ஏற்றுள்ளார்.

2.9 காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (தமிழ்நாடு சிறப்புப் புலனாய்வுப் பிரிவு) 'தடா' வழக்குகளைக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளார்.

2.10 காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் (சிறப்புப் பணிகள்), காவல்துறைத் தலைவர்கள் (தொழில்நுட்பப் பிரிவு), (செயலாக்கம்) மற்றும் (கடலோரப் பாதுகாப்புப் படை) ஆகியோருடைய பணிகளைக் கண்காணித்து வருகிறார்.

2.11 பொருளாதாரக் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணிக்குக் காவல்துறைத் தலைவர் (பொருளாதாரக் குற்றங்கள் தடுப்புப் பிரிவு) பொறுப்பு வகிக்கிறார். சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு மற்றும் காவல்துறை ஆய்வு மையம் ஆகியவையும் இவரது கட்டுப்பாட்டில் உள்ளன.

2.12 காவல்துறைத் தலைவர் (உளவுத் தகவல்-குற்றப் புலனாய்வுத் துறை) சிறப்புப் பிரிவு விவகாரங்களையும், மாநிலத்தின் பாதுகாப்போடு தொடர்புடைய உளவுத் தகவல்களையும் திரட்டி, வகைப்படுத்தி, தெரிவிக்கும் பணியையும் மற்றும் பெருமக்களின் பாதுகாப்பு ஏற்பாடு

[1998 மே 22

களை ஒருங்கிணைக்கும் பணியையும் மேற்கொள்கிறார். தமிழக முதல்வர் மற்றும் இதர Z+வகை சிறப்புப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியவர்களின் அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கென புலனாய்வுத் துறையின் பாதுகாப்புப் பிரிவில் தனியாக 'கோர் செல்' என்ற ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. காவல்துறைத் தலைவரின் (உளவுப் பிரிவு) கீழ், காவல்துறைக் கண்காணிப்பாளர் (க்யூ பிரிவு), தீவிரவாதிகள் மற்றும் போராளிகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, அவர்களை ஒடுக்குவதற்கான பணிகளை ஒருங்கிணைக்கிறார்.

2.13 மாநிலத்தில் கடலோர எல்லைகளில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு காவல்துறைத் தலைவரின் கீழ் கடலோரப் பாதுகாப்புப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது.

2.14 மாநிலத்தில் குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டப் பிரிவின் செயல்பாடுகளைக் காவல்துறைக் கூடுதல் இயக்குநர் (சமுதாய நீதி) கவனித்து வருகிறார். இச் சட்டத்தை அமல்படுத்த தனிப்படைகள் மாவட்டந்தோறும் உள்ளன. காவல்துறைக் கூடுதல் இயக்குநரின் மேற்பார்வையில் ஒரு காவல்துறைத் துணைத்தலைவர் (குடியியல் உரிமைப் பாதுகாப்புப் பிரிவு) பணியாற்றி வருகிறார்.

2.15 உணவுப் பொருட்கள் புலனாய்வுப் பிரிவு செயல்பாடுகளை ஒரு கூடுதல் காவல்துறை இயக்குநர் கவனித்து வருகிறார். இவரது மேற்பார்வையில் காவல்துறைத் துணைத் தலைவர் (உணவுப் பொருட்கள் வழங்கல் கண்காணிப்புப் பிரிவு) இன்றியமையாப் பொருட்கள் சட்ட அமலாக்கத்தையும் கவனித்து வருகிறார்.

2.16 காவல்துறைத் தலைவர் (ஆயுதப் படை) தலைமையின்கீழ் 11 ஆயுதப் படைப் பிரிவுகளும், ஆவடியில் படைப் பயிற்சி மையமும் இயங்கி வருகின்றன.

2.17 மாநிலத்தில், அரசு இரயில்வே காவல் படையினரின் செயல்பாடு களைக் காவல்துறைத் தலைவர் (இரயில்வே) கவனித்து வருகிறார்.

2.18 காவல்துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்புத் துறைகளில் சீருடைப் பணியாளர் தேர்வு முறையை நெறிப்படுத்த காவல்துறைத் தலைமை இயக்குநர் தலைமையில் 'தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம்' ஒன்று செயல்பட்டு வருகிறது.

2.19 தமிழ்நாட்டில் குடிமக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது உள்ளிட்ட பிற முக்கியப் பணிகளையும் மேற்கொண்டு வரும் ஊர்க்காவல் படையின்



1998 மே 22]

தலைவராகக் காவல்துறைத் தலைவர் (ஊர்க்காவல் படை) செயல்பட்டு வருகிறார்.

2.20 தமிழ்நாட்டிற்கென அனுமதிக்கப்பட்ட இந்தியக் காவல் பணி அதிகாரி பதவிகளின் எண்ணிக்கை 200 ஆகும். 1-1-1998 நிலவரப்படி 166 அதிகாரிகள் உள்ளனர். 1997-ஆம் ஆண்டில் ஏழு இந்தியக் காவல் பணி அதிகாரிகள் பணியிலிருந்து ஓய்வு பெற்றதையடுத்து, பதவி உயர்வு அடிப்படையில் தமிழகக் காவல்துறை அதிகாரிகள் ஏழு பேர் அப்பணியிடங்களுக்கு நியமிக்கப்பட்டனர்.

2.21 1-1-1998 நிலவரப்படி தமிழ்நாடு காவல்துறைக்கு ஏற்பளிக்கப்பட்ட மொத்த பதவிகளின் எண்ணிக்கை 86,071 ஆகும்.

2.22 சட்டம்-ஒழுங்கு பராமரிப்பில் உள்ளூர் காவல்துறையினருக்கு உதவியாக ஆயுதப் படையின் 223 பிரிவுகளும், தமிழ்நாடு சிறப்புக் காவல்படையின் 11 அணிகளும் திறம்படப் பணியாற்றி வருகின்றன. ஆயுதக் காவல் படையின் ஓர் அணி, அயல்பணி அடிப்படையில் புது தில்லி திஹார் சிறை வளாகப் பாதுகாப்பிற்காகச் செயல்பட்டு வருகிறது.

## காவல்துறையில் உள்ள சிறப்புப் படைப் பிரிவுகள்

### காவல்துறை அதிவிரைவுப் படை, அதிவிரைவுப் படை பயிற்சிப் பள்ளி ஆகியவற்றை ஏற்படுத்துதல்:

2.23 தமிழ்நாடு காவல்துறை அதிவிரைவுப் படையில் ஒரு கண்காணிப்பாளர், 3 துணைக் கண்காணிப்பாளர்கள், 8 ஆய்வாளர்கள், 2 ஆய்வாளர்கள் (பயிற்சி), 36 உதவி ஆய்வாளர்கள், 4 உதவி ஆய்வாளர்கள் (பயிற்சி), 49 தலைமைக் காவலர்கள், 20 முதல் நிலைக் காவலர்கள், 177 காவலர்கள் ஆகியோரும், தமிழ்நாடு அதிவிரைவுப் படைப் பயிற்சிப் பள்ளியில் ஒரு காவல் கண்காணிப்பாளரும், ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளரும், ஒரு துணைக் காவல் கண்காணிப்பாளரும், ஒரு பயிற்சி துணைக் காவல் கண்காணிப்பாளரும், 11 ஆய்வாளர்களும், 22 உதவி ஆய்வாளர்களும், 37 தலைமைக் காவலர்களும், 10 முதல் நிலைக் காவலர்களும், 43 காவலர்களும் பணியாற்றி வருகின்றனர்.

### தமிழ்நாடு காவல்துறை அதிவிரைவுப் படையினரின் பணிகள்:

2.24 மதக் கலவரங்களால் பேராபத்து விளையக் கூடிய நிலைமையின் போதும், மற்ற முக்கியமான சூழ்நிலைக் காலங்களின் போதும், இப்படை

பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றது. மேலும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் துல்லியமான உளவுத் தகவலின் பேரில் குறிப்பிட்ட பயங்கரவாதச் செயல்களை ஒடுக்கவும் இப்படை பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. இப்படையின் எண்ணிக்கை மிகக் குறைந்த அளவிலேயே உள்ளதாலும் படையினர் தொடர்ந்து பயிற்சி மேற்கொண்டு வருவதாலும், பெருமக்களின் பாதுகாப்புப் பணி, வழித்துணைப் பாதுகாப்புப் பணி போன்றவற்றில் இப்படையினரை ஈடுபடுத்துவதைவிட மாநிலத்தின் ஒட்டுமொத்த நலனுக்காகவும், பாதுகாப்புக்காகவும் ஏற்படுத்தப்பட்ட இப்படையினரை அவர்களுக்கு உரிய பணிகளில் மட்டுமே பயன்படுத்துவதுதான் சரியானதாக இருக்கும். இருப்பினும், சீர் பெருமக்கள் பங்குகொள்ளும் இடங்களில், பயங்கரவாதச் செயல்கள் நடைபெறக் கூடுமெனக் கருதப்படும் இடங்களில், இப்படையினர் தயார் நிலையில் நிறுத்தப்படுகின்றனர்.

## தமிழ்நாடு அதிவிரைவுப் படையினரின் சாதனைகள்:

2.25 நடப்பாண்டில், இப்படையினர், விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள், இனக்கலவரங்கள், விடுதலைப்புலிகளை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லுதல், இந்திய பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளின் பாதுகாப்புப்பணிகள், தஞ்சாவூரில் குடமுழுக்கு விழா பணி, திருநெல்வேலி, சிவகாசி, தஞ்சாவூர், ராஜபாளையம், ஆண்டிமடம் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளில் அதிவிரைவு நடவடிக்கைப் பணிகள், தலித்துகள் மற்றும் டாக்டர் அம்பேத்கர் விடுதலை முன்னணியினரின் பேரணிப் பாதுகாப்புப் பணிகள், விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தின்போது பாதுகாப்புப் பணிகள், சென்னை, கோவை மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் அதிரடி நடவடிக்கைப் பணிகள், கோவை மற்றும் சென்னையில் தேர்தல் பணிகள் போன்ற முக்கியப் பணிகளில் ஈடுபட்டனர்.

## தமிழ்நாடு அதிவிரைவுப் படை பயிற்சிப் பள்ளியின் பணிகள்:

2.26 அதிவிரைவுப்படை பயிற்சி, ஆயுதங்களை உத்திகளுடன் கையாளும் பயிற்சி, வெடிகுண்டுகளைக் கண்டறிந்து அவற்றைச் செயலிழக்கச் செய்யும் பயிற்சி, சீர் பெருமக்கள் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய பணிகள், மோப்ப நாய்கள் மற்றும் மோப்ப நாய்களைக் கையாளுபவர்களுக்கான பயிற்சி ஆகியவற்றில், இப்பள்ளி இந்நாட்டின் முக்கிய பயிற்சி மையமாகத் திகழும் வண்ணம் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. வருடாந்திரப் பயிற்சி அட்டவணையைத் தயாரித்து. புதுப்புது முறையிலான பயிற்சியையும் உருவாக்கி வருகிறது.



இப்பள்ளி அதிவிரைவுப் படையினருக்குப் பயிற்சி அளிப்பதுடன், மாநிலத்தில் உள்ள காவல்துறைத் தலைவர் முதல் காவலர் வரையில் உள்ளவர்களுக்கு சிறப்புப் பயிற்சிகளையும், இதர மாநிலங்களிலிருந்து பயிற்சி பெற விரும்புபவர்களையும், மத்திய ஆயத் தீர்வைத் துறை, வங்கிகள், காப்பீட்டுக் கழகங்கள், சிறைத் துறை, தடய அறிவியல் துறை ஆகியவற்றைச் சேர்ந்தவர்களையும் பயிற்சி பெற ஈர்க்கும் விதத்தில் அனைத்துத் திறமைகளையும், வசதிகளையும் பெற்றுள்ளது. இவ்வசதிகளை மேலும் விரிவுபடுத்தி மேம்படுத்த வாய்ப்பும் உள்ளது.

## தமிழ்நாடு அதிவிரைவுப் படை பயிற்சிப் பள்ளியின் சாதனைகள்:

2.27 தமிழ்நாடு அதிவிரைவுப்படை பயிற்சிப் பள்ளி ஒரு தலையாய பயிற்சி மையமாகச் செயல்படுகிறது. பல தரப்பட்ட பயிற்சி வகுப்புகளைப் பின்வருமாறு நடத்துகிறது :

| வரிசை எண். | பயிற்சி. | காலம். |
|---|---|---|
| 1. | அதிவிரைவுப்படை பயிற்சி | 12 வாரங்கள் |
| 2. | வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் பயிற்சி. | 6 வாரங்கள் |
| 3. | சிறு ஆயுதங்களைக் கையாளும் பயிற்சி | 6 வாரங்கள் |
| 4. | நிராயுதபாணி போர் பயிற்சி | 4 வாரங்கள் |
| 5. | அதிமுக்கிய நபர்கள் பாதுகாப்புப் பயிற்சி | 4 வாரங்கள் |
| 6. | தனிப்பட்ட நபர் பாதுகாப்பு அதிகாரி பயிற்சி | 4 வாரங்கள் |
| 7. | நாசவேலை முறியடிப்புப் பயிற்சி. | 6 நாட்கள் |
| 8. | ஆயுதப் பயிற்சி (கோர் செல் பிரிவுக்காக) | 2 நாட்கள் |
| 9. | தனிப்பட்ட நபர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கான ஆயுதப் பயிற்சி. | 1 நாள் |
| 10. | கோவா காவலர்களுக்கான, படைக்கலன்கள் பராமரிப்பவர் பயிற்சி. | 1 நாள் |
| 11. | தனிப்பட்ட நபர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கான வெடிகுண்டு மற்றும் வெடி பொருட்கள் குறித்த பயிற்சி. | 1 நாள் |
| 12. | தேசிய காவல் கழக பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்தவர்களுக்கான துப்பாக்கிச் சுடும் பயிற்சி குறித்த செயல்முறை விளக்கம். | 1 நாள் |
| 13. | தனிப்பிரிவு பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்தவர்களுக்கு ஆயுதப் பயிற்சி. | 1 நாள் |

2.28 அதிவிரைவுப்படைப் பயிற்சி நிலையம் காவல் பணியாளர்களுக்கென தனியாக தொடக்கநிலை பயிற்சி அளிக்கிறது. இது தவிர, வெடிபொருட்களைக் கண்டுபிடிப்பது, சுங்க மற்றும் ஆயத்தீர்வைத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு ஆயுதப் பயிற்சி, வங்கி பாதுகாப்பு அலுவலர்களுக்கு நாச வேலை தடுப்பு நடவடிக்கை குறித்த பயிற்சி, ரிசர்வ் வங்கி கல்லூரியைச் சேர்ந்த பயிற்சியாளருக்கும் இரயில்வே பாதுகாப்புப் படையினருக்கும் வெடி பொருள் கையாளும் பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகின்றன. தமிழ்நாடு அதிவிரைவுப்படைப் பிரிவும், அதற்கான பயிற்சிப் பள்ளியும் காவல்துறைத் தலைவர் (செயலாக்கம்) மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

## திருக்கோயில் பாதுகாப்புப் படை:

2.29 திருக்கோயில் பாதுகாப்புப் படையில் இரண்டாம் நிலைக் காவலர்கள் 1,000 பேரும், முன்னாள் இராணுவ வீரர்கள் 3000 பேரும் உள்ளனர். திருக்கோயில் மற்றும் திருக்கோயில் சொத்துக்களுக்கு இப்படை நேரடியாகப் பாதுக்காப்பு அளிக்கிறது.

## பெண் காவலர்கள்:

2.30 பெண் காவலர் பிரிவு 1973 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. கடத்தப்பட்ட இளம் பெண்களை மீட்பது, காணாமல் போன குழந்தைகளை மீட்பது, விபச்சாரத் தடுப்புப் பிரிவு சட்டத்தின்கீழ் காவலர்கள் நடத்தும் சோதனைகளில் உதவுவது, பெருங்கூட்டங்களின் போது பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவது, பெண்கள் திரளாக இருக்கும் இடங்களில் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வது, துறைமுகம் மற்றும் விமான நிலையம் போன்ற இடங்களில் பெண் பயணிகளைச் சோதனை செய்வது, காவல் தொலைபேசி இணைப்பகத்தை நிர்வகிப்பது போன்றவை பெண் காவல் பணியாளர்களின் முக்கியமான கடமைகளாகும். தமிழ்நாடு காவல் துறையினருக்கு இப்பெண் காவலர் பிரிவு வெற்றிகரமாகவும், பயனுள்ள வகையிலும் உதவி வருகிறது. தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள் அதிகரிப்பு காரணமாக, வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குடும்பத்தில் ஓர் அங்கமாக பெண்களும் வேலை செய்து பொருளீட்டும் காலம் இது. எனவே, பெரும்பான்மையான இடங்களில் பெண் காவலர்கள் பணி தேவைப்படுகிறது. தற்போது மிகக் குறைவான எண்ணிக்கையில் உள்ள பெண் காவலர்கள், அதிகரித்து வரும் பணிச் சுமையைச் சமாளிக்க முடியாத நிலையில் உள்ளனர். இதனைக் கருத்தில் கொண்டு, பெண்கள்



சம்பந்தமான பிரச்சினைகள் குறித்த குற்றங்களைக் கையாள "மகளிர் காவல் நிலையங்கள்" சென்னை நகரில் மூன்று காவல் நிலையங்கள் உட்பட தமிழ்நாடு முழுவதிலும் 57 இடங்களில் இயங்கி வருகின்றன. 01-01-98 ஆம் நாளில் உள்ளபடி மகளிர் காவல் பிரிவின் அனுமதிக்கப்பட்ட மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 2,894 ஆகும். இவர்களில் 26 துணைக் கண்காணிப்பாளர்களும், 72 ஆய்வாளர்களும், 263 உதவி ஆய்வாளர்களும், 554 தலைமைக் காவலர்களும், 1,979 காவலர்களும் உள்ளனர்.

## இரயில்வே காவல்படை:

2.31 தமிழ்நாடு காவல் துறையின்கீழ் இப்படை இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் இரயில்வே துறையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் முழுமையும் இதன் அதிகார வரம்பின்கீழ் வருகிறது. இரயில்வே சொத்துக்களின் பாதுகாப்புக்காக மட்டுமே உருவாக்கப்பட்ட இரயில்வே பாதுகாப்புப் படைக்கும், தமிழ்நாடு காவல்துறையின் கீழ் இயங்கி வரும் இரயில்வே காவல் படைக்கும் வேறுபாடு உண்டு. இரயில்வே சொத்துக்களைப் பாதுகாக்கும் படைக்கு, காவல் பணிக்கான அதிகாரங்கள் இல்லை. இந்தியத் தண்டனைச் சட்டம், குற்ற நடைமுறைச் சட்டம், இந்திய இரயில்வே சட்டம், மற்றும் குற்றங்களைக் கண்டுபிடித்தல்/ தடுத்தல், சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு, இரயில்வே சொத்துக்கள் மற்றும் அமைப்புகளைப் பாதுகாத்தல் ஆகியவை தொடர்பான சட்டங்களின்கீழ் நடவடிக்கை எடுக்க இரயில்வே நிருவாகம், தமிழ்நாடு காவல்துறையின்கீழ் இயங்கி வரும் இரயில்வே காவல் படையைப் பயன்படுத்தி வருகிறது. மேலும், இப்படையினர், இரயில்களில் செல்லும் பயணிகளுக்கும், இரயில்வே பிளாட்பாரங்களிலும் பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நடப்பு ஆண்டில், இரயில்களிலும் இதர பகுதிகளிலும் அதிகுற்ற நிகழ்வு இடங்களைக் கண்டறிந்து அதற்கென சிறப்புப் பாதுகாப்புப் பணிகளில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளனர். முக்கியமான சில வழக்குகளில் தனிப்படை அமைக்கப்பட்டு, புலனாய்வு செய்யவும் ஐயத்திற்கு இடமான கும்பலை இனம் கண்டறியவும் அவ்வழக்குகள் இரயில்வே காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டன. இப்படையின் செலவினங்களைத் தமிழ்நாடு அரசும், இரயில்வே நிர்வாகமும் சரி சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

## விமான நிலையப் பாதுகாப்புப் படை:

2.32 நாசவேலை தடுப்புப் பணிகள், விமானக் கடத்தல் தடுப்புப் பணிகள் மற்றும் விமான நிலையத்தில் அனைத்துப் பாதுகாப்புப்

பணிகளையும் விமான நிலையப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். சுமார் 14 கிலோ மீட்டர் சுற்றளவில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு விமான நிலைய எல்லையில் விழிப்புடன் பாதுகாப்புப் பணிகளை இப்படை செய்து வருகிறது. புதுடில்லி மத்திய அரசு விமானப் போக்குவரத்துத் துறைத் தலைமை இயக்குநரின் உத்தரவுகளின்படி விமான நிலையப் பாதுகாப்புப் படை செயல்படுகிறது. காவல்துறை ஆய்வாளர் ஒருவரின் தலைமையின்கீழ் விமான நிலையப் பாதுகாப்புப் படை திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும் இயங்கி வருகிறது. விமானக் கடத்தல் தடுப்புப் பணி மற்றும் இதர பாதுகாப்புப் பணிகளை இப்படையினர் செய்து வருகின்றனர். மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கென தனியாக ஒரு காவல் நிலையம் 23-01-1995 அன்று தொடங்கப்பட்டது. காவல்துறை துணை ஆணையர் (பாதுகாப்பு மற்றும் விமானக் கடத்தல் தடுப்பு) மேற்பார்வையில் இயங்கி வரும் இக்காவல் நிலையம், சட்டம்—ஒழுங்கு பராமரிப்பு, குற்றத் தடுப்பு, போக்குவரத்து மற்றும் கடவுச்சீட்டுச் சட்டம் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் கவனித்து வருகிறது.

## கடலோரப் பாதுகாப்புப் படை:

2.33 தமிழ்நாட்டில் சுமார் ஆயிரம் கிலோ மீட்டர் கடலோர எல்லை உள்ளது. பெட்ரோலியப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், ஆயுதம் மற்றும் வெடிபொருட்கள், இதர இன்றியமையாப் பொருட்கள் போன்றவற்றை இலங்கைக்குக் கடத்துவதைத் தடுக்கவும், இலங்கையிலிருந்து போராளிகள் ஊடுருவதைத் தடுக்கவும், கடலோர எல்லையில் தீவிரப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளவும் 60 சோதனைச் சாவடிகளுடன் ஒரு கடலோரப் பாதுகாப்புப் படை ஏற்படுத்தப்பட்டது. இப்படை, காவல்துறைத் தலைவர் ஒருவர் தலைமையில் 1078 காவல் பணியாளர்களுடன் இயங்கி வருகிறது. இப்படைக்கென, 2 கார்கள், 23 ஜீப்புகள், 4 பேருந்துகள், 34 மோட்டார் சைக்கிள்கள், 300 மிதிவண்டிகள் மற்றும் தொலைத் தொடர்பு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இலங்கைப் போராளிகளோடு கடலோரப் பகுதியில் வசிப்பவர்கள் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பதாகத் தெரிய வந்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற ஒரு விழிப்புணர்வை மக்களிடையே இக்கடலோரப் பாதுகாப்புப் படை உருவாக்கி உள்ளது. இப்படையினர் தொடர்ந்து விழிப்புடன் செயல்பட்டு வருவதால், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி போன்ற மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளில்



கடத்தல் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இராமேஸ்வரம், மண்டபம் மற்றும் தனுஷ்கோடி ஆகிய பகுதிகளில் மீன்வள மற்றும் புதுவாழ்வுத் துறையினர் மேற்கொண்ட புதுவாழ்வுப் பணிகளில் கடலோரப் பாதுகாப்புப் படையினர் ஒத்துழைப்பு அளித்துள்ளனர். கடலோரப் பாதுகாப்புப் படையை வலுப்படுத்துவதற்கும், தொலைத் தொடர்பு சாதனங்கள், வாகனங்கள், கைத்துப்பாக்கிகள், டார்ச் விளக்குகள் மற்றும் வெடிகுண்டு கண்டுபிடிக்கும் சாதனங்கள் போன்றவற்றை வாங்குவதற்கும், சென்னையில் கடலோரப் பாதுகாப்பு நிர்வாக தலைமையிடக் கட்டடத்தையும், மாநிலத்தில் ஐந்து இடங்களில் மண்டல அலுவலகக் கட்டடங்களையும் கட்டுவதற்காகவும், கடனாக இரண்டரை கோடி ரூபாயும், மானியமாக இரண்டரை கோடி ரூபாயும் மொத்தம் ஐந்து கோடி ரூபாயை இந்திய அரசு வழங்கியுள்ளது. அரசு 1997-ல் இந்த நிதிகளை வழங்கியுள்ளது.

## மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு:

2.34 27-10-1997 முதல் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல்துறைத் தலைவர் பதவித்தரத்தில் உள்ள ஓர் அதிகாரியின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. அவருக்கு உதவியாக ஒரு காவல்துறை கண்காணிப்பாளர், இரண்டு காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்கள், ஆறு ஆய்வாளர்கள் மற்றும் எட்டு உதவி ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர். 1997 ஆம் ஆண்டில் மொத்தம் 3,05,054 மதுவிலக்கு வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் கள்ளச்சாராயம் காய்ச்சியதற்கான 22,765 வழக்குகளும், ஊறல் வைத்திருந்ததற்கான 15,972 வழக்குகளும் அடங்கும். 77,648 பெண்கள் உட்பட 2,96,653 மதுவிலக்குக் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். 1997 ஆம் ஆண்டில் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கள்ளத்தனமாக ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்பட்ட 3127 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவற்றில் 89 லாரிகள், 2 பேருந்துகள் 113 வேன்கள், 116 கார்கள், 17 ஜீப்புகள், 4 டிராக்டர்கள், 98 ஆட்டோ ரிக்‌ஷாக்கள், 1431 இரு சக்கர வாகனங்கள் மற்றும் இதர மோட்டார் பொருத்தப்படாத வாகனங்களும் அடங்கும்.

## துப்பறியும் நாய்ப்படை:

2.35 துப்பறியும் நாய்ப்படை, குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் மிக முக்கிய பங்கு வகித்து குற்றப்புலனாய்வுப் பணியாளர்களுக்கு உதவி புரிகிறது. இப்படையின் பணிகளைத் தமிழ்நாடு காவல்துறை நன்கு பயன்படுத்திக் கொள்கிறது. தமிழ்நாட்டில் சென்னை, வேலூர், கடலூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை,

இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய 12 மாவட்டங்களில் துப்பறியும் நாய்ப்படைப் பிரிவுகள் உள்ளன. சிறப்புமக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொறுப்பு வகிக்கும் சிறப்புப் பாதுகாப்புப் படைப்பிரிவு 7 மோப்ப நாய்களை வாங்கியுள்ளது பாதுகாப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் வெடிகுண்டு மற்றும் வெடிமருந்துப் பொருள்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் பணிகளில் அவை ஈடுபடுத்தப்படுகின்றன. 1997 ஆம் ஆண்டில் 3636 குற்றவியல் வழக்குகளில் இந்தத் துப்பறியும் நாய்ப்படைப் பிரிவுகள் பயன்படுத்தப்பட்டன. 243 வழக்குகளில் துப்புத்துலக்க இவற்றின் பணி மிகவும் உதவியாக இருந்தது.

**குதிரைப்படை:**

2.36 குதிரைப்படை, போக்குவரத்தையும் கூட்ட நெரிசல்களையும் முறைப்படுத்துவதோடல்லாமல், விழாக் கொண்டாட்டங்களின் போதும் பயனுள்ள வகையில் தொடர்ந்து பணியாற்றி வருகிறது. சென்னையிலுள்ள குதிரைப்படைப் பிரிவில் 34 குதிரைகள் உள்ளன. கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 10 குதிரைகள் உள்ளன. இப்படையின் பயனை அறிந்த பின்னர், இவ்வாண்டில், சட்டம்-ஒழுங்கு அணிவகுப்புகள், பாதுகாப்புப் பணிகள் ஆகியவற்றிற்காக பல்வேறு சமயங்களில் அவற்றின் பணிகள் கோரப்பட்டன.

**ஒழுக்கக் கேடு தடுப்புப் பிரிவு:**

2.37 1956 ஆம் ஆண்டு விபச்சாரத் தடுப்புச் சட்டம் தொடர்பான மத்திய சட்டங்களைச் செயல்படுத்துவதே இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டதன் முக்கிய நோக்கமாகும். சென்னை மாநகரைப் பொறுத்தவரையில், காவல் துறை உதவி ஆணையாளர் பதவித் தரத்திற்குக் குறையாத காவல்துறை அதிகாரி ஒவ்வொருவரும், மற்ற இடங்களைப் பொறுத்தவரையில், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் பதவித் தரத்திற்குக் குறையாத காவல் துறை அதிகாரிகள் ஒவ்வொருவரும், அவரவர் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் 1956 ஆம் ஆண்டு விபச்சாரத் தடுப்புச் சட்டத்தின் கீழ், குற்றம் புரிபவர்களைக் கண்டுபிடிப்பதற்குரிய சிறப்புக் காவல்துறை அதிகாரிகளாகச் செயல்பட்டு வருகின்றனர்.

**இளங்குற்றவாளிகளைத் திருத்த உதவும் காவல்துறைப் பிரிவு:**

2.38 இப்பிரிவு, 1960-லிருந்து சென்னையில் செயல்பட்டு வருகிறது. இந்தியக் குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவை, மதுவிலக்குச் சட்டம், விபச்சாரத் தடுப்புச் சட்டம், சூதாட்டத் தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனை அளிக்கப்படாத, ஆதரவற்ற 16 வயதுக்குக் குறைந்த





இளம் குற்றவாளிகளைப் பிடிப்பது தொடர்பான நடவடிக்கைகளை இப்பிரிவு மேற்கொள்கிறது. மேற்படி சட்டங்களின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள இளம் குற்றவாளிகளைக் கையாளும் பணி உள்ளூர் காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இளங்குற்றவாளிகளைத் திருத்த உதவும் காவல்துறைப் பிரிவு இத்தகைய சிறுவர், சிறுமிகளைப் பிடிக்க நேரிடும்போது அல்லது கோரப்படும்போது அவர்களின் பெற்றோர்களிடம் அல்லது உள்ளூர்ப் பாதுகாப்பாளர்களிடம் அவர்களை ஒப்படைக்கிறது. மேலும் இப்பிரிவு, பெருமளவில் குற்றம் நடைபெறுவதற்கு வாய்ப்புள்ள பகுதிகளான குடிசைப் பகுதிகள், இரயில் நிலையங்கள், திரையரங்குகள், திருவிழா நடைபெறும் இடங்கள் முதலியவற்றில் ரோந்துப்பணி புரிந்து கவனிப்பாரற்ற அனாதைகள், வீட்டைவிட்டு ஓடி வந்த சிறுவர், சிறுமியர் ஆகியோரைச் சமூக விரோத சக்திகளின் கைகளில் சிக்கிவிடாமல் தடுத்துக் காப்பாற்றுகிறது. இத்தகைய பிரிவுகள் கோயம்புத்தூர், சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ளன. ஓராண்டில் இப்பிரிவுகள் அனைத்தும் சுமார் 500 இளங்குற்றவாளிகளைப் பிடிக்கின்றன. இளங்குற்றவாளிகளுக்கு உதவும் இத்தகைய பிரிவு ஒவ்வொன்றும் காவல்துறை ஆய்வாளர் ஒருவரின் தலைமையில் இயங்குகின்றன. அவருக்குக் காவல்துறை உதவி ஆய்வாளர் ஒருவரும் 6 தலைமைக் காவலர்களும் உதவுகின்றனர்.

**காவல்துறை சுருக்கெழுத்துப் பிரிவு:**

2.39 காவல்துறை சுருக்கெழுத்துப் பிரிவு சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவு பொதுகூட்டங்களில் பேசப்படும் மறுப்பிற்குரிய, வன்முறையைத் தூண்டக்கூடிய உரைகளை முறையாகக் கண்காணித்துக் குறிப்பெடுத்து வருகின்றது. இப்பிரிவில் ஒரு தலைமை நிருபரும், 36 முதுநிலை நிருபர்களும், 55 இளநிலை நிருபர்களும் உள்ளனர். இப்பிரிவு இவ்வாண்டில் 9166 பொதுக்கூட்டங்களுக்குச் சென்று உரைகள் தொடர்பான 300 பிரதிகளை அளித்துள்ளது.

**ஊர்க்காவல் படை:**

2.40 ஊர்க்காவல் படை முழுக்க முழுக்க ஒரு தொண்டு அமைப்பாகும். இப்பிரிவு, காவல்துறைக்குத் துணைப்படையாக விளங்குகிறது. போக்குவரத்து நெரிசல்களை முறைப்படுத்துதல், முறைப்பணியாற்றுதல், இரவு நேரப்பாதுகாப்புப் பணிகள், கோயில் திருவிழாக்கால பந்தோபஸ்துப் பணிகள், அழைப்பாணைகளை ஒப்படை செய்தல், புள்ளி விவரங்கள் திரட்டுதல், மீட்பு நடவடிக்கைகள்,

தீயணைப்புப் பணிகள் முதலியவற்றில் ஊர்க்காவல் படையினர் ஈடுபடுத்தப்படுகின்றனர். கொடிநாள் வசூல் பணியிலும் அவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். மேலும், மிகவும் முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போது பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதற்கும், பெருங்கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் அவர்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றனர். மேலும் இப்பிரிவு, மாநிலத்தின் நலத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளில் கலந்து கொள்வதுடன் சமூக நல்லிணக்க மேம்பாட்டிற்கும் உதவுகிறது. பல்வேறு வாழ்க்கைத் தொழில், வாணிபம் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளோர்களிடையேயிருந்து தேர்வு செய்யப்பட்ட 10,016 ஆண்களும், 550 பெண்களும் இந்த ஊர்க்காவல் படையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இப்படை, காவல் துறைத் தலைவர் ஒருவரின் கீழ் இயங்குகிறது. ஊர்க்காவல் படை தொடர்பாக சில இனங்களுக்காகும் செலவில் 25 விழுக்காட்டை மத்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. 1998 நாடாளுமன்ற மக்களவைக்கான பொதுத்தேர்தல் பணிகளுக்காக 140 ஊர்க்காவல் படையினர் இலட்சத்தீவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 7-2-1998 அன்று சென்ற இவர்கள் முதற்கட்ட தேர்தல் பணியை முடித்துவிட்டு 20-2-1998 அன்று திரும்பினர். ஊர்க்காவல் படையினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக உதகமண்டலத்தில் ஊர்க்காவல் படைப் பயிற்சி நிறுவனம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## மக்கள் பாதுகாப்புப் படை

2.41 பகைமை உணர்வு காரணமாய் அண்டை நாட்டினர் தாக்குதல் நடத்தும் காலங்களில் மக்கள் உயிர்களைக் காப்பதும், சொத்துக்கள் சேதமாவதைக் குறைப்பதும், தொழில் உற்பத்தியைப் பராமரிப்பதும், மக்கள் பாதுகாப்புப் படையின் நோக்கங்களாகும். மக்கள் பாதுகாப்புப் படையினர் தொண்டு அடிப்படையில் இயற்கைச் சீற்றங்களின்போது மீட்பு, துயர் துடைப்பு ஆகிய பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளில் அமர்த்தப்படுகின்றனர். சென்னை மாநகரம், கல்பாக்கம் ஆகியவை முதல் வகை (``A ' Civil Defence Cities) மக்கள் பாதுகாப்பு நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. மக்கள் பாதுகாப்புப்படை இயக்குநராகவும் உள்ள காவல்துறைத் தலைவர் (ஊர்க்காவல் படை), வெள்ளம், புயல் மீட்பு, துயர் துடைப்புப் பணிகளில் ஊர்க்காவல் படையினருக்குப் பயிற்சி அளிக்கின்றனர். ஆண்டுதோறும் (அக்டோபர் முதல் ஜனவரி வரை) வடகிழக்குப் பருவமழை காலத்தில் வெள்ளம், புயல் ஏற்படும்போது மேற்கொள்ளப்படும் மீட்பு, துயர்துடைப்புப் பணிகளை மேற்பார்வையிட மாநில வெள்ளக்கட்டுப்பாட்டு மையம் ஒன்று இயங்கி வருகின்றது.



இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் கடும் துன்பங்களைக் களைய, பயிற்சி பெற்ற காவலர்களுடன் கடற்கரையோர மாவட்டங்களில் வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் காற்றடைப்புப் படகுகளும், சிறப்பு மீட்பு ஊர்திகளும் வழங்கப்பட்டுள்ளன.

## குடியுரிமைப் பாதுகாப்பு:

2.42 தீண்டாமையை ஒழிக்கவும், ஆதி திராவிடர், பழங்குடியினருக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அகற்றவும் உள்ளூர் காவல் துறையினரின் உதவியுடன் 1976-ல் திருத்தம் செய்யப்பட்ட 1955-ம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தையும் 1989-ம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (கொடுமைகளைத் தடுத்தல்) சட்டத்தையும் செயல்படுத்துவதே குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவின் பணியாகும். அனைத்துக் காவல் மாவட்டங்களிலும் காவல்துறை ஆய்வாளர் தலைமையில் இயலூர்தி காவல் பிரிவுகள் இயங்கி வருகின்றன. சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் மூவரால் இந்தப் பிரிவுகளின் பணிகள் மேற்பார்வையிடப்படுகின்றன. இத்தகைய காவல் பிரிவுகளுடன் கூடுதலாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை மாநகர், திருநெல்வேலி, கடலூர் மற்றும் கோயம்புத்தூர் (ஊரகம்) ஆகிய மாவட்டங்களில் கூடுதலாக 6 குற்ற வழக்குத் தொடர்புப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. 1955 ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர், பழங்குடியினர் (கொடுமைகளைத் தடுத்தல்) சட்டம் ஆகியவற்றின் கீழ் 1996-ல் 766 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்க, 1997 ஆம் ஆண்டில் 825 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம்/ஆதிதிராவிடர், பழங்குடியினர் (கொடுமைகளைத் தடுத்தல்) சட்டம் ஆகியவை பற்றி பொதுமக்களுக்குப் போதுமான விழிப்புணர்வை ஏற்படுத்தியதாலும், கிராம சமுதாயத் தலைவர்கள், நல்கிய ஒத்துழைப்பினாலும் இவ்வகையிலான வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இச்சட்டத்தை நன்முறையில் செயல்படுத்த புள்ளியியல் ஆய்வாளர், பொருளாதார நிபுணர் ஒருவர் மற்றும் சமூக இயல் நிபுணர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட ஆராய்ச்சி பகுப்பாய்வுப் பிரிவு ஒன்று ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கு எதிரான கொடுமைகள் நடைபெற வாய்ப்புள்ள கிராமங்களைக் கண்டறிய, மாதிரி ஆய்வுகள் நடத்தி வருகிறது. 1997 ஆம் ஆண்டில் நடந்த ஆய்வில் இதுபோன்று 147

கிராமங்கள் உள்ளன என்று கண்டறியப்பட்டது. முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டும் சென்னையிலுள்ள ஆதிதிராவிடர்—பழங்குடியினர் தேசிய ஆணையகத்தின் இயக்குநரை உறுப்பினராகக் கொண்டும் மாநில அளவிலான விழிப்புப் பணி மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

## கூட்டுக்கொள்ளைத் தடுப்புப் பிரிவு:

*2.43* *1994* ஆம் ஆண்டில் தொடர்ந்து நிகழ்ந்த நெடுஞ்சாலைக் கொள்ளைகளைக் கருத்தில்கொண்டு, கூட்டுக் கொள்ளைத் தடுப்புப் பிரிவு ஒன்று *1995*-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இக்குழுவின் முக்கியப் பணிகள்.

*2.43* (1) பரபரப்பாகப் பேசப்பட்ட துணிகரக் கொள்ளைகள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மற்றும் மாவட்ட மாநிலங்களுக் கிடையிலான குற்றங்கள் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் பற்றி தகவல்களைச் சேகரித்து தொகுத்தல்;

*2.43* (2) பல மாநிலங்களைச் சேர்ந்த குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட வீட்டுக் கொள்ளை, நெடுஞ்சாலைக் கொள்ளை தொடர்பாகப் புலனாய்வு செய்தல்;

மற்றும்

*2.43* (3) தீவிர கொள்ளைகளையும், எதிர்காலத்தில் கொள்ளையர்களாக மாறுவோர் என்று கருதப்படுவோரையும் கண்காணித்தல், தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்குதல் ஆகியவையாகும்.

## திருட்டு விடியோ தடுப்புப் பிரிவு:

*2.44* திருட்டு வீடியோ என்பது சமீபகாலத்தில் நடைபெற்றுவரும் குற்றமாகும். இது அபாயகரமான அளவிற்கு வளர்ந்துள்ளது. பெரும்பாலும் வீடியோ லைப்ரரியின் உரிமையாளர்களுடன் வியாபாரத் தொடர்பு வைத்துள்ளவர்கள்தான் பிரபலமான திரைப்படங்களைத் திருட்டுத் தனமாக வீடியோக்களில் பதிவு செய்கின்றனர். இத்தகைய நபர்கள் திரையரங்கு உரிமையாளர்கள்/இயக்குபவர்களுடன் கூட்டு சேர்ந்து புதிதாக வெளியிடப்படும் திரைப்படங்களைச் சட்டத்திற்குப் புறம்பாக வீடியோ கேசட்டில் பதிவு செய்கின்றனர். இத்தகைய



திருட்டையும் காப்பிரைட் (Copyright Act) சட்டத்தை மீறுவதையும் தடுக்கும் பொருட்டு காவல்துறைக் கண்காணிப்பாளர் ஒருவர், துணைக் கண்காணிப்பாளர் ஒருவர், *24* காவலர்கள் ஆகியோரைக் கொண்ட திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு ஒன்று தனியாகச் செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவு *8* திருட்டு வழக்குகளைக் கண்டறிந்து அவை குறித்து தீவிர புலன் விசாரணை செய்து வருகின்றது. கூட்டுக் கொள்ளைத் தடுப்புப் பிரிவும், வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவும் குற்றப் புலனாய்வுத் துறையின் குற்றப்பிரிவின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

## நுகர்பொருள் கண்காணிப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு:

*2.45* கள்ளச்சந்தை வியாபாரிகள், கடத்தல்காரர்கள் ஆகியோர் மாநில எல்லைக்கு வெளியே இன்றியமையா உணவுப்பொருட்களைக் கடத்துவதையும், உணவுப் பொருட்களைப் பதுக்கி வைப்பதைத் தடுக்கவும், கலப்படத்தைக் கண்டுபிடிக்கவும், இப்பிரிவு *1964* ஆம் ஆண்டிலேயே ஏற்படுத்தப்பட்டது. *1997* ஆம் ஆண்டில் இப்பிரிவு *4,157* வழக்குகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் பயனாக ரூ.*4.47* கோடி மதிப்புள்ள இன்றியமையாப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. ரூ.*2.57* கோடி மதிப்புள்ள இன்றியமையாப் பொருட்கள் பறிமுதல் செய்யப் பட்டன. இது சம்பந்தமாக, *1445* பேர்கள் கைது செய்யப்பட்டதுடன், *405* வாகனங்களும் கைப்பற்றப்பட்டன.

## குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவின்கீழ் தனி உட்பிரிவு ஒன்றை உருவாக்குதல்:

*2.46* மதம் மற்றும் வகுப்புக் கலவரங்களைப் பற்றி முன்னரே அறிந்து தடுப்பு நடவடிக்கைகள் எடுத்திட, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு குற்றப் புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவும், திருநெல்வேலி மற்றும் வேலூர் குற்றப் புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவுகளில் தனி உளவுத் தகவல் பிரிவுகளும் ஏற்படுத்த அரசு அண்மையில் அனுமதி வழங்கியுள்ளது.

*2.47.* புதுடில்லியிலுள்ள தேசிய குற்ற ஆவணச் செயலகப் புள்ளி விவரப்படி தமிழ்நாடு காவல்துறையின் செயல்பாட்டினை இந்திய நாட்டின் ஒட்டு மொத்த சராசரி விவரங்களுடன் ஒப்பிடும்போது தமிழகக் காவல்துறையின் சிறப்பு தெளிவாகிறது. அதன் விவரம் பின்வருமாறு:

[1998 மே 22

| விவரங்கள் | தமிழ்நாடு | அகில இந்திய சராசரி |
|---|---|---|
| 100 சதுர கிலோ மீட்டர் பரப்புக்கான காவலர்களின் எண்ணிக்கை | 57.4 | 39.5 |
| ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கான காவலர்களின் எண்ணிக்கை | 127 | 134 |
| ஒரு காவலருக்கான வருடாந்திர செலவினம் | ரூ. 68,059 | ரூ. 61,688 |
| குற்றத் தீர்ப்பு வீதம் | 66.6 விழுக்காடு | 37.8 விழுக்காடு |
| இந்திய தண்டனைச் சட்டம் தொடர்பான குற்றப்பத்திரிக்கை காவல்துறையினரால் தீர்வுகாண் விகிதம் | 90.1 விழுக்காடு | 76.9 விழுக்காடு |

## 3. காவல் துறையை நவீனப்படுத்துதல்

*3.1* காவல்துறைப் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவது, அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது ஆகிய பணிகள், காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின் இரு முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டத்தின்கீழ், தகவல் தொடர்பு, போக்குவரத்து, புலனாய்விற்குத் தேவையான அறிவியல் சார்ந்த கருவிகள், சட்டம் ஒழுங்கைப் பேணிக் காத்தல், போக்குவரத்து மேம்பாடு, கணினிமயமாக்குதல் மற்றும் பயிற்சி ஆகியவை முக்கியமான பணிகளாகும்.

*3.2* காவல் துறையை நவீனப்படுத்துவதற்கு பின்வரும் இரண்டு திட்டங்களின்கீழ் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

1. மத்திய அரசிடமிருந்து 50 சதவீத உதவித்தொகை மற்றும் மாநில அரசின் இணை மானிய ஒதுக்கீடு ஆகியவை இரண்டு தவணைகளில் (ரூ.1.96 கோடி + ரூ.1.96 கோடி) ஆக மொத்தம் ரூபாய் 3.92 கோடி.
2. மாநில நிதியிலிருந்து மட்டும் தனியே ஒதுக்கப்பட்டது ரூபாய் 12 கோடி.



1998 மே 22]

*3.3 31-3-1998* வரை காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் ரூபாய் 47 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில் ரூபாய் 7.36 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க 14 கார்கள், 22 ஜீப்புகள், கோயம்புத்தூர் மற்றும் மதுரை காவல் ஆணையரகங்களுக்குக் கலவரத் தடுப்பு ஆயுதங்களடங்கிய 2 வாகனங்கள், போக்குவரத்தைப் பராமரிக்க 3 மீட்பு வேன்கள், காயமடைந்தவர்களை மருத்துவ வசதி அளிக்க எடுத்துச் செல்ல 4 ஆம்புலன்ஸ் வேன்கள், 221 போக்குவரத்து சாதனங்கள், 9 போர்ட்ரெய்ட் பில்டிங் சிஸ்டங்கள், காவல்துறைத் தலைமை இயக்குநர் அலுவலகம், சரக காவல் துறைத் தலைமையிட அலுவலகங்களுக்குக் கணினிகள், வீடியோ போட்டோ சாதனங்கள், தடய அறிவியல் கூடம்/விரல்ரேகைப் பிரிவு மற்றும் காவலர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றை மேம்படுத்த ரீ-காபியிங் போட்டோகிராபிக் சாதனங்கள், வண்ணப் புகைப்படச் சாதனங்கள், ஸ்டீரியோ மைக்ரோஸ்கோப், கேஸ்குரோமோடாகிராபி மற்றும் ஜெனரேட்டர்கள் ஆகியவற்றை வாங்க இதுவரை ரூபாய் 5.73 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன தொகையில் வாகனங்கள் வாங்க ரூபாய் 188.77 இலட்சமும், தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்க ரூபாய் 160.70 இலட்சமும், கணினிகள் வாங்க ரூபாய் 109.34 இலட்சமும், தடய அறிவியல் கூடம் மற்றும் விரல்ரேகைப் பிரிவுக்கு ரூபாய் 28.37 இலட்சமும் மற்றும் இதர இனங்களுக்கு ரூபாய் 86.16 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது.

*3.4 1996-97*-ம் ஆண்டிற்கு அளிக்கப்பட்ட ரூ. 6.52 கோடி தொகை, 1997-98-ம் ஆண்டில் பழைய உயர்வேகத் தொலைத் தொடர்பு சாதனங்கள் 899-ஐ மாற்றிப் புதிதாக அமைக்கவும், 6 புதிய மாவட்டங்களுக்காக உயர்வேகத் தகவல் தொலைத் தொடர்பு சாதனங்கள் அமைக்கவும், 1000 பாலிகார்பனேட் கேடயங்கள் வாங்கவும் செலவிடப்பட்டது. இது தவிர 1997-98-ம் ஆண்டில் 50:50 என்ற திட்டத்தின்கீழ் செலவு செய்யப்படாமல் வைக்கப்பட்டிருந்த தொகையான ரூ.164 இலட்சமும் மத்திய அரசின் 100 சதவீத உதவித் தொகையான ரூ.16.71 இலட்சமும் செலவிட அனுமதித்து அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

*3.5 1997-98*-ம் ஆண்டில் காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டங்களை நிறைவேற்றும்பொருட்டு மாநில அரசு, மாநில நிதியிலிருந்து தனியே ரூ.10 கோடி வழங்க அனுமதித்துள்ளது.

| வ.எண் | திட்டம் | செலவு ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | சென்னை நகருக்கு எண்ணியல் நுண்ணலை முறையிலான தொலைத் தொடர்பு முறை. | 300.00 |
| 2 | புறக்காவல் நிலையங்கட்கு 75 மோட்டார் சைக்கிள், கோயம்புத்தூர் மற்றும் மதுரை காவல் ஆணையர் அலுவலகங்களுக்கு 2 தண்ணீர் அடிக்கும் கருவிகள் பொருத்திய ஊர்திகள், சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க தென் மாவட்டங்களுக்காக 20 டெம்போ டிராவலர் வாகனங்கள். | 172.54 |
| 3. | திண்டுக்கள் மாவட்டம், அரங்கானலில் வானொலி தகவல் அனுப்பும் நிலையம் கட்டவும், தொலைத் தொடர்பு சாதனங்கள் மற்றும் "வாக்கி டாக்கி" சாதனங்கள் வாங்கவும். | 407.56 |
| 4. | காவல்துறை ஆணையர் அலுவலகங்களிலுள்ள உளவுப் பிரிவு மற்றும் மாவட்டங்களில் உள்ள தனிப்பிரிவு, திருச்சி விமான நிலைய காவல்பிரிவு ஆகியவற்றிற்கு 72 தொலைச் செய்தி வசதி மோடம் ஆகியவற்றுடன் கூடிய கணினிகள் மற்றும் சென்னை நகரத்திற்கு "கெஸ்டெட்னர் பிரிண்டர்" ஆகியவை வாங்குவதற்காக. | 63.00 |
| 5. | காவல் நிலையங்களுக்கு தட்டச்சுப் பொறிகள் 403, சரகத் தலைமையிடங்களுக்கு போட்டோ நகல் எடுக்கும் கருவிகள் 11, சென்னை மற்றும் திருச்சியில் உள்ள காவல் போக்குவரத்துத் தொழில் பட்டறைகளை நவீனமாக்க. | 56.90 |

3.6 தமிழ்நாடு காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் மத்திய அரசு 1997-98-ம் ஆண்டில் ரூ.1.97 கோடியை இரு தவணைகளாக வழங்கியுள்ளது. மாநில அரசும் 1997-98-ம் ஆண்டிற்குக் காவல்துறையை நவீனப்படுத்த இணை மானியமாக ரூ.1.97 கோடியை வழங்கியது.

3.7 மேலும் 1998 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் கூடுதலாக ரூ.1 கோடி மைய அரசு வழங்கியிருக்கிறது. மாநில அரசும் இதற்கு இணையான தொகையான ரூ.1 கோடி அளிக்கும். இந்த மாநிலத்தின் பிரச்சினைகளைக் கருதி கூடுதலாக ரூ.10 கோடி நிதி உதவியை மத்திய அரசு அளிக்க வேண்டும் என மாநில அரசு கோரியுள்ளது.

3.8 குற்றம் நிகழ்ந்த இடத்தில் எடுக்கப்பட்ட கைவிரல் ரேகைகளைச் சிறப்புக் கதிர் ஊடுருவல் மற்றும் சிறப்பு ஆய்வு மூலம் அடையாளம் காட்டும் "பாக்ட்ஸ்" என்று அழைக்கப்படும் விரல் ரேகை ஆய்வு





மற்றும் குற்றம் அறியும் முறை என்ற புதிய கணினி முறை தொடங்கப்பட்டுள்ளது. இந்தகைய முறைக்காக தமிழ்நாடு காவல்துறைக்கு ரூ.1.81 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இதை முழுமையாக அறிமுகப்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

## 4. சட்டம் - ஒழுங்கு

4.1 இம்மாநிலத்தில், சாதிப்பிரச்சினையும் மதவாதமும், சட்டம்-ஒழுங்கிற்கு இடையூறு ஏற்படுத்திடினும், நிருவாகம் மற்றும் காவல்துறையின் அயராத முயற்சியினால் அமைதியும், ஒழுங்கும் செவ்வனே நிலை நாட்டப்பட்டன. கோவையில், 14-2-1998 அன்று ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து, எடுக்கப்பட்ட துரித நடவடிக்கைகளால் குறுகிய காலத்தில் இயல்பு நிலை திரும்பியுள்ளது. தொடர்ந்து அமைதி நிலவிட காவல்துறை மிகுந்த கண்காணிப்புடன் செயல்பட்டு வருகிறது.

### மதக் கலவரங்கள்

4.2 மதத் திருவிழா தொடர்பான தகராறுகள், பல்வேறு மதத்தினரிடையே நிலவி வந்த பகைமை, தேர்தல் விரோதம் மற்றும் முன் விரோதம் போன்றவற்றால் 1997-ஆம் ஆண்டில் 19 வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டன. மேற்கண்ட சம்பவங்களில் 17 பேர் இறந்தனர். 9 காவல்துறை அலுவலர்களும், 79 பேர்களும் காயமடைந்தனர். அவற்றுள் ஒரு சில சம்பவங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:

4.2 (1) திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மேலப்பாளையத்தில், 12-8-1997 அன்று, சிலர் அவர்களாகவே சட்ட விரோதமாகக் கூடி, மேலப்பாளையத்தைச் சேர்ந்த திருவாளர்கள் கண்ணன், சங்கர் (எ) ஜெய்சங்கர் மற்றும் ஏ. செல்வகுமார் ஆகியோரை, மத விரோதம் காரணமாகக் கொலை செய்தனர். இச்சம்பவத்தில் இரண்டு பேர் காயமுற்றனர். இது தொடர்பாக, இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 28 பேர் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கு குறித்து மாநிலக் குற்றப்புலனாய்வுத் துறையின் குற்றப்பிரிவு புலனாய்வு செய்து வருகிறது. 27-8-1997 அன்று திரு. முத்துகிருஷ்ணன் என்பவர் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக 20 பேர்கள் கைது செய்யப்பட்டு, வழக்கு விசாரணையில் உள்ளது.

4.2 (2) 2-9-1997 அன்று, கோவையில் நடைபெற்ற மதக் கலவரங்களில் 5 இந்துக்கள் கொலை செய்யப்பட்டனர். இதுகுறித்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 14 பேர் கைது செய்யப்பட்டனர்.

4.2 (3) 29-11-1997 அன்று, கோவையில் திரு. செல்வராஜ் என்கிற போக்குவரத்துக் காவலர் அல் உம்மா தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்கள், 22 பேர் மரணமடையக் காரணமாக இருந்தன. இந்த வன்முறைச் சம்பவங்களில், 46 பேர் காயமடைந்தனர். இதைத் தவிர, அதிக அளவில் தீவைப்புச் சம்பவங்களும், சொத்துக்கள் சூறையாடல்களும் நிகழ்ந்தன. இதனால் சட்டம் - ஒழுங்கைப் பராமரிக்க உள்ளூர் காவல்துறையினருக்குத் துணைபுரிய, இராணுவமும், மத்திய சேமக் காவல்படையினரும் அழைக்கப்பட்டனர். இச்சம்பவங்கள் தொடர்பாக, 569 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவரையில், குற்றம் சாட்டப்பட்ட 286 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கோவையில் 29-11-1997-க்குப் பிறகு ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் குறித்து விசாரிப்பதற்காக, குஜராத் மாநில உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி திரு. பி.ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்களை, விசாரணை ஆணையமாக அரசு நியமித்துள்ளது. மேற்கண்ட வன்முறைச் சம்பவங்களில் சொத்துக்களை இழந்தவர்களையும், சேதம் அடைந்த சொத்துக்களின் உரிமையாளர்களையும் கண்டறிந்து, அவர்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையைப் பரிந்துரை செய்வது என்பது இவ்விசாரணை ஆணையத்தின் ஆய்வு வரம்புகளில் ஒன்றாகும். விசாரணை ஆணையத்தின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

4.2 (4) 6-12-1997 அன்று அதிகாலையில், திருச்சிராப்பள்ளியில் பாண்டியன் துரித இரயிலிலும், ஈரோடு அருகே சேரன் துரித இரயிலிலும் நிகழ்ந்த இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 6 பேர் உயிரிழந்தனர். அவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ. 1 இலட்சம் வீதம் இழப்பீடு வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வழக்கு சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டனர்.

4.2 (5) கோவையில், 14-2-1998 அன்று, ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களில் 49 பேர் உயிரிழந்தனர். மேலும், தீவிரவாதிகள் தஞ்சம் அடைந்த ஒரு கட்டடத்தைக் காவல்துறையினர் சுற்றிவளைத்தபோது ஒரு குண்டு வெடித்ததில் 6 தீவிரவாதிகள் மடிந்தனர். இதுவன்றி, தற்செயலாக நிகழ்ந்த ஒரு குண்டுவெடிப்பில் 4 சிறுவர்கள் இறந்தனர். வெடிபொருட்களைக் கைப்பற்றுவதற்காக, காவல் துறையினர் தீவிர தேடுதல் பணியை மேற்கொண்டனர். சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் காவல் துறையினருக்கு உதவிபுரிய இராணுவமும், மத்திய சேமக் காவல்படையினரும் அழைக்கப்பட்டனர்.



4.2 (6) இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து, அல்-உம்மா மற்றும் அனைத்திந்திய ஜிகாத் கமிட்டி ஆகிய இரண்டு தீவிரவாத அமைப்புகளும் தமிழக அரசால் தடைசெய்யப்பட்டன. மாநிலமெங்கும் இவ்விரண்டு அமைப்புகளைச் சார்ந்த பல தமிழகத் தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டனர். அரசு துரித நடவடிக்கைகள் மேற்கொண்டதையடுத்து, உடனடியாக நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, இயல்பு நிலை திரும்பியுள்ளது. காவல் துறையினரின் தீவிரமான தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெற்றது. இதன் காரணமாக ஒரு பியட் காரில் (M.S.Q. 1347) வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு புதுடில்லி தேசிய பாதுகாப்புப் படையைச் சார்ந்தவர்களும், பூனாவில் இருந்து வரவழைக்கப்பட்ட வெடிகுண்டு நிபுணர்களும் அவ்வெடிகுண்டுகளைச் செயல் இழக்கச் செய்தனர். கோவை மாவட்டத்தில் காவல்துறையினர் நடத்திய தேடுதல் வேட்டையினால் 19-3-1998 அன்றுள்ளபடி 131 குழாய் வெடிகுண்டுகள், 15 பெட்டி. வெடிகுண்டுகள், 1 கார் வெடி-குண்டு, ஒரு மொபெட் வெடிகுண்டு, 1 தேனீர் பாத்திர வெடிகுண்டு, 77 பெட்ரோல் வெடிகுண்டுகள், வேறுவிதமான 3 வெடிகுண்டுகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன. மேலும், 92 குழாய்கள், 315 ஜெலட்டின் குச்சிகள், 101 டிட்டனேட்டர்கள், 32 பாதுகாப்பு மின் எரிஇழை கம்பிச் சுருள்கள் (Safety fuse coils) முதலியவை கைப்பற்றப்பட்டு, செயலிழக்கச் செய்யப்பட்டன. இதுதொடர்பாக 294 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

4.2 (7) கோவையில், 14-2-1998-ல் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கான சூழ்நிலைகள் குறித்தும், சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்குரிய இழப்பீட்டுத் தொகை பற்றி பரிந்துரை செய்வதற்கும் நீதிபதி திரு. பி.ஆர். கோகுலகிருஷ்ணன் விசாரணை ஆணையம் விசாரணை மேற்கொண்டுள்ளது. விசாரணை ஆணையத்தின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

4.2 (8) கோவை குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்குத் தலா ரூ. 2 இலட்சம் வீதமும், பலத்த காயம் அடைந்தோருக்குத் தலா ரூ. 10,000 வீதமும், சிறு காயமுற்றோருக்குத் தலா ரூ. 5,000 வீதமும் உயர்த்தப்பட்ட நிவாரணத் தொகையாக வழங்க கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ரூ. 1.5 கோடி அரசு வழங்கியது. மேலும், கோவையில் 29-11-1997-ல் இருந்து 4-12-1997 முடிய நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களிலும், 14-2-1998-ல் கோவையில் ஏற்பட்ட

[1998 மே 22

குண்டு வெடிப்புச் சம்பவங்களிலும் சொத்துக்கள் சேதம்/இழப்பு அடைந்தவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்காக கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசு ரூ. 5 கோடியும் வழங்கியுள்ளது. சொத்துக்களின் சேதத்திற்குரிய நிவாரணம் குறித்து பரிந்துரை செய்வது என்பது விசாரணை ஆணையத்தின் ஆய்வு வரம்புகளில் ஒன்றாக இருந்தபோதிலும், சொத்துக்கள் இழந்தோருக்கும், சொத்துக்கள் சேதமுற்றோருக்கும் உடனடி நிவாரணம் வழங்கும் பொருட்டு, விசாரணை ஆணையத்தின் ஒப்புதலைப் பெற்று, ரூ. 5,000 அல்லது ஏற்பட்ட சொத்து சேதத்தின் மதிப்பு ஆகிய இரண்டில் எது குறைவோ அதனைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாக வழங்குவதற்கு கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது

4.2 (9) 14-2-1998 அன்று, கோயம்புத்தூரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பிற்கான அடிப்படைக் காரணங்கள், அரசு எடுத்த நடவடிக்கைகள் ஆகியவைபற்றி விளக்கி, வெள்ளை அறிக்கை ஒன்று சட்டப்பேரவையில் 23-4-1998 அன்று வைக்கப்பட்டது. 11-5-1998 அன்று இதுகுறித்து விவாதிக்கப்பட்டது. விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, கோவை குண்டு வெடிப்புச் சம்பவம் குறித்து விசாரித்து காவல் துறைத் தலைவர் திரு. பரம்வீர் சிங், இ.கா.ப., அவர்கள் தலைமையில் ஒரு சிறப்பு விசாரணைக் குழுவை அரசு அமைத்தது பற்றியும், இக்குழு தீவிர விசாரணைக்குப் பிறகு பல புதிய விவரங்களைக் கண்டுபிடித்துள்ளது பற்றியும் குறிப்பாக, 14-2-1998 அன்று மாண்புமிகு திரு. எல்.கே. அத்வானி அவர்கள் கோயம்புத்தூரில் தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசவிருந்தபோது, மனித வெடிகுண்டுகள் வெடிக்கத் திட்டமிருந்தது பற்றியும், காவல்துறையின் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் காரணமாக இந்த மனித வெடிகுண்டுகள், கூட்டம் நடைபெறவிருந்த மேடைக்கு அருகிலேயோ அல்லது மேடை அருகிலுள்ள எந்தப் பகுதியிலோ நுழையமுடியாமல் தடுக்கப்பட்டதையும், குறிப்பிடப்பட்டது. மேலும், இந்தச் சிறப்பு விசாரணைக்குழு மிகவும் திறம்படப் பணியாற்றி வருகிறது. இந்த வெடிகுண்டிற்குப் பின்னணியில் உள்ள சதி கண்டுபிடிக்கப்பட்டு, 20-5-1998 வரை 171 குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 114 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், 8 பேர் இறந்துவிட்டனர். விசாரணை தீவிரமாக நடந்துவருகிறது. விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும். இந்தக் குற்றங்களை விசாரணை செய்ய தனி நீதிமன்றம் அமைக்கும் கருத்துருவும் அரசிடம் உள்ளது. தீவிரவாதத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த தீவிரவாதத் தடுப்புச் சட்டம் ஒன்றும் கொண்டுவரப்பட இருக்கிறது.



1998 மே 22]

**வகுப்புக் கலவரங்கள்**

4.3 1995 ஆம் ஆண்டில் இருந்தே தென் மாவட்டங்களில் இரு வகுப்பினரிடையே மனக் கசப்புகள் இருந்துவந்துள்ளன. அப்போதிலிருந்தே தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில், பல்வேறு இடங்களில் இவ்விரு வகுப்பினரிடையே சாதிச் சண்டைகள் பல நிகழ்ந்தன. 1996—ஆம் ஆண்டில், இந்நிகழ்வுகள் குறைவாக இருந்தன. 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் ஆங்காங்கே வகுப்புக் கலவரங்கள் நிகழ்ந்தன. பசும்பொன் திரு. முத்துராமலிங்கத் தேவர் சிலை, டாக்டர் அம்பேத்கர் சிலை ஆகியவற்றிற்கு சமூக விரோதிகளால் ஏற்படுத்தப்பட்ட சேதங்கள், ஒரு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு பகுதிக்கு விடுதலை வீரர் திரு. சுந்தரலிங்கம் அவர்களின் பெயரை 1-5-1997-லிருந்து சூட்டியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டது போன்றவை இவ்வகுப்புக் கலவரங்களுக்குக் காரணமாக அமைந்தன. அவற்றில் ஒரு சில வருமாறு:

4.3 (1) திருநெல்வேலி மாவட்டம், துறையூரில், 5-5-1997 அன்று, கலவரக் கும்பல் ஒன்று, தங்களுடைய தலைவரைக் கைது செய்ததை எதிர்த்து பேருந்துகளுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டபோது, காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்த நேரிட்டது. இதில் இரு நபர்கள் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தைப் பற்றி விசாரணை நடத்த ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. காமாட்சி அவர்களை ஒரு நபர் விசாரணை ஆணையமாக அரசு நியமித்தது. காவல் துறையினரின் துப்பாக்கிச்சூடு நியாயமானதே என்று விசாரணை ஆணையம் தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தது.

4.3 (2) சிவகாசியில், 7-5-1997 அன்று, அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு பகுதிக்கு விடுதலைப் போராட்ட வீரர் திரு. சுந்தரலிங்கத்தின் பெயரைச் சூட்டியதை எதிர்த்து ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் சிவகாசியிலுள்ள சார் ஆட்சியரின் அலுவலகத்தைத் தாக்க முற்பட்டபோது, அசம்பாவித சம்பவங்கள் நிகழாவண்ணம் தடுக்க காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில், 3 நபர்கள் கொல்லப்பட்டனர். ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. தனராஜ் அவர்களைக் கொண்டு இச்சம்பவம் குறித்து விசாரிக்க, அரசு, ஒரு நபர் விசாரணை ஆணையத்தை நியமித்தது. இவ்விசாரணை ஆணையம் காவல்துறையினரின் செய்கை நியாயமானதே என்று கூறி தனது அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

4.3 (3) விருதுநகர் மாவட்டத்தில் 8-5-1997 ஆம் தேதியிலிருந்து, இரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் மோதிக் கொண்ட பல சம்பவங்கள் நிகழ்ந்தன. அதில் 100 வீடுகளுக்கும் மேல் சேதமடைந்தன. இவ்வீடுகளைத் திரும்பச் கட்டுவதற்கும், பாதிக்கப்பட்டவர்களைக் குடியமர்த்துவதற்கும் மாவட்டாட்சியர் உடனடி நடவடிக்கைகள் எடுத்தார். விருதுநகர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பல நல்வாழ்வுத் திட்டங்களை அரசு மேற்கொண்டது. ரூ. 57,99,053 தொகைக்கு வாங்கப்பட்ட மனையில் 273 புதிய வீடுகள் ரூ. 62,93,100 செலவில் கட்டப்பட்டன. ரூ. 4,90,620 செலவில் 111 வீடுகள் பழுதுபார்க்கப்பட்டன. இந்தக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட 12 நபர்களின் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டன. 134 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. கலவரங்களின்போது அவ்விடத்தை விட்டு வேறு இடங்களுக்கு 280 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. அவர்களுக்கு ஈட்டுத் தொகையாக ரூ. 70 இலட்சம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள் தடுப்பு விதிகள் 1995-ன்படி வழங்கப்பட்டுள்ளது.

4.3 (4) டில்லி உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் மதம், வகுப்பு, இடம், நேரம் ஆகிய பாகுபாடின்றி, மதக் கலவரங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரே மாதிரியான நிவாரணம் வழங்க வேண்டுமென்ற தேசிய சிறுபான்மை ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று, இந்த அரசு, மதம் மற்றும் சாதிக் கலவரங்களில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, இருபிரிவினருக்கும் எந்தவித பாகுபாடுமின்றி தலா 2 இலட்சம் ரூபாய் வழங்குவதாக முடிவெடுத்திருக்கிறது. இந்த முடிவு 1-1-1997 முதல் ஏற்பட்ட நிகழ்வுகளுக்கும் பொருந்தும். ஏற்கெனவே வழங்கப்பட்டதுபோக, எஞ்சிய நிவாரணத் தொகை உடனடியாக வழங்கப்படும்.

4.3 (5) மேலூர் வட்டம், மேலவளவு கிராமத்தில் பஞ்சாயத்துத் தலைவர் திரு. முருகேசனும், அவருடைய தொண்டர்கள் 5 நபர்களும் 30-6-1997 அன்று பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்தபோது, பிற வகுப்பைச் சார்ந்தவர்களால் கொலை செய்யப்பட்டனர். இதனால் வன்முறை நிகழ்ந்தது. இதுகுறித்து மத்தியப் புலனாய்வுத் துறை விசாரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு, மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம் எழுதியது. ஆனால், மத்திய அரசு இந்தக் கோரிக்கையை ஏற்கவில்லை. தமிழக காவல்துறையே இந்த வழக்கைத்



தொடர்ந்து நடத்தியது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரைத் தவிர பிறர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் இறந்தவர்களின் வாரிசுகளுக்கும், காயமுற்றவர்களுக்கும் அரசால் உடனடியாக 1995 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு விதிகளின்கீழ் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. தெரு விளக்குகள், பள்ளிக்கட்டடம், இறந்தவர்களின் குடும்பங்களுக்குப் புதிய வீடுகள், குழாய்க் கிணறுகள், சேதமுற்ற வீடுகளை உடனடியாகச் சீர் செய்தல் போன்ற நலப் பணிகள் அரசால் மேற்கொள்ளப்பட்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு சேலைகளும், வேட்டிகளும் வழங்கப்பட்டன. கிராமத்திற்கு மருத்துவமனை வசதிகளும் செய்து தரப்பட்டன. இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டது. வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட கையகப்படுத்தப்பட்ட காலி நிலத்திலிருந்து 25 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது.

4.3 (6) 14-7-1997 அன்று, தேவிப்பட்டினத்தில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவத்தில் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஒரு வேனைத் தாக்கி அதில் பயணம் செய்த 4 நபர்களைக் கொலை செய்தனர். இவ்வழக்கில் 45 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். 33 பேர் சரணடைந்துள்ளனர். வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

4.3 (7) கருங்குளம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சித்திரைவடிவு என்பவரும் அவரது உதவியாளரும் வேறொரு சிறு சம்பவத்தில் இருதரப்பு மக்களுக்கிடையே சமாதானம் செய்து வைப்பதற்காகச் சென்றபோது, 14-12-1997 அன்று மாலை 7-30 மணியளவில் கொலை செய்யப்பட்டனர். இவ்வழக்கில் 24 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 11 பேர் சரணடைந்துள்ளனர். வழக்கு விசாரணையில் உள்ளது.

4.3 (8) தென் மாவட்டங்களில், அண்மைக் காலங்களில நிகழ்ந்த வகுப்புக் கலவரங்கள் குறித்து 781 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

4.3 (9) அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக வகுப்புக் கலவரங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை கடந்த சில மாதங்களாகக் குறைந்து வருவது பின்வரும் அட்டவணையில் இருந்து தெரிய வரும்.

| மாதம்-ஆண்டு. | இறந்தோர் எண்ணிக்கை. |
|---|---|
| ஜூன் 1997 | 25 |
| ஜூலை 1997 | 19 |
| ஆகஸ்ட் 1997 | 3 |
| செப்டம்பர் 1997 | 6 |
| அக்டோபர் 1997 | இல்லை |
| நவம்பர் 1997 | 4 |
| டிசம்பர் 1997 | 4 |
| ஜனவரி 1998 | 1 |
| பிப்ரவரி 1998 | 3 |
| மார்ச் 1998 | 4 |
| ஏப்ரல் 1998 | 1 |

**அரசு எடுத்த நடவடிக்கைகள்:**

4.3 (10) வகுப்புக் கலவரங்கள் இனி நிகழாவண்ணம் தடுக்க எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து விவாதிக்க, அரசு அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்களைக் கொண்டு 14-5-1997 அன்றும், 5-6-1997 அன்றும் இரண்டு கூட்டங்கள் நடத்தியது. அனைத்து வகுப்பினரும், அமைதியை நிலைநாட்டும்படி இக்கூட்டங்களில் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

4.3 (11) மாவட்டங்களில் வகுப்புக் கலவரங்களை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியாக 1-7-1997 அன்று, மாவட்டங்கள் மற்றும் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சூட்டப்பட்ட சமுதாயத் தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களின் பெயர்களை அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி அகற்ற அரசு ஆணை பிறப்பித்து, அதைச் செயல்படுத்தியது.

4.3 (12) உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்களைத் தலைவராகவும், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. கே. லட்சுமிகாந்தன் பாரதி மற்றும் சென்னைப் பல்கலைக் கழக சமூகவியல் துறைத் தலைவர் பேராசிரியர் திரு. டி. சுந்தரம் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட, உயர்நிலைக் குழு ஒன்றை, வகுப்புக் கலவரங்கள் நிகழாவண்ணம் வருங்காலத்தில் தடுக்க வழி வகைகளைக்



காண ஆலோசனைகள் வழங்கவும் 16-7-1997 அன்று அரசு அமைத்தது. 31-1-1998 அன்று, அக்குழு தனது அறிக்கையை அரசுக்கு அளித்து, அவ்வறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

4.3 (13) தென் மாவட்டங்களில், சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்கவும், வகுப்புக் கலவரங்கள் மற்றும் மதக் கலவரங்களைத் தடுக்கவும் காவல்துறைத் தலைவர் பதவித் தரத்திலுள்ள அனுபவம் வாய்ந்த மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர் மதுரையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார். அரசு மற்றும் காவல் துறை எடுத்த திறமையான நடவடிக்கைகளின் காரணமாகவும், அரசியல் மற்றும் சமுதாயத் தலைவர்கள், ஆன்றோர்களின் ஒத்துழைப்பு காரணமாகவும் கடந்த 6 மாதங்களில் வகுப்புக் கலவரங்கள் மிகவும் குறைந்துள்ளன.

**1997 ஆம் ஆண்டில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள்.**

4.4 பெரம்பலூர் மாவட்டம், பொன்பரப்பி கிராமத்தைச் சேர்ந்த தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த (தமிழரசன் பிரிவு) ராஜேந்திரன், வயது-38, த.பெ. சதாசிவம் படையாச்சி என்பவர், எவ்வித உரிமமுமின்றி 81,491 என்ற எண் கொண்ட 308 ரக துப்பாக்கியையும், ஏனைய வெடிபொருட்களையும் வைத்திருந்ததற்காக, இதர இரண்டு நபர்களுடன் 1-5-1997 அன்று, கைது செய்யப்பட்டு, கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

4.5 இளவரசன் மற்றும் இராமசாமி கோஷ்டியினரிடையே 1997 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் நடந்த மோதலில், இராமசாமி உட்பட 6 நபர்கள் கொலை செய்யப்பட்டனர். இது சம்பந்தமாக ஐந்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 35 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

4.6 பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் காவல் நிலையத்தில், 13-7-1997 அன்று இரவு 11.30 மணிக்குத் தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த சுமார் 20 நபர்கள், அரிவாள், நாட்டுத் துப்பாக்கி மற்றும் இரும்புக் கம்பிகளுடன் காவல் நிலையத்தின் கிழக்குப் பக்கமாக அத்துமீறி நுழைந்து காவலர் எண் 210, இருளப்பன் என்பவரைச் சூழ்ந்து கொண்டு மிரட்டி, 2 துப்பாக்கிகள் (.308), 18 தோட்டாக்கள், 40 வெற்றுத்தோட்டாக்கள் மற்றும் 135 துப்பாக்கித் தோட்டாக்கள், பயனெட்டுடன் கூடிய .410 ரக துப்பாக்கிகள் 5 ஆகியவற்றைத் திருடிச் சென்றனர். தமிழ்நாடு விடுதலைப்படை வாழ்க என்று கோஷமிட்டுக் கொண்டே மர அலமாரியை உடைத்து அதிலிருந்த நிலையப் பதிவேடுகளை நிலைய வளாகத்தில் வீசி எறிந்தனர். ஆயுதப் புரட்சியைப் பாராட்டியும், மாசே துங்கின் கொள்கைகளைப் போற்றியும், செப்டம்பர் 1 ஆம் தேதியை தியாகிகள் தினமாகக் கடைபிடிக்குமாறும், துப்பாக்கி முனையில்தான் அதிகாரம் கிடைக்கும் என்கிற வாசகங்கள்

அடங்கிய சுவரொட்டிகளைக் காவல்நிலைய வளாகத்தில் ஒட்டிவிட்டு, நிலையத்திற்குள்ளும் அவற்றை வீசி எறிந்துவிட்டுச் சென்றனர். உதவி ஆய்வாளரையும், திருக்களப்பூரைச் சேர்ந்த பொதுமக்களில் பாஸ்கரன் மற்றும் கண்ணன் ஆகியோரையும் காவல்நிலைய எழுத்தர் அறையில் வைத்துப் பூட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். இதுசம்பந்தமாக, ஆண்டிமடம் காவல்நிலையத்தில் காவலர்-210 இருளப்பன் என்பவர் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. காயமடைந்த உதவி ஆய்வாளர் விஸ்வநாதன், அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக ஜெயங்கொண்டம் அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவ்வழக்கில் காவல்துறையால் குற்றவாளிகள் தீவிரமாகத் தேடப்பட்டு, இதுவரை 9 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு ரிவால்வர் தவிர மற்ற அனைத்து ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

4.7 *11-8-1997* அன்று, சென்னை, கோடம்பாக்கத்திலுள்ள மாநிலத் தேர்தல் அலுவலகத்திலும், தேனாம்பேட்டை, கஸ்தூரி இரங்கன் சாலையிலுள்ள இரஷ்ய கலாச்சார மையத்திலும், இரண்டு சிறிய குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்றன. இச்சம்பவங்களில், தமிழக மக்கள் விடுதலைப் படையினர் சம்பந்தப்பட்டிருக்கக் கூடுமென பலமாகச் சந்தேகிக்கப்பட்டது. இதுசம்பந்தமாக ரகு என்கிற ரவி என்கிற ராஜரெத்தினம், (த/பெ. ரங்கநாதன்) என்பவர் கைது செய்யப்பட்டார்.

4.8 தமிழ்நாடு விடுதலைப் படைத் தலைவர் பெரம்பலூர் மாவட்டம், வல்லம் இளவரசன் என்கிற ராஜா வயது-30 (த/பெ. பாலசுந்தரம்), விழுப்புரம், பாண்டியன்குப்பம், கள்ளநத்தம், சின்னச்சாமி, வயது-43 (த/பெ. பொன்னுசாமி) மற்றும் சந்திரசேகரன், வயது-40 (த/பெ. பொன்னுசாமி நயினார்), ஆகியோர் 6-8-1997 அன்று காலை 11 மணிக்கு பெரம்பலூர், துறைமங்கலம் நெடுஞ்சாலைச் சந்திப்பில் சேலம் "க்யூ" பிரிவு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர். இளவரசன் வைத்திருந்த பிளாஸ்டிக் பையிலிருந்து ஒரு கை எறி குண்டு, ஒரு பைப் குண்டு, தமிழ்நாடு விடுதலைப் படையின் இரண்டு இதழ்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன. சந்திரசேகரன் மற்றும் சின்னச்சாமி ஆகியோரிடமிருந்து தலா ஒரு பைப் குண்டு பறிமுதல் செய்யப்பட்டது. பெரம்பலூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

4.9 20 ஆண்டுகளுக்கு மேலாக தலைமறைவாக இருந்து தேடப்பட்ட தமிழ்நாடு விடுதலைப் படையின் முக்கியத் தலைவர் "சு" என்கிற சுந்தரம், தமிழகக் காவல்துறையின் தீவிர முயற்சிகளால் 9-3-1998 அன்று கைது செய்யப்பட்டார். மேலும், தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த முக்கிய தலைவர்களான இளவரசன், வெங்கடேசன் ஆகியோர் சென்ற ஆண்டு கைது செய்யப்பட்டதன் காரணமாக இந்த இயக்கத்தின் நடவடிக்கைகள் முழுவதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.



**இலங்கைப் போராளிகள் :**

4.10 1997ஆம் ஆண்டு, தமிழகத்தில் இலங்கைப் போராளிகளின் வன்முறை சம்பவங்கள் ஏதுமின்றி, அவர்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

4.11 *8-2-1997* அன்று மாலை, பாண்டியன் (எ) முரளிதரன் உட்பட விடுதலைப்புலிகளின் இயக்கத்தினர் ஐந்து பேர் ஒன்று சேர்ந்து சென்னை மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளிலிருந்து மருந்துகளை வாங்கி இலங்கைக்கு அனுப்பும் சதியில் ஈடுபட்டனர். விடுதலைப்புலிகள் ஐவரும் சென்னை டி.டி.கே. சாலையில் உள்ள ஒரு அடுக்கு மாடிக் கட்டடத்தில் கூடி, இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் இயக்கத்திற்கு மருந்துகளை அனுப்புவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களிடமிருந்து கடற்புலிகள், கருப்பு கடற்புலிகள் போன்ற அமைப்புகளின் பிரச்சார வெளியீடுகள், மருந்து வகைகளின் பட்டியல் ஒன்று, கருப்பு விடுதலைப்புலிகள் இயக்கத்தினருடன் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் உள்ள புகைப்படம் ஆகியவை கைப்பற்றப்பட்டன. இச்சம்பவம் குறித்து சென்னை மாநகர க்யூ பிரிவில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை செய்யப்பட்டது. ஆவடி காவல் நிலைய எல்லையில் இலங்கை விடுதலைப்புலிகளின் தலைமை இடத்திற்கு வானொலிச் செய்திகளை அனுப்பக்கூடிய உயர் அலை கருவி வைக்கப்பட்டிருந்த ஒரு வாடகை வீட்டிலிருந்து செல்லுலார் தொலைபேசியின் 'எஸ்ஐஎம்' கார்டு ஒன்று கைப்பற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து 14-3-1997 அன்று கைது செய்யப்பட்ட விடுதலைப்புலியான பாண்டியன் (எ) முரளிதரன் கொடுத்த தகவலின்பேரில் புதுக்கோட்டையைச் சேர்ந்த இராம. இளங்கோவனைக் கைது செய்து, அவரிடமிருந்த 9 எம்.எம். கைத்துப்பாக்கியின் 19 குண்டுகள், ஒரு துப்பாக்கி, கிளீனிங் கம்பி ஆகியவை கைப்பற்றப்பட்டன. வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது.

4.12 இராமநாதபுரம் மாவட்டம், உச்சிப்புளி காவல்நிலைய எல்லை ஆற்றங்கரை கிராமத்தில் 4-6-1997 அன்று காவல்துறையினர் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்திற்குரிய T.S.D.1332 பதிவு எண் கொண்ட வெள்ளை நிற அம்பாசிடர் கார் ஒன்றைத் தடுத்து நிறுத்தினர். அதைச் சோதனையிட்டபோது, விடுதலைப்புலிகளுக்கு மருந்து முதலியவற்றை வாங்குவதற்காகச் சென்ற விடுதலைப்புலிகள் நான்குபேர் மற்றும் ஓட்டுநர் உட்பட உள்ளூர்வாசிகள் மூவர் அந்த காரில் காணப்பட்டனர். இது தொடர்பாக சந்தேகத்திற்கிடமான விடுதலைப்புலிகள் நால்வர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து

59 ரவைகளுடன் கூடிய 9 எம்.எம். கைத்துப்பாக்கி ஒன்று, 24 ரவைகளுடன் கூடிய 9 எம்.எம். கைத்துப்பாக்கி ஒன்று, 5 வாக்கி-டாக்கி செட்டுகள், மோர்ஸ் கீ போர்டு 2 செட்டுகள், ரூபாய் 17,19,500 மதிப்புள்ள இலங்கை ரூபாய் நோட்டுகள், ரூ. 4,577 இந்திய ரூபாய் நோட்டுகள், பாக்கெட் கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட காலண்டர் 1, இரண்டு பெரிய சயனைடு குப்பிகள் மற்றும் 35 சிறிய சயனைடு குப்பிகள், 4 தங்கச் சங்கிலிகள், 1 தங்க மோதிரம், 16 வீடியோ கேசட்டுகள், 32 ஆடியோ கேசட்டுகள், விடுதலைப்புலிகள் இயக்கத்தால் வெளியிடப்படும் தினசரி மற்றும் வாரப்பத்திரிகைகள் கட்டு ஒன்று ஆகியவை அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாக உச்சிப்புளி காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் விசாரணையின்கீழ் உள்ளது.

4.13 20-1-1998 அன்று விசாகரத்தினம் என்ற விடுதலைப்புலி கைது செய்யப்பட்டு வான்தந்தி சாதனம் ஒன்று கைப்பற்றப்பட்டது. இவரும், இவருக்கு உதவி செய்த பாவாணன் மற்றும் சொக்கலிங்கம் ஆகிய இருவரும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

4.14 தீவிரவாதத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த ஓராண்டில் இலங்கையிலுள்ள தீவிரவாதிகளுக்குப் பொருட்களைக் கடத்தும் பணிகளில் ஈடுபட்ட இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த சவக்கட்டி, கருப்பையா ஆகியோர் உட்பட 23 பேர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச்சூடு

4.15 வன்முறைக் கும்பலைக் கட்டுப்படுத்த, தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் கடைசிபட்சமாக காவல் துறையினால் துப்பாக்கிச்சூடு நடத்தப்படுகிறது. 1997 ஆம் ஆண்டு அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட 63 முறைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில் கலவரத்தைக் கட்டுப்படுத்த 50 முறைகளும், குற்றவாளிகள் மற்றும் கொள்ளையர்களுக்கு எதிராக 13 முறைகளும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டன. துப்பாக்கிச் சூட்டில் 28 பேர் மரணமடைந்தனர். வன்முறைக் கும்பலைக் கலைக்க நடவடிக்கை எடுத்ததில் பொதுமக்கள் 62 பேரும், 245 காவல்துறை அலுவலர்களும் காயமடைந்தனர். 1997 ஆம் ஆண்டு மாநிலத்தில் ஏற்பட்ட இன மற்றும் வகுப்புக் கலவரங்களால் துப்பாக்கிச் சூட்டின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 1998 ஆம் ஆண்டில் 15-3-1998 ஆம் நாள் வரை 5 முறை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.



**4.16.** தமிழ்நாட்டில் **1989** ஆம் ஆண்டு முதல் **1998** வரையில் **(15. 3. 1998** வரை) பல்வேறு சூழ்நிலையில் காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டின்போது இறந்தவர்கள் மற்றும் மேற்படிச் சம்பவங்களின்போது பல்வேறு காரணங்களால் காயமடைந்தவர்கள் பற்றிய விபரங்கள்

| தொடர் எண் | விவரம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | நடத்தப்பட்ட துப்பாக்கி சூடுகளின் எண்ணிக்கை | 13 | 32 | 33 | 67 | 63 | 23 | 32 | 24 | 63 | 5 |
| 2. | கலவரங்களைக் கட்டுப்படுத்திய போது | 9 | 20 | 28 | 40 | 21 | 17 | 26 | 17 | 50 | 5 |
| 3. | வழிப்பறிக் கொள்ளையின்போது | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | .. | .. |
| 4. | மற்ற குற்றவாளிகளின்மீது | 4 | 12 | 5 | 26 | 42 | 6 | 6 | 7 | 13 | .. |
| 5. | இறந்த நபர்களின் மொத்த எண்ணிக்கை | 21 | 14 | 18 | 14 | 44 | 5 | 10 | 15 | 28 | .. |
| | (1) காவல்துறையினர் | .. | .. | .. | .. | 2 | .. | 1 | .. | .. | .. |
| | (2) பொதுமக்கள் | 21 | 14 | 18 | 14 | 42 | 5 | 9 | 15 | 28 | .. |
| 6. | காயப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை | 89 | 34 | 177 | 258 | 115 | 145 | 240 | 116 | 307 | 6 |
| | (1) காவல்துறையினர் | 46 | 2 | 115 | 163 | 98 | 119 | 185 | 97 | 245 | 5 |
| | (2) பொதுமக்கள் | 43 | 32 | 62 | 95 | 17 | 26 | 55 | 19 | 62 | 1 |

[1998 மே 22

## காவல்துறையினரின் காவலில் இருந்தபோது ஏற்பட்ட மரணங்கள்:

4.17 காவல்துறையினரின் காவலில் இருக்கும்போது ஏற்படும் பெரும்பாலான மரணங்கள் குற்றவாளிகளைக் காவல் நிலையத்தில் விசாரணை செய்யும்போது அவர்களிடமிருந்து தகவல்களைச் சேகரிக்க அடித்துச் சித்திரவதை செய்வதாலும், நிர்பந்தம் செய்வதாலும் ஏற்படுகின்றன. காவல் நிலையத்தில், சந்தேகக் குற்றவாளிகளை விசாரணை செய்யும்போது, அவர்களை எப்படிக் கையாள வேண்டுமென்பது குறித்து பல அறிவுரைகள் மற்றும் ஆணைகள் அரசால் அடிக்கடி வெளியிடப்பட்டிருந்தும், காவல்துறை அலுவலர்களின் கவனக்குறைவால் காவலர்களின் காவலில் இருக்கும்போது இறப்புகள் ஏற்படுகின்றன. காவல்துறை நிலை ஆணையில், காவல் நிலையங்களில் நடக்கும் சட்டத்திற்குப் புறம்பான மற்றும் முறையற்ற செயல்களைக் கண்காணிக்க காவல்துறை உயர் அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுரைகள் உள்ளன. காவல் நிலையங்களில், காவலில் இருக்கும்போது, சித்திரவதையோ அல்லது இறப்போ ஏற்பட்டால், காவல்துறை நிலை ஆணை 145-ன்கீழ் நிருவாக மாஜிஸ்ட்ரேட்டால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட காவலர்களின்மீது கடுமையான துறை நடவடிக்கையும் மற்றும் குற்றவியல் வழக்கும் மேற்கொள்ளப்படுகின்றன. விசாரணைக் கைதிகள் மரணம் அடையும்போதெல்லாம் அதற்குப் பொறுப்பான காவல்துறை அலுவலர்கள் மீது குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைதும் செய்யப்படுகின்றனர். விசாரணையின்போது ஏற்படும் குற்றங்களைக் குறைக்க இந்த அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அண்மையில், உச்சநீதிமன்றம் காவலர்களின் காவலில் இருக்கும்போது ஏற்படும் மரணங்களைக் கடுமையாக விமர்சித்து, சந்தேகக் குற்றவாளிகளைக் கைது செய்யும்போது, காவலர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சில விதிமுறைகளை அதாவது கைதுசெய்யும் நேரம், கைதுசெய்யும் இடம், காவலில் வைத்திருக்கும் இடம் முதலியவற்றைக் குற்றவாளிகளின் உறவினர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும், கைது குறித்து பதிவுப் புத்தகம் பராமரிப்பது, கைது செய்யப்பட்டவரை மருத்துவப் பரிசோதனைகள் செய்வது முதலியவை குறித்தும் ஆணைகள் பிறப்பித்துள்ளது. காவலில் உள்ள விசாரணைக் கைதிகளின்பால் இழைக்கப்படும் குற்றங்களைக் குறைக்க அரசு எல்லாவித பயனுள்ள நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.



1998 மே 22]

4.18

**1989** முதல் **1998** வரையிலான காலத்தில் காவல்துறையின் காவலில் இருந்தபோது ஏற்பட்ட இறப்பு

| ஆண்டு | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இறப்பு எண்ணிக்கை | 13 | 9 | 12 | 16 | 17 | 14 | 19 | 13 | 16 | .. |

## நீதிபதி திரு. எஸ். மோகன் ஒரு நபர் விசாரணை ஆணையம்:

4.19 முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில், இழப்பு ஏற்பட்டவர்களுக்கு திரு. கே.ஜே.எம். ஷெட்டி, சிறப்பு ஆணையர் (இழப்பீடு), வழங்கிய நிவாரணத்தில் மனநிறைவடையாதவர்களின் கோரிக்கைகளையும், மேலும் அவர் ஆணையிட்ட தொகையினை எதிர்த்து நீதிமன்றம் சென்றவர்களின் கோரிக்கைகளையும் பரிசீலித்து, நிவாரணம் வழங்கிட அரசு, உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. எஸ். மோகன் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைத்து பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து 1389 மனுக்களைப் பெற்றது. 1065 மனுக்களைப் பரிசீலித்து, மொத்தம் ரூ. 1,46,70,751 (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்தியாறு இலட்சத்து எழுபதாயிரத்து எழுநூற்று ஐம்பத்தொன்று மட்டும்) நிவாரணத் தொகையாக வழங்கியுள்ளது.

## நீதிபதி திரு. எஸ்.ஏ. காதர் விசாரணை ஆணையம்:

4.20 19-6-1997 அன்று, திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி சந்திப்பு பேருந்து நிலையத்தில் பேருந்துப் பணியாளர்களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும் இடையே ஏற்பட்ட ஒரு வாய்த் தகராறின் காரணமாக நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களில், பேருந்துகளுக்குச் சேதங்கள் ஏற்பட்டன. காவல் துறையினர், பேருந்து ஊழியர்கள் ஆகிய இருசாராரும் காயமுற்றனர். போக்குவரத்துக் கழக ஓட்டுனர் ஒருவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், போக்குவரத்துக் கழக ஊழியர் சங்கத்தின் 'உறுப்பினர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் காரணமாக, 20-6-1997 அன்று வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது. இதற்கிடையில்,

இச்சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி திரு. எஸ்.ஏ. காதர் அவர்களை விசாரணை ஆணையமாக 21-6-1997 அன்று அரசு நியமித்தது. இந்த ஆணையத்தின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

## திரு. எம்.ஏ. முருகேசன் விசாரணை ஆணையம்:

4.21 திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், குண்டுப்பட்டி கிராம மக்கள், தங்கள் பகுதிக்குச் சரியான சாலை வசதி இல்லாததால் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்திருந்தார்கள். 18-2-1998 அன்று, கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத் தலைவர் குண்டுப்பட்டி கிராமத்திற்குத் தேர்தல் பிரச்சாரம் செய்யச் சென்றபோது, கிராம மக்கள் அவரையும், அவரது ஆட்களையும் பிடித்து வைத்துள்ளதாகப் பெறப்பட்ட புகாரையடுத்து, காவல்துறையினர் அவர்களை மீட்கச் சென்றனர். மீட்கச் சென்ற காவலர்களையும் கிராம மக்கள் பிடித்துவைத்துத் தாக்கியதாகக் கூறப்பட்ட புகாரின் அடிப்படையில், கிராம மக்கள் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக, 26-2-1998 அன்று, குண்டுப்பட்டியில், குற்றவாளிகளைக் கைது செய்ய காவல்துறையினர் சென்றபோது, அவர்கள் அக்கிராமத்தில் தாக்குதல் நடத்தியதாகவும், சொத்துகளுக்குச் சேதம் விளைவித்ததாகவும் கூறப்பட்டது. தமிழக அரசின் உள்துறைச் செயலாளர், வனத்துறைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் மற்றும் காவல்துறை தலைமை இயக்குநர் ஆகியோர் அடங்கிய உயர்நிலைக் குழு கடந்த 8-3-1998 மற்றும் 9-3-1998 அன்று குண்டுப்பட்டி மற்றும் கொடைக்கானல் பகுதிகளில் சென்று பார்வையிட்டு விசாரணை நடத்தியது. இதனையடுத்து, மேற்சொன்ன சம்பவங்கள் குறித்து குற்றப்புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக, நீதி விசாரணை மேற்கொள்ள, ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. முருகேசன் அவர்களின் தலைமையில், ஒரு நபர் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. மூன்று மாதத்திற்குள் அரசிடம் அறிக்கையை அளிக்குமாறு விசாரணை ஆணையத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கிடையே, பாதிக்கப்பட்ட அந்த கிராம மக்களுக்கு இடைக்கால நிவாரணமாக 5 இலட்சம் ரூபாய் முதலமைச்சரால் வழங்கப்பட்டுள்ளது.





## திண்டிவனத்திலுள்ள டாக்டர் அம்பேத்கர் சிலை விவகாரம்:

4.22 திண்டிவனத்தில், 20-2-1998 அன்று, டாக்டர் அம்பேத்கர் சிலை, அவமரியாதைக்குள்ளானது என்று கூறப்பட்டு, இதன் தொடர்பாகப் போராட்டம் நடைபெற்றது. திண்டிவனத்தில் நிலவும் நிலைமையைக் கருத்தில்கொண்டு ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர் திரு. ஆர்.சி. பாண்டா, இ.ஆ.ப., அவர்களை மேற்கண்ட சம்பவம் குறித்து விசாரிக்க, விசாரணை அதிகாரியாக அரசு நியமித்து, 14-3-1998 அன்று, ஆணை பிறப்பித்துள்ளது. எந்தச் சூழ்நிலைகளில், யாரால் சிலைக்கு அவமரியாதை நேர்ந்தது என்று கண்டறியவும், நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர மாவட்ட நிருவாகம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் குறித்தும், விசாரித்து, எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நிகழாவண்ணம் தடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரை செய்து, மூன்று மாத காலத்திற்குள் தனது அறிக்கையை அளிக்குமாறும் அவரை அரசு கேட்டுக்கொண்டது.

## *1987 ஆம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு தனி இட ஒதுக்கீடு கோரி நடந்த போராட்டத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடும் குடும்ப ஓய்வூதியமும்:*

4.23 1987 ஆம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவீதம் இட ஒதுக்கீடு கோரி நடந்த போராட்டத்தில் சேலம், விழுப்புரம், காஞ்சிபுரம், கடலூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உயிரிழந்த குடும்பங்களுக்கு கருணைத் தொகையாகத் தலா ரூ. 3 இலட்சமும் இக்குடும்பங்களுக்கு ஓய்வூதியமாக மாதம் தலா ரூ. 1,500-ம் வழங்கப்படுமென 6-4-1998 அன்று சட்டப்பேரவையில் அறிவித்ததைத் தொடர்ந்து 25 குடும்பங்களுக்கு இத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 5. குற்றச் சம்பவங்கள் குறித்த நிலை:

5.1 குற்ற நிகழ்வுகள் அதிகரிக்காவண்ணம் தடுத்திட காவல் துறையினரால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குற்றவியல் நடைமுறை விதிக்கோவை (Cr.P.C.) முன்தடுப்பு நடவடிக்கை, மாநகரக் காவல் சட்டம், குண்டர்கள் தடுப்புச் சட்டம் மற்றும் கள்ளச் சாராயக்காரர்கள் தடுப்புச் சட்டம் ஆகிய சட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி, பிரபல குற்றவாளிகளின் செயல்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. குற்ற நிகழ்வுகள் அதிகமாக நடக்கும் பகுதிகளில் ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குற்றவாளிகள் இடம் விட்டு இடம் தப்பிச் செல்வதைத் தடுக்க, சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**5.2 1995, 1996 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில், தமிழகத்தில் நிகழ்ந்த சொத்து சம்பந்தப்பட்ட குற்ற நிகழ்வுகளைக் காட்டும் அறிக்கை**

| தொடர் எண் | குற்றத்தின் தன்மை | 1995 பதிவு செய்யப் பட்டவை | 1995 கண்டு பிடிக்கப் பட்டவை | 1996 பதிவு செய்யப் பட்டவை | 1996 கண்டு பிடிக்கப் பட்டவை | 1997 பதிவு செய்யப் பட்டவை | 1997 கண்டு பிடிக்கப் பட்டவை |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஆதாயம் வேண்டி செய்யப்பட்ட கொலை | 93 | 54 | 89 | 49 | 99 | 48 |
| 2. | கூட்டுக்கொள்ளை | 134 | 56 | 171 | 107 | 197 | 101 |
| 3. | கொள்ளை | 529 | 297 | 600 | 407 | 723 | 433 |
| 4. | கன்னக்களவு | 5998 | 2942 | 6362 | 3490 | 6615 | 3474 |
| 5. | பெரிய திருட்டுகள் | 17343 | 14272 | 17171 | 13746 | 18511 | 15420 |
| 6. | சிறிய திருட்டுகள் | 1069 | 1062 | 1051 | 1050 | 1023 | 1014 |
| 7. | கால்நடைத் திருட்டுகள் | 494 | 462 | 444 | 400 | 480 | 431 |
| | மொத்தம் | 25660 | 19145 | 25888 | 19249 | 27648 | 20921 |
| | குற்ற கண்டு பிடிப்பின் சதவீதம் | 74.6 | | 74.3 | | 75.8 | |



5.3 குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கும், நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்து வழக்குகளை விரைந்து நடத்துவதற்கும் அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது. மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், காவல்துறை ஆணையாளர்கள் ஆகியோரின் செயல்பாடுகளைக் கூர்ந்து ஆய்வு செய்ய காவல்துறையும் நடவடிக்கைகள் எடுத்துள்ளது. குற்றம் பற்றிய புள்ளிவிவரங்கள் மாநிலம் முழுவதும் கணினி மூலம் பெறப்பட்டு அனைவரது பணிகளும் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

5.4 இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டத்தின்கீழ் வராத, 46 நிதி நிறுவனங்கள், பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்பீடுகளை வைப்பீடு காலம் முடிந்தவுடன் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டன. எனவே, வைப்பீட்டாளர்கள் நலன்கருதி இந்த அரசு, 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்கள்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது. ரிசர்வ் வங்கி, இச்சட்டத்தினைப் பெருமளவு வரவேற்றுள்ளதுடன் பிற மாநிலங்களும் இதுபோன்ற சட்டத்தை இயற்றலாம் எனவும் கருத்துத் தெரிவித்துள்ளது. இச்சட்டத்தின்கீழ் சிறப்பு நீதிமன்றம் சென்னையில் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இச்சட்டத்தின்கீழ், வைப்பீட்டாளர்களின் நலன்கருதி, தவறிழைத்த சில நிதி நிறுவனங்களின் சொத்துக்களைப் பற்றுகை செய்கின்ற இடைக்கால ஆணை அரசால் பிறப்பிக்கப்பட்டு, வழக்குகள் சிறப்பு நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

5.5 மாநில அரசின் வருமானத்தைக் கூட்டுவதற்காக, மைய அரசின் லாட்டரி முறைப்படுத்தும் அவசரச் சட்டத்தின்கீழ், இந்த அரசு உடனடியாக வெளி மாநிலப் பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்பனை செய்வதைத் தடைசெய்தது. ஓரிலக்க மற்றும் சுரண்டல் பரிசுச் சீட்டு விற்பனையும் தடை செய்யப்பட்டது. உயர்நீதிமன்றம், மாநில அரசு பிறப்பித்த ஆணைக்கு இடைக்காலத் தடை விதித்தது. இவ்விடைக்காலத் தடையாணை, ஓரிலக்க மற்றும் சுரண்டல் பரிசுச் சீட்டு விற்பனைக்குப் பொருந்தாது என உயர்நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. இதன் அடிப்படையில், ஓரிலக்க மற்றும் சுரண்டல் பரிசுச் சீட்டு விற்பனை செய்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க காவல்துறை அறிவுறுத்தப்பட்டது. காவல்துறையும் இதுகுறித்து தீவிர நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

## கோயில்களில் திருட்டுகள்:

5.6 1997-98-ல் மொத்தம் 284 கோயில் திருட்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில், 27 சிலை திருட்டு வழக்குகள், 35 நகைத்

[1998 மே 22

திருட்டு வழக்குகள் மற்றும் 5 கோபுரக் கலசம் திருட்டு வழக்குகள் அடங்கும். இவற்றில், 89 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட வழக்குகள் முக்கியமானவை:

(1) 29-12-1997 அன்று திருநெல்வேலி மாவட்டம், களக்காடு அருகில் சுந்தர பாண்டீஸ்வரர் கோயிலில் காவலாளியையும் மற்றும் இருவரையும் கொலை செய்துவிட்டு, மாணிக்கவாசகர் சிலையையும், தங்கம், வெள்ளி நகைகள் (மதிப்பு ரூ.1,58,000) ஆகியவற்றையும் கொள்ளை அடித்துச் சென்ற வழக்கில் நான்கு குற்றவாளிகள் 12 நாட்களுக்குள் கைது செய்யபப்பட்டு, சிலையும், நகைகளும் மீட்கப்பட்டன. நான்கு குற்றவாளிகளும் குண்டர் சட்டத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

(2) பழனி அருகில் தாமரைக்குளம் கிராமத்தில் ஈஸ்வர மடாலயத்தில் 2-4-1997 அன்று பரமசிவன் மற்றும் பார்வதி சிலைகள் (மதிப்பு ரூ. 10 இலட்சம்) களவாடப்பட்ட வழக்கில் நான்கு குற்றவாளிகள் பிடிக்கப்பட்டு சிலைகள் மீட்கப்பட்டன.

(3) 30-1-1998 அன்று குன்னூரில் ஜெயின் கோயில் காவலாளியைக் கொலை செய்து பொருட்களைக் களவாடிச் சென்ற வழக்கில் மூன்று குற்றவாளிகள் 4 நாட்களுக்குள் கைது செய்யப்பட்டனர். வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

## 6. மோட்டார் வாகனங்கள் மற்றும் பணிமனை:

6.1 காவல்துறையினர் விரைந்து சென்று செயலாற்றுவது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. குறிப்பாக, பெருநகரங்களுக்கு உட்படாத பகுதிகளில் உள்ள காவல் நிலையங்களுக்குப் பரந்த அளவில் செயல்வரம்பு எல்லைகள் உள்ளதால், அங்கு எழுகின்ற சட்டம்-ஒழுங்கு மற்றும் குற்றம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை விரைந்து சென்று சமாளித்திட காவல் துறையினருக்கு வாகனங்கள் இன்றியமையாதத் தேவையாக அமைகிறது.

### மோட்டார் வாகனங்கள்

6.2 1997 ஆம் ஆண்டு மே திங்களில் ரூ. 3 கோடி செலவில் பழைய வாகனங்களுக்குப் பதிலாக புதிதாக 76 வாகனங்கள் வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1998 ஆம் ஆண்டு மார்ச் திங்களில், 25-4-1997-ல் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில் புதிதாக 29 வாகனங்கள் ரூ.2.02 கோடி செலவில் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1997 ஆம் ஆண்டு



1998 மே 22]

செப்டம்பரில் பழைய வாகனங்களுக்குப் பதிலாக 116 வாகனங்களை ரூ. 2.53 கோடி செலவில் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

6.3 இனக்கலவரங்களைக் கருத்தில் கொண்டு தென் மாவட்டங்களில் பயன்படுத்தப்படுவதற்காக ரூ. 93.06 இலட்சம் செலவில் 20 "டெம்போ டிராவலர்" வேன்கள் வாங்கப்பட்டுள்ளன. புறக்காவல் நிலையங்களுக்காக ரூ.28.88 இலட்சம் செலவில் 75 மோட்டார் சைக்கிள்கள் வாங்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மற்றும் மதுரை காவல் துறை ஆணையகங்களுக்காக ரூ.50.60 இலட்சம் செலவில் தண்ணீர் பீய்ச்சி அடிக்கும் ஊர்திகள் இரண்டு வாங்கப்பட்டுள்ளன. இவ்வாகனங்கள் யாவும் 1997-98 ஆம் ஆண்டுக்கான காவல் துறையை நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் வாங்கப்பட்டன.

6.4 மத்திய அரசின் உதவியுடன் தேசிய நெடுஞ்சாலை ரோந்துப் பணி திட்டத்தின்கீழ் "ஆம்புலன்ஸ்" வண்டிகள் ரூ.25 இலட்சம் செலவில் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு மாநில காவல் துறை போக்குவரத்துப் பணிமனை:

6.5 ஆவடியிலும், திருச்சியிலும் காவல் துறை போக்குவரத்துப் பணிமனைகள் இரண்டு இயங்கி வருகின்றன. இந்த இரண்டு பணிமனைகளிலும் பணி வசதிகளைப் பெருக்க ரூ.12.20 இலட்சம் செலவில் கூடுதல் உபகரணங்கள் காவல் துறையை நவீனமயமாக்குதல் திட்டத்தின்கீழ் வாங்கப்பட்டன.

## 7. நலத் திட்டங்கள்

### உணவுப் பொருட்களை மலிவு விலையில் வழங்கும் திட்டம்

7.1 இன்றியமையா உணவுப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை, ரவை, மைதா, துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாமாயில் ஆகியவற்றைப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் உள்ள விலையில் 50 சதவீத விலையில் காவலர் முதல் ஆய்வாளர் வரை உள்ள காவல் துறையினர், காவல் துறை வானொலி பிரிவில் உள்ள தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் காவல் துறையின் சுருக்கெழுத்துப் பிரிவினருக்கு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது. எனினும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விலைகள் உயர்ந்தபோது, அதற்கிணையாக அரசின் மானியத் தொகை உயராமல் 50 சதவீதத்திற்கும் குறைவாகப்

போனது. ஆகவே, பொது விநியோகத் திட்ட விலையில் 50 சதவீதம் மானியமாக அரிசி, கோதுமை, சர்க்கரை மற்றும் பாமாயில் ஆகியவற்றிற்கும் அரசின் மானியப் பங்காக துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஒவ்வொன்றுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ. 10-ம், ரவை மற்றும் மைதாவிற்கு கிலோ ஒன்றுக்கு ரூ. 3-ம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

7.2 ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள நபர்களுக்குக் குடும்ப அலகுகளின் அடிப்படையில் பெறும் உதவி ரூ. 50 முதல் ரூ. 150 வரை வேறுபடுகிறது. காவல் துறையினர் மண்ணெண்ணெய் பெறுவதற்கு ஏதுவாக தனி குடும்ப அட்டைகளை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## தமிழ்நாடு காவல் துறையினர் நலநிதி (Benevolent fund)

7.3 தமிழ்நாடு காவல் துறையினர் நலநிதி, காவல் துறையிலுள்ள அரசிதழ் பதிவு பெறாதப் பணியாளர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்கும் நோக்குடன் 1957 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. அரசிதழ் பதிவு பெறாதப் பணியாளர்களிடமிருந்து 1996 ஜூன் திங்களிலிருந்து ரூ. 30 முதல் ரூ. 100 வரை பெறப்பட்ட ஆண்டுச் சந்தாக்களையும், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் வழங்கிய நன்கொடையையும் மற்றும் அரசு இவ்வாண்டு வழங்கிய ரூ.25 இலட்சத்தையும் கொண்டு இந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. இந்நிதி கீழ்க்காணும் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

7.4 (1) காவல் துறை பணியாளர் எவரும் இறக்க நேரிட்டால், இறந்த பிறகு ஏற்படும் அவசரச் செலவுகளுக்காக அவரது வாரிசுகளுக்கு ரூ.4,000 கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.

7.4 (2) நீண்டகால நோய், பலத்தகாயம் போன்ற அசாதாரண சூழ்நிலைகளில் உறுப்பினர்களுக்கு நிதி உதவி வழங்குதல்.

7.5 தமிழ்நாடு காவல் துறை மருத்துவ நல நிதித் திட்டத்தின்கீழ் வராத நோய்க்குச் சிகிச்சை பெற, உரிய பரிசீலனைக்குப் பிறகு, அதிக அளவாக ரூ.5,000 மருத்துவ உதவியாக வழங்கப்படுகிறது.

7.6 சார்நிலை காவல் துறை பணியாளர்களின் பிள்ளைகளுக்குக் கல்லூரி, பல்தொழில் பயிற்சிப்பள்ளி மற்றும் பிளஸ்-2 ஆகிய உயர்படிப்புகள் படிக்க ரூ. 500 முதல் ரூ. 5,000 வரை 1996-97 ஆம் ஆண்டு முதல் ஒரே தவணையில் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது.



7.7 இத்திட்டத்தின்கீழ், 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 54,01,500 வழங்கப்பெற்று காவல் துறையினரின் 3,158 பிள்ளைகள் பயனடைந்தனர்.

## தமிழ்நாடு காவலர் நலக் கூட்டுறவுச் சங்கங்கள்

7.8 காவல் துறையினரின் குடும்பத்தினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்களிடையே நலத் திட்டங்களைத் தொடங்கி செயல்படுத்தி ஒருங்கிணைப்பதும், அதன் மூலம் துணை வருமானம், மனமகிழ்வு, கல்வி, மருத்துவம் ஆகிய வசதிகளைப் பெறச் செய்வதும் இதன் முக்கிய நோக்கமாகும். காவலர்களின் குடும்பத்தினர் தையல் தொழில், தீக்குச்சி தயாரித்தல், பால் உற்பத்தி போன்ற பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

7.9 காவலர்களின் சீருடை, சில பொதுத் துறை நிறுவனப் பணியாளர்களின் சீருடை, தமிழ்நாடு அரசின் மதிய சத்துணவுத் திட்டத்தின்கீழ் வரும் பள்ளி மாணவர்களின் சீருடை ஆகியவற்றைத் தயாரித்துத் தருவதில் 11 தையல் பிரிவுகளும், 8 மாதர் சங்கங்களும் (மகளிர் தையல் பிரிவுகள்) ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

7.10 பனியன்கள், காலுறைகள், ஆயத்த ஆடைகள், தொப்பிகள், கொசுவலைகள், தரைவிரிப்புகள், பாலிதீன் உறைகள் முதலியன தயாரிக்கும் 12 கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறுதொழில் கூடங்களில், குடும்ப வருமானத்தைப் பெருக்கும் வகையில் காவலர்களின் குடும்பத்தினர் பணிபுரிகின்றனர். மதுரை, கிருஷ்ணாபுரம் காலனியில் பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இயங்கி வருகிறது. மேலும், சிவகாசி மற்றும் மணிமுத்தாறில் உள்ள தீக்குச்சி தயாரிக்கும் தொழிற்சாலைகளும், சென்னை புதுப்பேட்டையில் புத்தகம் கட்டுதல் பிரிவும், காகித உறைகள் தயாரிக்கும் பிரிவும் காவலர்களின் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கி வருகின்றன.

## தமிழ்நாடு காவலர் மருத்துவ நலத் திட்டம்

7.11 காவல்துறையினர் அரசு மருத்துவமனைகளில் பெரிய நோய்களுக்கும் அறுவை சிகிச்சைகளுக்கும் சிகிச்சை எடுத்துக்கொள்ள இயலாத நிலையில் உள்ளபோது அவர்களது நிதி நெருக்கடிகளை அரசு கருத்தில் கொண்டு, அவர்களின் சுமைகளைக் குறைக்கும் நோக்குடன், "தமிழ்நாடு காவலர் மருத்துவ நலநிதியை" ஆரம்பித்தது. இந்நிதிக்காக அரசு தனது பங்காக இந்த ஆண்டு முதல் ரூ.30 இலட்சம் ஆண்டு

மானியமாக அளிக்கிறது. காவல் துறையினர் ஒவ்வொருவரிடமிருந்து ரூ. 25 ஆண்டுச் சந்தாவும் பெறப்படுகிறது. இந்தியாவிற்குள் ஒருவருக்குச் சிகிச்சை மேற்கொள்ள அதிக அளவாக ரூ. 1 இலட்சம் வழங்கப்படுகிறது. இந்தியாவிற்கு வெளியில் மேற்கொள்ளப்படும் சிகிச்சைகளுக்கு ஒருவருக்கு ரூ.1 இலட்சம் நிதியுடன் மேலும் ரூ.1 இலட்சம் 10 சதவீதம் தனிவட்டியில் கடனாக வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மொத்த நிதி உதவி ரூ. 2 இலட்சத்திற்கு மிகாமல் அளிக்கப்படுகிறது. இந்நிதியுதவி, தனியார் மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் பெரிய அறுவை சிகிச்சைகளான இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, நரம்பியல், புற்றுநோய் சிகிச்சை ஆகியவற்றிற்கு மட்டுமே வழங்கப்படுகிறது. 1996 ஆம் ஆண்டில், 50 பேருக்கு ரூ. 41,28,487-ம் 1997 ஆம் ஆண்டில், 97 பேருக்கு ரூ. 51,26,109-ம் இந்நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

### காவல் துறையினர் மற்றும் அதிகாரிகளுக்கான குழு காப்பீட்டுத் திட்டம்

7.12 இரண்டாம் நிலை காவலர் முதல் காவல் துறைத் தலைமை இயக்குநர் வரை அனைத்து காவல் துறையினரும் இத்திட்டத்தின்கீழ் பயனடைவர். தற்கொலை மற்றும் இயற்கை காரணம் தவிர்த்து கடமை ஆற்றும்பொழுது மரணம் அடையும் காவலரது வாரிசுதாரர் அல்லது நியமனதாரர் கீழ்க்கண்டவாறு காப்பீட்டுத் தொகை பெறுவர்:

| பதவி | தொகை |
|---|---|
| காவலர் முதல் காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் வரை | ரூ. 1 இலட்சம் |
| காவல்துறைக் கண்காணிப்பாளர் முதல் காவல் துறைத் தலைவர் வரை | ரூ. 5 இலட்சம் |
| காவல் துறைக் கூடுதல் இயக்குநர் | ரூ. 7.5 இலட்சம் |
| காவல் துறைத் தலைமை இயக்குநர் | ரூ. 10 இலட்சம் |

7.13 1996-97ஆம் ஆண்டில் 10 காவலர் குடும்பங்களுக்கு ரூ. 10 இலட்சமும், 1997-98ஆம் ஆண்டில் 10 காவலர் குடும்பங்களுக்கு ரூ. 10 இலட்சமும் வழங்கப்பட்டது.



### தமிழ்நாடு அதிவிரைவுப் படையில் பணியாற்றும் காவலர் மற்றும் அதிகாரிகளுக்கான பெயரிடப்படாத குழு காப்பீட்டுத் திட்டம்

7.14 தமிழ்நாடு அதிவிரைவுப் படையில் பணிபுரியும் காவலர் முதல் அதிகாரி வரை எவரேனும் கடமையாற்றும்போது எதிர்பாராவகையில் அகால மரணமுற்றால் அவரது நியமனதாரர் அல்லது வாரிசுதாரர் ரூ. 10 இலட்சம் காப்பீட்டுத் தொகை பெறத் தகுதி உடையவராவார். நிரந்தர ஊனமடைபவர்கள் ஊனத்திற்கு ஏற்றவாறு காப்பீட்டுத் தொகை பெறுவர். இத்திட்டத்தின்கீழ் இருவருக்கு ரூ. 6 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

### கருணைத் தொகை

7.15 காவல் துறையில் ஒழுக்கம், மனவலிமை, தன்னம்பிக்கை ஆகியவற்றை ஊட்டும் வகையில் பணியின்போது வீரதீரச் செயல்புரிந்து மரணம் அடையும் அல்லது காயமடையும் காவலர்களுக்குக் கீழ்க்கண்டவாறு சிறப்புக் கருணைத் தொகை அளிக்க அரசு அனுமதித்துள்ளது:

| | | |
|---|---|---|
| (அ) | வீரமரணம் அடைவோர் | ரூ. 2 இலட்சம் |
| (ஆ) | செயல்பட முடியாதபடி (கால் இழப்பு, பார்வை இழப்பு மற்றும் பிற) | ரூ. 50 ஆயிரம் |
| (இ) | கடுமையாகக் காயம் அடைவோர் | ரூ. 10 ஆயிரம் |
| (ஈ) | சிறிய அளவில் காயம் அடைவோர் | ரூ. 5 ஆயிரம் |

7.16 வீரதீரச் செயல்புரிந்து இறந்த காவலரின் வாரிசுதாரருக்கு அந்தக் காவலர் கடைசியாகப் பெற்ற சம்பளம், அவர் உயிருடன் இருந்து ஓய்வுபெறக்கூடிய நாள் வரை, குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும். சிறப்புப் பாதுகாப்புப் படையில் பணியாற்றும் காவல்துறையினருக்குக் கீழ்க்கண்டவாறு சிறப்பு கருணைத் தொகை வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| (அ) | காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் அவருக்கும் மேல்நிலையில் உள்ள அதிகாரிகள் மரணமடைந்தால் | ரூ. 5 இலட்சம் |
| (ஆ) | காவலர் முதல் ஆய்வாளர் வரை மரணமடைந்தால் | ரூ. 3 இலட்சம் |

[1998 மே 22

(இ) நிரந்தர கை, கால் இழப்பு, பார்வை இழப்பு, உடல் ஊனம் (அனைவருக்கும்) ரூ. 2 இலட்சம்

(ஈ) உடல் உறுப்புக்கள் உருக்குலைந்தால் (அனைவருக்கும்) ரூ. 1 இலட்சம்

7.17 மத்திய துணை நிலை இராணுவத்தினர் மாநிலக் காவல் துறையினருக்கு, உதவியாகப் பணியில் ஈடுபட்டிருக்கையில் இறக்க நேரிட்டால், அவர்களது குடும்பத்திற்கு ரூ. 1 இலட்சம் சிறப்புக் கருணைத் தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## கருணை அடிப்படையில் நியமனம்

7.18 அரசுப் பணியாளர்கள் பணியிலிருக்கும்போது இறக்க நேரிட்டால், அவரது வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. மருத்துவக் காரணங்களுக்காக 50 வயதிற்குள் தகுதியற்றவர்களாகக் கருதப்பட்டு, ஓய்வு அளிக்கப்பட்டவர்களின் வாரிசுதாரர்களுக்கும் இச்சலுகை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## தொழில் கல்வியில் இட ஒதுக்கீடு

7.19 பணிக்காலத்தில் வீரமரணம் அடைந்த காவல் துறையினரின் குழந்தைகளுக்கு மருத்துவம், பொறியியல் மற்றும் வேளாண்மை ஆகிய பட்டப்படிப்புகளில் சேர தலா 3 இடங்களும், சட்டப்படிப்பில் 2 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## பரிசுத் திட்டம்

7.20 ஒவ்வொரு மாவட்டத்திலும் 10-ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெறும் காவல் துறை ஆய்வாளர் வரையிலான காவல்துறைப் பணியாளர்களின் பிள்ளைகளுக்கு முறையே ரூ. 6,000, ரூ. 4,000/- ரூ. 2,000/- எனவும், 12-ஆம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பிள்ளைகளுக்கு முறையே ரூ. 7,000/-, ரூ.5,000/- மற்றும் ரூ.3,000/- எனவும் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

## தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவு படிப்பு உதவித் தொகை

7.21 தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு நினைவு படிப்பு உதவித் தொகை 1962 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அரசிதழ் பதிவு பெறாத



1998 மே 22]

காவல் துறை மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் குழந்தைகள் கல்லூரி அளவில் உயர்கல்வி பெற படிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ஓய்வு பெற்ற அல்லது மரணமடைந்த பணியாளர்களின் பிள்ளைகளுக்கும் அவர்கள் ஓய்வு பெற்ற அல்லது மரணமடைந்த நாளிலிருந்து 5 ஆண்டுகள் வரை இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆய்வு ஆண்டில் 3,458 மாணவர்களுக்கு ரூ.54,01,500/- உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## சிறப்புப் படிப்புதவித் தொகை நிதி

7.22 காவலர் முதல் ஆய்வாளர் பதவி வரையில் உள்ள காவல் துறைப் பணியாளர்களின் பிள்ளைகளுக்குச் சிறப்புப் படிப்பு உதவித் தொகை வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இந்நிதிக்கு அரசு ரூ.6 இலட்சமும் சிறப்புப் பாதுகாப்புப் படையில் உள்ளவர்களுக்கு ரூ.4 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை தமிழ்நாடு போக்குவரத்து மேம்பாட்டு நிதி நிறுவனத்திடம் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வைப்பீட்டின்மீது கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து படிப்பு உதவித் தொகை வழங்கப்படும். தொழில் சார்ந்த உயர் கல்வியில் சேரும் காவல் துறைப் பணியாளரின் பிள்ளைகள் இப்படிப்புதவித் தொகையைப் பெறுகின்றனர். தலைசிறந்த ஒரு மாணவருக்கு ரூ.40,000/-மும், சிறந்த மாணவர்கள் ஐந்து பேருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ.20,000/- வீதமும் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் இவ்வகையில் ஆறு மாணவர்கள் பயனடைந்தனர்.

## காவல் துறை மருத்துவமனைகள்

7.23 சென்னை மாநகரக் காவல் துறை மருத்துவமனை முதலில் காவல்துறையினருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் தனியே மருத்துவ உதவி அளிக்கும் வகையில் 1928-ஆம் ஆண்டு ஒரு மருந்தகமாக ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், 1963-ல் இந்த மருந்தகம் ஒரு மருத்துவமனையாக மாற்றப்பட்டது. இம்மருத்துவமனையில் அறுவை சிகிச்சை சிவில் மருத்துவர் ஒருவரும், 5 உதவி மருத்துவர்களும், 7 செவிலியர்களும், 27 மருத்துவத் துணைப் பணியாளர்களும் உள்ளனர். இம்மாநகரக் காவல் துறை மருத்துவமனை பணியிலிருக்கும் மற்றும் ஓய்வுபெற்ற காவலர்களின் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 60,000 பேர் பயன்பெறும் வகையில் இயங்குகிறது. அவர்களுடைய குடும்பத்தினரும்

[1998 மே 22

அமைச்சுப் பணியாளர்களின் குடும்பத்தினரும் இம்மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றனர். ஆண்டுதோறும் மாநகரக் காவல் மருத்துவமனையில் ஒரு இலட்சம் புறநோயாளிகளும், இரண்டாயிரம் அகநோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், கடலூர், ஆவடி, வேலூர், பரங்கிமலை ஆகிய இடங்களில் காவல் துறை மருத்துவமனைகள் உள்ளன. அவற்றில் 500 அகநோயாளிகளும் சுமார் 7,000 புறநோயாளிகளும் சிகிச்சை பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

## பாதிக்கப்பட்டோர் உதவி நிதி

7.24 1995-96 ஆம் ஆண்டில், அரசு வழங்கிய ரூ.1 கோடியுடன் பாதிக்கப்பட்டோர் உதவி நிதி என்ற புதியதோர் நிதி உருவாக்கப்பட்டது. கொலை, கடுமையான காயம், கற்பழிப்பு ஆகிய இனங்களைப் பொறுத்தவரையில், பாதிக்கப்பட்டவருக்கு அல்லது சட்டப்படிக்கான வாரிசுதாரர்களுக்கு இந்நிதி உதவி அளிக்கப்படுகிறது. கொலை செய்யப்பட்டு இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு ரூ.10,000மும், கொடுங்காயம் அடைந்தவர்/கற்பழிக்கப்பட்டவர்களுக்கு ரூ.5,000மும் வழங்கப்படும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் இந்நிதி வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படும். 1997-98 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்டோர் நல நிதிக்கென்று ரூ. 80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 1996-97-ல் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்கள்

7.25 சிறப்புப் பாதுகாப்புக் குழுமத்தை முறையாக மாற்றி வடிவமைத்து தமிழ்நாடு காவல் துறை அதிரடிப்படை, தமிழ்நாடு அதிரடிப்படை பயிற்சிப் பள்ளி, முதன்மை படைப் பிரிவு என பிரித்து அவற்றில் பணியாற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும் ரூ.10 இலட்சத்திற்குக் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

7.26 தமிழ்நாடு காவலர் மருத்துவ நிவாரண நிதியிலிருந்து சிறப்பு மருத்துவ சிகிச்சைக்காக வழங்கப்படும் அதிகபட்சத் தொகை காவல் துறைப் பணியாளர்களின் குடும்பங்களுக்கும் வழங்க ஆணையிடப்பட்டது. ஆண்டுதோறும் ரூ.30 இலட்சம் மானியமாக இத்திட்டத்திற்கு வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

7.27 காவலர்/தலைமைக் காவலர்களுக்குச் சீருடைப்படி மாதம் ரூ.25-லிருந்து ரூ.30 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.



1998 மே 22]

7.28 அப்பழுக்கற்ற வகையில் பணியாற்றிய காவலர்களுக்கு மாதந்தோறும் கீழ்க்கண்டவாறு 25-10-1996 முதல் சிறப்புப் படி வழங்க அனுமதிக்கப்பட்டது:

| | | |
|---|---|---|
| 15 | ஆண்டுகள் | ரூ. 5 |
| 20 | ஆண்டுகள் | ரூ. 7.50 |
| 25 | ஆண்டுகள் | ரூ. 10 |
| 30 | ஆண்டுகள் | ரூ. 15 |
| 35 | ஆண்டுகள் | ரூ. 20 |

7.29 ஓட்டுநருக்கான சிறப்புப்படி ரூ.40-லிருந்து ரூ.60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

7.30 திறமைக்கான சிறப்பு ஊதியம் காவலர்களுக்கு ரூ. 3-லிருந்து ரூ.10 ஆகவும், தலைமைக் காவலர்களுக்கு ரூ.5-லிருந்து ரூ.15 ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

7.31 1996-97 ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் 9 இடங்களில் காவலர்களுக்காக 1000 குடியிருப்புகளைக் கட்ட ரூ.2,755.40 இலட்சம் ஒதுக்கப்பட்டது. மாவட்டங்களில் 500 குடியிருப்புகளைக் கட்ட ரூ.1,465.89 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

7.32 15 ஆண்டு பணி முடித்த முதல்நிலை பெண் காவலர்களுக்குத் தலைமைக் காவலர்களாகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

7.33 கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் மிகச் சிறப்பாகப் பணியாற்றிய காவல் துறையினருக்கு உத்தமர் காந்தி பதக்கமும் ரூ.10,000 ரொக்கமும் வழங்கப்பட்டன.

7.34 கோயம்புத்தூரில் 102 காவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ.293.95 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

## 1997-98-ல் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்கள்

7.35 இந்த ஆண்டு முதல் 1,500 குடியிருப்புகளுக்குப் பதிலாக 2,500 குடியிருப்புகளைக் கட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

7.36 தமிழ்நாட்டில் 98 இடங்களில் ரூ.5 கோடி செலவில் 2,751 காவலர் குடியிருப்புகளுக்கு நவீன கழிப்பறைகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது.

[1998 மே 22

7.37 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளுக்கு உணவுக்கான நிரந்தர முன்பணம் ஒரே சீராக ரூ.5,000-லிருந்து ரூ.25,000 ஆக உயர்த்தப்பட்டது.

7.38 உணவுப் படி இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு ரூ.16-லிருந்து ரூ.25 ஆகவும், முதல் நிலைக் காவலர்/தலைமைக் காவலர்களுக்கு ரூ.20-லிருந்து ரூ.30 ஆகவும், உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர்களுக்கு ரூ.30-லிருந்து ரூ.45 ஆகவும் உயர்த்தப்பட்டது.

7.39 காவலர்களுக்கு உணவு மானியத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த மானியத் தொகை ஒரு கிலோ துவரம் பருப்புக்கு ரூ.4-லிருந்து ரூ.10 ஆகவும், உளுத்தம் பருப்பிற்கு ரூ.3-லிருந்து ரூ.10 ஆகவும், ரவை/மைதாவிற்கு ரூ.1.50-லிருந்தும் ரூ.3 ஆகவும் உயர்த்தப்பட்டது.

7.40 காவல் துறையிலுள்ள 80,000 காவல் துறைப் பணியாளர்களுக்குப் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும். இந்தக் குடும்ப அட்டைகளைப் பயன்படுத்தி நியாய விலைக் கடைகளில் அவர்கள் மண்ணெண்ணெய் பெறலாம்.

7.41 தமிழ்நாடு காவலர் நல நிதிக்கு வழங்கப்படும் ஆண்டு மானியத் தொகையை அரசு ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

7.42 மாநில இசைக் குழுவினருக்கு வழங்கும் மாதாந்திர தனி ஊதியம், பாண்ட் மாஸ்டருக்கு ரூ.100/-, உதவி பாண்ட் மாஸ்டருக்கு ரூ.75/-, தலைமைக் காவலர்/அவில்தாருக்கு ரூ.60/- மற்றும் ஏனையோருக்கு (தலைமைக் காவலர்/நாயக்/லான்ஸ் நாயக்) ரூ.40/- என வழங்கப்பட்டுள்ளது. இதுபோலவே ஆவடி படைக்கல மைய இசைக் குழுவினருக்கு மாதாந்திரத் தனி ஊதியம், ஆய்வாளர்களுக்கு ரூ.75/-, அவில்தாருக்கு ரூ.50/- மற்றும் நாயக் மற்றும் லான்ஸ் நாயக்கிற்கு ரூ.40/- என உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

7.43 தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் பதக்கத்தைப் பொறுத்தவரையில் காவலர்களுக்கான சிறப்பூதியம் முதல்நிலை/இரண்டாம்நிலை/தமிழ்நாடு சிறப்புப் படை உதவி நாயக்கிற்கு ரூ.20/- லிருந்து ரூ.40/- ஆகவும், உள்ளூர் மற்றும் ஆயுதக் காவல் படையில் தலைமைக் காவலர் மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்த நாயக் மற்றும் அவில்தார்களுக்கு ரூ.25/-லிருந்து ரூ.50/-ஆகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.



1998 மே 22]

7.44 வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு மரணம் எய்தும் காவல் துறையினருக்கு வழங்கப்படும் கருணைத் தொகை ரூ.2 இலட்சமாகவும், ஊனமுற்றவர்களுக்கு ரூ.50,000/-மும், படுகாயம் அடைந்தவர்களுக்கு ரூ.10,000/-மும், சிறுகாயம் அடைந்தவர்களுக்கு ரூ.5,000/- ஆகவும் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

7.45 தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் 10 பிரிவுகளில் அடங்கிய 90 நாயக் பதவிகளை அவில்தார் பதவிகளாக நிலை உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

7.46 அப்பழுக்கற்ற முறையில் பணியாற்றிய காவல் துறையினருக்கு மாதாந்திர சிறப்புப் படி 11-6-1997 முதல் பின்வருமாறு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது:

15 ஆண்டுகள் பணி முடித்த காவலர்கள் ரூ.15/-

20 ஆண்டுகள் பணி முடித்த காவலர்கள் ரூ.20/-

25 ஆண்டுகள் பணி முடித்த காவலர்கள் ரூ.25/-

30 ஆண்டுகள் பணி முடித்த காவலர்கள் ரூ.30/-

35 ஆண்டுகள் பணி முடித்த காவலர்கள் ரூ.40/-

7.47 15 ஆண்டுகள் பணி முடித்தும் இன்னும் பதவி உயர்வு பெறாத ஆண் காவலர்களை ஊக்கவிக்கும் பொருட்டும், பெண் காவலர்களுக்கு இணையாக அவர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்பு கிடைக்கச் செய்யவும், 10 ஆண்டுகள் பணி முடித்த இரண்டாம் நிலைக் காவலர்களை முதல் நிலைக் காவலர்களாகவும், 5 ஆண்டுகள் பணி முடித்த முதல் நிலைக் காவலர்களைத் தலைமைக் காவலர்களாகவும் பதவி நிலை உயர்த்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதனால் 19,106 காவலர்கள் பயனடைந்தனர்.

7.48 தனியே மின் அளவை மீட்டர்கள் இல்லாத 13,932 காவலர் குடியிருப்புகளுக்கு மின் அளவை மீட்டர்கள் பொருத்த ஆணையிடப்பட்டது.

7.49 தமிழ்நாடு சிறப்புக் காவல் படை மற்றும் குற்றப்புலனாய்வுத் துறையின் சிறப்புப் பிரிவு காவல் துறையினருக்கு வழங்கப்பட்டு வந்த பயணப் படி உச்சவரம்பு 40 விழுக்காட்டிலிருந்து 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோலவே மாவட்டங்கள் மற்றும் ஆயுதப் படைப் பிரிவு காவல் துறையினருக்கு வழங்கப்பட்டு வந்த பயணப் படி உச்சவரம்பு 30 விழுக்காட்டிலிருந்து 40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

7.50 கடந்த சில ஆண்டுகளாக காவலர் நலனுக்காகச் செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு: 111

காவலர் நலனுக்கான செல்வின சுருக்கம்

**1991 முதல் 1996 வரை**

| ஆண்டு | தொடரும் செல்வினம் | தொடரா செல்வினம் |
|---|---|---|
| 1991-92 | ரூ.0.84 கோடி | ரூ.0.05 கோடி |
| 1992-93 | ரூ.3.00 கோடி | ரூ.9.80 கோடி |
| 1993-94 | ரூ.0.46 கோடி | ரூ.15.53 கோடி |
| 1994-95 | ரூ.1.05 கோடி | ரூ.20.30 கோடி |
| 1995-96 | ரூ.0.23 கோடி | ரூ.14.28 கோடி |
| மொத்தம் | **ரூ.5.58 கோடி** | **ரூ.59.96 கோடி** |

**1996 முதல் 1998 வரை**

| ஆண்டு | தொடரும் செல்வினம் | தொடரா செல்வினம் |
|---|---|---|
| 1996-97 | ரூ.6.81 கோடி | ரூ.45.19 கோடி |
| 1997-98 | ரூ.10.19 கோடி | ரூ.88.53 கோடி |
| மொத்தம் | **ரூ.17.00 கோடி** | **ரூ.133.72 கோடி** |

## 8. 1998-99 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

கீழ்க்காணும் பத்து புதிய திட்டங்கள் மொத்தம் ரூபாய் 366.93 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | 1998-99-ல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | காவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்க, முதல் கட்டமாக, மூன்று நிரந்தரக் காவல் பயிற்சிப் பள்ளிகளை உருவாக்க, காவலர் தங்குமிடங்கள் கட்டுதல் | 180.00 |
| 2. | தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் 25 காவல் நிலையங்களுக்கு முதல் கட்டமாக படிப்படியாக புதிய கட்டடங்கள் கட்டுதல் | 100.00 |
| 3. | தற்போது தமிழ்நாடு அதிரடிப் படையினர் தலைமையகம் இயங்கும் மருதம் வளாகத்தில் மற்றும் ஒரு மேல்தளம் கட்டுதல் | 20.00 |
| 4. | சென்னை, எழும்பூரில் காவல் ஆணையர் அலுவலக வளாகத்தில் உள்ள அலுவலர்களின் உணவுக் கூடத்தின் இரண்டாவது மாடியில் குளிர்சாதன வசதியுடன் கூடிய கூட்ட அரங்கம் கட்டுதல் | 25.00 |
| 5. | விருதுநகரில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்குக் குடியிருப்பு கட்டுதல் | 16.00 |
| 6. | தடய அறிவியல் துறையில் மையப்படுத்தப்பட்ட நடுத்தரப்பட்ட ஒரு குடிநீர் வழங்கல் திட்டத்திற்கு அனுமதி அளித்தல் | 1.00 |
| 7. | தடய அறிவியல் துறையில் மானிடவியல், வெடி மருந்துகள், ஆவணங்கள் மற்றும் பத்திரங்கள் ஆகிய பிரிவுகளுக்கு 1.5 டன் அளவுள்ள சீர்வளி வசதி சாதனங்கள் வழங்குதல் | 1.68 |
| 8. | அறிவியல் உதவியாளர் பதவியை அறிவியல் அலுவலர் பதவியாக நிலை உயர்த்துதல் | 2.75 |
| 9. | ஒரு டி.எம்.ஏ. அடர்த்தி வீத எடைமானம் செறிவு அளவை மீட்டர் வாங்குதல் | 5.50 |
| 10. | திருநெல்வேலி வட்டாரத் தடய அறிவியல் ஆய்வுக் கூடத்திற்கு 3 டிஎல்சி ஸ்கேனர் வாங்குதல் | 15.00 |
| | மொத்தம் | **366.93** |

[1998 மே 22

## 9. பணியாளர் நியமனம் மற்றும் பயிற்சி

*9.1* காவல் துறை, சிறைத் துறை மற்றும் தீயணைப்புத் துறை ஆகியவற்றிற்குத் தேவையான சிறந்தப் பணியாளர்களைத் தேர்வு செய்வதற்காக தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம், *1991* ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இக்குழுமம், இரண்டாம் நிலைக் காவலர்களையும், உதவி ஆய்வாளர்களையும் காவல் துறைக்காகத் தேர்வு செய்கிறது.

### காவல் துறை உதவி ஆய்வாளர்கள் தேர்வு

*9.2 1994-95* ஆம் ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட *1,100* உதவி ஆய்வாளர்கள் *1997-98* ஆம் ஆண்டில் இரண்டு அணிகளாகப் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர்.

(i) நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட தகுதிகாண் பருவத்திலுள்ள முதல் அணியைச் சேர்ந்த *476* உதவி ஆய்வாளர்கள், *6* மாத செயல்முறை பயிற்சியை முடித்த பின்னர், *20-9-1997* முதல் மாநகரங்களிலும், சரகங்களிலும் உள்ள காவல் நிலையங்களில் தனிப் பொறுப்புடன் பணியாற்ற அமர்த்தப்பட்டனர்.

(ii) ஆயுதப் படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலுள்ள *313* உதவி ஆய்வாளர்கள், பணிமாற்றம் செய்யப்பட்டு *20-9-1997* முதல் வட்டக் காவல் (தாலுக்கா) நிலையங்களில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

(iii) நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட இரண்டாவது அணியைச் சேர்ந்த *600* உதவி ஆய்வாளர்களும், *20* சதவீத இட ஒதுக்கீட்டின்படி தேர்வு பெற்ற காவல் துறையைச் சேர்ந்த *267* பேரும், *2.5.1997* முதல் சென்னை அசோக் நகரில் உள்ள காவல் பயிற்சிக் கல்லூரி, கோவை மற்றும் வீராபுரத்தில் உள்ள தற்காலிகக் காவல்துறைப் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெற அனுப்பப்பட்டனர். மொத்தம் *858* பேர் இப்பயிற்சியில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களில் *317* பேர் உள்ளூர்க்காவல் துறையையும் *378* பேர் ஆயுதப் படையையும் மற்றும் *163* பேர் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையையும் சேர்ந்தவர்களாவர்.

*9.3* உள்ளூர்க் காவல் துறை உதவி ஆய்வாளர்களுக்குப் பயிற்சிக் காலம் இரண்டரை ஆண்டுகள். ஆயுதப் படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சேர்ந்தவர்களுக்குப் பயிற்சிக் காலம் ஓராண்டு ஆகும்.



1998 மே 22]

### காவலர் தேர்வு

*9.4* (i) *1995-96* ஆண்டில் *10,000* பேர் ஆண், பெண் இரண்டாம் நிலைக் காவலர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(ii) முதல் அணியாக *4,945* பேர் (ஆண் காவலர் *3,265*, பெண் காவலர் *1,680*) *15-4-1997* முதல் *12* தற்காலிகப் பயிற்சிப் பள்ளிகளுக்கு அடிப்படைப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். பயிற்சி முடித்த பின்னர், *15-10-1997* அன்று முதல் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளில் அவர்கள் பணியில் சேர்க்கப்பட்டனர்.

(iii) இரண்டாவது அணியாக *4,636* பேர் (ஆண் காவலர் *3,067*, பெண் காவலர் *1,569*) அடிப்படைப் பயிற்சிக்காக *12* தற்காலிகப் பயிற்சிப் பள்ளிகளுக்கு *1-11-1997* முதல் அனுப்பப்பட்டனர். அவர்கள் பயிற்சியை முடிக்கவிருக்கின்றனர். அவர்கள் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

(iv) தவிர, *1989-90* ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட *1,024* காவலர்களும் *31-10-1997* முதல் அடிப்படைப் பயிற்சிக்காக மணிமுத்தாறு மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் உள்ள தற்காலிகப் பயிற்சிப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் பயிற்சியை முடித்தபிறகு, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை அணிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

*9.5* அண்மையில், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் குழுமம், *5,000* பெண்காவலர், *4,000* ஆண் காவலர் மற்றும் *1,000* உதவி ஆய்வாளர்களையும் தேர்வு செய்ய மனுக்கள் கோரி அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

### பயிற்சி

*9.6* பயிற்சிப் பிரிவு, கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்களை உள்ளடக்கியதாகும்:

1. காவல் பயிற்சிக் கல்லூரி, சென்னை-*83*
2. தற்காலிகக் காவல் பயிற்சிக் கல்லூரி, வீராபுரம், சென்னை-*55*
3. காவலர் தேர்வுப் பள்ளி, கோயம்புத்தூர்
4. காவலர் தேர்வுப் பள்ளி, வேலூர்.

*9.7* இந்த நான்கு பயிற்சி நிலையங்களில், வேலூரில் உள்ள காவலர் தேர்வுப் பள்ளி வாளகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச்

சேர்ந்த அகதிகளுக்குச் சிறப்பு முகாம் அமைக்கப்பட்டிருப்பதால் அங்கு கடந்த சில வருடங்களாகப் பயிற்சி ஏதும் அளிக்கப்படவில்லை. தற்போது சுமார் 1,569 பெண் காவலர்களும் 3,067 ஆண் காவலர்களும், தற்காலிகக் காவலர் தேர்வுப் பள்ளிகளில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

### பயிற்சி நிலையங்களின் செயல்பாடுகள்

*9.8* சென்னையில் உள்ள காவல் பயிற்சிக் கல்லூரி, உதவி ஆய்வாளர்களுக்கும், நேரடியாகக் காவல் துணைக் கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கும், அடிப்படைப் பயிற்சியையும், தகுதிகாண் பருவத்தில் உள்ள இந்தியக் காவல் பணி அதிகாரிகளுக்குத் துறை சார்ந்த பயிற்சியையும் அளித்து வருகிறது. வீராபுரத்தில் உள்ள தற்காலிகப் பயிற்சிக் கல்லூரி, நேரடியாக உதவி ஆய்வாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. காவலர்களின் பயிற்சித் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, வேலூர் மற்றும் கோயம்புத்தூரில் இரண்டு நிரந்தரக் காவலர் தேர்வுப் பள்ளிகள் உள்ளன. காவல் பயிற்சிக் கல்லூரி மற்றும் காவல் பயிற்சிப் பள்ளி ஆகிய இரண்டிலும் இரண்டு கட்டங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒன்று ஆரம்பக் காலகட்டத்தில் அடிப்படைப் பயிற்சியாகவும், மற்றொன்று பணியில் உள்ள அதிகாரிகளுக்கு நினைவுகூர் பயிற்சியாகவும் நடத்தப்படுகிறது. மேற்குறிப்பிட்டுள்ள பயிற்சிகளைத் தவிர, ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்களுக்கு 3 நாட்கள் புத்தாக்கப் (Refresher Course) பயிற்சியும், காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் 6 நாட்கள் பணியிடைப் பயிற்சியும் 8 பயிற்சி மையங்களில் நடத்தப்படுகிறது. மேற்குறிப்பிட்டுள்ள அனைத்துப் பயிற்சிகளிலும், காவலர்களுக்குப் பணி சார்ந்த திறன்களை வளர்த்துக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதோடு ஏதேனும் பாதிப்புக்கு உள்ளான பொதுமக்கள், தங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளுக்கு நிவாரணம் வேண்டி காவல் துறையினரின் உதவியை நாடும்போது அவர்களின் நிலையை உணர்ந்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அடிப்படை மனமாற்றத்தை ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### காவலர் பயிற்சிக் கழகம்

*9.9* காவலர் பயிற்சியைச் செம்மையாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்குவதற்கு வண்டலூரில் தமிழ்நாடு காவல் பயிற்சிக் கழகம் ஒன்றை அமைக்கக் கருத்துரு பரிசீலிக்கப்பட்டு, தமிழ்நாடு காவல் பயிற்சிக்



கழகத்திற்கு ஓமனாஞ்சேரி மற்றும் ஓடைஏரி ஆகிய கிராமங்களில் 132.92 ஏக்கர் நிலத்தினை மாற்றிக் கொடுக்க அரசு ஆணையிட்டுள்ளது. காவலர் பயிற்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டால், தற்போது சென்னையில் உள்ள காவல் பயிற்சிக் கல்லூரியில் நடத்தப்படும் 12 பயிற்சி வகுப்புகளுக்கு மாறாக 80 பயிற்சி வகுப்புகள் அங்கு நடத்தலாம். எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு, அனைத்துப் பயிற்சி வகுப்புகளுக்கும் உரிய பாடத் திட்டங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. உயர் அளவாக 200 பயிற்றுவிப்பாளர்களைக் கொண்டு அனைத்து வகுப்புகளிலும் உயர்ந்தபட்சமாக 400 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கலாம் என்று அரசு நிர்ணயித்துள்ளது. மேற்குறிப்பிட்ட முறையான பயிற்சி வகுப்புகளைத் தவிர 1996-97 ஆம் ஆண்டில், மனித உரிமைகள்-(4), பல்துறை அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்துப் பேசுதல்-(5) மற்றும் மனித வள நிர்வாகம்-(4) ஆகியவை உட்பட குறுகிய காலப் பயிற்சித் திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளில் 29 முதுநிலை காவல் அதிகாரிகள் கலந்துகொண்டுள்ளனர்.

## 10. விருதுகள் மற்றும் வெகுமதிகள்

### வீர, தீரச் செயலுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம்

*10.1* வீர, தீரச் செயல் புரிந்தவர்களுக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம், 29-12-1997 அன்று உதவி ஆய்வாளர் திரு.வி. மலைச்சாமி மற்றும் இரு முதல்நிலைக் காவலர்களுக்கும், ஒரு இரண்டாம் நிலைக் காவலருக்கும் வழங்கப்பட்டது.

*10.2* கடமை தவறாது சிறப்பாகப் பணி புரிந்தமைக்காக, 29-12-1997 அன்று தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம் 63 காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு வழங்கப்பட்டது. பதவிவாரியாக பதக்கம் பெற்றவர்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது:—

| தொடர் எண் | பதவியின் பெயர் | பதக்கம் பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | காவல்துறைக் கண்காணிப்பாளர் | 1 |
| 2. | காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர் | 1 |

| | | |
|---|---|---|
| 3. | காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் | 8 |
| 4. | காவல் துறை ஆய்வாளர் | 17 |
| 5. | காவல் துறை ஆய்வாளர்(பெண்) | 1 |
| 6. | காவல் துறை உதவி ஆய்வாளர் | 9 |
| 7. | காவல் துறை உதவி ஆய்வாளர் (பெண்) | 1 |
| 8. | தலைமைக் காவலர் | 15 |
| 9. | முதல்நிலைக் காவலர் | 10 |
| | மொத்தம் | 63 |

### காவலர் பதக்கங்கள்

10.3 குறைந்தது 10 ஆண்டுகள் பணி முடித்து, தொடர்ந்து சீரிய திறனுடனும், தண்டனை இன்றியும் பணிபுரிந்தத் தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களுக்குத் தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம் பொங்கல் திருநாளன்று வழங்கப்படுகிறது. இந்த பதக்கம் 1997-ஆம் ஆண்டில் 1,000 காவலர்களுக்கு வழங்கப்பட்டது. இனிவரும் ஆண்டுகளில் மொத்தப் பதக்கங்களின் எண்ணிக்கையை ஆயிரத்திலிருந்து ஆயிரத்து ஐநூறுக்கு அரசு உயர்த்தி உள்ளது. முதலமைச்சரின் காவலர் பதக்கம் பெறுவோரின் மாதாந்திரப் படி ரூ.20/-லிருந்து ரூ.40/- ஆகவும், ரூ.25/-லிருந்து ரூ.50/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

### 1997 ஆம் ஆண்டிற்கான குடியரசுத் தலைவரின் சுதந்திரத் தினப் பதக்கங்கள்

10.4 பாராட்டத்தக்கப் பணிக்கான காவலர் பதக்கங்கள், மதுரை சரக காவல் துறைத் துணைத் தலைவர் திரு. எம். கணேசன், இ.கா.ப., காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் திரு. சி மணி, இரு காவல் துறை ஆய்வாளர்கள், ஒரு தலைமைக் காவலர் ஆகியோருக்கு 1997 ஆம் ஆண்டு சுதந்திரத் தினத்தையொட்டி வழங்கப்பட்டன. சிறந்தப் பணிக்கான ஊர்க்காவலர் பதக்கம் அணித் தளவாய் திரு. டிஎஸ். மலையப்பனுக்கு வழங்கப்பட்டது. பாராட்டத்தக்கப் பணிக்கான ஊர்க்காவலர் பதக்கம், அணித் தளவாய், திரு. டி. இராமசாமி மற்றும் திரு. வி. இராஜசேகரன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.



### ஊர்க்காவல் படையினருக்கான பதக்கம்

10.5 சீரிய முறையில் பணியின்பால் ஈடுபாடு கொண்ட ஊர்க்காவல் படையினருக்கான தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கம், திருவாளர்கள் எஸ். சொக்கலிங்கம், பகுதித் தலைவர், கே. சுந்தரேசன், வட்டாரத் தலைவர், ஆர். சீனிவாசன், குழுத் தலைவர், எ. அக்கயதாஸ், அணித் தலைவர் மற்றும் டி.வாசு, உதவி அணித் தலைவர் ஆகிய ஐந்து பேருக்கு 29-12-1997 அன்று வழங்கப்பட்டது.

### இதர பதக்கங்கள்

10.6 13-1-1997 அன்று, மடப்புரம் குளத்தில் விழுந்த பேருந்தில் இருந்து 13 பெண்கள் உள்ளிட்ட 18 பேரைக் காப்பாற்றிய துணிச்சலான செயலுக்காக, காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. சி. சைலேந்திரபாபு, இ.கா.ப., உயிர்காத்தலுக்கான பிரதமர் பதக்கம் பெற்றார்.

### உத்தமர் காந்தி பதக்கம்

10.7 கள்ளச் சாராயத்தை ஒழிப்பதில் சிறந்த முறையில் பணியாற்றும் காவல் துறையினருக்கு "உத்தமர் காந்தி பதக்கம்" 1996 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் என அரசு அறிவித்தது. அதனையொட்டி, பின்வரும் காவல் துறைப் பணியாளர்களுக்கு 1-10-1997 அன்று உத்தமர் காந்தி பதக்கம் வழங்கப்பட்டது:—

1. திரு. கே. காளிராஜ், காவல் துறை ஆய்வாளர், திலகர் திடல் காவல் நிலையம், மதுரை மாநகரம்.

2. திரு. ஜெ. பாஸ்கரன், காவல் துறை ஆய்வாளர், குடியாத்தம் நகரக் காவல் நிலையம், வேலூர் மாவட்டம்.

3. திரு. ஆர். சுந்தரராஜன், காவல் துறை ஆய்வாளர், ஆம்பூர் நகரக் காவல் நிலையம், வேலூர் மாவட்டம்

4. திரு. ஜி. சார்லஸ் கலைமணி, காவல் துறை உதவி ஆய்வாளர், உடையாளிப்பட்டி காவல் நிலையம், புதுக்கோட்டை மாவட்டம்.

5. திரு. ஜி. அய்யனார், காவல் துறை உதவி ஆய்வாளர், திருவரங்கம் காவல் நிலையம், திருச்சி மாவட்டம்.

### வீர, தீரச் செயலுக்கான காவலர் பதக்கம் 1997 (மத்திய அரசு)

10.8 இப்பதக்கம், காவல் துறைத் துணைத் தலைவர் திரு.டி. இராதாகிருஷ்ணன், இ.கா.ப., மற்றும் திரு. வி. ரோசலின் வேதக்கண்,

[1998 மே 22

திரு. கே. பெரிய்யா, திரு. சக்திவேலு ஆகிய மூன்று காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்களுக்கும் வழங்கப்பட்டன.

## 1998

### சிறந்த சேவைக்கான குடியரசுத் தலைவரின் பதக்கம்

10.9 1998 ஆம் ஆண்டுக்கான இப்பதக்கம் காவல் துறைத் தலைவர் திரு. பரம்வீர்சிங், இ.கா.ப., காவல் துறைத் துணைத் தலைவர் திரு. சி. பாலசுப்பிரமணியம், இ.கா.ப., மற்றும் காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் திரு. பால் தேவதாஸ் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

### பாராட்டத்தக்க பணிக்கான காவலர் பதக்கம்

10.10 இப்பதக்கம், காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. எஸ். இரத்தினசபாபதி, இ.கா.ப. காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள் திரு. எம்.எஸ். பெரியசாமி மற்றும் திரு. ஜி. ஆஸ்டின், இரு துணைக் கண்காணிப்பாளர்கள், மூன்று காவல் துறை ஆய்வாளர்கள், ஓர் உதவி ஆய்வாளர் மற்றும் ஒரு முதல்நிலைக் காவலர் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

### பாராட்டத்தக்க பணிக்கான ஊர்க்காவல் பதக்கம்

10.11 இப்பதக்கம் பகுதித் தலைவர் திரு. ஜி.பி. சுப்பிரமணியத்திற்கு 1998 ஆம் ஆண்டு குடியரசுத் தினத்தன்று, அதாவது 26-1-1998 ஆம் நாளன்று வழங்கப்பட்டது.

## 11. காவலர்களுக்கான வீட்டுவசதி மற்றும் கட்டடங்கள்

11.1 தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம், ரூ.1 கோடி அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடனும் ரூ.47 இலட்சம் செலுத்தப்பட்ட மூலதனத்துடனும் 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் ஒரு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது. தற்பொழுது, இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.1 கோடியாகும். 1981 முதல் 1989 ஆம் ஆண்டுவரை இக்கழகம் ரூ.4.05 கோடி மதிப்பீட்டுச் செலவில் 601 வாடகைக் குடியிருப்புகளையும் "சொந்த வீடு பெறும் திட்டத்தின்" கீழ் ரூ.6.27 கோடி மதிப்பீட்டுச் செலவில் 1592 வீடுகளையும் கட்டி முடித்துள்ளது. இக்கழகம், 31-3-1989 அன்று, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்துடன் இணைக்கப்பட்டது.



1998 மே 22]

11.2 18-11-1991 அன்று இக்கழகம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இக்கழகம் புதுப்பிக்கப்பட்ட பின்னர் பல நிலைகளில், குடியிருப்புகள் மற்றும் வீடுகள் கட்டியது குறித்த விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### வாடகைத் திட்டம்

#### முதல்நிலை

11.3 இக்கழகம், 10.22 கோடி ரூபாய் செலவில் ஒவ்வொன்றும் 34.68 சதுர மீட்டர் கட்டடப் பரப்புள்ள 1,002 குடியிருப்புகளைக் காவலர்களுக்காக 10 இடங்களில் கட்டி காவல் துறையிடம் ஒப்படைத்தது.

#### இரண்டாம் நிலை

11.4 இக்கழகம், 17 இடங்களில் ரூ.15.67 கோடி மதிப்பீட்டுச் செலவில் 1,000 காவலர் குடியிருப்புகளையும், 200 பேர் தங்கும் வசதியைக் கொண்ட இரண்டு படைக் குடியிருப்புகளையும், கட்டி காவல் துறையிடம் ஒப்படைத்தது.

#### மூன்றாம் நிலை

11.5 இந்நிலையில் ரூ.18.64 கோடி செலவில், 32 இடங்களில் 1,000 காவலர் குடியிருப்புகள் கட்டி, காவல் துறையிடம் ஒப்படைத்தது.

#### நான்காம் நிலை

11.6 13 இடங்களில் ரூ.14.2 கோடி செலவில், 500 வாடகைக் குடியிருப்புகளைக் கட்ட அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மொத்தமுள்ள 500 குடியிருப்புகளில், 405 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 95 குடியிருப்புகளைக் கட்டும் பணி தற்போது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

#### ஐந்தாம் நிலை

11.7 வெளியூர்களில் ரூ.14.7 கோடி செலவில் 500 குடியிருப்பபுகளைக் கட்ட அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் சென்னை மாநகரில் ரூ.27.56 கோடி செலவில் 1000 வீடுகள் கட்டவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றுள் 33 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்ற வீடுகள் கட்டும் பணி நடந்தேறி வருகின்றது.

[1998 மே 22

**ஆறாம் நிலை**

11.8 ரூ.70.46 கோடி செலவில் 2,092 குடியிருப்புகளை வெளியூர்களிலும், 408 குடியிருப்புகளைச் சென்னை மாநகரிலும் கட்டுவதற்கு அரசு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

**ஏழாம் நிலை**

11.9 1998-1999 ஆம் ஆண்டில் ரூ.83.16 கோடி செலவில் 2,500 குடியிருப்புகள் (சென்னை மாநகரில் 1,000 மற்றும் மாவட்டங்களில் 1,500) கட்டுவதற்கு அரசு நிருவாக ஒப்புதல் வழங்கி உள்ளது. இப்பணி விரைவில் நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

**சொந்த வீடு திட்டம், வசந்தபுரம்**

11.10 காவல் துறையினருக்காக நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், வசந்தபுரத்தில் ரூ.4.97 கோடி மதிப்பீட்டுச் செலவில் நடுத்தர வருமானப் பிரிவினர் மற்றும் உயர் வருமானப் பிரிவினர் ஆகியோருக்கு 180 வீடுகளைக் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பணி நடந்தேறி வருகிறது.

**இதர இடங்கள்**

11.11 கும்பகோணத்தில் உள்ள அசூரில் "சொந்த வீடு திட்டத்தின்" கீழ் நடுத்தர வருமானப் பிரிவினருக்கு 35 குடியிருப்புகளும் உயர் வருமானப் பிரிவினருக்கு 18 குடியிருப்புகளும், ரூ.1.82 கோடி மதிப்பீட்டுச் செலவில் கட்டவும் அதேபோல், மதுரை அயன்பாப்பாக்குடியில் நடுத்தர வருமானப் பிரிவினருக்கு 33 குடியிருப்புகளும், உயர் வருமானப் பிரிவினருக்கு 17 குடியிருப்புகளும் ரூ.1.84 கோடி மதிப்பீட்டுச் செலவில் கட்டவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பணி நடைபெற்று வருகிறது.

**காவல் துறைத் தலைமை இயக்குநர் அலுவலக வளாகப் புதுப்பிப்புப் பணி**

11.12 சென்னை, காமராசர் சாலையில் உள்ள காவல் துறைத் தலைமை இயக்குநர் அலுவலக வளாகம், தற்போதுள்ள கட்டடத்திற்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், ரூ.1.35 கோடி செலவில், புதுப்பிக்கப்பட்டு வருகிறது. தற்போது அந்த வளாகத்திற்குள் இருக்கும் காலி இடத்தில் ரூ.10.88 கோடி செலவில், 15 ஆயிரம் ச.மீ. கட்டடப் பரப்பில் மூன்று மாடி கொண்ட இணைப்புக் கட்டடம் கட்டப்பட உள்ளது. பழுதுபார்க்கும் பணியும், புதுப்பிக்கும் பணியும் சீரிய மேற்பார்வையில் நடைபெற்று வருகின்றன.



1998 மே 22]

11.13 காவல் துறைக் கட்டடங்களையும், குடியிருப்புகளையும் நல்லமுறையில் பராமரிப்பதையும், பழுதுபார்ப்பதையும் நோக்கமாகக் கொண்டு, இதுவரை பொதுப் பணித் துறையின்கீழ் இருந்துவந்த இப்பணிகளை, 1-4-1998 முதல் தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்திடம் ஒப்படைத்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது இதனால், காவலர் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் பணி விரைவுப்படுத்தப்பட்டுள்ளது. பராமரிப்பிற்குத் தேவையான நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதி மாவட்ட வாரியாகப் பிரித்துக் கொடுக்கப்படும். மாவட்டங்களில் முக்கியமான வேலைகள் எவை என்பதை மாவட்ட அதிகாரிகளுடைய முடிவின் அடிப்படையில் காவலர் வீட்டுவசதிக் கழகம் வேலைகளை எடுத்துக்கொள்ளும். காவலர்களின் தேவைகளை அறிந்தே மாவட்ட அளவில் வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென மாவட்ட அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

11.14 31-3-1998 முடிய 3,678 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு அனைத்து வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பல வேலைகள் விரைந்து நடந்துவருகின்றன. 6839 வீடுகளுக்கான வேலைகள் தற்சமயம் நடந்து வருகின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் 4,200 வீடுகள் கட்டி முடிக்கப்படும். ரூ.153.62 கோடி செலவில் 5,000 வீடுகளைக் கட்டுவதற்கு (நிலை 6 மற்றும் 7) அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## 12. பொது மக்களின் ஒத்துழைப்பு

12.1 பொதுமக்களுக்கும், சமுதாயத்திற்கும் எதிரிகளாகச் செயல்படுபவர்களை ஒடுக்கும் காவல் துறை உள்நாட்டுப் பாதுகாப்பு அமைப்பாகச் செயல்படுகிறது. சட்டத்திற்குக் கீழ்படியும் பொதுமக்களின் உதவி இல்லாமல் காவல் துறையினர் தங்கள் கடமையைச் சிறப்பாக ஆற்றுவது கடினம். சமுதாய நல்லிணக்கத்தை உருவாக்குவதில் காவல் துறையின் பங்கு பொதுவாகச் சிறப்பாக உள்ளது. இயற்கைச் சீற்றங்களின்போது காவல் துறை அரும்பணியாற்றி பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. வகுப்புக் கலவரங்கள் உருவாகும்போது பொதுமக்கள் ஒத்துழைப்புடன் அமைதிக் குழுக்களை அமைத்து, சமுதாய நல்லிணக்கத்தை உருவாக்க தக்க நடவடிக்கைகளைக் காவல் துறை எடுத்து வருகிறது.

[1998 மே 22

## காவல்துறையின் நண்பன்

*12.2* பொதுமக்களின் ஒத்துழைப்பையும் அவர்களின் நன்மதிப்பையும் நிரந்தர அடிப்படையில் பெரும் நோக்கிலும் காவல் துறைக்கும் பொதுமக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையிலும் "காவல் துறையினரின் நண்பன்" என்ற பெயரில் தொண்டு இயக்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது. இந்த இயக்கம் முதன்முதலில் இராமநாதபுரம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. பின்னர் மற்ற மாவட்டங்களிலும் இந்த இயக்கம் ஏற்படுத்தப்பட்டது. உரிமையியல் அல்லது குற்ற வழக்குகளில் சம்பந்தப்படாத எந்தக் குடிமகனும் இந்த இயக்கத்தில் உறுப்பினர் ஆகலாம். காவல் துறையினரின் மதிப்பை உயர்த்தவும், காவல் துறை-பொதுமக்கள் இடையே கருத்துப் பரிமாற்றத்திற்கு வழி செய்யவும், பொது மக்களின் நன்மதிப்பைப் பெறவும் இவ்வியக்கம் பெருமளவில் உதவும். இவ்வியக்க உறுப்பினர்கள், குற்றங்கள் நடைபெற அதிக வாய்ப்புள்ள பகுதிகளில், குறிப்பாக இரவு நேரங்களில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள காவலர்களுக்கு உதவிபுரிதல், போக்குவரத்து நெரிசல் அதிகமுள்ள பகுதிகளில் போக்குவரத்தைச் சீர்செய்தல், முக்கியத் திருவிழாக்களின்போதும் பொது நிகழ்ச்சிகளின் போதும் கூட்டத்தைக் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் பல இடங்களில் பயனுள்ள வகையில் செயல்பட்டு வருவதாக மாவட்ட அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த இயக்கத்தை ஊக்குவிக்குமாறு அனைத்து நிலையில் உள்ள காவல் துறை அதிகாரிகளுக்கும் கட்டளை இடப்பட்டுள்ளது. "சமூகக் காவல்" என்பதற்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கும் வகையில் இந்த இயக்கம் பற்றிய விவரங்கள் "இன்டெர்நெட்டில்" கொடுக்கப்பட்டு இருக்கின்றன..

## கடலோர நற்பணிக் குழு

*12.3* மாநிலத்தில் உள்ள கடலோரப் பகுதிகளில், காவல் துறையினர் பொதுமக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் கடலோரக் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் கடலோர நற்பணிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இக்குழுவில் கடலோரக் கிராமம் ஒவ்வொன்றில் இருந்தும் படிப்பறிவுள்ள 10 மீனவர்கள் உறுப்பினர்களாக இருப்பர். மீன்பிடி நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துகின்ற கடத்தல்காரர்கள் மற்றும் சமூக விரோத சக்திகளிடம் இருந்து தத்தம் கிராமங்களைப் பாதுகாப்பதும், காவலர்களுக்கு உறுதுணையாகத் தங்கள் பகுதியில் குற்றங்கள் நிகழாதவாறு பார்த்துக்கொள்ளுவதும், இவர்களின்



1998 மே 22]

பொறுப்பாகும். இந்த இயக்கத்தின் செயல்பாடுகள் மேலும் வேகம் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## போதைப் பொருள் ஒழிப்புத் திட்டம்

*12.4* *26-6-1997* அன்று உலகப் போதைப் பொருள் ஒழிப்பு தினமாக அனுசரிக்கப்பட்டதையடுத்து, மாணவர்களிடையே போதைப் பொருள்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், போதைப் பொருள் தடுப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தைப் போதைப் பொருள் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு தொடங்கியது. இத்திட்டத்தில், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும், இத்திட்டம் மாவட்ட ஆட்சியர்கள், மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரிகள் ஆகியோர் மூலம் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டது.

## 13. தடய அறிவியல் துறை

*13.1* *1849* ஆம் ஆண்டிலேயே வித்திடப்பட்ட தமிழ்நாடு தடய அறிவியல் துறை ஆசியாவில் அமைந்துள்ள மிகப் பழமையான துறைகளில் ஒன்றாகும். இத்துறை, இம்மாநில காவல் மற்றும் சட்ட அமலாக்கப் பிரிவினருக்கு உதவி புரிவதுடன், மத்திய அரசின் பிற துறைகளுக்கும் அவசியமான நேரங்களில் உதவி புரிந்துவருகிறது.

*13.2* இத்துறையின் முதன்மை ஆய்வகம் சென்னையில் அமைந்துள்ளது. இது மானுடவியல் ஆய்வு, வெடிபொருள் ஆய்வு, உயிரியல் ஆய்வு, வேதியியல் ஆய்வு, ஆவண ஆய்வு, ஆயத் துறை ஆய்வு, வெடிபொருள் சாதனங்கள் ஆய்வு, போதைப் பொருள் ஆய்வு, புகைப்பட ஆய்வு, இயற்பியல் ஆய்வு, மது பொருள் சம்பந்தமான ஆய்வு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் துறை, ஊநீரியல், நச்சுப் பொருள் ஆய்வு, ஆகியவை உட்பட 16 பிரிவுகளைக் கொண்டுள்ளது. மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், சேலம், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் ஆகிய ஒன்பது இடங்களில் இதன் வட்டார ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. களப்பணிக்காக, 30 காவல் மாவட்டங்களில் 30 நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. தவிரவும் சென்னைப் பெருநகரில் குற்றம் நடந்த இடத்திற்கு உடனடியாகச் சென்று செயல்படும் வகையில் 24 மணி நேரமும் பணியாற்றும் நடமாடும் தடய அறிவியல் ஆய்வகம் செயல்பட்டு வருகின்றது.

[1998 மே 22

13.3 இத்துறை, தடய அறிவியல் படிப்புகளையும் நடத்தி வருகிறது. சுற்றுப்புற நச்சுவியல் அறிவியல் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்குப் பாடத்திட்டத்துடன், ஆய்வுக்கூட வகுப்புகளையும் இத்துறை நடத்துகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட முதுகலை அறிவியல் பட்டமேற்படிப்பு வழங்கும் அரசுத் துறை நிறுவனம் இது ஒன்றே ஆகும். தடய அறிவியலில் முனைவர் பட்டம் பெற வழிகாட்டுதலையும் இத்துறை அளிக்கிறது. மேலும், சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மாநில மருத்துவ நிலையங்களுக்கும் குற்றவியல், நச்சுவியல் சம்பந்தமான வகுப்புகளை நடத்துதல் மற்றும் நச்சுவியலில் அறிவியல் பட்டமேற்படிப்பு, தடய அறிவியல் மருத்துவத்தில் பட்டமேற்படிப்பு, குற்றவியல் பட்டமேற்படிப்பு ஆகியவற்றிற்கு வகுப்புகளையும் நடத்தி வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர். மற்றும் அண்ணா பல்கலைக்கழகங்கள், முனைவர் பட்ட வகுப்புகளுக்குத் தடய அறிவியலில் ஆய்வு மையமாக இத்துறையை அங்கீகரித்துள்ளன.

13.4 1997 ஆம் ஆண்டில், 70,959 வழக்குகளை இத்துறை ஆய்ந்துள்ளது. இதுதவிர இதரச் சட்ட அமலாக்கப் பிரிவுகளுக்குத் தடய அறிவியல் சார்ந்த உதவிகளை நல்கி வருகிறது. சென்னை மற்றும் சுற்றுப்புற மருத்துவமனைகளில் விஷமருந்தியதால் சிகிச்சை பெறுபவர்களுக்கு நச்சுவியல் சம்பந்தமான மருத்துவ ஆலோசனைகளையும் இத்துறை வழங்கி வருகிறது. ஒரு குழந்தையின் தந்தை யார் என்பதைத் தீர்மானிப்பதற்கான மரபுச் சோதனை மையம் ஒன்று இத்துறையினால் நடத்தப்பட்டு வருகிறது.

13.5 தடய அறிவியல் துறை, காவல் துறைத் தலைமை இயக்குநர் தலைமையில், ஓர் இயக்குநர், ஒரு கூடுதல் இயக்குநர், 227 அறிவியல் உதவியாளர்கள் மற்றும் 266 அறிவியல் துணைப் பணியாளர்கள் ஆகியோரைக் கொண்ட 493 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றது.

13.6 இத்துறையில் 1-06-1997 ஆம் நாள் நிலவரப்படி, 23,410 வழக்குகள் நிலுவையாக இருந்தன. இவ்வெண்ணிக்கை கணிசமாகக் குறைக்கப்பட்டு, இத்துறையில் 31-12-1997 ஆம் நாளைய விவரப்படி 2,839 வழக்குகளே நிலுவை எனும் நிலைக்குக் கொணரப்பட்டது. கூடுதல் நேரம் பணியாற்றி நிலுவையைக் குறைக்க, பணியாளர்களை ஊக்கப்படுத்த அரசு எடுத்துள்ள முயற்சியே இதற்கு முக்கியக் காரணமாகும். 28-2-1998 ஆம் நாள் நிலவரப்படி 2,248 வழக்குகள் மட்டுமே நிலுவையில் இருந்தன. இதனைத் துறையின் சாதனையாகக் கருதலாம்.



1998 மே 22]

## 14. விளையாட்டுகளும் போட்டி விளையாட்டுகளும்

14.1 தமிழ் நாடு காவல் துறை, பணியாளர்களிடையே குழு உணர்வை வளர்ப்பதற்காக எப்போதும் விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளித்து வந்துள்ளது. திறமைமிகு காவல் துறை விளையாட்டு வீரர்கள் பல விளையாட்டுப் போட்டிகளில் தமது திறமையை வெளிக் கொணர்ந்துள்ளனர்.

14.2 நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த முதுநிலைக்காவலர் 1160 திரு. சி. தயாளன், ஜப்பான் நாட்டு ஓகினோவாவில் 19-8-1997 முதல் 25-8-1997 வரை நடந்த கராத்தே போட்டிகளில் கலந்துகொண்டு சாம்பியன் பட்டத்தை வென்றார். அதேபோல், நாகப்பட்டினம் மாவட்ட முதுநிலைக் காவலர் 1028 திரு. ஆர். இராஜன் மற்றும் தஞ்சாவூர் மாவட்டக் காவலர் 1814, திரு. ஆர். பாலசங்கர் ஆகியோர் அகில இந்திய தேக்-வான்-டோ கழகத்தினரால் தேர்ந்தெடுக்கப்பட்டு 2-7-1997 முதல் 8-7-1997 வரை அமெரிக்காவில் உள்ள செயிண்ட் லூயிஸ், மிசௌரியில் நடைபெற்ற உலக தேக்-வான்-டோ கராத்தே சாம்பியன் பட்டப் போட்டிக்கு இந்திய நாடு சார்பாக அனுப்பப்பட்டனர்.

14.3 சென்னை, நேரு விளையாட்டரங்கில், 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5 முதல் 8 ஆம் தேதி வரை நடைபெற்ற 46 ஆவது அகில இந்தியக் காவலர் தடகளப் போட்டிகளில் 22 மாநிலங்கள் கலந்து கொண்டன. இப்போட்டிகளில் 5 புதிய சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன. இதில், அகில இந்திய அளவில் சாம்பியன் பட்டத்தை மத்திய ஆயுதக் காவல் படையும், அகில இந்திய மகளிர் அணிச் சாம்பியன் பட்டத்தைப் பஞ்சாப் மாநிலக் காவல் துறையும், மாநில அளவிலான சாம்பியன் பட்டத்தைப் பஞ்சாப் மாநிலக் காவல் துறையும் வென்றன. மேலும் சிறந்த ஆண் விளையாட்டு வீரராக மத்திய ஆயுதக் காவல் படையைச் சேர்ந்த பரம்ஜித்சிங், சிறந்த பெண் விளையாட்டு வீராங்கனையாக தீபிந்தர் கவுர் (பஞ்சாப்) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இப்போட்டிகளில் சிறந்த கட்டுப்பாடுள்ள அணியாக மத்திய ஆயுதக் காவல் படை தேர்வு செய்யப்பட்டது.

14.4 காவல் துறை அதிகாரிகளின் திறமை, தடய அறிவியல் துறையில் திறனை அதிகரித்தல் மற்றும் இதரத் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளும் நோக்கில் அனைத்திந்திய காவல் துறைப் பணிசார்ந்த போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 24-11-1997 முதல் 29-11-1997 வரையில் போபாலில் நடைபெற்ற அனைத்திந்திய காவல் துறைப்

பணிசார்ந்த போட்டிகளில் மாநில தமிழகக் காவல் துறை அணி கலந்து கொண்டு, கீழ்க்கண்ட பதக்கங்களையும் கேடயங்களையும் வென்றது:

**பதக்கங்கள்**

| | |
|---|---|
| சட்ட மருத்துவம் (வாய்மொழி), தடயங்கள் சேகரித்தல் மற்றும் பாதுகாத்து அனுப்புதல் | தங்கப்பதக்கம் |
| தடயங்கள் சேகரித்தல் மற்றும் பாதுகாத்து அனுப்புதல், காவல் பணி சார்ந்த புகைப்படம் எடுத்தல், தொழில் முறையான புகைப்படம் எடுத்தல், கைவிரல் ரேகை பதிவுகளை எடுத்தல் | வெள்ளிப் பதக்கம் |
| சட்ட மருத்துவம் (வாய்மொழி), கால் தடயங்கள், எழுத்துத் தேர்வு, காவல் பணி சார்ந்த புகைப்படம் எடுத்தல், கூர்ந்து கவனித்தல், கணினி அறிவுப் போட்டிகள் | வெண்கலப் பதக்கம் |

**கேடயங்கள்**

| | |
|---|---|
| புலன்விசாரணையில் அறிவியல் சார்ந்த உதவி அளிக்கும் போட்டிகளில் ஒட்டு மொத்தச் சாம்பியன் | முதல் இடம் |
| தடயங்கள் சேகரித்தல் மற்றும் பாதுகாத்து அனுப்புதலின் ஒட்டுமொத்தச் சாம்பியன் | முதல் இடம் |
| சட்ட மருத்துவம் (வாய்மொழித் தேர்வு) ஒட்டுமொத்தச் சாம்பியன் | முதல் இடம் |

## 15. நிறைவுரை

15.1 நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குச் சட்டம்-ஒழுங்கை நல்ல முறையில் பேணிக் காத்தலும், குற்றங்களைக் கட்டுப்படுத்துதலும் முக்கியமான முன் தேவைகளாகும். இப்பணியில் காவல் துறை எதிர்நோக்கும் சவால்கள் வேறுபட்டதும், இன்னல் நிறைந்ததுமாகும். இதற்குக் காவல் நிர்வாகம், பொது மக்கள் மற்றும் தன்னார்வக் குழுக்கள், அனைத்து நிருவாக முகவரமைப்புகள் ஆகியனவற்றுடன் ஒன்றிணைந்துத் திறம்படச் செயல்பட வேண்டியது அவசியமாகும்





15.2 பெரும் சவால்களை எதிர்நோக்கியிருக்கும் காவல் துறையினரின் பணியை, அதிகரிக்கும் குற்றச் செயல்கள், பெருகி வரும் மக்கட்தொகை, பயங்கரவாதம் மற்றும் மதவெறி ஆகியவை மேலும் கடினமாக்கியுள்ளன. எனினும் காவல் துறை தனது இலக்குகளை அடையக் காத்திருக்கின்ற நிலையில், நியாயமான, மனிதாபிமானமுள்ள ஒரு சமூகத்தை உருவாக்க வேண்டிய தனது கடமையிலிருந்தும் பிறழ்ந்துவிட முடியாது. காவல்துறை எதிர்நோக்கும் ஒவ்வொரு பிரச்சினையையும் மனிதாபிமானத்துடன் அணுக வேண்டியது அவசியம்.

15.3 இந்த அரசும், எல்லா அரசியல் கட்சிகளும், மதத் தீவிரவாதிகளின் பயங்கரச் செயல்களையும், அவர்களால் மக்கள் மீது திணிக்கப்படும் அச்சுறுத்தல்களையும் கடுமையாக எதிர்த்து வருகின்றன. இந்த நடவடிக்கைகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவதில் அரசுக்கோ, காவல் துறைக்கோ எவ்விதத் தயக்கமும் இல்லை. காவல் புலனாய்வுப் பிரிவுகளும், காவல் துறையும் இவ்விலக்கை அடைய முடுக்கி விடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் மதத் தீவிரவாதிகளிடமிருந்து பெருமளவில் ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்களைக் கைப்பற்றியது, காவல் துறையினர் எவ்வாறு துரிதமாகக் கடமையாற்றியுள்ளனர் என்பதை நிரூபிக்கும்.

15.4 இந்த அரசு, மதத் தீவிரவாதிகளின் எவ்விதமான பயங்கரவாதத்திற்கும் எதிரானது மட்டுமல்ல, பயங்கரவாதத்தை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க இவ்வரசு இம்மியும் தயங்காது எனவும் இப்பேரவைக்கு நான் உறுதியளிக்கிறேன். தகவல் சேகரிக்கும் பணியைத் தீவிரப்படுத்தவும், அடிப்படை மதவாத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்குத் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மாநிலக் காவல் துறைக்குத் தெளிவாக அறிவுரைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலிருந்து பயங்கரவாதத்தை வேரோடு ஒழிக்க வேண்டும் என்ற முக்கியப் பணியில் தமிழ்நாடு காவல் துறையினர் முனைப்புடன் செயலாற்றுவார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

15.5 தமிழ்நாடு காவல் துறையினர் தொடர்ந்து கடுமையாகப் பணியாற்றி, வருங்காலத்திலும் தங்கள் செயல்திறனை மேம்படுத்த அனைத்து வழிமுறைகளையும் மேற்கொள்வார்கள்.

15.6 குற்றம், சமூக விரோதம் மற்றும் பயங்கரவாதச் செயல்களை ஒடுக்கி, நல்லுறவுடன் பொது அமைதியைக் காத்திட காவல் துறையினருக்குப் போதிய ஒத்துழைப்பு நல்கிட தமிழக மக்களை நான் இத்தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

1998 மே 22]

## இணைப்பு III

*(36 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**மானியக் கோரிக்கை எண் 16**
**தீயணைப்புப் பணிகள் குறித்த**
**கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99**

### I. தீயணைப்புப் பணி—ஒரு கண்ணோட்டம்

தீ மிகப் பெரிய ஆற்றலைத் தன்னுள் கொண்டுள்ளது. கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்போது, அது மனிதனுக்கு அளவிடற்கரிய பயன் தருகிறது. கட்டுப்பாட்டை மீறும்போது அளவிட முடியாத பேரழிவுகளுக்கும், சேதங்களுக்கும் காரணமாகி மிகப் பெரிய வடுக்களையும் ஏற்படுத்தி விடுகிறது.

இந்நாளில், நகர்ப்புறப் பகுதிகளில் நிகழ்ந்து வரும் மிகுவேக வளர்ச்சிகள், பல்வேறு வகைத் தொழிற்சாலைகளின் பெருக்கங்கள், நெருக்கமாக உருவாகி வரும் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள், நகர்ப் பகுதிகளில் மட்டுமல்லாமல், கிராமப் புறங்களிலும் பெருகிவரும் குடிசைப் பகுதிகள், எரிவாயு உபயோகம், மின் மற்றும் மின்னணுக் கருவிகளின் பயன்பாடுகள், அனல்மின் நிலையங்கள், அணுமின் சக்தி நிலையங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிகள், புயல், வெள்ளம், நிலச் சரிவுகள் போன்ற இயற்கைச் சீற்றங்களாலும், கலகங்கள், கலவரங்கள், தீவைப்புகள், குண்டுவெடிப்புகள் போன்ற செயற்கை நிகழ்வுகளாலும் ஏற்படும் பதற்றச் சூழ்நிலைகள் முதலியவை காரணமாக நாட்டின் வளர்ச்சிக்கும் மக்களின் அமைதியான வாழ்விற்கும் அடிக்கடி ஊறுகள் நேர்ந்துவிடுகின்றன. மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் அழிவுகளும் ஏற்பட்டு விடுகின்றன.

இத்தகைய இன்னல்மிகு வேளைகளில் தீயணைப்புத் துறை, மிகுந்த பொறுப்புடன் கடமையாற்றித் தமிழக மக்களின் உயிர், உடைமைகளைக் காப்பதில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. ஆபத்து வருமுன் காத்தல், வந்தால் மீட்டல் ஆகிய இருவகைப் பணிகளையும் விழிப்புடன் ஆற்றி நவீன வாழ்வில் தீயணைப்புத் துறை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

[1998 மே 22

## II. குறிக்கோள்கள்

தமிழ்நாடு தீயணைப்புத் துறை, தமிழ்நாடு அரசின் ஒரு சேவைத் துறையாகத் திகழ்கிறது. சேவைப் பணிகளைத் தவிர, சட்டங்களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி ஆற்றவேண்டிய பணிகளையும், முறைப்படுத்தும் பணிகளையும், ஆலோசனை நல்கும் பணிகளையும் இத்துறை மேற்கொள்கிறது. இத்துறையின் முக்கிய குறிக்கோள், தீ முதலிய விபத்துகளால் ஏற்படும் அபாயம், சேதம் மற்றும் பிற அழிவுகளிலிருந்து உயிர்களையும், உடைமைகளையும் காப்பதாகும். தீயணைப்பு, தீத்தடுப்புப் பணிகளைத் தவிர, தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமின்றி, வெள்ளம், புயல், நிலச்சரிவு, கட்டடம் இடிந்து விழுதல் போன்ற இயற்கையின் சீற்றங்கள், வெடிமருந்து விபத்துகள், இரயில் விபத்துகள், வெடிகுண்டு விபத்துகள் மற்றும் இதர பெரும் விபத்துகளில் சிக்குண்டு பாதிக்கப்பட்டவர்களை மீட்டு காப்பாற்றி, அவசரகால உடனடி நிவாரணம் அளிக்கிறது. தீயணைப்புத் துறை, விரைவாகப் பரவும் தொற்று நோய்க் காலங்களிலும், மாநிலத்தில் இதர நல்வாழ்வுத் திட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படும் போதும், பொதுச் சுகாதாரத் துறைக்கும் பெரிதும் உதவுகிறது. இவற்றைத் தவிர தேர்தல்கள், கலவரங்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள், முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்புப் பணி ஆகியவற்றில் காவல் துறைக்கும் உதவுகிறது. விபத்தில் காயமடைந்தவர்களை உடனடியாக விபத்து நிகழ்ந்த இடத்திலிருந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல இத்துறையின் நோயாளர் ஊர்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

பலமாடிக் கட்டடங்கள், தொழிற்சாலைகள், பொதுமக்கள் கூடும் இடங்கள், பொருட்காட்சிகள், திருவிழாக்கள் போன்றவைகளில் மேற்கொள்ளப்படவேண்டிய தீத் தடுப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் இத்துறை ஆலோசனை நல்குகிறது.

பல்வேறு சட்டங்கள் மற்றும் அவற்றின்கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழ் கட்டடங்களை ஆய்வு செய்து ஆய்வு அறிக்கையை அளிப்பது போன்ற சட்டரீதியான பணிகளையும் இத்துறை ஆற்றுகிறது. பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின்கீழ் 1997 ஆம் ஆண்டில் தீயணைப்பு அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டக் கட்டடங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள், இணைப்பு VI-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



1998 மே 22]

## III. நிருவாக அமைப்பு

தமிழ்நாடு தீயணைப்புத் துறையானது, தமிழக அரசின் உள் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. தீயணைப்புத் துறை இயக்குநர், இத்துறையின் தலைவர் ஆவார். இத்துறையில் நான்கு துணை இயக்குநர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு மண்டலத்திற்குப் பொறுப்பு வகித்து வருகின்றனர். இந்நான்கு மண்டலங்களின் தலைமையகங்கள், சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் மொத்தம் 28 கோட்டங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு கோட்டமும், ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ளது. கோயம்புத்தூர்-நீலகிரி கோட்டம், இராமநாதபுரம்-சிவகங்கை கோட்டம் ஆகியவற்றின் கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் தவிர, இதர கோட்டத் தீயணைப்பு அலுவலர்களின் அதிகார வரம்பு ஒரு வருவாய் மாவட்ட அளவில் மட்டுமே உள்ளது. ஒவ்வொரு கோட்டத்திலும் 4 முதல் 16 வரை தீயணைப்பு நிலையங்கள் உள்ளன. 16 கோட்டங்களில் நடமாடும் பழுது பார்க்கும் குழுக்களும், 6 கோட்டங்களில் தீத் தடுப்புக் குழுக்களும் அமைந்துள்ளன. சென்னையில் ஒரு மாநிலப் பட்டறையும், மாநிலப் பயிற்சிப் பள்ளியும் இயங்குகின்றன. அவை, ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பில் உள்ளன. நிருவாக அமைப்பை விளக்கும் வரைபடம் இணைப்பு-I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## IV. ஒருங்கிணைக்கப்பட்ட செயல்பாடு அணுகுமுறைகள்

இத்துறையின் அடிப்படை அமைப்பு தீயணைப்பு நிலையமாகும். தீ நிகழ்விடத்தை மிகக் குறைந்த கால அவகாசத்திற்குள் சென்று அடைய வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டு, கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்குள், இவ்வரசு, 47 தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக, முந்தைய ஆண்டு தீ விபத்து புள்ளி விவரங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், உயிர்ச் சேதம் கணிசமான அளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. புதிய இடங்களில், தீயணைப்பு நிலையங்கள் நிறுவ வேண்டி பெறப்படும் கோரிக்கைகளை தீயழைப்புகளின் பகுப்பாய்வின் அடிப்படையில், அரசு தற்போது பரிசீலித்து வருகிறது. அடிக்கடி ஏற்படும் தீ விபத்து நிகழ்வுகளின் அடிப்படையில், புதிய தீயணைப்பு நிலையங்களைத் தொடங்குவதற்கான வரையறைகள் பின்வருமாறு:

(i) தீ நிகழ்விடத்தை அடையும் நேரம் அதாவது தீ விபத்துச் செய்தி பெறப்பட்டவுடன், தீயணைப்பு வண்டியானது, தீயணைப்பு நிலையத்திலிருந்து புறப்பட்டு தீ விபத்திடத்தை அடையும் நேரம் 10 நிமிடங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(ii) கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டொன்றுக்குக் குறைந்தது ஒரு பெருந் தீ விபத்தாவது நிகழ்ந்திருக்க வேண்டும். அதில் சேதமான உடைமைகளின் மதிப்பு ரூ. 50,000/- க்கு மிகுதியாக இருந்திருக்க வேண்டும் அல்லது மனித உயிரிழப்பு ஏதேனும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

(iii) மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்தாற்போல் தீயழைப்பு பெறப்படவில்லையெனில், அவ்விடங்களில் நிறுவப்பட்டுள்ள தீயணைப்பு நிலையங்கள் தற்காலிகத் தீயணைப்பு நிலையங்களாக அறிவிக்கப்பட்டு, எங்கு தீயழைப்புகளும் அதன் விளைவாகச் சேதமும் அதிகமாக நிகழ்கிறதோ அங்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும்.

## V. அமைப்பில் உள்ள அடிப்படை வசதிகள்

### (அ) மனித ஆற்றல்

இத்துறையின் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 6745 ஆகும். பணியாளர்களின் எண்ணிக்கை பற்றிய தனித்தனி விவரங்கள் இணைப்பு-II மற்றும் III-ல் அளிக்கப்பட்டுள்ளன. துணை இயக்குநர், கோட்டத் தீயணைப்பு அலுவலர், தானியங்கிப் பொறியாளர் (மாநிலப் பட்டறை), நிலையத் தீயணைப்பு அலுவலர், இளநிலை உதவியாளர்- தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளுக்கான நேரடி நியமனம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தாலும், தீயணைப்போர் பதவிக்கான நேரடி நியமனம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தாலும் செய்யப்படுகின்றன.

### (ஆ) இயந்திர ஆற்றல்

பெருநகர் விரிவாக்கம் காரணமாக எதிர்பார்க்கப்படும் பேராபத்துச் சம்பவங்களைச் சமாளிப்பதற்காக, நவீனச் சாதனங்களை வாங்குவதில் இத்துறை சாதனை படைத்துள்ளது. பொது ஈட்டுறுதிக் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெற்ற கடன் மூலம் 42 மீ மற்றும் 37 மீ உயரம் செல்லக்கூடிய ஹைட்ராலிக் பிளாட்பார்ம் மற்றும் சுழல்மேஜை ஏணிகள் இரண்டு, பின்லாந்து நாட்டில் 'பிரான்டோ ஸ்கை-லிப்ட்ஸ்'



நிறுவனத்திடமிருந்து விரைவில் பெறப்படவுள்ளன. இத்துறையில், 317 நீர்தாங்கி ஊர்திகள், 78 நோயாளர் ஊர்திகள், 10 கரிம வாயுக் கலவை நுரை பீச்சும் சிறு ஊர்திகள், 4 அவசரக் கால மீட்பு ஊர்திகள், 1 ஹைட்ராலிக் பிளாட்பார்ம் (இங்கிலாந்து சைமன் ஸ்நார்கல்), 1 சுழல் மேசை ஏணி (இசுசு-மோரிட்டா, ஜப்பான் தயாரிப்பு), 1 நீர்விடுகுழாய் ஊர்தி மற்றும் 37 தண்ணீர் லாரிகள் தற்போது உள்ளன. இவை தவிர, அதிக அளவு நீர் வெளியேற்றும் திறனுள்ளதும், எளிதில் தூக்கிச் செல்லக்கூடியதுமான 210 பம்புகளும், நீர்தாங்கி ஊர்திகளுடன் எடுத்துச் செல்லத்தக்க 60 மிதவைப் பம்புகளும் துணைச் சாதனங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைத் தவிர, விபத்துக் காலங்களில் துறையின் தேவைகளை நிறைவு செய்யக் கம்பியில்லாத் தந்தி பொருத்தப்பட்ட மோட்டார் வண்டிகள், ஜீப்கள், பேருந்துகள், சிறு பேருந்துகள், மோட்டார் சைக்கிள்கள் போன்ற 45 துணை ஊர்திகளும் இயங்கி வருகின்றன.

திறமையான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காக, அதிகக் கொள்ளளவு கொண்ட தண்ணீர் லாரிகள் மற்றும் ஒரே நேரத்தில் அதிக அளவில் நீர் வெளியேற்றும் திறனுள்ளதும் எளிதில் தூக்கிச் செல்லக்கூடியதுமான பம்புகளுடன் இணைக்கப்பட்ட சுருங்கும் நீர்த் தொட்டிகள், காற்றடைக்கப்பட்ட மிதவைப் படகுகள், ஆழமற்ற நீரிலும்கூட பயன்படுத்தத்தக்க வகையில் குறைந்த எடையுள்ள இயந்திர விசைப் படகுகள் போன்ற நவீனச் சாதனங்களும் பயன்பாட்டில் உள்ளன. இதனுடன் சேர்ந்து உபயோகிக்கத்தக்கத் தரமான உயிர்காப்பு மிதவைகள், தற்காப்பு மிதவை மேலங்கி, மணிலா மற்றும் டெரிலின் கயிறுகளும் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. நவீன நச்சு வாயுக் கண்டுபிடிப்பான்கள், பலவகை நச்சு வாயுக் கண்டுபிடிப்பான்கள், காற்று சுவாசக் கருவிகள் ஆகியவை, குறிப்பாகத் தீ விபத்தின் விளைவாக ஏற்படும் புகை மண்டலங்களிலும், எளிதில் தீப்பற்றக்கூடிய எரிவாயு, சிலிண்டர்கள் சேமிப்புக் கிடங்குகளிலும் சிக்குண்டவர்களை மீட்க ஏதுவாக மீட்புப் பணிபுரியப் பயன்படுத்தப்படுகின்றன. மற்றும் இரசாயன தீத் தடுப்பு உடைகள், கையில் ஏந்தும் மற்றும் தலைக் கவசமாக அணிந்து பயன்படுத்தக்கூடிய வெப்பத் தத்துவப் பொருள் கண்டுபிடிப்பான் (Hand-help helmet type Thermal Imaging Cameras), மின் ரம்பங்கள், குவி ஒளி விளக்குகள் (Focus Lamp), சிறப்பு மீட்புக் கருவிகள், இடுபாடுகளுக்கிடையே சிக்கியுள்ள மனிதர்களைக் கண்டுபிடிக்கும் கருவிகள், மின்னாக்கி இணைப்புக் கொண்ட புகை போக்கிக் கருவிகள் ஆகியவைகளும் பயன்பாட்டில் உள்ளன.

[1998 மே 22

## VI. தகவல் தொடர்பு

தீயினால் ஏற்படும் அழிவைத் தடுப்பதும், குறைப்பதும் விரைவான செய்தித் தொடர்பால்தான் இயலும். தீயணைப்புத் துறை விரைந்து செயல்பட, துரிதமான விபத்து குறித்தத் தகவல் தொடர்பும், ஊர்திகள் பணியாளர்களுடன் தீ நிகழ்விடத்தை விரைந்து சென்றடைவதும் அவசியமாகிறது. விரைவுத் தகவல் தொடர்பிற்காக, ஒவ்வொரு தீயணைப்பு நிலையமும் தொலைபேசி இணைப்பு வசதியுடன் செயல்படுகிறது. அதிலும், பெரும்பான்மையான தீயணைப்பு நிலையங்களுக்கு அவசரத் தொலைபேசி அழைப்பு எண் '101' வழங்கப்பட்டுள்ளது. மேலும், தீயணைப்புத் துறைக்குக் கம்பியில்லாத் தந்தித் தகவல் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தியுள்ளது. இதன்கீழ், சென்னை மாநகரில் வாக்கி—டாக்கி கருவிகளுடன் 60 கம்பியில்லாத் தந்திக் கருவிகளும் மாவட்டங்களில் 193 கம்பியில்லாத் தந்திக் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன. மாநிலத்தின் ஏனைய தீயணைப்பு நிலையங்களில் மீவுயர் அலைவரிசையுடன் கூடிய கருவிகள் பொருத்தப்படும் திட்டம், நடப்பு நிதியாண்டில் படிப்படியாக நடந்தேறி வருகிறது. தீ வைத்தல் மற்றும் விபத்து ஏற்பட்ட இடத்தில் தீயணைப்புப் பணி மற்றும் மீட்புப் பணிச் சாதனை பற்றி ஆய்வு செய்வதற்காக நிழற்படப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பும் பரிசிலனையில் உள்ளது.

## VII. பயிற்சி வசதிகள்

நாகபுரி தேசிய தீயணைப்புக் கல்லூரியில் அளிக்கப்படும் பயிற்சித் தரத்திற்கு இணையாகப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் பயிற்சிப் பள்ளியை ஆசிய அளவிற்கேற்ப மேம்படுத்த அரசு ஆணையிட்டது. மாநிலப் பயிற்சிப் பள்ளியை மேம்படுத்தும் திட்டத்தின் முதல் கட்டப் பணிக்கு மொத்தம் 80.00 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மேம்படுத்தப்படவுள்ள இப்பயிற்சிப் பள்ளிக்குப் புத்தகங்களும் சாதனங்களும் முதல் கட்டப் பணியாக வாங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிப் பள்ளிக்காகக் கட்டடம் கட்டும் பணி, பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகின்றது. 1997-98 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பயிற்றுவிக்கும் சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்காக, ரூ. 50.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், இத்துறையில் பணிபுரியும் அனைத்து வகை அலுவலர்களுக்கும் பயிற்சியளிக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.



1998 மே 22]

## VIII. ஆற்றிய பணிகள்

### (அ) தீத் தடுப்பு நடவடிக்கைகள்

தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் முதன்மையான பணி தீயைத் தடுப்பதாகும். இந்நோக்கத்தை எய்துவதற்காக, இம்மாநிலத்தில் 6 இடங்களில் தீத் தடுப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வசிப்பவர்களுக்குத் தீ விபத்து ஏற்படாமல் தடுப்பது பற்றி எடுத்துரைப்பதே இப்பிரிவுகளின் முக்கியப் பணியாகும்.

கோடைக் காலத்தில் தீ விபத்து ஏற்படக்கூடிய இடங்களில் புறத் தீயணைப்பு நிலையங்களை ஏற்படுத்துவதன் மூலம், மாநகரில் குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. இப்புறத் தீயணைப்பு நிலையங்களுக்கு பற்கோல், கூரைக்கொக்கி, எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய பம்புகள், நகரும் அல்லது சுருங்கும் நீர்த் தொட்டிகள் போன்ற எளிமையான தீத்தடுப்புச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது இருக்கும் பணியாளர்களின் உதவியுடன் இப்புறத் தீயணைப்பு நிலையங்கள் இரவு பகலாக நாள் முழுவதும் பணியாற்றுகின்றன. கம்பியில்லாத் தந்தி அமைப்புகள் இப்பகுதிகளைத் தொடர்ந்து விழிப்புடன் கண்காணிக்க உதவுகின்றன.

பள்ளிகள், மகளிர் நிறுவனங்கள், கிராமங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் விரிவான தீத் தடுப்புப் பிரச்சாரங்கள் நடத்தப்படுகின்றன. இது தவிர, பல்வேறுச் சட்டங்கள் மற்றும் விதிகளின்கீழ் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இவ்விவரங்கள் இணைப்பு-VI இல் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வகைக் குழுக்களைக் ஏனைய மாவட்டங்களில் ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### (ஆ) மீட்பு அழைப்புகள்

பல சிக்கலானச் சூழ்நிலைகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நேரத்தில் உதவி அளிப்பதில் இத்துறை தனக்கெனச் சிறந்த பெயரைத் தேடிக் கொண்டுள்ளது. 1997 ஆம் ஆண்டில் 3547 அழைப்புகள் வரப்பெற்றன. இம்மீட்பு அழைப்புகள் பெரும்பாலும், சாலை/ரயில் விபத்துகளில் சிக்குண்டு உயிருக்குப் போராடுவோரை மீட்கவும், தண்ணீர் வற்றிய ஆழமான கிணறுகளில் விழுந்துவிட்டவர்களை மீட்கவும், நச்சு வாயுச் சுவாசித்ததால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கவும், புயல்/

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கவும், கட்டட இடிபாடுகளில் சிக்குண்டவர்களை மீட்கவும், பூச்சிகள் மற்றும் நச்சு வண்டுகளின் தாக்குதலிலிருந்து பொது மக்களை மீட்டுக் காக்கவும், நீரில் மூழ்கிய வளர்ப்புப் பிராணிகளை உயிருடன் மீட்கவும், பூட்டிய வீட்டினுள் அகப்பட்டுக் கொண்ட சிறார்களை மீட்கவும், தானியங்கித் தூக்கிகளில் சிக்குண்டவர்கள், நிலச் சரிவுகளில் அகப்பட்டவர்கள், கிணறு தோண்டும்போது மண் சரிந்து அகப்பட்டுக் கொண்டவர்கள் முதலியோரை மீட்கவும், தீயணைப்புத் துறையின் சேவையை உடனடியாகக் கோரும் மீட்பு அழைப்புகளாகும். நவீன மீட்புக் கருவிகளையும், சாதனங்களையும், மேம்பட்ட தொழில்நுட்பத் திறனையும் பயன்படுத்தி, தீயணைப்புத் துறைப் பணியாளர்கள், மொத்தம் 4505 உயிர்களைக் காப்பாற்றியுள்ளனர். ஆனால் கடந்த ஆண்டில் காப்பாற்றப்பட்ட உயிர்களின் மொத்த எண்ணிக்கை 4028 ஆகும். கடந்த ஆண்டில் பெய்த வரலாறு காணாத பெரும் மழையின் விளைவாக இம்மாநிலத்தின் பெரும் பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கின. இத்துறைப் பணியாளர்கள், தக்க தருணத்தில் விரைந்து நீரை வெளியேற்றி, மூழ்கிய மக்களை மீட்டு, புரிந்த நற்பணியானது அனைத்துத் தரப்பு மக்களின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளது.

### (இ) தீயணைப்பு அழைப்புகள்

இத்துறை, கடந்த ஆண்டில் 13,678 தீயணைப்பு அழைப்புகளை ஏற்றுச் செயல்பட்டது. இக்கால அளவில், மாநிலம் முழுவதும் தீயினால் ஏற்பட்ட பொருள் இழப்பு அல்லது சேதத்தின் மதிப்பு சுமார் ரூ. 60.90 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. தீயின் அழிவினின்று காப்பாற்றப்பட்டச் சொத்துக்களின் மதிப்பு ஏறத்தாழ 181.19 கோடி ரூபாய் ஆகும். 1996 ஆம் ஆண்டிலும், 1997 ஆம் ஆண்டிலும் வரப்பெற்ற தீயணைப்பு அழைப்புகளின் விவரங்கள் இணைப்பு-V-ல் கொடுக்கப்பட்டுள்ளன. தீ நிகழ்வுகள் பற்றி 1997 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்விலிருந்து (Fire Trend Analysis) கீழ்க்காணும் விவரங்கள் தெரிய வருகின்றன:

1. வீடுகளில் ஏற்பட்ட தீ விபத்துகள் 43.36 சதவீதம் ஆகும். இவற்றில் பெரும்பகுதி குடிசைப் பகுதிகளில், குறிப்பாகக் கோடைக் காலத்தில் ஏற்பட்டவையாகும்.
2. தொழிற்சாலைகளில் ஏற்பட்ட தீ விபத்துகள் சுமார் 2.34 சதவீதம் ஆகும்.
3. இதர தீ விபத்து 54.3 சதவீதம் ஆகும்.





### (ஈ) கட்டண அழைப்புகள்

இம்மாநிலத்தில் செயல்படும் மொத்தம் 277 தீயணைப்பு நிலையங்களில், 74 தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. இந்நோயாளர் ஊர்திப் பணிகள் நியாயமான வாடகையில் பொதுமக்களுக்குக் கிடைக்கின்றன. 1997 ஆம் ஆண்டில் நோயாளர் ஊர்திகள் 1820 அழைப்புகளை ஏற்றுச் செயல்பட்டன. ரூ. 6,10,491 வாடகைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

### (உ) பொது நலனைக் கருதி ஆய்ந்த நிலை தீயணைப்பு ஊர்தி நிறுத்தப்பணி

மிக முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போதும், முக்கிய கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்களின்போதும், மொத்தத்தில் 276 பாதுகாப்பு ஏற்பாடுகளும், ஆயத்த நிலைத் தீயணைப்பு ஊர்தி நிறுத்தப் பணிகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

### (ஊ) தனியாருக்கு ஆயத்த நிலை தீயணைப்பு ஊர்தி நிறுத்தப்பணி

தனியார்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், கட்டணம் வசூலித்து, அவர்களது கோயில், குடும்ப விழாக்கள், திரைப்படப் படப்பிடிப்பு ஆகியவற்றுக்கு இவ்வகையில் மொத்தம் 497 முறை ஆயத்த நிலை தீயணைப்பு ஊர்தி நிறுத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ. 11,51,211 வசூலிக்கப்பட்டது.

## IX. துறையின் செயல் இலக்குகளுடன் பணியாளர்களின் செயல்திறனை ஒருங்கிணைத்தல்

இத்துறையின் குறிக்கோள்களை அடைய ஏதுவாக, இத்துறைப் பணியாளர்களை மேலும் திறம்படப் பணிபுரிய ஊக்குவிப்பதற்காகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஊக்கத் தொகைகள் அளிக்கப்படுவதுடன் நலத் திட்டங்களின் கீழ் உதவித் தொகைகளும் அளிக்கப்படுகின்றன:

### ஊக்கத் தொகைகள்

### (அ) விருதுகளும், வெகுமதிகளும்

தீயணைப்புத் துறையினர் போற்றத்தக்க வகையில், கடமை உணர்வுடனும், அஞ்சா நெஞ்சத்துடனும் ஆற்றிய பணியினைப் பாராட்டும் வகையில், மாநில அரசு ஏற்படுத்திய, பின்வரும் விருதுகள், தமிழ்நாடு தீயணைப்புத் துறை அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டன :

[1998 மே 22

(1) **தமிழ்நாடு முதலமைச்சரின் அண்ணா (தீயணைப்பு) பதக்கம்**

| பதவித் தரம் | | 1997-ல் வழங்கப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| கோட்டத் தீயணைப்பு அலுவலர் | .. | 1 | |
| நிலையத் தீயணைப்பு அலுவலர்.. | .. | 2 | |
| முன்னணித் தீயணைப்போர் | .. | 1 | |
| தீயணைப்போர் ஓட்டுநர் | .. | 2 | |
| தீயணைப்போர் | .. | 1 | |
| முன்னணித் தீயணைப்போர் | .. | 1 | தகைசால் பதக்கம் |

இப்பதக்கம் பெற்றவர்கள், அவர்களுடைய பதவித் தரத்திற்கேற்ப ரூ. 2,000 முதல் ரூ.5,000 வரை ஒட்டுமொத்த மானியம் பெறத் தகுதியுடையவராவார்கள்.

(2) **தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புப் பதக்கம்**

| | |
|---|---|
| முன்னணித் தீயணைப்போர் | 21 |
| எந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 4 |
| தீயணைப்போர் ஓட்டுநர் | 31 |
| தீயணைப்போர் | 18 |

இப்பதக்கம் பெறும் தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவியில் உள்ளோர் ஒவ்வொருவருக்கும் மாதாந்திர ரொக்கப்படியாக ரூ. 40-ம் முன்னணித் தீயணைப்போர்/எந்திரக் கம்மியர் ஓட்டுநர், தீயணைப்போர் ஓட்டுநர்/தீயணைப்போர்-எந்திரக் கம்மியர் ஆகிய ஒவ்வொருவருக்கும் ரூ. 50/-ம் வழங்கப்படுகிறது.

**3. மாநில விருதுகள் தவிர, தீயணைப்புப் பணியாளர்களுக்கு மத்திய அரசால் ஏற்படுத்தப் பெற்ற விருதுகளும் வழங்கப்படுகிறது. விவரங்கள் வருமாறு:**



1998 மே 22]

*(அ) 1997 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்ட பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பதக்கம்:*

| | | |
|---|---|---|
| நிலைய அலுவலர் (போக்குவரத்து) | .. | 1 |
| நிலையத் தீயணைப்பு அலுவலர் | .. | 1 |
| எந்திர கம்மியர் ஓட்டுநர் | .. | 1 |
| தீயணைப்போர் | .. | 1 |

**(ஆ) 1998 ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்கப்பட்ட பாராட்டத்தக்க பணிக்கான தீயணைப்புப் பதக்கம்:**

உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் .. 1

**(ஆ) நலத் திட்டங்கள்**

**(1) தீயணைப்புத் துறை நல நிதி**

தீயணைப்புத் துறையில் இக்கட்டுக்கு ஆளான நிலையிலுள்ள பணியாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்கென 1962-ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத்துறை நல நிதி ஏற்படுத்தப்பட்டது. இது அவர்களது நலனையும் மேம்படுத்துகிறது. இதன் உறுப்பினர்களுக்குப் பின்வரும் தேவைகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது :

1. காசநோய், தொழுநோய், புற்று நோய் போன்ற கொடிய நோய்களினால் அவதியுறும் தீயணைப்புப் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்களைச் சார்ந்திருப்போருக்கும் சத்துணவு வழங்க;
2. அவர்களின் குழந்தைகளது உயர் கல்விச் செலவிற்கு;
3. மரணமுற்ற உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க;
4. உறுப்பினர்களோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களோ இறந்துவிட்டால், அவர்களது ஈமச் சடங்குச் செலவிற்கு;

இத்திட்டத்தில் 5575 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு, இத்துறைக்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ. 1,50,000 மானியமாக அளிக்கிறது. இதன் உறுப்பினர்களிடமிருந்து சந்தாத் தொகையாக ரூ.9,5,659 வசூலிக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டில் இந்நிதியிலிருந்து உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த நிவாரணத் தொகை ரூ.2,79,911 ஆகும்.

## 2. குடும்ப நல நிதித் திட்டம்

பணியிலிருக்கும்போது உயிர் துறக்கும் பணியாளர்களுக்கு குடும்ப நல நிதித் திட்டத்தின் கீழ் அரசு அளிக்கும் ரூ.1,00,000 தவிர, பணியிலிருக்கும்போது உயிர் துறக்கும் தீயணைப்புப் பணியாளர்கள் குடும்பத்திற்கு ரொக்க நிவாரணமாக ரூ. 10,000 வழங்கும் ஒரு திட்டமும் செயலில் உள்ளது. மேலும், பணியில் ஈடுபட்டிருக்கும்போது காயமடையும் தீயணைப்புப் பணியாளர்களுக்கு காயத்தின் தன்மைக்கேற்ப ரூ.1,000 முதல் ரூ.3,000 வரை கருணைத் தொகை வழங்கப்படுகிறது.

## 3. குழு காப்புறுதித் திட்டம்

பணியிலிருக்கும்போது உயிர்துறக்கும் தீயணைப்புத் துறை பணியாளரின் குடும்பத்திற்கு நிவாரணம் அளிப்பதற்காக, தீயணைப்புத் துறை இயக்குநர் முதல் தீயணைப்போர் வரையிலான அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் (அமைச்சுப் பணியாளர் நீங்கலாக) அனைவருக்கும், குழு காப்புறுதித் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், உயிர் துறக்கும் பணியாளரின் குடும்பத்திற்கு ரூ. 1,00,000 அளவிற்கு நிவாரணம் அளிக்கப்படுகிறது.

## 4. உணவுப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவித் தரம் வரையிலான பணியாளர்களுக்கு அரசி, கோதுமை, சர்க்கரை, ரவை, மைதா, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை போன்ற இன்றியமையாத உணவுப் பொருட்கள் குறைந்த விலையில் வழங்கப்படுகின்றன. இதற்காக ஆண்டொன்றுக்கு சராசரியாக ரூ. 29,73,495-ஐ அரசு மானியமாகச் செலவிடுகிறது.

## 5. குடியிருப்புகள் கட்டுதல்

தீயணைப்புப் பணியாளர்களின் செயல் திறனைப் பாதுகாக்கவும், தேவை ஏற்படும்போது அவர்களை விரைவாகப் பணிக்கு அழைக்கவும், அவர்களுக்கு தீயணைப்பு நிலையங்களின் அருகிலேயே குடியிருப்புகள் அளிப்பது இன்றியமையாததாகும். தற்சமயம், அரக்கோணம், உடுமலைப்பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி, அசோக் நகர்,



வண்ணாரப்பேட்டை, நந்தனம், பெரம்பலூர், நாகப்பட்டினம், அண்ணா நகர் (மேற்கு), மயிலாப்பூர், தாம்பரம் மற்றும் மதுரையில் குடியிருப்புகள் உள்ளன. தர்மபுரியில் ரூ. 72.47 இலட்சம் செலவில் 36 குடியிருப்புகளைக் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது. மேலும், 177 இடங்களில், தீயணைப்புப் பணியாளர்களுக்காக 3141 குடியிருப்புகள் கட்டுவதற்கு வீட்டு வசதி வளர்ச்சி நிதிக் கழகத்திடம் ரூ.94.23 கோடி கடனுதவி கோரப்பட்டுள்ளது.

## X. இவ்வரசு பொறுப்பேற்ற பின் வழங்கியுள்ள வசதிகளும், சலுகைகளும்

பொது மக்களின் நலனுக்காக பணியின் தரத்தை மேம்படுத்துவதன் அவசியத்தை உணர்ந்த இவ்வரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், இத்துறையில் பணித்தரத்தை மேம்படுத்த கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது :

1. மிகக் குறைந்த கால அளவிற்குள் ஓரூர்தி கொண்ட 47 புதிய தீயணைப்பு நிலையங்கள் மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளன.

2. குறுகிய காலத்திற்குள் கீழ்க்காணும் மாவட்டங்களில் ஆறு புதிய கோட்டங்கள் ஏற்படுத்தப்பெற்று, செயல்பட்டு வருகின்றன.

   (அ) கரூர் மாவட்டம்
   (ஆ) பெரும்பலூர் மாவட்டம்
   (இ) திருவள்ளூர் மாவட்டம்
   (ஈ) திருவாரூர் மாவட்டம்
   (உ) தேனி மாவட்டம்
   (ஊ) நாமக்கல் மாவட்டம்

3. 1070 தீயணைப்போர் பணியில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

4. மறைமலை நகரில் உள்ள தீயணைப்பு நிலையம் ரூ.46.00 இலட்சம் செலவில் நிலை உயர்த்தப்பட்டு வருகிறது.

5. ரூ.4.00 கோடி செலவில் புதிதாக 18 நீர்தாங்கி வண்டிகளும், சிறு நுரை பீச்சும் ஊர்தி ஒன்றும் வாங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

6. 1997-98 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்த புதிய தீயணைப்பு நிலையங்களுக்காக ரூ. 639.60 இலட்சம் செலவில் 26 நீர்தாங்கி வண்டிகளை வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது.

7. பல மாடிகள் கொண்ட உயரமான கட்டடங்களில் தீயை அணைக்கவும், அவ்வாறு ஏற்படும் தீ விபத்தின்போது கட்டடத்தின் உள்ளே சிக்கிக் கொண்டவர்களை மீட்கவும் அதி நவீன இரண்டு ஹைட்ராலிக் பிளாட்பார்ம் மற்றும் சுழல் மேஜை ஏணி வண்டிகளை 4.76 கோடி ரூபாயில் வாங்குவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவை, பின்லாந்திலிருந்து விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன.

8. திருவண்ணாமலை தீயணைப்பு நிலையத்திற்கு ரூ. 27.12 இலட்சம் செலவில் நிரந்தரக் கட்டடம் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

9. சென்னையில் தற்போதுள்ள பயிற்சிப் பள்ளி மத்திய உதவி மானியத் திட்டத்தின் கீழ் ரூ. 1.00 கோடி செலவில், வட்டாரப் பயிற்சி மையமாகத் தரம் உயர்த்தப்பட்டு தாம்பரத்திற்கு மாற்றப்படவுள்ளது. 1996-97-ல் முதற்கட்டமாக ரூ. 80.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1997-98-ல் இரண்டாம் கட்டமாக ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

10. முன்பு அரசு அலுவலகங்கள், அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள தீயணைப்புக் கருவிகள் தனியார் நிறுவனங்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தன. இவ்வகையில் ஒரு தீயணைப்புச் சாதனத்திற்கு ஆகும் பராமரிப்புச் செலவு ரூ. 8.50 வரை இருந்தது. இந்நடைமுறையை மாற்றி, அனைத்து அரசு அலுவலகங்கள், பிற அரசு சார்பு நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள தீயணைப்புச் சாதனங்களை பராமரிக்கும் பணியினைச் சாதனம் ஒன்றுக்கான செலவு ரூ. 3.00 என்ற வீதத்தில், தீயணைப்புத் துறைப் பணியாளர்களைக் கொண்டே மாநிலம் முழுவதும் செய்திட அரசு ஆணையிட்டுள்ளது.





இவ்வகையில் கிடைக்கும் வருவாயில் 90 சதவீதம் அரசுக்கும், மீதமுள்ள 10 சதவீதம் இப்பணியில் ஈடுபடும் தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும். இது, தீயணைப்புத் துறையின் செயல்திறனை மேம்படுத்தவும் மற்றும் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் மேற்கொள்ளப்பட்ட ஒரு புதிய முயற்சியாகும்.

## XI. 1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட புதிய திட்டங்கள்:

1. விபத்து நிகழும் இடத்திற்கு விரைந்து செல்லுவதற்கு ஏதுவாக, மாநில அளவில் 60 உயர் மின்னலை தகவல் தொடர்புக் கருவிகள் ரூ.20.52 இலட்சம் செலவில் வாங்குதல்.

2. சென்னை நகரில் இயங்கி வரும் இரண்டு தீத்தடுப்புக் குழுக்களுக்கு இரு புகைப்பட பிரிவுகள் ரூ. 5.00 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல்.

3. மக்களிடையே தீத்தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக திருச்சிராப்பள்ளி, வேலூர், தர்மபுரி, காஞ்சிபுரம், புதுக்கோட்டை மற்றும் திண்டுக்கல் ஆகிய ஆறு கோட்டங்களில் தீத்தடுப்புக் குழுக்களை ரூ.27.79 இலட்சம் செலவில் ஏற்படுத்துதல். மேற்கண்ட செலவினம் 77 தீயணைப்போர் பதவிகளை ஒப்புவிப்பதன் மூலம் சரிக்கட்டப்படும்.

4. வில்லிவாக்கம் தீயணைப்பு நிலையத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய ஆழ்குழாய்க் கிணறு ரூ. 2.93 இலட்சம் செலவில் அமைத்தல்.

5. தண்டையார்பேட்டை தீயணைப்பு நிலையத்திற்கு ஆழ்குழாய் கிணறு ரூ.1.71 இலட்சம் செலவில் அமைத்தல்.

இக்கட்டான சூழ்நிலைகளிலும், பல இடர்பாடுகளுக்கு இடையில் பொதுப்பணி ஆற்றி வரும் இத்துறையை மேலும் நவீனப்படுத்தி தொடர்ந்து சிறப்புடன் செயல்படச் செய்வதே இந்த அரசின் குறிக்கோளாகும்.

# இணைப்பு-1

## நிருவாக அமைப்பு

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை இயக்குநர்

**இயக்குநர் அலுவலகம்**

1. துணை இயக்குநர் (நிருவாகம்)
2. நேர்முக உதவியாளர் (நிருவாகம்)
3. நேர்முக உதவியாளர் (பண்டகசாலை)
4. பணியாளர் அமைப்பு பிரிவு
5. கணக்குப் பிரிவு
6. பொதுப் பிரிவு
7. தணிக்கைப்பிரிவு
8. பண்டகசாலை பிரிவு
9. தீக்கட்டுப்பாட்டறை
10. கம்பியில்லாத தந்தி பிரிவு
11. இசைக்குழு (பேண்டுக்குழு)

**தீயணைப்பு துணை இயக்குநர், வட மண்டலம், சென்னை**
— கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
— உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்

| | தீஅநி | நபகு | தீதகு |
|---|---|---|---|
| 1. வடசென்னை | 13 | - | 1 |
| 2. தென்சென்னை | 10 | 1 | 1 |
| 3. காஞ்சிபுரம் | 10 | 1 | - |
| 4. திருவள்ளூர் | 12 | - | - |
| மொத்தம் | 45 | 2 | 2 |

**தீயணைப்பு துணை இயக்குநர், மத்திய மண்டலம், திருச்சி**
— கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
— உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்

| | தீஅநி | நபகு | தீதகு |
|---|---|---|---|
| 1. திருச்சி | 8 | 1 | - |
| 2. புதுக்கோட்டை | 11 | 1 | - |
| 3. தஞ்சாவூர் | 9 | 1 | - |
| 4 நாகப்பட்டினம் | 9 | - | - |
| 5. கடலூர் | 14 | - | - |
| 6. விழுப்புரம் | 11 | 1 | - |
| 7 கரூர் | 4 | - | - |
| 8. பெரம்பலூர் | 6 | - | - |
| 9. திருவாரூர் | 10 | - | - |
| மொத்தம் | 82 | 4 | - |

**தீயணைப்பு துணை இயக்குநர், தென் மண்டலம், மதுரை**
— கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
— உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்

| | தீஅநி | நபகு | தீதகு |
|---|---|---|---|
| 1. மதுரை | 9 | 1 | - |
| 2. திருநெல்வேலி | 13 | 1 | - |
| 3 கன்னியாகுமரி | 7 | 1 | - |
| 4. தூத்துக்குடி | 9 | 1 | - |
| 5 விருதுநகர் | 8 | 1 | 1 |
| 6. இராமநாதபுரம் | 16 | 1 | - |
| 7. தேனி | 8 | - | - |
| மொத்தம் | 70 | 6 | 1 |

**தீயணைப்பு துணை இயக்குநர், மேற்கு மண்டலம், கோயம்புத்தூர்**
— கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்
— உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள்

| | தீஅநி | நபகு | தீதகு |
|---|---|---|---|
| 1. கோயம்புத்தூர் | 13 | 1 | 1 |
| 2. ஈரோடு | 10 | - | 1 |
| 3. சேலம் | 8 | 1 | 1 |
| 4. தர்மபுரி | 10 | - | - |
| 5. திண்டுக்கல் | 8 | 1 | - |
| 6. வேலூர் | 15 | 1 | - |
| 7. திருவண்ணாமலை | 12 | - | - |
| 8. நாமக்கல் | 4 | - | - |
| மொத்தம் | 80 | 4 | 3 |

மாநிலத்தின் மொத்த தீயணைப்பு நிலையங்கள் 277

மற்ற நிலையங்கள் - மாநில பயிற்சி பள்ளி - 1
மாநில பட்டறை - 1

குறிப்பு : தீஅநி - தீயணைப்பு நிலையம்
நபகு - நடமாடும் பழுது பார்க்கும் குழு
தீதகு - தீத்தடுப்புக் குழு

1998 மே 22]

## இணைப்பு - 2

### செயல் பதவிகள்

| தொடர் எண் | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தீயணைப்புத் துறை இயக்குநர் | 1 |
| 2. | தீயணைப்புத் துறை துணை இயக்குநர் | 4 |
| 3. | கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் | 29 |
| 4. | உதவிப் பொறியாளர் (தானியங்கி) | 1 |
| 5. | உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் | 35 |
| 6. | நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் | 292 |
| 7. | நிலைய அலுவலர்கள் (போக்குவரத்து) | 10 |
| 8. | உதவி நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் | 15 |
| 9. | முன்னணித் தீயணைப்போர் | 715 |
| 10. | எந்திரக் கம்மியர் ஓட்டுநர் | 244 |
| 11. | தீயணைப்போர் ஓட்டுநர் மற்றும் தீயணைப்போர் கம்மியர் | 1031 |
| 12. | தீயணைப்போர் மற்றும் அதற்கு இணையான பதவிகள் | 4068 |
| | மொத்தம் | **6445** |

[1998 மே 22

## இணைப்பு - 3

### அமைச்சுப் பணியாளர்களின் விவரங்கள்

| தொடர் எண் | பதவியின் பெயர் | மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 2. | தீயணைப்பு துறை இயக்குநரது நேர்முக உதவியாளர் (நிருவாகம்) | 2 |
| 3. | கண்காணிப்பாளர்கள் | 32 |
| 4. | உதவியாளர்கள் | 90 |
| 5. | இளநிலை உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்-தட்டச்சர்கள் | 61 |
| 6. | சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் | 5 |
| 7. | தட்டச்சர்கள் | 27 |
| 8. | பதிவுரு எழுத்தர்கள் | 31 |
| 9. | அலுவலக உதவியாளர்கள் | 51 |
| | மொத்தம் | 300 |



1998 மே 22]

## இணைப்பு - 4

### தமிழ்நாட்டில் இயங்கிவரும் மொத்த தீயணைப்பு நிலையங்களின் பட்டியல்

| கோட்டத்தின் பெயர் (1) | | தீயணைப்பு நிலையங்கள் (2) |
|---|---|---|
| **1. வடமண்டலம், சென்னை** | | |
| வட சென்னை | 1. | வண்ணாரப்பேட்டை |
| | 2. | எஸ்பிளனேடு |
| | 3. | இராயபுரம் |
| | 4. | வியாசர்பாடி |
| | 5. | செம்பியம் |
| | 6. | கீழ்ப்பாக்கம் |
| | 7. | வேப்பேரி |
| | 8. | தண்டையார்பேட்டை |
| | 9. | வ.உ.சி. நகர் |
| | 10. | எண்ணூர் |
| | 11. | மணலி |
| | 12. | தலைமைச் செயலகம் |
| | 13. | அத்திப்பட்டு |
| தென்சென்னை | 1. | எழும்பூர் |
| | 2. | திருவல்லிக்கேணி |
| | 3. | மைலாப்பூர் |
| | 4. | தேனாம்பேட்டை |
| | 5. | அசோக்நகர் |
| | 6. | சைதாப்பேட்டை |
| | 7 | கிண்டி |
| | 8. | ராஜ்பவன் |
| | 9. | கோயம்பேடு |
| | 10. | ஜெ.ஜெ.நகர் |
| காஞ்சிபுரம் | 1. | காஞ்சிபுரம் |
| | 2. | ஸ்ரீ பெரும்புதூர் |
| | 3. | மதுராந்தகம் |
| | 4. | செங்கல்பட்டு |

[1998 மே 22

| (1) | | (2) |
|---|---|---|
| | 5. | தாம்பரம் |
| | 6. | மறைமலைநகர் |
| | 7. | உத்திரமேரூர் |
| | 8. | அச்சிறுபாக்கம் |
| | 9. | திரூர் |
| | 10. | திருக்கழுக்குன்றம் |
| திருவள்ளூர் | 1. | அம்பத்தூர் |
| | 2. | பொன்னேரி |
| | 3. | வில்லிவாக்கம் |
| | 4. | திருத்தணி |
| | 5. | திருவள்ளூர் |
| | 6. | கும்மிடிப்பூண்டி |
| | 7. | கும்மிடிப்பூண்டி (சிப்காட்) |
| | 8. | ஆவடி |
| | 9. | செங்குன்றம் |
| | 10. | பள்ளிப்பட்டு நகர் |
| | 11. | பூவிருந்தவல்லி |
| | 12. | பேரம்பாக்கம் |

வடமண்டலத்திலுள்ள மொத்த தியணைப்பு நிலையங்கள் - 45

**2. மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி**

| | | |
|---|---|---|
| திருச்சிராப்பள்ளி | 1. | திருச்சிராப்பள்ளி |
| | 2. | ஸ்ரீரங்கம் |
| | 3. | மணப்பாறை |
| | 4. | துவரங்குறிச்சி |
| | 5. | புள்ளம்பாடி |
| | 6. | நாவல்பட்டு |
| | 7. | லால்குடி |
| | 8. | உப்பிலியாபுரம் |
| கரூர் | 1. | கரூர் |
| | 2. | புகளூர் |
| | 3. | அரவக்குறிச்சி |
| | 4. | முசிறி |



1998 மே 22]

| (1) | | (2) |
|---|---|---|
| பெரம்பலூர் | 1. | பெரம்பலூர் |
| | 2. | துறையூர் |
| | 3. | அரியலூர் |
| | 4. | ஜெயங்கொண்ட சோழபுரம் |
| | 5. | வேப்பூர் |
| | 6. | செந்துறை |
| கடலூர் | 1. | கடலூர் |
| | 2. | சிதம்பரம் |
| | 3. | நெல்லிக்குப்பம் |
| | 4. | பண்ருட்டி |
| | 5. | விருத்தாசலம் |
| | 6. | காட்டுமன்னார்கோவில் |
| | 7. | குறிஞ்சிப்பாடி |
| | 8. | திட்டக்குடி |
| | 9. | கடலூர் சிப்காட் |
| | 10. | வேப்பூர் |
| | 11. | சேத்தியாத்தோப்பு |
| | 12. | பரங்கிப்பேட்டை |
| | 13. | திருமுட்டம் |
| | 14. | மங்கலம்பேட்டை |
| விழுப்புரம் | 1 | விழுப்புரம் |
| | 2. | கள்ளக்குறிச்சி |
| | 3. | திண்டிவனம் |
| | 4. | செஞ்சி |
| | 5. | திருக்கோவிலூர் |
| | 6. | சங்கராபுரம் |
| | 7. | மரக்காணம் |
| | 8. | உளுந்தூர்பேட்டை |
| | 9. | வானூர் |
| | 10. | திருவெண்ணெய்நல்லூர் |
| | 11. | மேல்மலையனூர் |
| புதுக்கோட்டை | 1. | புதுக்கோட்டை |
| | 2. | அறந்தாங்கி |
| | 3. | பொன்னமராவதி |

[1998 மே 22

| (1) | | (2) |
|---|---|---|
| புதுக்கோட்டை—தொடர்ச்சி. | 4. | ஆலங்குடி |
| | 5. | திருமயம் |
| | 6. | இலுப்பூர் |
| | 7. | கந்தர்வக்கோட்டை |
| | 8. | கீரனூர் |
| | 9. | புதுக்கோட்டை சிப்காட் |
| | 10. | ஜெகதாப்பட்டினம் |
| | 11. | ஆவுடையார்கோவில் |
| தஞ்சாவூர் | 1. | தஞ்சாவூர் |
| | 2. | கும்பகோணம் |
| | 3. | பாபநாசம் |
| | 4. | திருவிடைமருதூர் |
| | 5. | திருக்காட்டுப்பள்ளி |
| | 6. | ஒரத்தநாடு |
| | 7. | பட்டுக்கோட்டை |
| | 8. | பேராவூரணி |
| | 9. | திருவையாறு |
| நாகப்பட்டினம் | 1. | நாகப்பட்டினம் |
| | 2. | மயிலாடுதுறை |
| | 3. | சீர்காழி |
| | 4. | வேதாரண்யம் |
| | 5. | தரங்கம்பாடி |
| | 6. | கீவளூர் |
| | 7. | குத்தாலம் |
| | 8. | பூம்புகார் |
| | 9. | வேளாங்கண்ணி |
| திருவாரூர் | 1. | மன்னார்குடி |
| | 2. | நீடாமங்கலம் |
| | 3. | திருத்துறைப்பூண்டி |
| | 4. | திருவாரூர் |
| | 5. | நன்னிலம் |
| | 6. | குடவாசல் |
| | 7. | கோட்டூர் |
| | 8. | முத்துப்பேட்டை காயல் |
| | 9. | வலங்கைமான் |
| | 10. | கூத்தாநல்லூர் |



1998 மே 22]

| (1) | | (2) |
|---|---|---|
| **மத்திய மண்டலத்திலுள்ள மொத்த தீயணைப்பு நிலையங்கள் : 82** | | |
| **3. தென் மண்டலம், மதுரை** | | |
| மதுரை | 1. | மதுரை |
| | 2. | தல்லாகுளம் |
| | 3. | மேலூர் |
| | 4. | உசிலம்பட்டி |
| | 5. | திருமங்கலம் |
| | 6. | சோழவந்தான் |
| | 7. | கொட்டாம்பட்டி |
| | 8. | அனுப்பானடி |
| | 9. | கள்ளிக்குடி |
| தேனி | 1. | பெரியகுளம் |
| | 2. | தேனி - அல்லி நகரம் |
| | 3. | ஆண்டிப்பட்டி |
| | 4. | கடமலைக்குண்டு |
| | 5. | மயிலாடும்பாறை |
| | 6. | உத்தமபாளையம் |
| | 7. | கம்பம் |
| | 8. | போடிநாயக்கனூர் |
| இராமநாதபுரம்-சிவகங்கை | 1. | இராமநாதபுரம் |
| | 2. | இராமேஸ்வரம் |
| | 3. | கமுதி |
| | 4. | பரமக்குடி |
| | 5. | முதுகுளத்தூர் |
| | 6. | ஏர்வாடி |
| | 7. | காரைக்குடி |
| | 8. | தேவகோட்டை |
| | 9. | சிவகங்கை |
| | 10. | சிங்கம்புணரி |
| | 11. | திருப்பத்தூர் |
| | 12. | மண்டபம் |
| | 13. | மானாமதுரை |
| | 14. | திருவாடானை |
| | 15. | ராஜசிங்கமங்கலம் |
| | 16. | சாயல்குடி |

[1998 மே 22

| (1) | | (2) |
|---|---|---|
| விருதுநகர் | 1. | திருவில்லிப்புத்தூர் |
| | 2. | ராஜபாளையம் |
| | 3. | சாத்தூர் |
| | 4. | சிவகாசி |
| | 5. | அருப்புக்கோட்டை |
| | 6. | விருதுநகர் |
| | 7. | வத்திராயிருப்பு |
| | 8. | திருச்சுழி |
| திருநெல்வேலி | 1. | பாளையங்கோட்டை |
| | 2. | திருநெல்வேலி (பேட்டை) |
| | 3. | தென்காசி |
| | 4. | கடையநல்லூர் |
| | 5. | நாங்குநேரி |
| | 6. | அம்பாசமுத்திரம் |
| | 7. | சங்கரன்கோயில் |
| | 8. | வாசுதேவநல்லூர் |
| | 9. | வள்ளியூர் |
| | 10. | செங்கோட்டை |
| | 11. | சுரண்டை |
| | 12. | சேரன்மாதேவி |
| | 13. | திசையன்விளை |
| கன்னியாகுமரி | 1. | நாகர்கோயில் |
| | 2. | கன்னியாகுமரி |
| | 3. | குழித்துறை |
| | 4. | குலசேகரம் |
| | 5. | பத்மநாபபுரம் (அல்லது) தக்கலை |
| | 6. | குளச்சல் |
| | 7. | கொல்லங்கோடு |



1998 மே 22]

| (1) | | (2) |
|---|---|---|
| தூத்துக்குடி | 1. | கோவில்பட்டி |
| | 2. | தூத்துக்குடி |
| | 3. | தூத்துக்குடி அனல்மின் நிலையம் |
| | 4. | திருச்செந்தூர் |
| | 5. | சாத்தான்குளம் |
| | 6. | திருவைகுண்டம் |
| | 7. | விளாத்திகுளம் |
| | 8. | கழுகுமலை |
| | 9. | தூத்துக்குடி சிப்காட் |

தென் மண்டலத்திலுள்ள மொத்த தீயணைப்பு நிலையங்கள் : 70

### 4. மேற்கு மண்டலம், கோயம்புத்தூர்

| (1) | | (2) |
|---|---|---|
| கோயம்புத்தூர்-நீலகிரி | 1. | கோயம்புத்தூர் (தெற்கு) |
| | 2. | கோயம்புத்தூர் (வடக்கு) |
| | 3. | மேட்டுப்பாளையம் |
| | 4. | திருப்பூர் |
| | 5. | பொள்ளாச்சி |
| | 6. | உடுமலைப்பேட்டை |
| | 7. | வால்பாறை |
| | 8. | பல்லடம் |
| | 9. | [illegible] |
| | 10. | உதகமண்டலம் |
| | 11. | கூடலூர் |
| | 12. | குன்னூர் |
| | 13. | திருப்பூர் (தெற்கு) |
| ஈரோடு | 1. | ஈரோடு |
| | 2. | தாராபுரம் |
| | 3. | காங்கேயம் |
| | 4. | கோபிச்செட்டிப்பாளையம் |
| | 5. | சத்தியமங்கலம் |
| | 6. | பவானி |
| | 7. | வெள்ளக்கோயில் |
| | 8. | கொடுமுடி |
| | 9. | பெருந்துறை |
| | 10. | அந்தியூர் |

[1998 மே 22

| (1) | (2) |
|---|---|
| வேலூர் | 1. வேலூர் |
| | 2. இராணிப்பேட்டை |
| | 3. இராணிப்பேட்டை சிப்காட் |
| | 4. அரக்கோணம் |
| | 5. திருப்பத்தூர் |
| | 6. வாணியம்பாடி |
| | 7. ஆம்பூர் |
| | 8. குடியாத்தம் |
| | 9. சோளிங்கர் |
| | 10. நாட்ராம்பள்ளி |
| | 11. ஆற்காடு |
| | 12. பேர்ணாம்பட்டு |
| | 13 காட்பாடி |
| | 14. ஒடுக்கத்தூர் |
| | 15. ஆலங்காயம் |
| திருவண்ணாமலை | 1. திருவண்ணாமலை |
| | 2. செங்கம் |
| | 3. போளூர் |
| | 4. செய்யார் |
| | 5. வந்தவாசி |
| | 6. ஆரணி |
| | 7. தண்டராம்பட்டு |
| | 8. ஜவ்வாதுமலை |
| | 9. பெரணமல்லூர் |
| | 10. வேட்டவலம் |
| | 11. பென்னாத்தூர் |
| | 12. சேத்துப்பட்டு |
| சேலம் | 1. சேலம் |
| | 2. மேட்டூர் |
| | 3. மேட்டூர் அனல் மின் நிலையம் |
| | 4. ஆத்தூர் |
| | 5. சங்ககிரி |
| | 6. ஏற்காடு |
| | 7. எடப்பாடி |
| | 8. ஓமலூர் |



1998 மே 22]

| (1) | (2) |
|---|---|
| நாமக்கல் | 1. நாமக்கல் |
| | 2. கொல்லிமலை |
| | 3. ராசிபுரம் |
| | 4. திருச்செங்கோடு |
| தர்மபுரி | 1. தர்மபுரி |
| | 2. கிருஷ்ணகிரி |
| | 3. ஓசூர் சிப்காட் |
| | 4. அரூர் |
| | 5. பெண்ணாகரம் |
| | 6. பாலக்கோடு |
| | 7. ஊத்தங்கரை |
| | 8. தேன்கனிக்கோட்டை |
| | 9. பர்கூர் |
| | 10. போச்சம்பள்ளி |
| திண்டுக்கல் | 1. திண்டுக்கல் |
| | 2. வத்தலக் குண்டு |
| | 3. நத்தம் |
| | 4. பழனி |
| | 5. ஒட்டன்சத்திரம் |
| | 6. வேடசந்தூர் |
| | 7. கொடைக்கானல் |
| | 8. நிலக்கோட்டை |

மேற்கு மண்டலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்கள் : 80

**சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | வடமண்டலம் | 45 |
| 2. | மத்திய மண்டலம் | 82 |
| 3. | தென் மண்டலம் | 70 |
| 4. | மேற்கு மண்டலம் | 80 |
| | **மொத்தம்** | **277** |

[1998 மே 22

## இணைப்பு - 5

### தீ விபத்துகள் மற்றும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் பற்றிய ஆண்டு வாரியான விவரங்கள்

| ஆண்டு | தீ விபத்துகளின் எண்ணிக்கை | இழப்பு | | காப்பாற்றப்பட்டவை | |
|---|---|---|---|---|---|
| | | சொத்துகளின் மதிப்பு ரூபாய் | இறந்தவர்களின் எண்ணிக்கை | சொத்துகளின் மதிப்பு ரூபாய் | காப்பாற்றப்பட்ட மனித உயிர்கள் |
| 1996 | 12711 | 16,15,33,033 | 72 | 1,76,15,89,181 | 119 |
| 1997 | 13678 | 73,28,69,095 | 187 | 1,81,19,03,188 | 120 |

## இணைப்பு - 6

### பல்வேறு சட்டம் மற்றும் விதிகளின் கீழ் 1997-ம் ஆண்டில் (1997 டிசம்பர் வரை) தீயணைப்புத் துறை அலுவலர்கள் ஆய்வு செய்த கட்டடங்களின் எண்ணிக்கை

| தொடர் எண் | சட்டத்தின்/விதியின் பெயர் | கட்டடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் விதிகள் | 717 |
| 2. | பொதுமக்கள் கூடுமிடங்களுக்கான சட்டம் | 131 |
| 3. | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் மற்றும் சென்னை மாநகராட்சிச் சட்டம் | 155 |
| 4. | தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம் | 44 |
| 5. | தொழிற்சாலைகள் சட்டம் | 3,235 |
| 6. | ஆய்வு செய்யப்பட்ட அரசுக் கட்டடங்கள் | 1,030 |
| 7. | படைக்கலச் சட்டம் மற்றும் வெடி மருந்துப் பொருட்கள் சட்டம் முதலியன | 2,016 |
| 8. | ஆய்வு செய்யப்பட்ட தனியார் கட்டடங்கள் | 344 |
| 9. | பல்வேறு நிறுவனங்களிலும், கிராமங்களிலும் தீத்தடுப்பு நடவடிக்கை பற்றிய பிரச்சாரம் | 981 |

ஒஅ

248463

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

D
V24,31'N98
N98.55.1

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.